# மண்ணும் மல்லிகையும்

விமல் குழந்தைவேல்



# மண்ணும் மல்லிகையும்

- நாவல் -

**விமல் குழந்தைவேல்**
(இலண்டன்)

வெளியீடு & விற்பனை

**குமரன் பப்ளிஷர்ஸ்**

3, மெய்கை விநாயகர் தெரு
வழி-குமரன் காலனி 7வது தெரு
வடபழநி :: சென்னை - 600 026

முதற்பதிப்பு: 1999

©

விலை ரூபா: 40/-

| | |
|---|---|
| Title | : MANNUM MALLIKAIYUM |
| Subject | : A Social Novel in Tamil |
| Author | : Vimal Kulanthaivelu, U.K. |
| Artist | : Maruthu |
| No. of Pages | : 168 |
| Type | : 10.5 point |
| Paper | : 11.6 Kg. Creamwove |
| Binding | : Art Board |
| Price | : Rs.40/- |
| Typesetting | : NAM Process, Ph: 4331808 |
| Publisher | : Kumaran Publishers<br>3, Meigai Vinayagar Street<br>Vadapalani, Chennai - 600 026. |

Printed by :
MONARK GRAPHIKS
Chennai - 600 014. Ph : 658 88 15, 481 51 86

## சமர்ப்பணம்

இந் நாவலில் இடம் பெற்ற
பாத்திரமான ஆச்சியை போன்று இன்றும்
நம் தேசத்தில் நடமாடித்திரியும் தேகம் தேய்ந்த அந்தப்
புராதன உயிர் பொக்கிசங்களுக்கு இந்த நாவலைச்
சமர்ப்பணம் செய்கின்றேன்.

# என்னுரை

சிறுகதைகள் எழுதுவதையே விருப்பமாக கொண்டிருந்தேன். ஒரு நாவல் எழுதும்படி பலராலும் தூண்டப்பட்ட போது என்னுள் பதினைந்து வருடமாக புதைந்து கிடந்த நினைவுகளை தொகுத்து 'மண்ணும் மல்லிகையும்' என்ற தலைப்பிட்டு நாவலாக எழுதியிருக்கின்றேன். இதில் நேர்ந்திருக்கும் தவறுகளையும் நிறைவுகளையும் எனக்கு எடுத்துரைப்பது வாசகர்களாகிய உங்களின் கடமை.

ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நடந்த சம்பவங்களை கோர்வையாக்கி அவைகளை என் கற்பனைப் பாத்திரங்களுக்குள் திணித்து கதையாக்கி இருக்கின்றேன். இதில் இடம் பெறும் சம்பவங்களோ, பாத்திரங்களோ யாரையும் குறிப்பிடும்படியோ எவரின் மனதும் புண்படும்படியோ இருக்க வேண்டுமென்பதற்காக நான் சிருஷ்டிக்கவில்லை.

வழமையான கதைகளில் இடம் பெறுவதுபோல் குறிப்பிட்ட ஓரிரு பாத்திரங்களை மட்டும் முதன்மைப் படுத்தி இக்கதையை என்னால் அமைக்க முடியவில்லை. இக்கதையில் இடம் பெறும் அத்தனை பாத்திர படைப்புகளும் என்னைப் பொறுத்தவரை முக்கியத்துவம் பெற்றவைகள் என்றே சொல்லுவேன். ஒரு நாவலின் வெற்றி பாத்திரப் படைப்புகளிலேயே தங்கி இருக்குமென்றால் இது எனது விசப்பரீட்சை என்றே சொல்ல வேண்டும்.

காதல் என்பது இக்கதையில் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இக்கதையில் இடம் பெற்றிருக்கும் காதல் நிகழ்வுகள் மட்டும் என் கற்பனை தோரணங்கள் அல்ல. இப்போதும் ஒவ்வொரு கிராமத்திலும் நடக்கும் கள்ளம் கபடமில்லாத காதலையே நான் இக்கதையில் சொல்லியிருக்கின்றேன்.

ஈழப் போராட்டம் தொடங்கி இருபது வருடங்கள் ஆகி விட்ட போதும் அந்தப் போராட்டம் ஆரம்பிக்கும் போதே வாழ்ந்து கொண்டிருந்த ஒரு குடும்பம் போராட்டம் முடிவதற்கு முன் தன் கதையை முடித்துக் கொண்ட கதைதான் இக்கதை, இப்படி எத்தனையோ கதைகளும் குடும்பங்களும் இப்போதும் நம் நாட்டில் இருந்து கொண்டேதான் இருக்கின்றது.

புலம் பெயர்ந்து பன்னிரண்டு வருடங்களாக அன்னிய நாட்டில் வாழ்ந்த போதிலும் இந்த நிமிடம் வரை என் மண்ணில் வாழ்வது போன்ற உணர்விலேயே இந் நாவலை எழுதி முடித்தி ருக்கின்றேன்.

இந்த முதல் நாவலை எழுதும்படி என்னை உற்சாகப்படுத்தி ஊக்கம் கொடுத்த செ. கணேசலிங்கன் அவர்கட்கு எனது முதல் நன்றிகளை தெரிவிக்க நான் கடமைப் பட்டுள்ளேன். மேலும் இந்நாவலை அச்சிட்டு வெளியிடும் பிரசுரத்தாருக்கும் என் வாசக நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

விமல் குழந்தைவேல்
56. WINGATE ROAD
ILFORD
ESSEX IGI 2JB, U.K.
T.P. 0181. 5532309.

*குற்றங்களுக்கெல்லாம் தண்டனை மரணம்தான் என்றால் இப்ப உலகத்தில் எந்த மனிதனும் இருக்க முடியாது. உற்பத்தியாகும் துப்பாக்கிகளும் போதாது.*

- தவமணி அக்கா

# மண்ணும் மல்லிகையும்

## 1

அவன் நினைத்திருக்கவேயில்லை, இந்த மண்ணில் மீண்டும் வந்து இறங்கியதும் தன் மனதுக்குள் இப்படியொரு சிலிர்ப்பும் பூரிப்பும் ஏற்படுமென்று.

இனி இந்த ஊருக்கே வர மாட்டேன் என்று அன்று அவன் சபதமெடுத்து சென்றதற்கு அவனின் வாழ்வில் எத்தனையோ கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டிருந்தாலும் இன்று வந்து இறங்கியதும் ஏற்பட்ட உணர்வில் பழைய வடுக்களெல்லாம் மறந்து போனதாய் உணர்ந்து கொண்டான் அவன்.

கொழும்பிலிருந்து வந்து சேர்ந்த வாகனத்திலிருந்து இறங்கி தனது ஊருக்கு போக வேண்டிய வாகனத்துக்காக காத்து நின்றவன் பஸ் தரிப்பு நிலையத்தில் நின்றபடியே நான்கு திசைகளையும் உற்று நோக்கினான்.

நகரத்தை பிரித்துச் செல்லும் மீன்பாடும் மட்டுநகர் வாவி அழகாக அமைதியாக உறங்கிக் கிடக்கின்றது. ஆடம்பரமான அழகான கட்டிடங்களுக்கிடையில் ஓடும் தேம்ஸ் நதியை பார்த்து பழகியவனுக்கு மட்டுநகர் வாவி இன்று உறங்கிக் கிடப்பது போலவே இருந்தது.

தூரத்தே தெரியும் கல்லடி பாலமும் ஆங்கிலேயன் கட்டிக் கொடுத்துவிட்டு போன கோட்டையும் இப்போதும் அவன் கண்களுக்கு கம்பீரமாகவே காட்சியளிக்கின்றன.

நகருக்குள் அமைந்திருக்கும் வாவியின் பாலம் பல பழைய நினைவுகளை மீட்கச் செய்கின்றன.

இருபது வருடங்களுக்கு முன்பு பாடசாலை நாட்கள் தவிர்ந்த சனி ஞாயிறுகளில் புதுப்படம் பார்க்க நண்பர்களுடன் மட்டுநகர் வந்ததும், படம் முடிந்த பின்னேரங்களில் அவித்த பனம் கிழங்கையும் வறுத்த முந்திரிப்பருப்பையும் வாங்கிக் கொண்டு அந்த பாலத்தின் மேலிருந்து தின்றுகொண்டு இரண்டாம் காட்சி படம் தொடங்கும்வரை நேரத்தை கடத்தியதும் நினைவுக்கு வருகின்றது.

வாவியின் மறுகரையில் தெரியும் பழைய விஜயா தியேட்டர் இப்போதும் தெரிகின்றது, கொஞ்சம் சேதமுற்ற நிலையில்.

பஸ்தரிப்பு நிலையத்தில் நடமாடும் மக்களை கவனிக்கின்றான். ஒவ்வொரு முகங்களிலும் ஏதோ ஒரு பொதுவான சோகம் தெரிவதாய் அவனுக்கு ஒரு உணர்வு.

அவனின் ஊருக்கு போக வேண்டிய வாகனம் வந்துவிட அதில் ஏறி அமர்ந்து கொள்ளுகின்றான்.

வாகனம் நகரத் தொடங்குகின்றது. வாகனத்துக்குள்ளிருக்கும் சோக முகம்களும் வீதியின் இருமருங்கலும் கடந்து செல்லும் வாடிய மரங்களும் ஏற்படுத்திய சோகம் இவ்வளவு நேரமும் பெரிதாக மனதில் அப்பிக் கிடந்த மனைவி பிள்ளைகளின் பிரிவுச் சோகத்தை சிறிதாக்கி விட்டன.

வாகனம் கல்லடி பாலத்துக்குள் புகுந்து புறப்பட்டபோது இரண்டு ராணுவ பரிசோதனைக்காக இறக்கப்பட்டான் அவன். கல்லடி சிவானந்தா கல்லூரியை தாண்டிய போது ஏழை அனாதை சிறுவர்களை பொறுப்பேற்று கல்வி கற்பிக்கும் அந்த சாமியார் இப்போதும் இருப்பாரா என்று தேடியது அவன் கண்கள்.

வாகனம் பாஞ்சம் தொடுவாய், காத்தான்குடி, ஆரயம்பதியை தாண்டிச் சென்றபோது திடீரென அந்த மணம் அவனின் மூக்கை துளைக்கின்றது. முன்பெல்லாம் அந்த ஊருக்குள்ளால்

வரும்போது ஊருக்குள் சிப்பி எரிக்கும் அந்த மணத்தை தாங்கமுடியாமல் மூக்கை பொத்திக்கொள்வது நினைவுக்கு வந்தது. இப்போது அவன் மூக்கை பொத்திக் கொள்ளவில்லை. பதினைந்து வருட அன்னிய நாட்டுவாழ்க்கையின் தேடலில் இந்த மணமும் ஒன்றாகி இருந்தது அவனுக்கு.

வீதியை எட்டிப் பார்க்கின்றான். சிப்பிகள் நிறைந்த ஓலைப் பெட்டியை தலையிலே சுமந்து கொண்டு வாகனத்துக்கு ஓரம்கட்டிய வயோதிக பெண்ணொருத்தி அவன் கண்களையும் மனதையும் ஈர்த்து இடம் பிடிக்கின்றாள்.

அன்று என் ஊரில் வாழ்ந்த ஆச்சியும் அப்போது இந்த வயதில்தானே இருந்திருப்பாள். இப்போது அந்த ஆச்சி உயிரோடு இருப்பாளா. அந்த ஆச்சி மட்டுமா ஆச்சியின் பேத்தி தவமணி அக்கா, அந்த வீட்டு ஸ்ரீ, வசந்தி இன்னும் பலரும் இப்போது எப்படி இருப்பார்கள் என்பதை அறிய அவனின் மனது துடிக்கின்றது.

## 2

ஒரு காலத்தில் எப்படிவாழ்ந்த குடும்பம் அது. குறிப்பிட்ட ஒரு குறுகிய காலத்துக்குள் எப்படிமாறிப் போனது. எல்லாமே நேற்று நடந்ததுபோல் நினைவில் நிற்கின்றது அவனுக்கு.

அந்த ஊரில் தான் வாழ்ந்த காலங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அந்த குடும்பத்தில் நடந்தது, அவன் நேரடியாக பார்த்தது, மற்றவர்கள் மூலம் கேட்டு அறிந்து கொண்டது அனைத்தும் இன்றும் அவன் நினைவில் நிழல் படமாய் பதிந்திருக்கின்றன.

தவமணி அக்கா அவனுக்கு அக்கா அல்ல. அந்த பெயர் ஊருக்கே பொதுவான பெயர். எதை மறந்தாலும் தவமணி அக்காவீட்டின் வாசலையும் அந்த மல்லிகைப் பந்தலையும் அவனால் மறக்க முடியாமலேயே இருந்தது.

ஆச்சி, எவ்வளவு சுவாரஸ்சியமான ஜீவன், அந்த ஆச்சியின் சுக்கள் என்றும் பதியப்படவேண்டியவைகள். ஆச்சி பாதுகாக்கப்பட வேண்டிய புராதன மனிசி. ஆச்சியும் தவமணி அக்காவும். தவமணி அக்காவின் சகோதரங்களும் சேர்ந்து வாழ்ந்த அந்த வீட்டையும் அந்தவீட்டின் மல்லிகை பந்தல் வாசலையும் நினைத் துப் பார்ப்பதென்பது மனதுக்கு இன்பமான விசயம்தான். எத் தனை வருடங்கள் அந்த சம்பவம் நடந்தது என்பது திட்டவட்ட மாக தெரியாவிட்டாலும். இப்போது நடந்ததுபோல் இருக்கும் அந்த நிகழ்வுகளை நினைக்கத் தொடங்கினான் அவன்....அன்று....

தவமணி அக்காவின் மல்லிகை பந்தல் இளைஞர் யுவதிக ளால் நிரம்பியிருந்தது. கூடியிருந்தவர்களுள் நான்கைந்து பெடி யன் பெட்டைகளைத்தவிர மற்றய அனைவரும் தவமணி அக்கா வின் கூடப்பிறந்த சகோதரங்களும் ஒன்றுவிட்ட சகோதரங்களுமே பரவிக்கூட்டிப் பெருக்கிய வாசலில் நிலவு வெளிச்சத்தில் தவமணி அக்காவின் ஆச்சி மல்லாக்கப்படுத்துக் கிடக்கின்றா. ஆச்சியின் அருகே அவவின் மூத்தமகள் அதாவது தவமணி அக்காவின் தாய் எதுவும் பேசாமல் நடப்பவைகள் என்ன ஏதென்று புரியாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றா. அவவால் எதுவும் பேசவோ செய்யவோ முடியாது. காரணம் ஒருவருடத்துக்கு முன்பு திடீரென வந்த பாரிசவாத நோயினால் அவவின் கால்கைகள் முடக்கப்பட்டு வாயும் பேசமுடியாமல் போய் விட்டது.

தாயைப்பார்ப்பது தவமணி அக்காவும் அவவின் பிள்ளைக ளும் மற்றும் கடைசித்தம்பியும் தான் என்றாலும் சின்னம்மாவின் பிள்ளைகளும் அவவை சொந்தத் தாய் போலதான் பார்ப்பார்கள்.

ஆச்சி இந்த குடும்பத்தின் ஆலமரம். இந்த ஆலமரம் விட்டவிழுதுகள்தான் இன்றுமல்லிகை பந்தலின் கீழ் கூடியிருக்கின் றது. ஆச்சிக்கு ஆறுபெண் பிள்ளைகள். ஆச்சி தனது நான்காவது சந்ததியையும் கண்டுவிட்டா. ஆச்சியின் பேரப்பிள்ளைகள் கொள் ளுப் பேரன் பேத்திகளை யெல்லாம் கணக்கெடுத்தால் நூற்றுக்கு மேற்பட்ட தொகைவரும். தவமணி அக்கா ஆச்சியின் மூத்த

மகளின் மூத்தமகள். ஆச்சியின் இரண்டாவது மகளுக்கு நான்கு மகன்களும் நான்கு மகள்களும்; இந்த நான்கு மகன்களும் தின்று குடித்து ஓடிவிளையாடி வளர்ந்ததும் வளர்வதும் ஆச்சியின் மூத்தமகள் வீட்டில் தான். ஆச்சியின் மூத்தமகளின்வீடு எப்பொழுதும் பிள்ளைகள் நிறைந்து கலகலப்பாகவே இருக்கும்.

தவமணி அக்காவை அவவின் சொந்தசகோதரங்கள், சின்னம்மாவின் மக்கள் மட்டுமல்ல அந்த ஊரில் அதிகப்படியான பேர்கள் அக்கா அக்கா என்றுதான் கூப்பிடுவார்கள். தவமணி அக்காவின் கணவர்கூட மைத்துனர் மாருக்கு மட்டுமல்ல ஊருக்கே அத்தான் என்ற உறவுமுறையால் தான் அழைக்கப்படுவார். ஊரில் சிலருக்கு அவரின் பெயரே அத்தான்தானோ என்ற நினைப்புக்கூட வருவதுண்டு.

அத்தான் மிகவும் அமைதியானவர். தனது பிள்ளைகளும் தனது மைத்துனர்மாரும் அந்தவீடுவாசலை படுத்தும் பாட்டைப் பார்த்து எதுவுமே பேசாமல் சிரித்துக் கொண்டு தானும் சேர்ந்து விளையாடுவார். இரவும் பகலும் கோயில் வாசல் போல கலகல வென்றே இருக்கும் அக்காவின் வீடு.

இந்த வருட கோயில் திருவிழா நெருங்கிக் கொண்டிருக்கின்றது. நமது குடித்திருவிழாவை இந்தமுறை வெகுசிறப்பாக செய்ய வேண்டும். கொழும்பிலிருந்து ஏதாவது ஒரு இசைக்குழு எடுக்க வேண்டும். நல்லகலை நிகழ்சிகள் வைக்கவேண்டும். அதிலும் ஒரு பிரமாண்டமான முறையில் நாமே ஒரு நாடகம் நடித்து திருவிழாவில் அரங்கேற்ற வேண்டும்.

ஊரில் உள்ள மற்றைய பெடியன்களுடன் வந்துதன் சகோதரர்கள் சொன்ன போது தவமணி அக்கா சந்தோசப்பட்ட காரணம் நாடகங்களுக்கு நடிப்பு சொல்லிக் கொடுப்பதென்பது அவவுக்கு விருப்பமான விசயம். அவவின் மேற்பார்வையில் அரங்கேறிய பல நாடகங்கள் அந்த ஊரில், மிகவும் பிரசித்தமானவைகள்.

அந்த ஊரின் சனத்தொகையை நான்கு குடிகளாக பிரித்திருக்கிறார்கள் முன்னோர்கள். கோயில் திருவிழா தொடங்கிய நான்கு நாட்களையும் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு குடிக்கென்று பிரித்து அந்தநாட்களின் ஒவ்வொரு நாள் இரவினையும் வெகுசிறப்பான திருவிழாவாக செய்து முடித்து யாரின் திருவிழா வெகுசிறப்பானது என்ற பெயரெடுக்க ஒவ்வொருகுடியினரும் போட்டிபோட்டுக் கொண்டு பாடுபடுவார்கள். வருடம் முழுவதும் ஒன்றாக இருக்கும் ஊர்சனம் இந்த நான்கு நாட்களுக்கு மட்டும் நான்காக பிரிந்து நானாநீயா என்று போட்டி போட்டுவிட்டு ஐந்தாம் நாள் மீண்டும் ஒன்றாக சேர்ந்து வீதி ஊர்வலம் சென்று கடலில் தீர்த்தம் ஆடிவிட்டு திரும்பும் காட்சி வருடத்தில் ஒருமுறை அந்த ஊரில் நடக்கும் கோலாகலக்காட்சி.

இன்று இரவும் தவமணி அக்காவின் மல்லிகை பந்தலின் கீழ் ஊர் பெடியன்களுடன் தனது சகோதரர்கள் கூடியிருப்பது இந்த திருவிழாவுக்காகத்தான். அக்காவின் மேற்பார்வையில் நடித்து அரங்கேறப் போகும் 'குந்தி கேட்ட வரம்' என்ற நாடகத்தில் நடிக்க வந்திருக்கும் இளைஞர் யுவதிகளால்தான் இன்று அக்காவீட்டு மல்லிகை பந்தல் நிரம்பியிருக்கின்றது.

பழைய சரித்திர இதிகாச புராண கதைகளை நாடகமாக்கும் போது அவைகளை பார்த்து ரசிக்க ஆச்சிக்கு மிகவும் ஆசை. எழுதித்தந்த வசனங்கள் ஒழுங்கா பாடமாக்கையில்லை யெண்டால் திருவிழாவுக்கு நாடகம் மேடையேற்ற முடியாது. எல்லாருக்கும் வசனங்கள் பாடமெண்டால் சொல்லுங்கோ அதுக்குப் பிறகு நடிக்கலாம். சொல்லிக் கொண்டே வீட்டின் முன் மண்டபத்தின் நடுவிலிருந்த தையல் மெசினில் எதையோ தைத்துக் கொண்டிருந்தா தவமணி அக்கா. அத்தான் சாய்வுக்கதிரையில் படுத்திருந்து ஏதோ கதைப்புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்.

அக்காவின் கடைசித் தம்பி அகிலன் தாயின் கால்விரல்களை இழுத்து நீவி விட்டுக் கொண்டிருந்தான். தனதுதாய் மீண்டும் பழையபடி எழும்பி நடக்கவேண்டும் என்ற ஆசை அவனுக்கு.

எதையோ சொல்ல நினைத்து சொல்லமுடியாமல் மழலை போல் பேசும் தாயின் வாயிலிருந்து வடிந்தநீரை துடைத்துக் கொண்டிருந் தான் அகிலன்.

'என்ன மூத்தம்மா என்னவேணும் சொல்லுங்கம்மா? என்ன வேணும்.'

பரிவுடன் கேட்டுக் கொண்டிருந்தான் சின்னம்மாவின் மூத்த மகன் நவரெத்தினம்.

மல்லிகை பந்தலின் ஒரு மரக்காலில் சாய்ந்து கொண்டிருந்து விளக்கு வெளிச்சத்தில் துரியோதனனுக்குரிய வசனத்தை மனப்பா டம் செய்துகொண்டிருந்த சின்னம்மாவின் இரண்டாவது மகன் ராமு தனக்கு எதிரே அடுத்த பந்தல்காலில் சாய்ந்து கொண்டு குந்திதேவிக்குரிய வசனத்தை மனப்பாடம் செய்யும் சுகந்தியை அடிக்கடி பார்ப்பதை அவளும் கவனித்தாள்.

சுகந்தி இந்த குடும்பத்துக்கு தூரத்துச் சொந்தம். பணக்கார வீட்டுப் படிக்கின்ற பெண். அவள் நாடகத்தில் நடிக்க வருவது அவளின் வீட்டாருக்கு விருப்பம் இல்லை. தவமணி அக்கா கேட்டதற்காகத்தான் அவளின் தகப்பன் சம்மதித்து அனுப்பினார்.

இரவுச் செய்தி கேட்டுக் கொண்டிருந்தான் தவமணி அக்கா வின் கடைசிக்கு மூத்ததம்பி முகிலன். அவனுக்கு இந்த நாடகங்க ளிலெல்லாம் ஈடுபாடில்லை. ஆனால் சின்னம்மாவின் பிள்ளைகள் எங்கிருக்கின்றார்களோ அங்கு அவனும் இருப்பான். அவ்வளவு ஒற்றுமை. காற்றில் அசைந்த மல்லிகை கொடியிலிருந்து விழும் மல்லிகைப் பூக்களை ஒவ்வொன்றாக எடுத்து தனது உள்ளங்கை யில் சேர்த்து ஒன்றாக்கி முகர்ந்து பார்த்துவிட்டு அவைகளை ஒவ்வொன்றாக எடுத்து ஆச்சியின் தலையில் வைத்து விளையா டிக்கொண்டிருந்த சின்னம்மாவின் மூன்றாவது மகன் செந்திலை பேசிக் கொண்டிருந்த ஆச்சியின் வசைமொழியை ரசித்துக் கொண் டிருந்தான். அவன் சின்னம்மாவின் மூன்றாவது மகன். செந்தில் கறுத்த கட்டையானவன். ஆனால் பார்ப்பதற்கு அழகாய் வசீகர மாய் இருப்பான்.

மல்லிகை பந்தலில் கூடியிருப்பவர்களுக்காக குசினிக்குள் தேனீர் போட்டுக் கொண்டிருந்த தவமணி அக்காவின் மகள் வாசுகி அவளின் பக்கத்து வீட்டுச் சினேகிதி புவிதாவுடன் ஏதோ ரகசியமாக பேசி சிரித்துக் கொண்டிருந்தாள்.

புவிதாவும் வாசுகியும் பக்கத்து வீட்டு சினேகிதிகள், ஒன்றாக படித்தவர்கள். புவிதாவுக்கு படிப்பு ஏறவில்லையென்று சொல்லி படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு, தையல் பழகச் சொல்லி தையல் மெசின் ஒன்றையும் வாங்கி கொடுத்துவிட்டாள் அவளின் தாய்.

வாசுகி உயர்தர பரீட்சை எடுத்து பல்கலைக் கழகம் போக புள்ளிகள் போதாததால் வெளிவாரியாக பட்டப்படிப்பு படிக்க ஒவ்வொரு சனியும் ஞாயிறும் கல்முனைக்கு வகுப்புகளுக்கு போய் வந்து கொண்டிருப்பவள். அந்த ஊரிலிருந்து கல்முனை வகுப்புக்கு அவளோடு போய் வருபவள்தான் வசந்தி, வாசுகியும் புவிதாவும் பக்கத்துவிட்டு சினேகிதிகள் என்றால் வசந்தி வாசுகி யின் வகுப்பு சினேகிதி.

'என்ன வாசுகி தேத்தண்ணி போடுறியோ' கேட்டுக் கொண்டே வந்து தன் அருகில் அமர்ந்த சதீஸை நிமிர்ந்து பார்த்தாள் வாசுகி.

சதீஸ் தவமணி அக்காவின் தங்கையின் மகன் அதாவது வாசுகியின் அண்ணன் சதீஸ் பிறந்த மூன்றாம் நாளிலிருந்து அவனின் இருபத்தொரு வயது வரைக்குமான இன்றுவரை அவன் வளர்ந்ததும் தவழ்ந்ததும் தவமணி அக்காவின் மடியிலும் அவ வின் வாசலிலும் தான். சதீஸின் தாய் தகப்பன் அவனின் படிப்பில் காட்டுகின்ற அக்கறையும் கண்டிப்பும் அவனுக்கு தாய் தகப்பனில் சிறிய வெறுப்பை ஏற்படுத்தும். யாழ்பாணத்துக்கு போய் நல்ல ரியூசன் பள்ளிகளில் சேர்ந்து படித்துவிட்டு வா என்பது தகப்பனின் வேண்டுகோள். இல்லையம்மா நான் இங்கே இருந்தே நல்லாய்ப டித்து பாஸ் பண்ணுவேன் என்று அப்பாவிடம் சொல்லுங்கோ

அம்மாளென்று தவமணி அக்காவிடம் சொன்னது அவனின் தகப்ப னின் காதில் எட்டிய நாளிலிருந்து அவர் மகனோடு பேசுவதை நிறுத்திக் கொண்டுவிட்டார்.

'ஏண்டா மகனே கொப்பர் சொல்லுறதையும் கேட்டு நட வேண்டா' தவமணி அக்கா ஒரு நாள் சொன்னபோது 'எப்படி யம்மா உங்களைப் பிரிஞ்சி தம்பி தங்கை களைப்பிரிஞ்சி இவ்வ ளவு மாமாமாரையும் பிரிந்து இந்த ஊரைபிரிந்து எப்படியம்மா... இல்லையம்மா....இல்லையம்மா நான் உங்களை விட்டுப் போக மாட்டனம்மா என்னை கட்டயாப் படுத்தாதையுங்கோ அம்மா' என்று அவன் தவமணி அக்காவின் கன்னத்தை தடவி அழுத போது தான் பெற்றெடுக்காத தன் தங்கையின் மகன் தன்னை அம்மா அம்மா என்று வார்த்தைக்கு வார்த்தை சொன்னதை கேட்டு நெகிழ்ந்து போனா.

தவமணி அக்காவின் சகோதர்கட்கும் சின்னம்மாவின் பிள் ளைகளுக்கு வாசுகியும் சதீஸும் செல்ல மருமகனும் மருமகளும். மாமாமாரில் எவரும் எங்குபோணாலும் திரும்பிவரும் போது மருமகள் வாசுகிக்கு ஏதாவது வாங்கிவராமல் விடமாட்டார்கள். கடைசிமாமா அகிலனின் உடுப்புகளை போட்டுக் கொள்வதில் மருமகன் சதீஸ்சுக்கு அலாதிவிருப்பம்! உனக்கென்னடி உன்ன இளவரசி மாதிரி வைத்திருக்காங்க உன் மாமன்மார் என்று புவிதா சொல்லும் போதெல்லாம் தன்னை நினைத்துதானே பெருமைப்பட் டுக் கொள்வாள் வாசுகி.

'தேத்தண்ணி போடாமல் என்ன போடுறமாதிரி தெரியுது' அருகில் வந்து அமர்ந்த தமையன் சதீஸை வாசுகி செல்லமாய் கடிந்து கொண்டதை மனதுக்குள் ரசித்துக் கொண்டாள் புவிதா.

'என்ன சிஸ்டர் இப்படிக் கோபிக்கிறான். நீங்க உதவி பண்ணயில்லையெண்டால் இந்த அண்ணனுக்கு யார் உதவி பண்ணுவார்கள்' தன் தலையில் ஐஸ் வைக்க முற்படும் தமைய னின் முயற்சியை முறியடித்தாள் வாசுகி.

''இஞ்சபார் அண்ணா நான் நேற்றே சொல்லிபோட்டன் என்னாலமுடியாதென்று. இதுக்கு மேலேயும் கெஞ்சினாய் என்றால் நான் சித்தப்பாக்கிட்ட சொல்லிப்போடுவன். தெரியும் தானே?' சித்தப்பா என்று தன் தகப்பனை வாசுகி நினைவூட்டிய தும் தனக்குள் ஏற்பட்ட பயத்தை வெளிக்காட்டாமல்.

'இஞ்சபார் இதுக்கெல்லாம் உங்க அண்ணன் பயப்பிடமாட் டான் நீ என்ன செய்வியோ ஏதுசெய்வியோ நான் தந்ததை நாளைக்கு குடுக்கிறாய். நாளைக்கு பின்னேரம் எனக்கு முடிவு தெரிய வேணும். அம்மா பார்க்கிறா போல இருக்கு. வெளிபோறன் எனக்கும் சேர்த்து தேத்தண்ணி எடுத்துக் கொண்டுவா' சொல்லிக் கொண்டு மல்லிகை பந்தலுக்கு ஓடிய தமையனை நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்ட வாசுகியிடம் புவிதா கேட்டாள் 'என்னடி என்ன பிரச்சினை'.

'அதையேன் கேட்கிறாய் உனக்குமட்டும் சொல்லுறன். இவன் அண்ணா வசந்திய விரும்புகிறனாம். ஏதோ கடிதம் எழுதி என்னிட்ட தந்திருக்கான் வசந்திக்கிட்ட கொடுக்கச்சொல்லி. நான் என்னெண்டடி கொடுக்க முடியும். வசந்திடகுடும்பம் எப்படிப் பட்ட பணக்காரக்குடும்பம், எப்படிப்பட்ட சண்டித்தனமான குடும் பம் என்கிறதெல்லாம் தெரிஞ்சுகொண்டு இவன் வசந்திய விரும்பு றான். இது அம்மா, சித்தப்பா, சித்திக்கு தெரிந்தால் என்ன நடக்கும். ஏற்கனவே அந்த குடும்பத்துக்கும் எங்கட குடும்பத்துக் கும் வெட்டுப்பகை குத்துப்பகை. இதுக்குள்ள இதுவேற புதுசா ஒரு பிரச்சினைய ஏற்படுத்தினால் மாமாமாரைப் பற்றித் தெரியும் தானே. குடும்பத்தில யாராவது ஒருவருக்கு ஒண்டென்றால் எல்லாருமாக சேர்ந்து உண்டு இல்லை யென்று ஆக்கிவிடுவார் கள். அதிலும் அண்ணாமேல அவங்களுக்கு உயிர். அண்ணா வுக்கு சித்தப்பா பேசுவதையே விரும்பாதவங்கள் மாமாமார் இதுக்குள்ள இதுவேற பிரச்சினை. எனக்கு பயமாய் இருக்குடி. ஆனால் அண்ணாவை நினைக்க பாவமாயும் இருக்கு. அவன் உண்மையிலேயே வசந்திய விரும்புறான் என்கிறது எனக்கு

நல்லாய் புரியுது. என்னடி செய்யமுடியும் என்னால' சொல்லிக் கொண்டே தேனீர் கோப்பைகளுடன் மல்லிகை பந்தலுக்குள் போன வாசுகியை பார்த்துக் கொண்டிருந்த புவிதாவின் முகம் வாடியிருந்ததை வாசுகி கவனிக்கவில்லை.

'ஏண்டி தவமணி நடுச்சாமம் ஆகுது. இதுக்குப் பிறகும் இந்த குமரிகளையும் இளந்தாரிகளையும் வைச்சிக் கொண்டு என்னடி செய்யப் போறாய் நடிக்க வந்த குமர் பிள்ளைகளை தாய் தகப்பன் தேடப்போறாங்கள். அனுப்பண்டி, நாடகம் நடிக்க வந்த சுகந்தியை மனதில் வைத்துக் கொண்டு' ஆச்சி பேசினாலும் இன்று ஆச்சிக்கு ஒரு மகாபாரதக் காட்சியைக்கூட பார்க்கவில்லை என்ற ஏக்கமும் ஆச்சியின் குரலில் தெரியாமலில்லை.

'நீங்களும் உங்கட கூத்தும் கும்மாளமும், நாடகமும் நடிப்பும் அந்தக் காலத்துல காலில சலங்கை கட்டி துரியோதனன் வந்து நிண்டால் கூத்துக்களரியே ஒரு தரம் நடுங்கும். இப்பத்தைய பிள்ளைகள் என்னத்த நடிக்குதுகள்'

தன் தொடையில் வந்து குந்திய நுளம்பொன்றை ஓங்கி அடித்ததனால் தனக்கேற்பட்ட வலியை வெளிக்காட்டிக் கொள்ளா மல் தனக்குள்ளேயே புறுபுறுத்துக் கொண்டு படுத்திருந்த ஆச்சி யின் பேச்சை ரசித்துக்கொண்டிருந்தான் தவமணி அக்காவின் கடைசிக்கு மூத்த தம்பி முகிலன். முகிலனின் ஆசையெல்லாம் எப்படியாவது ஒரு வெளிநாட்டுக்கு போகவேண்டுமென்பது தான். அடிக்கடி அக்காவை கேட்டுக் கொண்டே இருப்பான். அக்காவும் பார்ப்பம் என்று நாட்களை கடத்திக் கொண்டிருந்தா லும் உள்ளூர அவவுக்கும் எண்ணம் உண்டுதான், அவனை ஏதாவது ஒரு வெளிநாட்டுக்கு அனுப்ப. பாவம் தம்பிகள் தகப்பனில்லாத பிள்ளைகள் அவங்களுக்கு நாங்கள் தான் ஏதா வது உதவி செய்யவேணும் என்று அவஅடிக்கடி அத்தானிடமும் சொல்வதுண்டு.

'துரியோதனனுக்கு ஏன் தான் இப்படி புத்தி மங்கி விட்டதோ தெரியவில்லை. ஒரு கொடியில் பூத்த இருமலர்களாகிய இருவரில்

ஒரு மலர் மரணமற்ற மலராக இருக்கவேண்டுமென்பது அவன் விருப்பம் போலும். என்ன செய்வது!'

கண்ணனிடம் முறையிடும் குந்திதேவிக்குரிய வசனத்தை பேசிக்கொண்டிருந்த சுகந்தியை இடைநிறுத்தினா தவமணி அக்கா. 'இல்ல பிள்ள உங்க ஒருத்தருக்கும் இன்னும் வசனங்கள் மனப்பாடம் ஆகையில்லை. எல்லோரும் போய் வசனங்களை நல்லாய் பாடமாக்கிக் கொண்டு பிறகொரு நாளைக்கு வாங்கோ' சொல்லிவிட்டு தாயை எழுப்பி மெல்ல நடக்க வைத்து வீட்டுக்குள் போய்விட்டா தவமணி அக்கா.

தனக்கு துணைக்கு கூட்டி வந்த தனது கடைசித்தம்பியுடன் புறப்பட்ட சுகந்தியையே பார்த்துக் கொண்டிருந்த ராமுவும் எழுந்துபோய்விட்டான். ராமு இரவில் படுப்பது தவமணி அக்கா வின் தங்கையின் வீட்டுவாசலில். அதாவது சதீஸின் வீட்டில் அந்த வீட்டுக்கு அடுத்தவீடுதான் சுகந்தியின் வீடு.

ஊர் பெடியன்களெல்லாம் எழுந்துபோக கதைத்து சிரித்துக் கொண்டிருந்த நவரெத்தினம் முகிலன், அகிலன், செந்தில், சதீஸ் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக நித்திரையாகிப் போனார்கள்.

'ம்...கதிர மலைக் கந்தா சக்தி சங்காரவடிவேலா எண்ட பேக் குஞ்சுகள் மேல ஆரோட கண்ணும்படாம கதிரமலையில வைச்ச விளக்குப் போல அதுகளுக்கு எந்தக் குறையுமில்லாம நீதானப்பா காப்பாத்தவேணும்' சொல்லிக்கொண்டே முந்தானையை விரித்து மல்லிகை பந்தல் மூலையில் படுத்துறங்கிய ஆச்சியின் முகத்தில் காற்றில் அசைந்து விழுந்து கொண்டிருந்தது மல்லிகைப் பூக்கள்.

# 3

**கோ**ளாவில் இருபக்கமும் ஆற்றங்கரையை கொண்ட ஓர் பசுமையான அழகான கிராமம். ஊரின் எல்லையை ஒட்டிய ஆற்றங்கரையோரத்தில் உள்ள வம்மி மரத்தடி எப்பொழுதும் மதிய வேளைக்கு பின்னர் கலகலப்பாகவே இருக்கும். மதிய வேளை சாப்பாட்டை முடித்த பெரியவர்களும் இளைஞர்களும் இந்த வம்மி மரத்தடிக்கு வந்து குட்டித்தூக்கம் போட சிறுவர்கள் ஓடிப் பிடித்து விளையாடுவார்கள்.

வம்மி மரத்தின் கீழ் படுத்திருந்த ராமுவின் கண்களை நித்திரை அணைக்க முற்பட்டாலும் அவன் அதனை தவிர்த்துக் கொண்டு நேற்றிரவு நடந்த அந்த இனிமையான சம்பவத்தை நினைத்து தனக்குள்ளேயே சந்தோசப்பட்டுக் கொண்டான்.

நேற்றிரவு தவமணி அக்காவீட்டிலிருந்து வந்து சின்னக்கா வீட்டு வாசலில் கிடந்த கட்டிலில் படுத்திருந்த ராமுவின் முகத்தில் ஓர் சிறிய கல்வந்து விழுந்ததை உணர்ந்த ராமு திடுக்கிட்டு எழுந்து திரும்பி பார்த்தான்.

சின்னக்கா வீட்டின் பொதுவேலியின் அருகே ஓர் உருவம் அசைவது நிலவு வெளிச்சத்தில் நன்றாக தெரிந்தது. அவனுக்கு எழும்பிச் சென்று வெலியோரத்தில் நிற்கும் உருவம் யார் என்று பார்த்தபோது அது சுகந்தி... ராமு ஓரிரு நிமிடம் எதுவும் பேசாமல் நின்றுவிட்டு மெதுவாக கேட்டான்.

'சுகந்தி... என்ன... என்ன விசயம்'

'ஒன்றுமில்ல... சும்மா...'

'சும்மா... இந்தநேரத்திலயா.'

'வேற எந்த நேரத்தில பகலிலா... முடியுமா... ஏன் நான் வந்தது உங்களுக்கு விருப்பமில்லையா.'

கோர்வையில்லாமல் வந்த சுகந்தியின் வார்த்தைகளைக் கேட்டு மனதுக்குள் ரசித்தான். இவ்வளவு நாட்களும் பார்வையால் பேசியவள் முதல்முதலாக வாய்திறந்து பேசுவதைகேட்டதும் அவன் மனதும் உடலும் முதன் முதலாக ஓர் புது உணர்வை பெற்றதை உணர்ந்து கொண்டான். அக்காமார், அம்மா, மருமகள் மார், ஆச்சி இவர்களுடனெல்லாம் இவ்வளவு நாளும் கதைத்து சிரித்தபோது ஏற்படாத உணர்வொன்று இன்று இவளிடம் பேசும் போது மட்டும் ஏற்படுகின்றதே அது ஏன், ஓ...இதுதான் காதலா. காதல் உணர்ச்சி உடலில் ஏற்படுத்தும் ரசாயனமாற்றம் என்பது இதுதானா. கண்ட அந்த கணத்திலேயே இவளோடு கனநாள் வாழ்ந்த உணர்வையும் இனிஇவள் என் சொந்தம் என்ற தற்பெருமை உணர்ச்சியையும் காதலால் மட்டும் ஏற்படுத்த முடிகின்றது.

சுகந்தியையே பார்த்துக் கொண்டிருந்தான் ராமு.

'நான் போகப்போறன் வரட்டா.'

ராமு எதுவும் பேசாமல் நின்றான்.

'நான் வாறன்' போக முற்பட்ட சுகந்தியின் கரங்களை அவனையும் அறியாமல் பற்றி இழுத்தான் ராமு. சுகந்தியின் கைகள் பயத்தில் நடுங்கியது. உடனே கைகளை விடுவித்தான் ராமு.

'நாளைக்கு நாடகம் நடிக்க அக்கா வீட்டுக்கு வருவாய் தானே.'

'வருவன்... ஆனால் என்னோட கதைச்சு பேசி என்னை சந்தித்து கொண்டதை காட்டிக் கொள்ளாதையுங்கோ.'

'ஏன் பயமா?'

'இல்ல இப்போதைக்கு வேணாம். வீட்டுக்கு தெரிந்தால் அப்பா என்னை அடிச்சு சாக்காட்டி போடுவார்.'

'பயப்பிடாதே நான் கடைசி வரைக்கும் வெளியில காட்டிக் கொள்ள மாட்டன்.' அவன் சொல்லி முடிக்குமுன்பே சுகந்தி அவ்விடத்தை விட்டு போய்விட்டாள்.

நேற்று இரவு நடந்த அந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டு படுத்திருந்தவனை தூரத்தில் கேட்கும் ஆச்சியின் குரல் நிலைகுலையச் செய்தது.

திரும்பிப் பார்த்தான்.

குனிந்த உடலும் குலுங்கும் சதையுமாய் நடு நடுங்கி ஓடிவந்து கொண்டிருந்தாள் ஆச்சி.

'டேய் ராமு... எழும்புடா எழும்புடா மகனே உண்ட கொக்கா மகனை அவன் செல்லம்மாட மக்கள் நடுரோட்டுல வைச்சு அடிச்சி போட்டாங்கள்... டேய்...எழும்புடா...'

ஆச்சி சொல்லி முடிப்பதற்குமுன் வெகுண்டெழுந்த ராமு ஆத்திரம் வந்தவனாய் ஓடிக் கொண்டிருக்க ஆச்சியும் பின்னால் ஓடினாள். அதன் பின்னால் ராமுவின் சினேகிதர்களும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

செல்லம்மா வசந்தியின் அம்மா, ஊரில் மிகப் பெரிய பணக்காரி. பணத்திமிர் பிடித்தவள். நடுவீதியில் பத்திரகாளிபோல் தலையைவிரித்துவிட்டுக் கொண்டு வாய்க்குவந்தபடி பேசிக் கொண்டிருந்தாள் செல்லம்மா.

'ஏண்டி என்னிட்ட இருக்கிற தங்கத்தையும் காணி பூமி காசுபணத்தையும் அபகரிக்கிற ஆசையிலதான் மகனுக்கிட்ட காதல் கடிதம் எழுதச்சொல்லி எண்டமகளுக்கிட்ட குடுக்கச் சொல்லியிருக்கிறாய். தூ...மானம் கெட்டவளே. ஆசைபடுறதுக்கும் ஒருதகுதி வேணுமடி...'

வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருந்த செல்லம்மாவை எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தா தவமணி அக்கா.

அடிபட்ட சதீஸியின் பல்லிருக்கிலிருந்து வழிந்த ரெத்தத்தை துடைத்துக் கொண்டிருந்தாள் தங்கை வாசுகி.

யாழ்பாணம் போகச் சொல்லி எத்தனை தரம் சொல்லியும் போகமுடியாதென்று சொல்லிவிட்டு இந்தநாய் இப்படி என்னை அவமானப்படுத்துறானே: மனைவியிடம் புறுபுறுத்துக் கொண்டிருந்தார் சதீஸின் அப்பா. நவரெத்தினமும் அகிலனும் முகிலனும் செந்தில் வீட்டுக்குள் ஒளிந்திருக்கும் செல்லம்மாவின் மகன்கள் இருவரும் வெளியில் வரமாட்டார்களா என்ற எதிர்பார்ப்பில் நின்றுகொண்டிருந்தார்கள். ஊரின் அரை வாசிக்கு மேற்பட்ட சனம் வீதிக்கு வந்துவிட்டது.

'தவமணி அக்காட தம்பிமார்ர குணமும் அவனுகளின்ர ஒற்றுமையும் தெரியாம செல்லம்மாட புள்ளைகள் கைய வைச்சிருக்கானுகள் இது எதிலபோய் முடியுமோ...' கூட்டத்தில் யாரோ இருவர் பேசிக்கொள்வது சதீஸின் தாயின் காதுகளுக்கு கேட்கின்றது.

'என்ன நடந்தது... ஆர் அடிச்சது இவனுக்கு.'

ஆத்திரத்துடன் ஓடிவந்த ராமு சதீஸை பார்த்து கொண்டே-கேட்டான்.

தவமணி அக்கா எதுவும் பேசவில்லை.

'ஏனாம் அடிச்சவன்களாம்.' மீண்டும் கேட்டான் ராமு.

'இவன் அவளுறமகளுக்கு காதல் கடிதம் எழுதியிருக்கான் அதைகண்டுபிடிச்ச தமையன்மார் இவனுக்கு அடிச்சிருக்கான்கள். அதுக்கு நீங்கள் இப்ப என்ன செய்யப் போறியள் சும்மா துள்ளிக்குதிக்காமல் வீட்டபோங்கடா' நிலைமையை சமாளிக்க முற்பட்டா தவமணி அக்கா.

'அவனுகள் அடிக்கும் வரைக்கும் நீங்களெல்லாரும் என்னத்தையடா பார்த்து கொண்டிருந்தியள்.' தமையன் தம்பிமாரிடம் ஆத்திரத்துடன் கேட்டான் ராமு.

'அவனுகள் என்ன எங்களுக்கு முன்னாலேயோ அடிச்சவன்கள். 'நாங்கள் இல்லாத நேரம் பார்த்து அடிச்சிபோட்டு வீட்டுக்குள்ள போய் ஒளிஞ்சிற்றானுகள் வெளியில வருவானுகள் எண்டு தான் பார்த்து கொண்டு நிற்கிறம்.' செந்தில் சொல்லிமுடிக்குமுன் 'டேய் வாங்கடா' என்றபடி செல்லம்மாவின் மதிலுக்கு மேலால் ராமு பாய அவனைத் தொடர்ந்து அவனின் அண்ணன் தம்பிமாரும் பாய 'ஐயோ எண்ட புள்ளைகளை விடுங்கடா ஐயோ... ஐயோ...' என்ற பெண்களின் குரல் செல்லம்மாவின் வீட்டுக்குள்ளிருந்து கேட்டது.

'டேய்... டேய்... உங்கள கையெடுத்து கும்பிட்டன் வாங்கடா வேணாம்டா... டேய் வாங்கடா' வீதியிலிருந்து தம்பிமாரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தா தவமணி அக்கா.

'ஆரெண்டு நினைச்சுக் கொண்டான்கள் நாய்கள்' சொல்லிக் கொண்டே மூச்சுவாங்கியபடி மதிலின் மேலால் பாய்ந்து ஒவ்வொருவராக வீதிக்கு வந்த அந்த அண்ணன் தம்பிகளை ஊரே கூடிநின்று வியப்பாக பார்த்தது.

'குழவிக் கூட்டுல கல்லெறியுறதும் இவனுகளில ஒருத்தன்ட மேலில கை வைக்கிறதும் ஒண்டுதான்' இது செல்லம்மாட புள்ளைகளுக்கு தெரியாமல் போனதுக்கு ஆர் என்ன செய்ய முடியும். சொல்லிக் கொண்டே புதினம் பார்க்க வந்த கூட்டம் மெல்ல கலைந்து கொண்டிருந்தது.

## 4

பகல் நடந்த அமர்களத்தின் பின்பு தவமணி அக்கா தன்னைப் பேசுவா என்ற பயத்தில் அன்று முழுதும் அவவின் வீட்டுக்கு போகாமல் இரவானதும் சின்னக்கா வீட்டுவாசல் கட்டிலில் வந்து படுத்த ராமுவின் முகத்தில் வந்து விழுந்த கல் அவனை தட்டியெழுப்பியது.

எழும்பி வேலி ஓரத்துக்கு சென்றான். சுகந்தி அவனுக்காக காத்து நின்றாள்.

'என்ன உங்கட அக்காவீட்டுல உங்களைக் காணயில்ல. நீ போயிருந்தியா. நாடகம் நடிச்சீங்களோ.'

'இல்ல. உங்கட அக்காவுக்கு ஒரே கவலை நாளைக்கு வரச் சொல்லிட்டா. அது சரி நீங்க ஏன் வரயில்ல?'

'அக்கா பேசுவா என்றபயம்தான்.'

'என்ன பெரிய சண்டியன் என்ற நினைப்பாக்கும். வீடுபுகுந்து அடிச்சியளாமே'

'வேறென்ன....அவனுகள் எங்கட மருமகனுக்கு அடிக்க நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கவோ.'

'ஏன் உங்கட மருமகன் செய்தது மட்டும் சரியோ. படிக்கிற பிள்ளைக்கு காதல் கடிதம் கொடுக்கிறது மட்டும் பிழையில் லையோ.'

'அதுக்கு கண்ட இடத்துல வைச்சி அடிக்கிறதுதான் முறையோ. நாங்கள் கொல்லாமல் விட்டதுதான் பிழை' ராமு பல்லை நறுவினான்.

'இந்தக் கோபம்தான் பிழை. படிக்கிற பெட்டைக்கு காதல் கடிதம் கொடுத்தது பிழைதானே.'

'அப்படிப் பார்த்தால் படிக்கிற உன்னைக் காதலிக்கிறதும் நான் செய்யுற தப்புத்தானே'

'அப்ப நீங்களும் படிக்கலாம்தானே.'

'எப்ப இந்த இருபத்தைந்து வயதுக்குப்பிறகா. என்னபகிடி விடுறயா சுகந்தி!'

'படிக்க முடியாதென்றால் படித்த படிப்புக்கு ஒருவேலை தேடிக் கொள்ளலாம்தானே!'

'இப்ப என்ன சொல்லவாறாய். உன்னைக் காதலிக்க எனக்கு படிப்பு போதாது என்று சொல்லுறயா. இஞ்சபார் சுகந்தி நான் படிக்கயில்லை யெண்டோ படிச்சபடிப்புக்குரிய உத்தியோகம் கிடைக்கையில்லையெண்டோ சும்மா இருக்கையில்லையே. அப் பாவோட வயல நான்தானே பார்க்கிறேன். என்னாலையும் உழைக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு சுகந்தி'

'அப்ப நானும் படிப்ப நிறுத்திக் கொள்ளவோ'.

'ஏன் இவனோட சேர்ந்துவாழ இதுக்கு மேலேயும் எதுக்குப டிப்பு வேணும் என்று யோசிக்கிறயா. உனக்கு விருப்பம் இல்லை யெண்டால் இப்பவே சொல்லு இதோடயே நிறுத்திக் கொள்ளு வம். தொடர்ந்து பழகி நம்பிக்கைய வளர்த்து பிறகு பிரச்சினை பட்டு விலகி கஸ்டப்படுறதைவிட இப்பவே நாம பிரியுறதுதான் நல்லது.'

ராமு சொன்னதைக் கேட்டு சுகந்தி எதுவும் பேசாமல் நின்றாள்.

'என்ன சுகந்தி எதுவும் பேசாமல் நிற்கிறாய்.'

'இல்ல நான் எதுவும் பேசயில்ல. என்னபேசினாலும் உங்க ளுக்கு தப்பாவே புரியுது. உங்கட படிப்பையும் உழைப்பையும் பார்த்தா நான் உங்கள விருப்பினன்.'

'அப்ப எதைப்பார்த்து என்னை விருப்பினாய்?' சொல்லிக் கொண்டே சுகந்தியின் கரங்களை பற்றிக் கொண்டான் ராமு.

'விடுங்கோ நான் போகப்போறன்!'

'என்ன வந்ததும் போகப்போகிறன் என்று அவசரப்படுறாய்.'

'இந்த நடுச்சாமத்தில இன்னும் எவ்வளவு நேரத்துக்கு நிற்கி றது.'

'ஏன் நடுச்சாமம் என்றால் என்ன உனக்குப் பயமா.'

எவ்வளவு நேரம் என்ன பேசினார்கள் என்று தெரியாது இருவரும் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

'சொல் சுகந்தி நடுச்சாமம் என்றால் என்ன உனக்குபயமா?' பேசுவதற்கு வார்த்தை இல்லாததால் ஏதோ பேசவேண்டுமென்பதற்காக பேசியதையே பேசினான் ராமு.

'நடுச்சாமத்துக்கு பயப்பிடவில்லை உங்களுக்குத் தான் பயப்பிடுறன்'. தனது பின் பிடரிக்குள் நுழைந்து அவளின் கூந்தலோடு விளையாடிய அவனின் கரங்களை எடுத்துவிட்டு சொன்னாள் சுகந்தி.

'ஏன் பிடிக்க வில்லையா சுகந்தி'

'இல்லை பிடிக்கயில்ல'

'என்ன பிடிக்கயில்ல. என்னைப் பிடிக்கயில்லையா'

'உங்கள பிடிச்சிருக்கு. ஆனால் நீங்க என்னோட பிடரிய பிடிக்கிறதுதான் பிடிக்கயில்ல.'

'கதைப் புத்தகம் வாசிக்கிற பாதிப்பு உன்ர கதையில தெரியுது' சிரித்துக் கொண்டே சொன்னவன் அவளின் கைகளை பிடித்தான்.

'விடுங்கோ நான் போகவேணும்.' அவள் சிணுங்கினாள்.

'விருப்பமில்லையெண்டால் ஏன் சுகந்தி வந்தனீ.' பொய்க் கோபத்துடன் கேட்டான் அவன்.

'நானும் வரக்கூடாதென்றுதான் நினைக்கிறது. ஏனோ தெரியயில்லை என்னையும் அறியாமல் இந்த நேரத்துல வந்து சேர்ந்துடுறன். விருப்பப்பட்டு வந்தால் உங்கட விருப்பத்துக்கெல்லாம் இணங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை, புன்னகை மன்னன் படம் பார்த்ததின் பாதிப்பு நல்லாவே தெரியுது'. அவனின் சூடான மூச்சுக் காற்று அவளின் முகத்தில்பட அவள் விலகிக் கொண்டாள்.

'நேர மாகுது நான் போகவேணும்'. நாளைக்கு பள்ளிக்கூடம் போக வேணுமென்கிறதையே மறந்துபோயிற்றன்.'

'நாளைக்கில்லை இன்டைக்கு, இப்பவே விடிஞ்சி கொண்டிருக்கிறதை நீ கவனிக்கயில்லையோ. பள்ளிக்கூடம் போயும் என்னத்த படிக்கிறது கதைப்புத்தம் தானே!' ராமு சொல்லி முடிக்குமுன்னே சுகந்தி எழுந்து ஓடி விட, அவன் அடுத்த இரவினை எதிர்பார்த்துக் கொண்டு திரும்பி வந்தான்.

கல்முனையில் டியூசன் வகுப்பு முடிந்து வீடுபோக ஓடிவந்து அக்கரைப்பற்று பஸ்ஸில் ஏறினாள் வாசுகி. பஸ்ஸில் கூட்டம் அவ்வளவாக இல்லை. ஆனால் எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தது ஒரேயொரு இருக்கையைதவிர. அதில் உட்காரலாம் என்று போன வாசுகி அதில் வசந்தி உட்கார்ந்திருப்பதை கண்டதும் உட்காராமல் நின்றுவிட்டாள்.

'என்ன வாசுகி இடமிருந்தும் இருக்காமல் நிற்கிறாய்' என்று கேட்ட வசந்தியை முறைத்துப் பார்த்தாள் வாசுகி.

'என்னில என்ன கோபமாய் இருக்கிறாய் போல. இரண்டு கிழமையாய் என்னோட கதைக்கக் கூடயில்ல இரன் வாசுகி!' கெஞ்சினாள் வசந்தி.

'உன்னோட கதைக்க என்னஇருக்கு. நீயெல்லாம் ஒரு மனிசி தானே!' ஆத்திரத்தோடு கேட்டாள் வாசுகி முன்னிருக்கைக்கார முஸ்லீம் பெண்கள் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

'இரு... பிறகு கதைப்பம்.' வசந்தி சொல்லவேண்டாவெறுப்பாக உட்கார்ந்தாள் வாசுகி.

'உனக்கு விருப்பமில்லையெண்டால் கிழித்தெறிந்திருக்கலாம். அதைவிட்டு போட்டு கொண்டுபோய் கொண்ணருக்கிட்ட குடுக்க அவையள் தங்கட வீரத்தை அண்ணாக்கிட்ட காட்டியிருக்கினம். இப்ப அண்ணாவுக்கு விருப்பமில்லாமலேயே சித்தப்பா அண்ணாவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிப் போட்டார். பாவம் அண்ணா!' சொல்லும் போதே வாசுகியின் கண்கள் கலங்குவதை கவனித்தாள் வசந்தி.

'இவ்வளவும் கதைக்கிறயே கொண்ணன் தந்த கடிதத்தை நீ மட்டும் என்ன என் கையிலையா தந்தாய். அப்படி தந்திருந்தால் இவ்வளவு பிரச்சினையும் வந்திருக்காதே எனக்கு தெரியாமல் என் புத்தகத்தில் நீ வைத்த உன் அண்ணனின் கடிதத்தை நான் பார்க்கிறதுக்கு முன்னமே அண்ணனவையள் பார்த்திட்டானுகள் அதுக்குப் பிறகு தான் இவ்வளவு புதினமும் நடந்தது' வசந்தி சொன்னதும் தான் செய்த தவறை நினைத்து யோசித்துக் கொண்டிருந்தாள் வாசுகி.

'என்னடி வாசுகி யோசிக்கிறாய்?'

'இல்ல பாவம் அம்மா. அண்ணாவைப் பற்றித்தான் எந்தநேரமும் யோசிச்சிக் கொண்டிருக்கிறா. முகிலன் மாமாவும் சவூதிக்கு போயிற்றார். அண்ணாவும் மாமாவும் இல்லாமல் வீடே வெறிச் சோடிக் கிடக்குது. அம்மம்மாவுக்கும் சுகமில்லை. சவூதிக்கு போன முகிலன் மாமாவோட நினைப்போ என்னவோ அம்மம்மா இப்ப எந்த நேரமும் அழுது கொண்டிருக்கிறா. பாவம் அம்மம்மா மனசுல நினைக்கிற எதையும் வெளியில் சொல்ல முடியாமல் கண்ணீரா உதிர்க்கிறா!' வாசுகி சொல்லும்போதே அவளின் கண்கள் கலங்கியது.

'பாவம்டி உங்கட அம்மா. அண்டைக்கு சண்டையில ஒன்றுமறியாத உங்கட அம்மாவுக்கு எங்கட அம்மா கண்ட மாதிரி இல்லாததும் பொல்லாததும் சொல்லி வாய்க்கு வந்தமாதிரி பேசின நேரம் எதுவும் பேசாமல் அமைதியாக நின்ற உங்கட அம்மாவைப் பார்த்து நான் எனக்குள்ளேயே அழுது கொண்டன்.' சொல்லிமுடித்த வசந்தியை வினோதமாக பார்த்தாள் வாசுகி.

'உங்கட அண்ணா கடிதம் ஏதும் போட்டவரோ' வசந்திகேட்டாள்.

'போட்டவர் ஏன் கேட்கிறாய்.'

'இல்ல சும்மா தான் கேட்டன். என்ன எழுதியிருக்கார்.'

'என்னமோ எழுதியிருக்கார். நிச்சயமாக உன்னபற்றி எதுவும் அண்ணா எழுதயில்லை' பொய்க்கோபத்தோடு சொன்ன வாசுகியை ரசித்தாள் வசந்தி.

'அவர் என்னைப்பற்றி எதுவும் எழுதத்தேவையில்ல. அவர் தான் போகும்போதே என்னோட எல்லாத்தையும் சொல்லிவிட்டு போயிற்றாரே.' சொன்ன வசந்தியை ஆச்சரியமாக பார்த்தாள் வாசுகி. 'அவர் யாழ்பாணம் போவதற்கு முதன் நாள் நான் கோயிலுக்கு போயிற்று வரும்போது என்னை வழிமறித்து என்னிட்டநிறைய கதைச்சார். நான் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அவர் என்னை இப்போதும் விரும்புறதாய் சொன்னார் தன்னில விருப்பம் எண்டால் தான் திரும்பிவரும் வரை காத்திருக்கச் சொன்னார் இல்லையெண்டால் எனக்கு பிடிச்சவனைக் கல்யாணம் கட்டிக் கொண்டு சந்தோசமாய் இருக்கச் சொன்னார் ஆனால் தான் மட்டும் நான் அவருக்காக காத்திருப்பேன் என்ற நம்பிக்கையுடன்தான் வருவேன் என்றார்'.

'நீ என்ன சொன்னாய்.'

'எதுவும் சொல்லையில்ல'

'இப்ப என்னடி சொல்லுறாய்'

'எதைப்பற்றி'

'அண்ணாவைப் பற்றி'

'.... .... ....'

'நீ அண்ணாவை விரும்புறாயா வசந்தி'.

தலையைக் குனிந்து கொண்டு 'ஆம்' என்பது போல் தலையசைத்த வசந்தியின் தலையை தொட்டு நிமிர்த்தினாள் வாசுகி.

வசந்தியின் கண்கள் குளமாக நிறைந்து நீர்த்துளிகள் முத்தாக சொரிந்து கொண்டிருந்ததை கண்ட வாசுகி அவளின் கரங்களை இறுக்கி பற்றிக் கொண்டாள். இனி நீ என் மைத்துனி என்ற வார்த்தையை அந்த பற்றுதல் சொல்லாமல் சொன்னது.

பஸ் அக்கரைபற்றில் வந்து சேர்ந்ததும் இது வரையில் சிரித்துப் பேசி வந்த வாசுகியும் வசந்தியும் முன்பின் தெரியாதவர் போல் இறங்கி முன்னும் பின்னுமாக இடைவெளிவிட்டு நடித்து நடந்து கொண்டார்கள்.

மல்லிகை பந்தலில் கூடியிருந்தவர்களுக்கு குசினிக்குள் தேனீர் போட்டுக் கொண்டிருந்த வாசுகி பகல் பஸ்சுக்குள் நடந்தவி சயத்தை புவிதாவுக்கு சொல்லிக் கொண்டிருந்த வாசுகியால் புவிதாவின் கண்கள் கலங்குவதை கவனிக்க முடியவில்லை.

## 5

இரண்டு வாரத்தின் பின்பு மீண்டும் மல்லிகை பந்தல் நிறைந்திருந்தது. சுகந்தியும் வந்திருந்தாள். முகிலனும் சதீஸ் இல்லாதது தவமணி அக்காவின் மனதை என்னவோ செய்தது.

தாயின் கால்களுக்கு ஏதோ ஒரு தைலத்தை தடவி இழுத்து விட்டு கொண்டிருந்தான் அகிலன். ஆச்சி வழமைபோல் நாடகம் பார்க்கும் ஆசையில் விரல்களால் வாசல் மணலை பரவிக் கொண்டிருந்தாள். திருவிழாவுக்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் தான் இருக்கின்றது. அதற்கிடையில் நாடக ஒத்திகை களை சரிவர செய்ய வேண்டுமென்ற பரபரப்போ, அல்லது முகிலனும் சதீஸும் வெளியில் சென்றுவிட்டதால் மனதில் ஏற் பட்ட ஒரு சிறு வெறுமையின் பிரதிபலிப்போ, அல்லது வருத்த மாக கிடக்கும் தாயைப் பற்றிய எண்ணமோ என்னவோ தெரிய வில்லை. தவமணி அக்காவின் முகம் வாடிப்போய் இருந்தது. ராமும் சுகந்தியும் ஒருவரையொருவர் பார்த்து ஏதோ கண்ஜாடை செய்து பேசிக் கொள்வதையும் தவமணி அக்கா கவனிக்கத் தவறவில்லை.

நாங்க இனி நாடகம் ஒத்திகை பார்க்க தேவையில்லை யெண்டு நினைக்கிறான். இந்த முறை ஊர் திருவிழாவே நடக்குமா என்கிறதும் கேள்விக் குறிதான். மல்லிகை பந்தலுக்கு கடைசியாக

வந்து சேர்ந்த நவரெத்தினம் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டு அவனை எல்லோரும் கேள்விக்குறியுடன் பார்த்தார்கள். உங்களுக்கு எதுவும் தெரியாதோ. யாழ்பாணத்துல பதின்மூன்று ஆமிக்காரன்களை குண்டு வெச்சு சாகடிச்சிப் போட்டாங்களாம். யாழ்ப்பாணம் முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுலில இருக்காம். கொழும்பில இருக்கிற தமிழாக்களும் பயந்து கொண்டிருக்கினமாம். இதைத் தொடர்ந்து நாட்டு நிலைமை என்னாகுமோ தெரியாது.

அன்று பகல் யாழ்பாணத்தில் நடந்த புதினங்களை நவரெத்தினம் மூலமாக அறிந்ததும் சதீஸை நினைத்து தவமணி அக்கா கடவுளை வேண்டிக் கொண்டா.

'அப்ப என்னடா தம்பிமாரே எங்கட பக்கமும் ஊரடங்கு சட்டம் போடுவான்களோ, அப்பிடிப்போட்டால் ஊரெல்லாம் ஆமிக்காரன்கள் வருவான்கள் இனி வீடுவாசலில குமர் குட்டிகள் இருந்தமாதிரித்தான். ஆச்சி தனக்குள்ளேயே பயத்தில் பேசிக் கொண்டா.'

முப்பது வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட ஒரு கலவரத்துக்காக ஊரடங்கு சட்டம் கொண்டுவந்த நேரம் அந்த ஊர் பகுதிக்கு வந்த ஆமிக்காரன்கள் ஒரு பெண்ணோடு சேட்டை விட்டான்களாம். அந்த நிகழ்ச்சி இப்போதும் ஆச்சியின் மனதில் பசுமையாக இருக்கின்றதால் ஏற்பட்ட பயத்தில் ஆச்சி புலம்புவதை கேட்டு ராமுவும், நவரெத்தினமும் அகிலனும் செந்திலும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

ராமுவின் கடைசித்தம்பி குமாரும் தவமணி அக்காவின் கடைசிமகன் பாஸ்கரனும் ஊருக்கு ஆமிக்காரன் வரவேண்டும் அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை பார்க்க வேண்டும் என்று சந்தோசத்தில் துள்ளினர். குமாரும் பாஸ்கரனும் ஆமிக்காரர்கள் எப்படியிருப்பார்கள் என்று ஏங்கும் வயதுடைய இன்னும் ஆமிக்காரர்களையே கண்டிராத சின்னஞ்சிறுவர்கள்.

ராமு, செந்தில், முகிலன், அகிலன், நவரெத்தினம் ஆகியவர் களின் சின்னவயதில் சேகுவரா கலவரத்தின் போது ஓரிரு தடவை தங்கள் ஊருக்கு ஆமிக்காரர் வாகனத்தில் வந்துபோனதை பார்த்த தாக ஒரு சின்ன நினைவு.

நவரெத்தினம் சொன்ன அந்த செய்திக்கு பின்பு இனி நாடகம் நடிப்பதில்லை என்ற முடிவுடன் எல்லோரையும் போகச் சொல்லி தவமணி அக்கா சொல்லிவிட்டா.

சின்னக்கா வீட்டில் வந்துபடுத்த ராமு அந்த நேரம் பார்த்து வேலிஅருகே வந்தான். இப்போதெல்லாம் சுகந்தி அவனை கல்லெறிந்து எழுப்புவதில்லை. அவள் வரும் நேரம் பார்த்து அவனாகவே எழும்பி போகும் போது அவளும் அவனுக்காக காத்திருப்பாள்.

வந்துநின்ற சுகந்தியின் கைகளை மெல்ல தொட்டுதடவிக் கொண்டிருந்த ராமுவிடம் சுகந்தி எதுவும் பேசாமல் மௌனமாக நின்றருந்தாள்.

'என்ன சுகந்தி எதுவும் பேசாமல் நிற்கிறாய்'

'... ... ... ...'

'என்ன ஏதும் பிரச்சினையா... அக்கா வீட்டுக்கு நாடகம் நடிக்க வந்த நேரத்திலிருந்து நீ ஒரு மாதிரியாக இருக்கிறாய் என்னபிரச்சினை.'

'அம்மா ஏசிப்போட்டா.'

'ஏன்.'

'இண்டைக்கு பகல் நீங்களும் நானும் கோயிலில சந்திச்சு கதைச்சதை ஆரோ அம்மாக்கிட்ட சொல்லிஇருக்கினம். அம்மா கேட்டா.'

'நீ என்ன சொன்ன...'

'அப்பிடி எதுவும் இல்லையம்மா என்று சத்தியம் செய்து சொன்னன்'

'ஏன் சத்தியம் செய்தாய் அப்பிடி எதுவும் இல்லையா.'

'நமக்குள்ள சந்தர்ப்பத்தில இருந்து தப்பத்தான் சத்தியம் செய்தன்'.

'பிறகு'

'அப்பிடி ஏதும் நடந்தால் அப்பாவுக்கு தெரிந்தால் அப்பா தூக்கு போட்டு செத்துப் போயிடுவாராம். அதுக்குபிறது எனக்கு சோத்துல விஷத்த கலந்து தந்து என்னை சாக்காட்டவும் அம்மா தயங்கமாட்டாவாம் என்று சத்தியம் செய்யுது மனிசி'.

சுகந்தி சொன்னதை கேட்டு சிரித்தான் ராமு.

'என்ன சிரிக்கிறியள்.'

'இதுதான் பெரிய விசயமோ. இது எல்லார் வீட்டிலையும் எல்லா தாய் தகப்பனும் சொல்லுறதுதானே. இதுக்குபோய் பயப்பிடுறாய்.'

'எனக்கு பயமாய் இருக்கு.'

'அதுக்கு.'

'கொஞ்ச நாளைக்கு நாம சந்திக்கிறத விட்டிற்று எவருக்கும் எந்த சந்தேகமும் வராமல் நடந்து கொள்ளுவம்.'

'உனக்கு சம்மதமோ'

'வேறென்ன செய்ய முடியும்'

ராமு கனநேரம் கதையாமல் நின்றான்.

'என்ன ஒரு மாதிரியாக பேசாமல் நிற்கிறயள்' - சுகந்தி கேட்டாள்.

'இல்லை....ஒண்டுமில்லை'

'இல்லை நானும் கவனிச்சன். உங்கடவீட்டில உங்கட சகோதரங்களுக்குள்ள வழமையாக இருக்கிற சந்தோசம் இண்டைக்கு இல்ல. தவமணி அக்காவும் ஒரு மாதிரியாக இருந்தா என்ன ஏதும் பிரச்சினையோ'

'என்ன சுகந்தி நீ அறியாததா. மூத்தம்மாவுக்கும் சுகமில்ல. சதீஸும் முகிலனும் போனதில் இருந்து தவமணி அக்கா நல்லா சாப்பிடறதில்லை. பாவம் அக்கா, அவவை நினைச்சால் தான் யோசினையாக இருக்கு.'

'இதென்ன புதினமான குடும்பம். பெற்ற தாய் தகப்பனை விட நீங்களெல்லாரும் தவமணி அக்கா மேலதான் அன்பாய் இருக்கிறியள். அவவும் உங்கள் எல்லாரையும் எந்த பாகுபாடுகளும் இல்லாமல் பெற்ற பிள்ளைகளைப் போல பார்க்கிறார். சில நேரங்களில உங்கட குடும்பத்தை பார்க்க பொறாமை கூட வருகுது எனக்கு'

'அதுக்கு நாங்கள் கொடுத்து வைச்சிருக்கிறம், சுகந்தி உனக்கு தெரியாமலில்லை. நாங்கள் பிறந்தது வெவ்வேறு வயித்தில எண்டாலும் வளர்ந்தது முழுதும் மூத்தம்மா வீட்டிலதான். தவமணி அக்காதான் நாங்கள் முதற்கண்ட எங்களின் மூத்தக்கா. அவவின் முகம்பார்த்து அவவுக்கு கீழ்தான் நாங்கள் வளர்ந்தம். ஆனால் இண்டைக்கு அவவின் முகம் வாடுறதப்பார்க்க எங்களுக்கு கஷ்டமாய் இருக்கு'.

'தவமணி அக்காட கவலைக்கு சதீஸும் உங்கட முகிலன் அண்ணாவும் இல்லாதது மட்டும்தான் காரண கொண்டு நினைக்கிறியளோ' சுகந்தியின் கேள்வியில் ஒரு நக்கலும் கேலியும் கலந்திருந்தை கவனித்தான் ராமு.

'அப்படித்தான் நான் நினைக்கிறன். ஏன் நீ என்ன நினைக்கிறாய்?'

'ஏன் உங்களுக்கு தெரியாமல்தான் கேட்கிறயளோ.'

'எனக்கு தெரிந்திருந்தால் அது உனக்கும் தெரிந்திருந்திருக்கும் என்கிறது உனக்கு தெரியாதா'

'ஊர் விசயம் என்றால் எனக்கு சொல்லியிருப்பியள். இது உங்கட உள்வீட்டு விசய மெல்லோ எப்படி சொல்லுவியள். ஊருக்குள்ள ஏதும் விசயம் என்டால் வீதிக்கு போய் இழுத்து போட்டு மிதிப்பியள். உங்கட வீட்டுக்குள்ள ஒரு விசயமெண்டால் மூடிமறைச்சிப் போடுவியள்.'

சுகந்தியின் இந்த பேச்சினால் அவளின் மேல் முதல்முதலாக ஆத்திரப்பட்டான் ராமு. சுகந்தி நீ ஏதோ வஞ்சகத்தனமாய் கதைக்கிறாய் எண்டு நினைக்கிறன். அந்த வசந்தியின் குடும்பம் உனக்கும் சொந்தக் காரர் என்கிற எண்ணத்தில நீ கதைக்கிறாய். ஆனால் என்ன சொல்ல நினைக்கிறாய், என்ன நடந்தது என்கிறத மட்டும் கெதியாய் சொல்லு.

## 6

**சு**கந்தி சொல்லி விட்டுபோன செய்தி ராமுவின் நித்திரையை குழப்பிக் கொண்டேயிருந்தது. அவள் சொன்னது சரியாக இருக்குமா இதை நம்பலாமா, அப்படியென்றால் இதை எப்படி வாசுகியிடம் கேட்பது. அடித்துக் கேட்பதா? அன்பாய்க் கேட்பதா? ஆயிரம் கேள்விகளைக் கொண்டிருந்த ராமுவை நித்திரை மெல்ல அணைக்க முற்பட்டபோது கதவைத்திறந்துவந்த சின்னக்கா விடிந்த தென்பதை உணர்த்தினா.

எழும்பி நேராக மூத்தக்கா வீட்டுக்கு வந்தான் ராமு. இரவெல்லாம் வாசலில் கொட்டிக்கிடந்த மல்லிகைபூக்களை கைகளால் எடுத்து ஒரு தண்ணீர் சட்டிக்குள் போட்டு விட்டு வாசலை பரவிக் கூட்டிக் கொண்டிருந்த வாசுகி தன் அருகில் வந்துநின்ற ராமுமாமாவை நிமிர்ந்து பார்த்தாள்.

மூத்தக்கா, அத்தான், பிள்ளைகள் யாரும் எழுந்திருக்க வில்லை. கிணற்றடிப்பக்கம் தனியாக தன்னை கூட்டிக் கொண்டு போன ராமுமாமாவை ஆச்சரியமாக பார்த்தாள் வாசுகி.

'உன்னிட்ட ஒரு விசயம் கேட்கவேணும் மறைக்காமல் உண்மையைச் சொல்லு நான் ஒரு விசயம் கேள்விப் பட்டன் உண்மையா' ராமுவின் கேள்வியினால் வாசுகியின் முகத்தில் எந்தமாற்றமும் தெரியவில்லை.

'என்ன விசயம் கேளுங்கோ' என்றாள்.

'உனக்கு அவன், புவிதாவோட அண்ணன் காதல் கடிதம் தந்தவனாம் உண்மையோ' ஆத்திரத்துடன் கேட்டான் ராமு. ஆம் என்பதுபோல் தலையாட்டினாள் வாசுகி.

'அதுக்கு நீ என்ன சொன்னாய்'

'நான் கடிதத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்திட்டன்'. வாசுகி சாதாரணமாகவே சொன்னாள்.

'நீ அவனிடம் என்ன சொன்னாய் என்றுதான் கேட்கிறன்?'

'நீ பக்கத்துவீடு என்றாலும் எங்கட குடும்பத்தில நீயும் ஒருத்தனாய்த்தான் பழகுறாய் என்றுதான் நினைச்சிருந்தன். ஆனால் உனக்குள்ள இப்படியொரு எண்ணம் இருக்குதெண்டு எனக்கு தெரியாமல் போயிற்று. தெரிந்திருந்தால் நான் உன்னோடு கதைத்திருக்கவே மாட்டன். தன்னோட மகன், தம்பிமாரைப் போலதான் உன்னையும் எங்கட அம்மா நினைச்சிருக்கா. நீ இப்படி நடந்து கொண்டாய் என்பதை கேள்விப்பட்டால் அவஉன் னைப் பற்றி என்ன நினைப்பா என்று கேட்டு விட்டு அவன் தந்த கடிதத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்திட்டன்'

சொல்லி முடித்த வாசுகியை ஆச்சரியமாக பார்த்தான் ராமு.

'இது மூத்தக்காவுக்கு தெரியுமா' ராமு கேட்டான்.

'இல்லை தெரியாது'

'அப்ப ஏன் அம்மா ஒரு மாதிரியாக இருக்கிறா.'

'அம்மா ஒரு மாதிரியாக இருக்கிறது இருக்கட்டும். அதுசரி இந்த விசய மெல்லாம் உங்களுக்கு சொன்னது சுகந்தி அக்கா தானே'

எந்தவித சலனமும் இல்லாமல் வாசுகி கேட்ட இந்த கேள்வி யால் சிலையாக நின்றான் ராமு.

'என்னமாமா யோசிக்கிறியள் எங்களுக்கு எப்படித் தெரியு மென்டு. எனக்கு மட்டுமில்ல இந்தவிசயம் அம்மாவுக்கும் தெரி யும் அதுதான் அவ ஒரு மாதிரியாக இருக்கிறா'.

வாசுகி சொல்லிவிட்டு தன்பாட்டில் வாசலைக் கூட்டிக் கொண்டிருக்க கிணற்றின் மேல் ஏறி இருந்து எதையோ யோசித் துக் கொண்டிருந்தான் ராமு.

## 7

இந்த வருட கோயில் திருவிழா எந்த வித ஆடம்பரமும் இல்லாமல் நடந்துமுடிந்து ஆறு மாதங்களாகிவிட்டது. இந்த ஆறு மாதத்துக்குள்தான் இந்த ஊர் பகுதியில் என்னென்னமாற்றமெல் லாம் நடந்து முடிந்து விட்டது.

இப்போதெல்லாம் ஊரே ஒரு சோகமுடன் தான் காணப்படு கின்றது. யாழ்ப்பாணத்தில் நடந்த பிரச்சினையால் இந்த ஊர் பகுதியில் எந்தவித அசம்பாவிதங்களும் நிகழாவிட்டாலும் இனி வரும் எதிர்காலத்தில் இந்த ஊர் எப்படியெல்லாம் ஆகப் போகின் றதோ என்ற துக்ககுறியோ என்னவோ ஊரில் உள்ள தாய் தகப்பன்களின் முகங்கள் வாடிப் போய்ந்தான் இருக்கின்றன. காரணம் ஊரில் அடிக்கடி காணாமல் போகும் மகன்கள்தான். நாளை விடிந்தால் நமது பிள்ளையும் போய் விடுவானோ என்ற ஏக்கத்தில் தினம் தினம் தாய்மார் ஏங்கிக் கொண்டிருந்தார்.

சிலதாய்மார் வெளியில் தூங்கும்மகன்களை விடிவதற்குள் அடிக் கடி எழும்பிப் பார்க்கின்றார்.

யாழ்பாணத்தில் பதினொரு ஆர்மி காரர்களை சுட்டதற்கு பின்பு பலபுதுமுக இளைஞர்களின் நடமாட்டம் இந்த ஊர் பகுதியில் அதிகரிக்கத் தொடங்கியது. வந்த இளைஞர்கள் ஊரில் உள்ள இளைஞர்களோடு மூலைமுடக்குகளிலும் சந்திகளிலும் வைத்து ஏதோ ரகசியம் பேசுகின்றார்கள் இரவானதும் ஊரில் எல்லையைத் தாண்டி இருக்கும் வயல்வெளிகளிலும் மைதானங்க ளிலும் கூட்டம் கூட்டி ஏதோதோ ரகசியப் பிரசங்கம் செய்கின்றார் கள். விடிந்தால் ஊரில் யாராவது ஒரு இளைஞன் காணாமல் போயிருப்பான். கேட்டால் இந்தியாவுக்கு பயிற்சிக்கு அனுப்பப் பட்டு விட்டானாம் என்று நண்பர்கள் சொல்வார்கள். இதற்கிடை யில் நடக்கும் சிறு சிறுவங்கிக் கொள்ளைகளை காரணம் சொல்லி அக்கரைப்பற்று பகுதியில் ஆமிக்காரர்களும் வந்து முகாமிட்டிருந் தார்.

ஊரில் உள்ள இளைஞர்கள் எவரைப்பார்த்தாலும் முகத்தில் ஒரு இறுக்கத்தை வைத்துக் கொண்டு மௌனமாகவே திரிகின்றார் கள். இப்போதெல்லாம் இரவையெல்லாம் வெளியில் கழித்து விட்டு பகலில்தான் வீட்டில் தங்குகின்றார்கள்.

நாளுக்கு நாள் நம்பிக்கை குறைந்து கொண்டுபோகும் அம்மா வின் உடல்நிலையை நினைத்து தவமணி அக்காவுக்கு கவலையா கவே இருந்தது. அதுமட்டுமல்ல ராமுவைப் பற்றியும் அவ அதிகமாக யோசிக்கத் தொடங்கிவிட்டா. சதீஸூ முகிலனும் போன பின்பு அடுத்த பிரச்சினையாக ராமுவின் பிரச்சினை வந்து சேர்ந்தது.

ராமுவும் சுகந்தியும் காதலிப்பது மெல்ல மெல்ல கசிந்து அது சுகந்தியின் தகப்பனின் காதுக்கும் எட்டிவிட தகப்பன் சுகந்தியை கூப்பிட்டு அடிக்கவோ ஏசவோ செய்யாமல் நேராக போய் வீட்டுக்குள் இருந்து கதவைப் பூட்டிக் கொள்ள சுகந்தியும் தாயும்

'சகோதரிகளும்' அப்பா...அப்பா...கதவை திறங்கோ அப்பா என்று கத்தி கூப்பாடு போட' என்மானம் மரியாதையெல்லாம் போன பிறகு நான் இனி ஏன் உயிரோடு இருக்கவேண்டும் நான் செத்துக் தொலையிறன் நீங்களெல்லாம் சந்தோசமாய் இருங்கோ' என்று குரல் கொடுத்தார் தகப்பன்.

'இல்லையப்பா....என்னை மன்னிச்சிக்கொள்ளுங்கோ அப்பா நான் செய்தது பிழைதானப்பா... நான் இனி ராமுவ பார்க்கமாட்டனப்பா... இனி நான் ராமுவோட கதைக்கக் கூடமாட் டனப்பா இது சத்தியமப்பா கதவ திறங்கப்பா' என்று சுகந்தி கதறியழ கதவைத் திறந்துவந்த தகப்பன் மகளை கட்டியழதது ஊரெல்லாம் தெரிந்து அது தவமணி அக்காவின் காதுக்கும் எட்டியபோது அவவுக்கு வந்த ஆத்திரத்தில் ராமுவை நன்றாக அடித்துவிட்டா. தான் அடித்தபோது பொறுமையாக தாங்கிக் கொண்ட ராமுவை நினைத்து தவமணிஅக்கா அடிக்கடி கவலைப் படுவதுண்டு.

இது நடந்து இப்போது நான்கைந்து மாதமாகிவிட்டது. ராமுவும் சுகந்தியும் சந்திப்பதாகவோ கதைத்துப்பேசுவதாகவோ தவமணி அக்காவுக்கு எந்த தகவலும் இதுவரையில் கிடைக்க வில்லை. மொத்தத்தில் ஊரில் நடமாடும் புதுமுகங்களின் வரவால் சுகந்தி ராமு காதல் விவகாரம் பற்றி யாரும் கவனம் கொள்வ தில்லை. ஆனால் ராமுவின் முகத்தில் பழைய சந்தோசம் இல்லை. எப்போதும் சோகமாகவே இருக்கின்றான்.

தாய்க்கு பணி விடை செய்ய வேண்டுமென்பதற்காக வாசுகி யின் படிப்பையும் பாதியிலேயே நிறுத்திவிட்டா தவமணி அக்கா. இதுவரையில் படித்த படிப்புக்கு ஒரு வாத்தியார் வேலையாவது கிடைக்காதா என்ற நம்பிக்கையில் பல விண்ணப்பங்களை அனுப் பிக் கொண்டிருந்தாள் வாசுகி.

நேற்றிரவு தூங்கிக் கொண்டிருந்த மகன் விடியுறதுக்கு முன் னாலேயே சொல்லாமல் கொள்ளாமல் கடிதம் எழுதிவிட்டு

போய்விட்டான் என்று அழுதுபுலம்பிக் கொண்டு வந்து மகனின் கடிதத்தை படித்துக் காட்டச் சொன்ன நேசம்மா மாமியை பார்க்க பாவமாய் இருந்தது தவமணி அக்காவுக்கு. நேசம்மா மாமி தவமணி அக்காவின் தாயின் ஒன்றுவிட்ட தம்பியின் மனைவி. மிகவும் நல்லவ, மரியாதையானவ.

நேசம்மா மாமி கொண்டு வந்த கடிதத்தை அகிலன் படித்துச் சொல்ல மாமி மேலும் அழுதுகொண்டு எழும்பிப்போய் விட்டா.

வீதியில் ஒரு ஆமி வாகனம் போனதாயும் தாங்கள் ஆமிக்கா ர்களை பார்த்ததாயும் குதுகலத்துடன் ஓடிவந்து சொன்ன ராமு வின் தம்பி குமாரையும் மூத்தக்காவின் கடைசிமகன் பாஸ்கரனை யும் 'ஏனடா ரோட்டுப் பக்கம் போனனீங்கள்' என்று அடிக்க ஓடினான் அகிலன். சுடு நீர் வைத்து அம்மம்மாவை குளிப்பாட்டி விட்டுக் கொண்டிருந்தாள் வாசுகி.

நவரெத்தினம் ஏதோ ஒரு கதைப் புத்தகமும் கையுமாக முன் மண்டப கதிரையில் சாய்ந்துகிடந்தான்.

வாசலில் நிற்கும் மாமரத்தின் வளைந்த கிளையொன்றில் ஏறி இருந்திருந்தான் ராமு.

அவனின் மனம் சுகந்தியை பற்றியே சிந்தித்துக் கொண்டிருந் தது. இனி மேல் ராமுவுடன் பேசவோ சந்திக்கவோ மாட்டேனப்பா என்று தகப்பனிடம் சத்தியம் செய்தாளாம் என்று கேள்விப்பட்டதி லிருந்து அவனின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது.

தகப்பனிடம் சத்தியம் செய்து கொடுத்தது போல் இனிமேல் அவள் தன்னைச் சந்திக்கத்தான் மாட்டாளா என்று நினைக்கையில் சுகந்தி இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது அவனுக்கு.

கிணற்றடிக்கு வந்த வாசுகி. ராமுவை பரிதாபமாக பார்த்து விட்டு குசினிக்குள் இருக்கும் தாய்க்கு பயந்து எதுவும் பேசாமல் போய் விட்டாள்.

சுகந்தி நீ உன் தகப்பனிடம் சொன்னது உண்மையாக இருந்தால் நீ என்னைச் சந்தித்தது காதலித்ததாக சொன்னது (நம் எதிர் காலத்தை பற்றியெல்லாம் பேசியது) இதெல்லாம் பொய்யா சுகந்தி. நான் உன்னைத் தேடிவந்தேனா நீ தானே தேடி வந்து என் நித்திரையை கலைத்தாய். இப்ப என் நிம்மதியையும் கலைத்து விட்டு நீ நிம்மதியாய் இருக்கிறாய் இது எந்த வகையில நியாயம். சுகந்தியிடம் நேருக்குநேர் கேட்க வேண்டிய கேள்விகளை தன் மனதுக்குள் கேட்டுக் கொண்டிருந்தான் ராமு.

அவன் ஒருத்தன் அவளின்ர மகளுக்கு காதல் கடிதம் கொடுத்து நடுரோட்டுல வைச்சு எனக்கு கேட்கக் கூடாத கேள்வி யெல்லாம் கேட்க வைச்சி அவமானத்தை தந்து போட்டு ஊர விட்டே போயிற்றான், இப்ப இவன் ஒருத்தனால உள்ள மானம் மரியாதையெல்லாம் போய் தலைகுனிஞ்சு நிற்க வேண்டி இருக் குது குசினிக்குள் இருந்து கொண்டு முணுமுணுத்துக் கொண்டி ருந்தா தவமணி அக்கா.

தவமணி அக்கா தன்னை அடித்ததோ தனக்கு ஏசுவதோ அவனுக்கு வலிக்கவில்லை. சுகந்தி சொன்னாளாம் என்று அவன் கேள்விப்பட்ட அந்த வார்த்தைகள் அவனின் மனதை காயப்படுத் திக் கொண்டே இருந்தது.

'இவர் ஒரு காதல் மன்னனெண்ட நினைப்பில அவவ காதலிச்சிருக்கார். அவளுக்கு பொழுது போறதுக்காக இவனோட பழகியிருக்காள். இப்பதாய் தகப்பனுக்கு தெரிஞ்ச உடன நல்ல பிள்ளை பேரெடுத்துக் கொண்டு தான் தப்பிற்றாள். அவள் படிச்சவள் இவனோட பழக முதலே இவன் யோசித்திருக்க வேணும் தன்னிட்ட என்ன தகுதியைக்கண்டு அவள் பழகுறா ளெண்டு.'

கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்த நவரெத்தினம் தமக்கையுடன் கதைப்பது ராமுவுக்கும் கேட்கின்றது.

சுகந்தி உண்மையிலேயே நினைத்திருப்பாளென்று தான் இவன் சொல்லுகின்றானா அல்லது தான் சொல்ல வேண்டு

மென்று நினைத்த தனது கருத்துக்களை சுகந்தியின் பேரில் சொல்லுகின்றானா என்று புரியாமல் தமையனை சந்தேகமாக பார்த்தான் ராமு.

யார் அப்படி நினைத்தாலும் சுகந்தி அப்படி நினைத்திருப்பா ளென்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை. ராமு பத்தாம் வகுப்பு வரைதான் படித்தவன் அதற்கு மேல் படிக்காததை நினைத்து நினைத்து அவன் கவலைப்படாத நாட்களேயில்லை. அதையே மற்றவர்களும் குத்திக்காட்டிப் பேசும்போதெல்லாம் அவன் மன துக்குள் அழுவதை யாரும் அறிவதில்லை.

'சுகந்தி நான் படிக்காதவன் என்று நினைத்து என்னை ஒதுக்கியிருப்பாயா? உன்னை கண்ட முதல்நாளே நான் உன்னிடம் கேட்டேனே இந்த படிக்காதவனிடத்தில் எதைக்கண்டு காதல் கொண்டாயென்று. உங்களிடத்தில் உழைப்பு இருக்கு என்னிடத் தில் படிப்பு இருக்கு நாம் இருவரும் சேர்ந்துவாழ இதைத் தவிர என்ன வேண்டு மென்று கேட்டாயே அன்று அப்படி சொன்ன நீ இன்று இவர்கள் சொல்லுறபடிகேட்டிருப்பாயா?' ராமு தனக்குள் ளேயே சுகந்தியிடம் கேட்டுக் கொண்டான்.

'எடியே தவமணி கொதிச்ச தண்ணி ஆறிப்போறதுக்கு முந்தி கொம்மைய கூட்டிக்கொண்டுபோய் குளிக்கவார்த்து விடுடி... கலிகாலம் முத்திப்போச்சுது இல்லையெண்டால் முளைச்சி மூணு இலை விடுறதுக்கு முதல் குடும்பம் நடத்த வெளிக்கிடுங்களோ... அந்த காலத்துல தட்டுவேலிக்கு மேலால எட்டிப்பார்த்தாலே கட்டிப்போட்டு அடிப்பாங்கள். இந்த காலத்துல அதெல்லாம் எங்க நடக்குது'

ஆச்சியின் புராதன காலத்து புராணம் கேட்டதும் எரிச்சல் வந்தது ராமுவுக்கு. ஒவ்வொருவரும் கதைப்பதை கேட்க கேட்க நேரடியாக சுகந்தியின் வீட்டுக்கே போய் சுகந்தியிடம் தாய் தகப்பன் முன்னாலேயே நாலுவார்த்தை கேட்க வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. இனியும் அவ்விடத்தில் இருந்தால் தானும்

ஏதாவது கதைத்து தமையனுடன் தர்க்கப்படவேண்டிவரும் என நினைத்தவனாய் எழுந்து சென்றுவிட்டான் ராமு.

'என்னதான் அடிச்சாலும் கதைச்சாலும் வளர்த்த நாய் மாதிரி என்ட காலடியையே சுத்திவாருனுகளே நான் என்னசெய்ய.' தவமணி அக்கா ராமுவை நினைத்து பனியாக உருகினார்.

தாயின் உடல்நிலையின் தன்மையும் தம்பிமாரின் எண்ண மும் சதிஸின் நினைவும் மட்டுமல்லாம் அழுது புலம்பி விட்டு போன நேசம்மா மாமியின் நிலைமையையும் நினைக்க நினைக்க தவமணி அக்காவின் மனதுக்குள் கோயிலுக்கு போய் வந்தால் பரவாயில்லை என்பதுபோல் தோன்றியது.

ஆச்சியை அம்மாவோடு இருக்கச் சொல்லி விட்டு வாசுகி யையும், கடைசிமகள் ஸ்ரீயையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்கு போனபோது அங்கு சுகந்தியும் தாயுடன் வந்திருந்தாள். தவமணி அக்காவைக் கண்டதும் சிரிக்கமுற்பட்ட சுகந்தி தன்னை தன் தாய் கவனிப்பதை கண்டவுடன் தவமணி அக்காவை கண்டும் காணா தது போல் முகத்தை திருப்பிக் கொண்டதை தவமணிஅக்கா கவ்னிக்கத் தவறவில்லை.

மதிய நேரத்து பூசை தொடங்க இன்னும் நேரமிருக்கின்ற தென்பதால் பிள்ளையார் கோயிலுக்கு பின்னால் இருக்கும் மற் றைய கோயில்களை கும்பிட்டுவரலாம் என்றுபோன வாசுகி முருகன் கோயிலுக்கு பின்னால் உள்ள திருக்கொன்றை மரத்தின் கீழ் நின்ற வசந்தி, வாசுகியை வரும்படி கையால் சைகை காட்டி அழைக்க வாசுகி சென்றபோது அவளைகண்டதும் அழத் தொடங் கினாள் வசந்தி.

'என்னடி... ஏனடி வசந்தி அழுகிறாய்'

'செத்துப் போயிடலாம் போல இருக்குடி'

'ஏனடி என்ன பிரச்சினை.'

'உங்கட அண்ணன் கடிதம் போட்டிருக்கார்.'

'ஆரு சதிஸ் அண்ணாவோ.'

'ஆம்' என்பதுபோல் தலையாட்டினாள் வசந்தி.

'ஆருக்கு உனக்கோ.' மீண்டும் தலையசைத்து பதில் சொன்னாள் வசந்தி.

'என்னவாம்...'

வாசுகின் இந்த கேள்வியைக் கேட்டதும் பொங்கிவந்த அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் தவித்தாள் வசந்தி.

'ஏனடி அழுறாய். அண்ணா என்ன எழுதியிருக்கார். சொல்லு வசந்தி'

'உங்கட அண்ணா யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு போறாராம். இனி எப்ப திரும்பிவருவன் எப்படிசந்திப்போம் என்கிறதெல்லாம் நம்பிக்கையில்லாத விசயமாம்' சொல்லும் போதே அழுத வசந்தியுடன் தானும் சேர்ந்து அழுதாள் வாசுகி.

## 8

பிள்ளையார் கோயிலுக்கு பின்னால் வலதுபக்கம் அமைந்திருப்பது முருகன் கோயில். இடப்பக்கம் அமைந்திருப்பது நாகதம்பிரான் கோயில். அத்தனை ஆலயங்களையும் உள்ளடக்கி நான்கு புறமும் மதில் எழுப்பப்பட்டிருக்கின்றன. முருகன் கோயிலுக்கும் நாகதம்பிரான் கோயிலுக்கும். பின்னால் உள்ள மதிலுக்கும் இடையில் உள்ள இடைவெளி ஒற்றையடி பாதைபோன்ற சிறிய வழியாகவே இருக்கும். ஆலையத்தை சுற்றி வரும்போது கூட ஒவ்வொருவராக வரிசையாகத்தான் வரவேண்டும்.

'வசந்தி உண்மையிலேயே நீ அண்ணாவை காதலிக்கிறாய் தானோ. இல்ல அண்ணாமேல ஏற்பட்ட பரிதாபம் காதல் மாதிரி இருக்கோ' கனநேர மௌனத்தின் பின்கேட்ட வாசுகியை புதினமாகப் பார்த்தாள் வசந்தி.

'இல்ல வசந்தி, சுகந்தி ராமுமாமாவை ஏமாத்தின மாதிரி நீயும் எங்கட அண்ணாவை ஏமாற்றி விடுவாயோ என்று கேட்கி றன்'.

'சுகந்தி உங்கட மாமாவை ஏமாற்றி விட்டாளென்று உனக் கென்னென்னடி தெரியும்.'

'இனிமேல் மாமாவை சந்திக்கவோ அவரோட பேசவோ மாட்டேனெண்டு தகப்பனிட்ட சொன்னாளாம். அப்பஅதுக்கு என்ன அர்த்தமடி'.

'இதெல்லாம் ஆரோ சொல்லி நீங்ககேள்விப்பட்ட விசயங் களை வைத்து நீங்களாகவே எடுத்துக் கொண்ட முடிவு தான் அப்படி சொன்னதாக சுகந்தி வந்து உன்னிட்ட சொன்னாளா. அப்படி அவள் சொல்லியிருந்தாலும் ஏன் அப்படி சொல்லியிருப் பாளென்கிறது அவளுக்கு மட்டும்தான் தெரியுமடி. இஞ்சபாருடி வாசுகி காதலர்கள் ஒருநாளும் ஒருத்தரையொருத்தர் ஏமாத்துற தில்லையடி. சந்தர்ப்ப சூழ்நிலைதான் அவர்களை ஏமாத்துது.

'இதெல்லாம் எனக்கு புரியவும் மாட்டாது இந்தக் காதலி லெல்லாம் எனக்கு நம்பிக்கையுமில்ல. ஏதோ ராமு மாமா தாடி வளர்த்து தேவதாஸ் கோலம் போடாமல் விட்டால் சரிதான். பாவமடி அவர் அம்மா நால்லாய் அடிச்சிப் போட்டா. வீட்டில எல்லாரும் கண்ட கண்டமாதிரி பேசுதுங்கள். பார்க்கவே பாவ மாய் இருக்குதடி'

வாசுகி சொல்லிக் கொண்டிருக்கும்போது வசந்தி வாசுகியின் தோளை சுரண்டினாள். என்னடி என்பதுபோல் திரும்பிப் பார்த்த வாசுகியிடம் கண்ணால் காட்டினாள் வசந்தி. வாசுகி திரும்பிப் பார்த்த போது நாகதம்பிரான் கோயிலுக்குள் சுகந்தி நின்று கொண்டிருந்தாள்.

'அடியே சுகந்தி கட்டாயம் முருகன் கோயிலுக்கும் வருவாள் அப்படிவந்தால் நான் அவளோடு கதைத்தாலும் பிழை கதைக்கா

விட்டாலும் பிழை. அவள் இங்க வாறதுக்கு முதல் நான் போறதுதாண்டி நல்லது. நான் முதல் போறன் நீ பின்னால் வா.' என்று வாசுகி போய் விட அவள் பின் எதுவும் நடவாததுபோல் நடந்து சென்றாள் வசந்தி.

நாகதம்பிரான் சந்நிதி முன்பு கற்பூரம் கொளுத்தி வணங்கி விட்டு கோயிலை சுற்றிவரலாம் என்று நினைத்துக் கொண்டு இடம்இருந்து வலமாக இரண்டுமுறை சுற்றி வந்துவிட்டு மூன்றாம் முறை சுற்றி ஆலயத்தின் பின்னால் நடந்தபோது மதிலுக்கு பின்னால் நின்றுமதிலுக்கு மேலால் பாய்ந்து தன்முன்னால் நின்ற ராமுவை பார்த்து அதிர்ந்து போய் நின்றாள் சுகந்தி. விலத்திவிட்டு போக முடியாத நெருக்கத்தில் நின்றான் ராமு.

'என்ன நல்லாய் கும்பிட்டாயா? என்னென்று கும்பிட்டாய் இவ்வளவு நாட்களும் உன்னை சுற்றியிருந்த சனியன் தொலைந்து விட்டதென்று அதற்கு நன்றி சொல்லி கும்பிட்டாயா?' ராமுவை பயத்துடனும் அதிர்ச்சியுடனும் சுகந்தி பார்த்துக் கொண்டு நின்றா லும் அவனையும் அவனின் கம்பீரத்தையும் துணிச்சலையும் மனதுக்குள் ரசித்தாள் அவள்.

'சொல்லு சுகந்தி நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா? நீ ஏன் என்னை சந்திக்க வரவில்லை. என்னைப்பார்க்கின்ற ஒவ்வொருத்தரும் என்னிடம் எப்படிப்பட்ட கேள்வியெல்லாம் கேட்கின்றார்கள் தெரியுமா. அவர்களிடத்தில் நான் என்ன பதில் சொல்ல'

கெஞ்சுதைப்போல் கேட்ட அவனைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது அவளுக்கு.

'சுகந்தி நானா உன்னைத் தேடிவந்தன்? நீதானே என்னைத் தேடி வந்தாய் அப்போதும் நான் சொன்னேனே நீபடித்தவள் நான்படிக்காதவன் என்று. உனக்கும் எனக்கும் சரிபட்டுவருமா என்றெல்லாம் கேட்டபோது அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் என்னை காதலித்தாயே. ஆனால் இப்ப உனக்குக்

கூடநான் படிக்காதவன் என்ற குற்ற உணர்வு வந்துவிட்டதா?' அழுவதைப் போல் ஆனால் கம்பீரமாக பேசினான் அவன்.

இதுவரை தன்னையும் ராமுவையும் யாரும் காணவில்லை யென்பதற்காக கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தாள் சுகந்தி. அவளின் மௌனம் அவனைக் கோபப்படுத்தியது.

'ஏய் சுகந்தி நான் பேசிக் கொண்டே இருக்கிறன் நீ பேசா மலே நிற்கிறாய். என்னை என்ன பேயன் விசரன் என்றோ நினைத்துக் கொண்டிருக்கிறாய்?' அவன் சற்று ஆத்திரத்துட னேயே கேட்டான்.

பட்டப்பகல் அதுவும் ஆலயவீதி யாரும் பார்த்து விட்டால் நிலைமை என்னாகும் என்பதை நினைத்து பயந்து கொண்டிருந் தாள் சுகந்தி.

'உங்க அப்பன் அம்மாவுக்கு இன்றுவரை இதுதெரியாமல் இருந்திருந்தால் அவர்களுக்கு தெரியும்வரை இன்னும் கொஞ்சம் நாள் என்னோடு பழகி இருப்பாயா? சந்தர்ப்பம் பார்த்து நழுவிப் போறதுக்கு உனக்கெல்லாம் எப்படி சுகந்தி மனசுவருகுது.'

அவன் பேசிவாய் மூடுவதற்குமுன் பிள்ளையார் கோயில் பூஜை ஆரம்பிக்கின்றதற்கான மணி ஓசை அவள் காதில்கேட்டது. அவள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள். காரணம் பிள்ளையார் கோயில் பூஜை நடக்கும் போது சுற்றி இருக்கும் மற்றய ஆலையங் ளுக்கு எவரும் வர மாட்டார்கள் என்பதே,

இப்போது சுகந்தி நிமிர்ந்து ராமுவின் முகத்தைப் பார்த்தாள். அவனும் அவளையே நேருக்கு நேர் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன பார்க்கிறாய் முகத்தில் தாடியைக் காணயில்லை யெண்டா. இஞ்சபார் தாடி வளர்த்து தேவதாஸ் கோலம் போட்டு பைத்தியகாரன் மாதிரி திரிவன் என்றுமட்டும் நினைக்காதை. அம்பிகாபதி அமாராவதி, ரோமியே ஜுலியட், அனார்கலி சலீம், தேவதாஸ் பார்வதி கதையெல்லாம் படிக்கிறதோட நிறுத்திக்கொள்

அதை நம்மட வாழ்க்கையில நடைமுறைபடுத்த நினைக்காதை' என்றான் ராமு.

ராமு சொன்னதை காதில் வாங்கிக் கொண்டு போகமுற்பட்டவளை தடுத்து நிறுத்துவதுபோல் மதிலில் கால்குத்தி நாகதம்பிரான் கோயில் சுவரில் முதுகுசாய்த்து குறுக்கே நின்றான் ராமு.

'நான் போகவேணும் வழியை விடுங்கோ.' அவள் அமைதியாகக் கேட்டாள்.

'போறதுக்கு முதல் எனக்கு பதிலை சொல்லிற்றுப் போ.'

'என்ன பதில்'

'இவ்வளவு நேரமும் நான்கேட்ட கேள்விக்குரிய பதில்'

'அதுதான் நீங்களே கேள்வி கேட்டு நீங்களே பதிலையும் சொல்லி நீங்களே தொடங்கி நீங்களே முடித்தும் விட்டீங்களே. இனி நான் என்ன பதில் சொல்ல வேண்டியிருக்கு?' சற்று கடினமாகவே பேசினாள் சுகந்தி.

'சுகந்தி என்னோட விளையாடாதே என்னுடைய மனநிலை புரியாம நீபேசுற. நானும் நீயும் காதலிச்சது பொய்யா? நீயும் நானும் சந்தித்ததையும் பழகியதையும் மறந்துவிட்டாயா?'

'அப்படியென்று யார் சொன்னது.'

'அப்படி இல்லையென்றால் என்னை இனி சந்திக்கவோ என்னோடு பேசவோ மாட்டேனென்று நீ எப்படி உன் தகப்பனிட்ட சத்தியம் செய்து கொடுத்திருப்பாய்.'

'அப்படியென்று நான் உங்களிடம் சொன்னேனா? ஊரார் கதையைக் கேட்டு ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறீங்க.'

'சுகந்தி என்னை பைத்தியம் ஆக்காதே. என்னதான் நடந்தது என்கிறதையாவது சொல்லன்'

'என்ன நடந்தது என்கிறது பிரச்சினையில்லை. என்ன நடக்கக் கூடாது என்கிறது தான் பிரச்சினை. நானும் நீங்களும்

காதலிக்கிறது அம்மா அப்பாவுக்குதெரிஞ்சு போச்சுது. அப்பா என்னை அடித்தார், அதற்காக நான் வீட்டைவிட்டு வெளியில் வந்திருக்கலாம், வந்து நீங்களும் நானும் இந்த ஊரிலேதானே வாழவேண்டும். அம்மா அப்பாவை வெறுத்து அவங்க கண் முன்னாலேயே நாம வாழவேணுமா வாழவும்தான்முடியுமா. ஏன் அவங்கட மனமும் ஒரு நாள் மாறும் என்று நாங்கள் இருவரும் பொறுத்திருக்கக் கூடாது. அவையளுக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏன் நாங்கள் கொடுக்கக்கூடாது.'

'அவையள் மனம் மாற வேணுமென்கிறதுக்காக என்னை படிக்கச் சொல்லப் போகின்றாயா.'

'ஏன் இப்படியெல்லாம் உங்களுக்குள்ளேயே ஒருமுடிவெடுத்து நீங்களே பயந்து கொள்ளுறியள்'

'இல்ல சுகந்தி நான் படிக்காதவன் என்ற காரணத்தைச் சொல்லி நம்மள பிரிச்சுடு வாங்களோ என்று பயப்பிடுறன்'. ராமு அவளின் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

'இது கோயில் முதலில கைய விடுங்கோ' என்று விலத்தி நின்றாள்.

'ஏன் சுகந்தி இவைகளை நீ முதலிலேயே சொல்லியிருந்தால் நான் இப்படி தவித்திருக்கமாட்டேனே.'

'சொல்ல எங்க விட்டீங்க. வந்தீங்க மறிச்சீங்க கதைச்சீங்க. என்னைப் பொறுத்த வரையில வாழ்ந்தால் அது உங்களோடுதான் என்றமுடிவில நான் மாறவும் இல்ல, நான் மாறப்போறதுமில்லை. என்னில நம்பிக்கையிருந்தால் எனக்காக நீங்களும் காத்திருக்கலாம் கொஞ்ச நேரத்துக்குள்ள நீங்கள் என்னைப்பற்றி கதைச்சதுகள பார்த்தால் நீங்கள் எனக்காக காத்திருப்பியள் என்கிறதுல எனக்கு நம்பிக்கையே இல்லை.'

'இல்லை சுகந்தி அப்படி சொல்லாதை. நான் உனக்காக காத்திருப்பன். நான் பேசியதுகளும் பிழைதான். என்னை மன்னிச்சுக் கொள். ஆனால் சுகந்தி...'

அவன் எதுவோ சொல்ல வந்து சொல்லாமல் நிறுத்திய விதத்தின் குறும்பைப் பார்த்து ரசித்து சிரித்தாள் அவள்.

'என்ன ஏதோ சொல்ல வந்தியள் நிறுத்திட்டியள்...'

'அதச் சொல்ல வேணுமெண்டால் இரவுக்கு வந்து என்னை கல்லெறிந்து எழுப்பு, அப்ப சொல்லுறன்'

'ஓமோம் இரவுக்கு வரும்போது அப்பாவையும் கூட்டிக் கொண்டு வந்து கல்லெறிந்து எழுப்புறன். காத்துக் கொண்டிருங்கோ. உங்கள திருத்தவேமுடியாது.'

'இல்ல சுகந்தி உனக்காக நீ சொல்லும் வரைக்கும் எத்தனை வருசம் என்றாலும் காத்திருப்பன்.'

அவன் சொல்லிமுடித்த போது பிள்ளையார் கோயிலில் பூஜை முடிந்ததுக்கு அடையாளமாக மணி ஓசை கேட்க அவள் அவசரப்பட்டுக் கொண்டு ஓடியதைப் பார்த்து ரசித்து நின்ற ராமு கண்ணிமைக்கும் நேரத்தில் மதில் மேலால் பாய்ந்து மறைந்து விட்டான்.

## 9

**கோ**யிலிலிருந்து வீடுவந்த போது முகிலன் சவுதியிலிருந்து அனுப்பிய கடிதத்தை அம்மாவுக்கு வாசித்துக் காட்டிக் கொண்டிருந்தான் அகிலன். தான் சவூதியில் நல்லவேலை கிடைக்காமல் கஷ்டபடுவதாகவும். ஏன் வந்தேன் என்று தற்போது யோசிப்பதாகவும் தமையன் எழுதியிருந்ததையெல்லாம் தவிர்த்து விட்டு தான்அங்கு சந்தோசமாய் இருப்பதாக ஒருவசனத்தை சேர்த்து வாசித்த போது தாயின் கண்களிலிருந்து வழிந்த நீரை துடைத்துக் கொண்டான் அகிலன்.

வசந்தி சொன்ன விசயத்தை அம்மாவிடம் சொல்வதா இல்லையா என்று தவித்துக் கொண்டிருந்தாள் வாசுகி. இன்றுபகல்

கோயிலில் வசந்தியை கண்டுகதைத்தது அம்மாவுக்கு தெரிந்தால் தனக்கு அடிவிழும் என்ற பயத்தில் கோயிலிலிருந்து வந்த நேரத்திலிருந்து தாயிடம் எதுவும் பேசாமல் அம்மம்மாவுக்குரிய கடமைகளையெல்லாம் முடித்துவிட்டு படுக்கைக்கு போன வாசு கியை அண்ணன் சதீஸின் நினைவு நித்திரைவராமல் தடுத்தது.

நவரெத்தினம் மண்டபத்தினுள் படுத்திருந்தான். ஆச்சியுட னும் ராமுவுடனும் மல்லிகை பந்தலில் படுத்துக்கிடந்த அகிலனை யாரோ தட்டியெழுப்புவதை உணர்ந்தவன் கண்ணைத்திறந்து நிமிர்ந்து பார்த்தபோது ஜன்னல் வழியாக வந்த விளக்கு வெளிச் சத்தில் செந்தில் நிற்பது தெரிந்தது.

அவசரமாக எழும்பி வா என்பதுபோல் சைகை காட்டிவிட்டு சென்ற செந்திலை பின்தொடர்ந்த அகிலன் ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள வம்மிமரத்தடியில் இருவரும் வந்து சேர்ந்ததையுணர்ந்து செந்திலை, புரியாமல் பார்த்தான்.

'டேய். ஏண்டா இந்த நடுச்சாமத்துல என்னை எழுப்பி இவ்வளவு தூரம் நடந்து இந்த இடத்துல கொண்டுவந்து சேர்த்தி ருக்காய்' நித்திரை கலக்கத்துடன் கேட்டான் அகிலன்.

ஊரே உறங்கி அமைதியாக இருந்தது. வம்மிப்பூக்களின் வாசம் மூக்கை துளைத்தது. வம்மிப்பூக்கள் ப[illegible]ந்தால் அந்த இடத்தில் பேய்கள் குடியிருப்பதாக அர்த்தம் என்[illegible]சின்னவயதில் ஆச்சி கதை சொன்னது அகிலனின் ஞாபகத்தில் வந்து போனது.

வம்மி மரத்தின் கீழ் போடப்பட்டு நான்கு தென்னங்கட்டைக ளுக்கு நடுவே குவிக்கப்பட்டிருந்த கடற்கரை மணலில் தலை சாய்ந்து அதிக நேரமாக எதுவும் பேசாமல் படுத்திருந்த செந்திலை பார்க்க எரிச்சலாக இருந்தது அகிலனுக்கு.

'டேய் செந்தில் நிம்மதியாய் படுத்திருந்த என்னை எழுப்பிக் கொண்டுவந்திற்று இப்ப நீ மட்டும் நிம்மதியாய் படுக்கிறாய் உனக்கென்ன பைத்தியமோடா' ஆத்திரத்துடன் கேட்டான் அகி லன்.

'உன்னிட்ட ஒருவிசயம் சொல்லவேணும் அதுதான் கூட்டி வந்தன்'.

'என்னடா விசயம்.'

அண்ணன் தம்பியாக இருந்தாலும் செந்திலும் அகிலனும் நண்பர்களைப் போல்தான் பழகுவார்கள் அதேபோல் முகிலனும் ராமுவும் சினேகிதர்களாகத்தான் பழகினார்கள். எல்லோருக்கும் மூத்தவன் என்பதால் நவரெத்தினம் மீது எல்லோருக்கும் எப்போதும் ஒரு மரியாதை இருந்துகொண்டே இருக்கும்.

'என்னடா விசயம்' எதுவும் புரியாதவனாய் கேட்டான் அகிலன்.

'இண்டைக்கு விடியுறதுக்குள்ள நான் வெளிக்கிடுறன். பொதுவாக யாரிட்டயும் சொல்லக்கூடாது. உன்னில உள்ள நம்பிக்கையால உன்னிட்ட மட்டும் சொல்லுறன் நான் ஊரை விட்டு போயிற்றன் என்கிற விசயம் தெரிஞ்சவுடன்தான் இந்தவிசயத்தை நீ விட்டுக்கே சொல்லவேணும்.' செந்தில் சொல்வது எதுவும் அகிலனுக்குப் புரியவில்லை.

'டேய் செந்தில், என்னடா சொல்லுறாய் எங்கபோகப் போகிறாய்.'

'இந்தியாவுக்கு போகப்போறன். என்னோட சேர்த்து ஐந்து பேர்.'

'இந்தியாவுக்கு எதுக்கு'

'பயிற்சிக்கு'

'அதுக்கு நீ ஏன்?'

'ஏன் நான்மட்டும் போகக்கூடாதோ'

'இல்லையடா நீபோனால் சின்னம்மா என்னபாடுபடுவா. அது உனக்கு தெரியும் தானே.'

'தெரியும். ரவிபோனபோது நேசம்மா மாமி அழுது ஒப்பாரி வைத்தது போல் அம்மாவும் அழுவா. அம்மா மட்டுமில்ல அம்மாவைப் போல இன்னும் லட்சக்கணக்கான தாய்மார் இனி மேல் அழத்தான் போறாங்க. அந்த அழுகைக்கெல்லாம் கவலைப் பட்டால் எங்கள் நாட்டுக்கும் இனத்துக்கும் எப்போது விடிவு கிடைக்கிறது.'

செந்தில் நன்றாக பேச்சுபயிற்சி பெற்றிருக்கின்றான் என்று அவன் பேச்சிலிருந்து தெரிந்து கொண்ட அகிலன் தொடர்ந்தும் எதுவும் பேசவிரும்பவில்லை.

'அம்மாவைப் பற்றி கவலையில்லை. தவமணி அக்காவை யும் அக்காவீட்டையும் உங்களையும் விட்டுவிட்டு போகிறேன் என்கிறபோதுதான் என்னவோ மாதிரியாய் இருக்கு.'

அகிலன் எதுவும் பேசாமலேயே இருந்தான்.

'டேய் அகிலா... மூத்தம்மாவை கவனமாக பார்த்துக்கொள். நான் திரும்பி வருவேனோ இல்லையோ என்கிறது எங்களுக்கு இந்த நிமிடத்தில இருந்து தெரியாத விசயம். ஆனால் நான் திரும்பி வந்தால் மூத்தம்மா இருப்பாவோ இல்லையோ தெரி யாது. டேய் மூத்தம்மாவுக்கு எந்த குறையுமில்லாமல் அவவ கவனமாகப் பார்த்துக் கொள்ளடா' சொல்லும்போதே செந்திலின் வார்த்தைகள் உடைந்துவிட்டன.

'நான் வெளிக்கிடுறன் நேரமாய்ச்சுது'.

செந்திலுடன் அகிலனும் அக்கரைப்பற்று சாரதா தியேட்டர் வரை வந்தான். 'அகிலன் இதோட நீ திரும்பி வீட்டபோ. இதுவரைக்குமேல நான்கூட்டிப் போக எனக்கு அனுமதி இல்லை. நான்வாறன் மூத்தம்மாவை கவனமாகப் பாருடா.'

சொல்லி விட்டுச்சென்ற செந்தில் ஒரு சந்தினுள் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த அகிலனின் கண்கள் கலங்கியது.

விடிந்ததும் தவமணி அக்காவிடம் விசயத்தை சொன்னான் அகிலன். விசயம் சின்னம்மா காதுக்கு எட்ட ஒப்பாரியும் ஓலமு

மாக ஓடிவந்த சின்னம்மா வாசலில் விழுந்து புரண்டு அழுதா. 'அடேய் உனக்கு எப்பவோ தெரியும் அவன் போகப் போறான் எண்டு. நீ ஏண்டா சொல்லாமல் மறைச்சிருந்து போட்டு அவனை வழியனுப்பி வைச்சாய்' என்று அகிலன்மேல் சின்னம்மா ஒரு பெரிய பழியைத் தூக்கிப் போட்டபோது கேட்டுக் கொண்டிருந்த நவரெத்தினம் சின்னம்மாவை பேசி சமாதானப்படுத்தினான்.

'ஊர் உலகத்தில் என்ன நடக்குதெண்டு தெரியாமல் சும்மா அவனைப் போய் பேசிக் கொண்டிருக்க வேணும்' என்றான் ராமு.

இரண்டுகால்களையும் எடுத்து முகத்துக்கு முட்டுக் கொடுத்து நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஆச்சி.

வார்த்தைகள் வெளிவராமல் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தது அகிலனின் தாய்க்கு.

விசயம் அறிந்து ஓடிவந்த சதீஸின் தாயை பார்த்தாள் வாசுகி. அண்ணாவும் போயிற்றார் என்பதையும் அறிந்தால் இந்த வீடும் சின்னம்மாவும் என்னபாடுபடுவார்கள்.

வாசுகி வாசல் கூட்டவில்லை. மல்லிகை பந்தலிலிருந்து விழுந்த பூக்கள் வாசலில் இறைத்துக் கிடந்தது. இரண்டு நாட்களாக தண்ணீர் ஊற்றாமல் மல்லிகை மரமும் வாடியதுபோல் இருந்தது. பக்கத்துவீட்டு வாசுகியின் சினேகிதி புவிதா ஓடிவந்தாள். என்ன விசயம் என்று கேட்டவளிடம் செந்திலின் விசயத்தை சொன்ன வாசுகி நேற்று கோயிலில் வசந்தியை சந்தித்ததையும் வசந்திக்கு தமையன் கடிதம் போட்டிருந்ததையும் சொன்னபோது வசந்திக்கு சதீஸ் கடிதம் போட்ட விசயம் உண்மைதானா என்ற விசயத்தை இரண்டாம் முறையும் கேட்டு ஊர்ஜிதம் செய்துகொண்டாள் புவிதா. ஒருசம்பிரதாயத்துக்காக வாசலுக்கு வந்துவிட்டு போக வந்த புவிதாவின் தமையன் கணேசை முறைத்துப் பார்த்துவிட்டு வீட்டுக்குள் போய்விட்ட வாசுகியை ராமு கவனித்துக் கொண்டிருந்தான்.

காலைச் சாப்பாடு கூட சாப்பிடாமல் வேலைக்கு புறப்பட்டார் தவமணி அக்காவின் கணவர். அவருக்கு செந்திலோடு நல்ல

விருப்பம். வீட்டு வேலைகள், வயல்வேலைகள் ஏதுமென்றால் செந்தில்தான் அவருக்கு கூடுதலான உதவிகள் செய்து கொடுப்பது. அப்படிப்பட்ட மைத்துனர் போனதை நினைத்து அவருக்குள் உள்ளூற இருந்த கவலையை வெளிக்காட்டி கொள்ளாமல் சைக்கிளை தள்ளிக் கொண்டு போய்விட்டார்.

வருடங்கள் ஓடுவது பிள்ளைகளின் வளர்ச்சியில்தான் தெரிகின்றது. தவமணி அக்காவின் கடைசிமகள் ஸ்ரீயும் பெரிய மனிசியாகி விட்டாள். எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் செய்து முடித்து விட்டா தவமணி அக்கா.

மூத்தமகள் வாசுகி பெரியமனிசியான போது வாசலில் இருந்து வீதிவரைக்கும் பந்தல்போட்டு தொடர்ந்து நான்குநாட்களுக்கு ஒலிபெருக்கி கட்டி தம்பிமாரும் சினேகிதர்களும் பாட்டுக் கச்சேரியும் விருந்தும் வைத்து கொண்டாடியதை நினைக்க நினைக்க தவமணி அக்காவுக்கு கண்ணில் நீர்முட்டியது.

இப்போது தவமணி அக்காவின் தாயின் உடல்நிலை மட்டுமல்ல, ஊரின் நிலைமையும் மிகவும் மோசமாகிவிட்டது.

## 10

ஒரு காலத்தில் ஆமிக்காரரைக் காண ஆசைப்பட்டு வீதிக்கோடும் சின்னம்மாவின் கடைசி மகன் குமாரும் தவமணி அக்காவின் கடைசிமகன் பாஸ்கரனும் இப்போது மீசை அரும்பிய இளைஞர்களாகி விட்டார்கள். இப்போதெல்லாம் அவர்கூட வீதிக்கு போவதில்லை. ஊரில் பல இடங்களில் ராணுவ முகாம்கள் அடிக்கடி சுற்றிவளைப்புகள். ஓர் ஊர் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தடவை கூட சுற்றி வளைக்கப்பட்டு சோதனை இடப்படுகின்றன.

வெளியூர்களிலிருந்து பல வருடங்களுக்கு முன்பு வந்த இளைஞர்கள் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ் இயக்கங்கள் இப்போது யார் யார் என்ன இயக்கமென்பதை தெட்டத்தெளிவாக

தெரிவித்து இயங்கத் தொடங்கி விட்டார்கள். இவர்களால் பயிற் சிக்கென இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட இந்த ஊரைச் சேர்ந்த சில இளைஞர்கள் ஊர் வந்து சேர்ந்து விட்டார்கள். போகும்போது தாங்கள் எந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியாமல் போனவர்கள் திரும்பி வந்தபோதுதான் ஒரே குடும்பத்தில் உள்ள பல சகோதரர்கள் வெவ்வேறு இயக்கங்களில் உள்ளதை அறிந்தார் கள். செந்திலும் சதீசும் வருவார்களா? எப்போது வருவார்கள் என்றெல்லாம் அந்தந்த இயக்கத்து பொறுப்பாளர்களை பார்த்து தவமணி அக்கா அடிக்கடி போய் கேட்டுக் கொண்டிருந்தா.

இப்போதெல்லாம் விடியவிடிய வீதியில் வாகனங்களின் சத்தம் கேட்கின்றது. அடிக்கடி வேட்டுச் சத்தங்களும் கேட்கும். விடிந்தால் யாராவது எங்காவது ராணுவத்தால் சுடப்பட்ட செய்தி கிடைக்கும் அல்லது யாரோ ஒருவரின் உடல் மின்கம்பத்தில் தொங்குவதாக ஒருசெய்தி கிடைக்கும். காட்டிக் கொடுக்கப்பட்ட தற்காக கொடுக்கப்பட்ட தண்டனையென்ற வாசகம் கழுத்தில் தொங்கும்.

முன்பெல்லாம் அதிகாலை செய்தியை வானொலியில் கேட்க கடை தெருவுக்கு செல்லும் பெரியவர்கள் இப்போதெல்லாம் யாராவது மின் கம்பத்தில் தொங்குகின்றார்களா என்று பார்க்கத் தான் கடைத் தெருவில் கூடுகின்றார்கள்.

சிலர் வாழ்க்கையில் காதல்வந்து போகின்றது. சிலர் வந்து போன காதலுக்காகவே வாழ்கின்றார்கள்.

இந்தியாவிலிருந்து அடிக்கடி வரும் கடிதத்தை வாசுகியிடம் கோயிலில் சந்திக்கும் போதெல்லாம் வசந்தி காட்டுவாள்.

வெளியூரிலிருந்து வந்த ஓர் இயக்கத்து இளைஞனை புவிதா காதலிப்பதாக அறிந்து அவளோடு பேசிக் கதைப்பதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டுவந்தாள் வாசுகி. புவிதா தன் னைப் பற்றி தானாக எதுவும் சொல்லாததில் வாசுகிக்கு அவளில் சிறிதுகோபம்.

ராமுவும் ஏதோ ஓர் இயக்கத்துக்கு வேலை செய்கின்றானாம் என்று தெரிந்தது. அவன் இரவெல்லாம் எங்கோ எவருடனோ அலைந்து விட்டு பகலில் வந்து படுத்துக் கொள்ளுகின்றான். நவரெத்தினமோ அவனுக்கு நேர் எதிராக பகல் முழுவதும் அயல் ஊர்களில் அலைந்து விட்டு இரவில் எவருக்கும் தெரியாமல் வந்து படுத்துக்கொண்டு விடிவதற்கு முன்பாக எழும்பிச் சென்றுவிடுகின் றான். அயல் ஊர் ஒன்றில் பிரச்சாரப் பொறுப்பாளராக இருக்கின் றானாம்.

இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் அகிலனை அடிக்கடி வரும் ஒவ்வொரு இயக்கத்து பெடியன்களும் தட்டி எழுப்பிக் கொண்டு போவார்கள் விடிவதற்குள் வந்துபடுத்துத் தூங்கும் அகிலனைப் பார்த்தால் கையெல்லாம் சிவப்பு மை தோய்ந்திருக்கும். ஒரே வீட்டுக்குள் பல இயக்கங்களும் இயங்க ஒவ்வொரு இயக்கத்திலும் ஒவ்வொரு சகோதரர்கள் இருக்கின்றார்கள் என்பதால் எல்லா இயக்கத்தவரும் வீட்டுக்கு வந்துபோவார்கள். இதனால் எல்லோ ருக்கும் உதவிசெய்ய வேண்டிய கட்டாய நிலையில் அகிலன் இருந்தான்.

'இவன் இரவில எந்தநேரம் எங்கு போறன் என்கிறதே தெரியுதில்ல. ஆனால் விடிய வாறநேரம் கையெல்லாம் மையோட வாறான். உனக்கு ஏதும் தெரியுமோ தம்பி'

அகிலன் இல்லாதபோது நேற்று அகிலனைத் தேடிவந்த அகிலனின் நண்பன் உதயனிடம் தவமணியக்கா கேட்டபோது உதயன் எதுவும் பேசாமல் சிரித்துவிட்டு போய் விட்டான். அக்காவுக்கு தெரியாது, இரவில் இயக்கங்களுக்கு சுவரொட்டி எழுதுவது அகிலனும் உதயனும்தானென்று.

நன்றாக பராபரிக் காததாலோ என்னவோ மல்லிகை மரமும் இப்போது வாடித்தான் நிற்கின்றது. இப்போதெல்லாம் இரவிலும் சரி பகலிலும் சரி மல்லிகை பந்தலின் கீழ் யாரும் கூடுவதில்லை. எப்போதாவது. ஒருநாளில் தம்பிமாருடன் இயக்கத்து பெடியன்க

ளும் சேர்ந்துவந்து மல்லிகை பந்தலின் கீழ் சிரித்துபேசி இருக்கும் போது வீதியில் ஏதாவது வாகனச் சத்தத்தை கேட்டதும் கல்லெறி பட்ட தேனிக் கூடுகலைவது போன்று கலைந்தோடும் அவர்களைப் பார்க்க தவமணி அக்காவின் நெஞ்சு நின்று விடும் போலிருக்கும்.

'ம்... எப்படி வாழ்ந்த சகோதரங்கள் எப்படி இருந்த மல்லிகை பந்தல் இன்று இப்படி ஆகிவிட்டதே'.

தவமணி அக்கா சிறுபிள்ளையாக இருக்கும் போது அவவின் அப்பாவால் ஒரு சிறு செடியாக நடப்பட்ட மல்லிகைச் செடி இன்று சிறுவர்கள் ஏறிவிளையாடக் கூடிய பெரிய மரம்போல வளர்ந்தி ருக்கின்றது. அதன் அடிகூட ஒருவர் கட்டி அணைக்கக்கூடி பருமனுடையது. தாவரங்களோடும் பூச்செடிகளோடும் ஒப்பிட் டால் தவமணி அக்கா வீட்டு மல்லிகைமரம் ஒரு அதிசயம் தான். ஆனால் இன்று அந்த மல்லிகை பந்தல் ஆட்களின்றி அமைதியாக கிடக்கின்றதென்றால் அது அதைவிடபெரிய ஆச்சரியம்.

செந்திலும் போனபின்பு நவரெத்தினம், ராமுவின் நடவடிக் கைகளிலும் மாற்றம் ஏற்பட்டதால் சின்னம்மா இப்போதெல்லாம் அதிக நேரங்களை தவமணிஅக்கா வீட்டிலேயே கழிக்கின்றா. சதீஸ் இந்தியா போனதை அறிந்த ஏக்கத்தினால் சதீஸின் தாயும் இப்போது நல்லாய் மெலிந்து போய் விட்டா. ஒழுங்காக சாப்பிடு வதில்லை. எந்த நேரமும் ஏதோ ஒரு சிந்தனையாகவே இருக் கின்றா தவமணி அக்கா.

தவமணி அக்காவின் தாய்க்கு நல்ல சுகமில்லை. அடிக்கடி சொந்தக்காரரெல்லாம் வந்து பார்த்துவிட்டு போவதைப் பார்க்க தவமணிஅக்காவுக்கு தாயின் நிலைமையை நினைத்து பயமாகவே இருந்தது. இன்னும் இரண்டொரு கிழமையில் ஊருக்கு வருவதாய் சவூதியில் இருந்து கடிதம் போட்டிருந்தான் முகிலன். அவன் வந்தபின்பாவது அம்மாவின் உடல்நிலை கொஞ்சம் தேறிவிடும் என்று அக்கா நினைத்துக் கொண்டா.

இவள் இப்படிக் கிடந்து அழுந்தாமல் கண்ண மூடிற்றாளெண் டால் இந்தப் புதினங்களையெல்லாம் பார்க்காமல் நானும் ஆத்து

லையோ கிணத்துலையோ விழுந்து செத்து போயிடுவன். இவள் வாங்கி வந்தவரம் இது. மகனைப் பார்த்து முணு முணுத்துக் கொண்டு மகனின் தலையை தடவி விட்டுக் கொண்டிருந்தாள் ஆச்சி. அகிலன் தாயின் கால் கைக்குரிய மருந்துகளை வாங்கிவர கல்முனையில் உள்ள நாட்டு வைத்தியரிடம் போயிருந்தான்.

வழமைபோல் எங்கும்போகாமல் இன்று விடிந்து அதிகநேர மாக தூங்கிக் கொண்டிருந்தான் நவரெத்தினம். நிம்மதியாய் தூங்கிக் கொண்டிருக்கும் நவரெத்தினத்தால் தவமணி அக்காவின் நிம்மதி தொலைந்து போயிவிட்டது. எப்படி என்னவென்று சொல்வதென்று தெரியாமல் நவரெத்தினத்திடம் வந்தா அக்கா.

'டேய் தம்பி நவரெத்தினம் என்னடா நித்திரையோ.' தமக்கை யின் குரல்கேட்டு எழும்பினான் நவரெத்தினம்.

'என்னடா ஒருநாளும் இல்லாமல் பகலில கனநேரமாய் நித்திரை கொள்ளுறாய்.'

'ஏனக்கா என்ன விசயம்'

'இல்ல ஒருநாளும் இல்லாமல் இண்டைக்கு பகலில வீட்டுல நிற்கிறாய் அவனுகளும் திடீர் திடீரென்று வருவான்கள். இண் டைக்கு பார்த்து நீயும் நிற்கிறாய் அதுதான்...' சொல்லிமுடிப்பதற் குள்.

'ஏனக்கா. என்னால உனக்கு உன்வீட்டுக்கும் ஏதும் பிரச் சினை வரும்எண்டு நினைக்கிறாயோ. அதென்ன உண்ட மற்ற தம்பிமாரும் அவனுகளோட இயக்கக் காரன்களும் மட்டும் வந் தால் நல்லாய் வரவேற்று சிரிச்சு கதைக்கிறியள். நான் வந்தால் மட்டும் என்னை போகச் சொல்லுறதுபோல முகத்தை நீட்டிக் கொண்டு இருக்கிறியள்.'

நவரெத்தினத்தின் இந்த கேள்வியை எதிர்பார்க்காத தவமணி அக்காவால் பொங்கி வந்த அழுகையை அடக்கமுடியவில்லை.

'உனக்கு விருப்பமில்லையென்றால் நான் இனி உண்டவீட் டுக்கு வரயில்ல' சொல்லிக் கொண்டே எழுந்த நவரெத்தினம்

ஆணியில் கொழுவி இருந்த சேர்ட்டை எடுத்து போட்டுக் கொண்டான்.

'டேய் ஏண்டா இப்படியெல்லாம் கதைக்கிறாய். பெற்ற பிள்ளையள் மாதிரி இவ்வளவு நாளும் பார்த்தன். மிஞ்சிக்கிடக்கி றதே நீங்க மூண்டுபேரும் தான். சுற்றி வளைப்பெண்டு ஒவ்வொரு நாளும் வாறவனுகளும் எல்லாரையும் விட உன்னைத்தான் அதிகமாக விசாரிக்கிறானுகள். வீட்டுக்கு மூத்தவன் நீஇ உனக் கொண்டு நடந்தால் அதையும் என்னெண்டடா இந்தக்குடும்பம் தாங்கும் நான் ஒண்டு நினைக்க நீ ஒண்ட நினைச்சி ஏண்டா இப்படிக் கதைக்கிறாய். உங்கட கண்ணுக்கு முன்னால இருக்காமல் ஆண்டவன் என்னை முதலில எடுத்தானெண்டால் எவ்வளவு நிம்மதியாய் இருக்கும்.'

தமக்கை கதைப்பதை காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல எழுந்தவனை தடுத்து நிறுத்தினாள் தமக்கை.

'டேய் ஏண்டா... இப்படியெல்லாம் கதைக்கிறாய். எங்கடா போகப்போறாய்... டேய் நவரெத்தினம்.'

'எங்கேயோ போறன்... இனி இங்க வந்து உங்களுக்கெல் லாம் கரைச்சல் குடுக்கமாட்டன். ஆனால் ஒண்டுமட்டும் கேட்கி றன் மூத்தம்மாவுக்கு ஏதும் நடந்தால் மட்டும் நான் கட்டாயம் வருவன் அதைமட்டுமாவது எனக்கு சொல்லியனுப்ப மறந்தி டாதை அக்கா...' சொல்லும்போதே நவரெத்தினத்தின் கண்கள் கலங்கியது. கண்களால் கண்ணீர் வடிந்தபடி இருந்த மூத்தம்மாவி டம் குனிந்து அவவின் தலையை தடவி விட்டுவிட்டு அருகில் இருந்த தாயையும் ஒருதடவை பார்த்து போன நவரெத்தினத்தை மருமகள் வாசுகியும் தம்பி குமாரும் அழுதபடி பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.

அடுப்பில் உலைகொதித்துக் கொண்டிருந்தது. கிணற்றடியில் அரிசி கழுவிக் கொண்டிருந்த வாசுகிக்கு இதற்கு முன்பு நடந்த சுற்றிவளைப்பின்போது நடந்த சம்பவங்களே மனதில் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

தொடர்ந்து மூன்று நாட்களாக ஒவ்வொரு நாளும் ஊர் சுற்றி வளைத்து வீடுவீடாக சோதனை இடப் படுகின்றன. நேற்று அம்மாவுடன் வாக்குவாதப்பட்டுவிட்டு நவரெத்தினம் மாமா போன ஒரு மணி நேரத்தின் பின்பு சுற்றி வளைத்த ராணுவம் தவமணி அக்கா வீட்டைத்தான் அதிகமாக சோதனையிட்டது. வளவு வெளிவாசல் காவலுக்கு நின்ற அந்தராணுவ சிப்பாய் கிணற்றடியில் நின்ற வாசுகியை கூப்பிட்டு ரகசியமாய்ச் சொன்னான்.

'உண்ட நவரெத்தினம் மாமா வந்ததெண்டு நியூஸ் வந்திச்சி. அதுதான் ரவுண்டப் செய்யுறானுங்க.' சொன்ன ராணுவச் சிப்பாயை முறைத்து பார்த்து விட்டு வந்த வாசுகி இவன் ஏன் இந்த ரகசியத்தை என்னிடம் சொல்ல வேண்டும் என்று சிந்தித்தாள்.

இன்று மட்டுமல்ல இதற்கு முதல் நடந்த சுற்றி வளைப்பின் போதும் அதே ராணுவ சிப்பாய்தான் வாசுகிவீட்டு வாசலில் காவலுக்கு நின்றான். இது தற்செயலாக நடப்பதா இல்லை அவனாக ஏற்படுத்திக் கொள்வதா என்பது பற்றி வாசுகியால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை.

## 11

நேற்றுவரை நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டே அரிசி கழுவிக் கொண்டிருந்த வாசுகி வீதியால் நடந்து வரும் சப்பாத்துக்கால்களை தட்டுவேலிக்குக் கீழ் கண்டதும் அரிசியுடன் எழுந்தோடிச் சென்று குசினிக்குள்ளிருந்த தாயிடம் இன்றும் சுற்றிவளைக்கப் போகிறார்களென்றும் வாசல்வரை ராணுவம் வந்து விட்டதையும் சொன்னாள்.

குசினிக்குள்ளிருந்து வெளியில் வந்த தவமணியக்கா வாசலில் ராணுவம் நிற்பதைக்கண்டு எதுவும் பேசாமல் நிற்க, பின்னால் வாசுகி நின்று கொண்டிருந்தாள். ஆமிக்காரனைகண்ட பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளமுடியாமல் குட்டிபோட்ட பூனைபோல் அங்குமிங்கும் நடுங்கி நடந்துகொண்டு திரிந்த ஆச்சியை வாசலில் நின்ற ராணுவ பெரியவன் தடுத்துநிறுத்தினான்.

'ஏய் ஏன் இப்பிடி பயப்புடுறாய் குண்டுகிண்டு வைச்சிரிக் கியா.' ஆமிக்காரன் கேட்க ஆச்சி பயந்தே போயிட்டா.

'எண்ட ஐயோ எனக்கிட்ட என்னய்யா குண்டு இரிக்கி. நான் சாகுறசீவன் நான் ஏனப்பா அதெல்லாம் தொட்டுப்பார்க்கிறன்' பயந்து நடுங்கிய ஆச்சிய பார்த்து சிரித்தான் ஆமிக்காரன்.

'நாங்க ஒங்கல ஒண்டும் செய்யுறதில்ல. எங்களுக்கு தேவை ஒண்ட பேரன் நவரொத்தினம் தாம். அவன் வந்தால் மரியாதை யாக எங்களுக்கு வந்து சொல்லவேனும் தெரியுமா?' ஆச்சியை அதட்டிவிட்டு வெளியில் போய்விட்டான் அந்த ராணுவ அதிகாரி. மற்றய வீடுகளை சோதனையிட வாசுகி எட்டிப்பார்த்தாள் நேற்று நின்ற அதே ராணுவ சிப்பாயே இன்றும் வெளிவாசலில் காவலுக்கு நின்று கொண்டிருந்தான். வாசுகி வெளியில் எட்டிப் பார்த்ததை அவனும் கண்டுகொண்டு வாசுகியை வரச்சொல்லி கையசைத் தான். பயந்தபடி வெளிவாசலுக்கு போன வாசுகியைப் பார்த்து சிரித்தான் அவன். துப்பாக்கி ஏந்தியிருக்கின்றோமே என்ற விறைப்போ வீறாப்போ அவனிடம் இல்லை. ஏதோ தந்தார்கள் வைத்திருக்கின்றன் என்பதுபோல் துப்பாக்கியை பிடித்திருந்தான். இனவெறியோ கொலைவெறியோ அவனின் முகத்தில் சிறிதுகூட தெரியவில்லை. ஏதோ கூப்பிட்டார்கள் வந்தேன் என்பதுபோல் இருந்தது அவனின் முகபாவம்.

அரும்பு மீசையும் அமைதியான அந்த ராணுவ சிப்பாயை சீருடையில்லாமல் பார்த்தால் அவனை ஒரு படித்த செல்வந்தர் வீட்டுப் பிள்ளை யென்றே சொல்வார்கள். அவனைப் பார்க்கும் எவருக்கும் பாவம் இவனெல்லாம் ஏன் ராணுவத்தில் சேர்ந்தான் என்றே எண்ணத் தோன்றும்.

அருகே வந்த வாசுகியிடம் 'என்ன பயமா இருக்கா' என்று கேட்டான்.

'பயப்பட நீ என்ன பூதமா' என்றாள் வாசுகி. எங்கிருந்துதான் அவளுக்கு அந்த துணிச்சல் வந்ததோ தெரியாது.

'நம மொஹத' என்றான்.

காது கேளாதவர்கள் போல 'அ... என்ன' என்றாள் வாசுகி.

'சிங்களம் தெரியாதா உன்பேரு என்ன சொல்லு. 'என்றான்.

'ஏன் கட்டாயம் சொல்லத்தான் வேண்டுமா. 'உண்மையிலேயே கோபத்தை வெளிப்படுத்தியே பேசினாள் வாசுகி.

'சொல்லமாட்டயா...? என் பேரு என்ன தெரியுமா... சுனில் நல்லபேரு தானே.'

'உண்டபேர ஆருகேட்டா...' சொல்லாமல் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் வாசுகி.

'கொஞ்சம் தண்ணி கிடைக்குமா குடிக்க...' சுனில் கேட்டது உண்மையில் தாகத்துடன் தானா என்பதை அவளால் உணரமுடியவில்லை.

'ஏன் தமிழரை சாக்காட்ட துவக்கும் குண்டும் கொண்டுவாற உங்களுக்கு தாகத்துக்கு தண்ணி கொண்டுவரத் தெரியாதோ' நக்கலாக கேட்ட வாசுகியை பார்த்தான் சுனில்.

'ஆமிக்காரன் தண்ணி கொண்டுவருவான் என்கிறது உனக்கு தெரியுமா?' தனது முதுகில் தொங்கும் பையை தொட்டுக் காட்டினான் அவன்.

'அப்ப எதுக்கு தண்ணிகேட்ட'

'இல்ல தமிழ் ஆட்கள் குடிக்க தண்ணிகேட்டா குடுப்பாங்களா என்று பார்க்கத்தான் கேட்டன்.'

'ஏன் தமிழர்ர உயிரைக் குடிக்கிறது போதாதா.'

'யார் நானா'

'நீ குடித்தாய் என்று உன்னோடு இருந்தா பார்த்தேன். உங்கட ஆட்கள் எங்கட இனத்தோட உயிரை குடித்துக் கொண்டு இருக்கிறாங்கள் அதைத்தான் கேட்டன்'

'உங்கட ஆட்கள் செய்யுறது மட்டும் சரியா'

'எது'

'எங்கட ஆட்கள சுடுறதும் கண்ணிவெடிவைச்சு சாக்காட்டு றது.'

'உங்களப்போல அப்பாவிப் பொதுமக்களை சாக்காட்டை யில்லையே'

'நான் அப்பாவிதானே.'

'யாரு ஆயுதமேந்திய அப்பாவியா.'

'ராணுவத்திலையும் நல்லவங்கள் இருக்காங்க. அது தெரி யுமா உனக்கு.'

'ஆனால் எங்களில ஆரும் கெட்டவங்கள் இல்ல அது தெரியுமா உனக்கு'

'நீ கூடுதலாக கதைக்கிறாய் உன்னைச் சுட்டுபோட்டுடுவன்' சிரித்துக் கொண்டே தனது துப்பாக்கியை தடவினான் சுனில்.

வாசுகி எதுவும் பேசாமல் வந்துவிட தவமணி அக்கா ஒரு செம்பில் தண்ணி கொண்டு அந்த ராணுவச் சிப்பாயிடம் நீட்ட தவமணி அக்காவை பரிவுடன் பார்த்துவிட்டு வேண்டாமென்று மறுத்துவிட்டான் அவன்.

'ஏன் ஐயா நாங்க தண்ணியில ஏதும் போட்டிருப்பம் எண்டுபயமோ.'

'இல்லையம்மா உங்களிட்ட நாங்க எதுவும் வாங்கிகுடிக் கவோ சாப்பிடவோ கூடாது என்கிறது சட்டம். வேணாம் அம்மா.'

அம்மா என்ற கணத்தில் 'இவன் ஏன் இந்த வேலைக்கு வந்தான்' என்று எண்ணினாள் தவமணிஅக்கா.

ஆமிக்காரர் எல்லோரும் போய் ஒரு மணிநேரம் ஆகியும் ஆச்சியும் தவமணிஅக்காவும் வாசுகியை பேசிக்கொண்டிருப் பதை நிறுத்தவேயில்லை.

'இவளுக்கு என்னதுணிச்சல் கையில துவக்கோட நிற்கிற ஒரு ஆமிக்காரனுக்கிட்டபோய் வாய்க்கு வாய் கதைச்சிக் கொண்

டிருந்தாளே அவன் ஏதும் செய்யாதத செய்துட்டு போயிருந்தா னென்டால் இப்பநிலைமை என்னாகியிருக்கும்' குசினிக்குள்ளி ருந்த தவமணி அக்கா மகளை பேசிக் கொண்டே இருந்தா.

'ம்... கலிகாலம் முத்திப்போச்சுடி இல்லாட்டி இந்தக் குமா ருக்கு அவனோட வாய்க்குவாய் கதைக்க என்னெண்டடி துணிச் சல் வரும்' ஆச்சியும் தன்பாட்டுக்கு வாசுகியை பேசிக்கொண்டி ருந்தா.

வாசுகியும் தன்னை நினைத்துதானே ஆச்சரியப் பட்டுக் கொண்டு எப்படிவந்தது எனக்கிந்த துணிச்சல், அவன் சிங்களவன் ஆமிக்காரன் என்ற கோபத்தினால் வந்ததா அல்லது இதற்கு முன்பு பார்த்துபேசி பரிச்சயப்பட்டவனின் முகம்போல் அவனின் முகம் காணப்பட்டதால் வந்த துணிச்சலா அல்லது பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது வாத்தியார்களையே கேள்விகேட்கும் துணிச்சல் கொண்ட அந்த சுட்டித்தனத்தால் வந்த துணிச்சலா எங்கிருந்து வந்தது இன்று எனக்கிந்த துணிச்சல். தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் வாசுகி.

நேற்று கோபித்துக் கொண்டு போன நவரெத்தினம், இன்று பகல் ஆமிக்காரனை எதிர்த்து கேள்வி கேட்ட மகள் வாசுகி அம்மாவின் உடல்நிலை, எப்போதோ போய் எப்போது வருவார் கள் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் சதீஸ், முகிலன், செந்தில், இவர்கள் எல்லோருடைய நினைவும் தவமணியக்காவின் நித்தி ரையை குழப்பிக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் ஆச்சிவேறு பயத்தில் பகல் முழுவதும் புலம்பிக் கொண்டுதிரிகின்றா. நடக்காததை நடந்ததாகவும் நடக்கக் கூடாததுகள் நடக்கும் என்பதுபோலவும் ஆச்சி புலம்புவதை சகிக்கமுடியவில்லை.

## 12

**நே**ற்றைய சுற்றிவளைப்பில் கைது செய்து கொண்டு போன இரண்டு இளைஞர்களை களவாஞ்சி முகாமில் டயர்

போட்டு எரித்தார்களாம் என்ற செய்தி ஆச்சியின் காதுகளுக்கும் எட்டிவிட்டது. அதன்பின்பு ஊரில் எந்த ஒரு வாகனத்தை கண்டாலும் வாகனம் முழுவதும் டயர் நிரைப்பிக் கொண்டு போவதைக் கண்டதாக ஆச்சி எல்லோரிடமும் வதந்தி பரப்பிக் கொண்டிருந்தா. அதுமட்டுமல்ல இன்று ஊருக்குள் வந்த லொறி யில் கிடுகு ஏற்றிக் கொண்டு போன ஒரு வியாபாரியின் வாகனத்தை கண்டு ஓடி வந்த ஆச்சி, பெடியன்களை போட்டெ ரிக்க இனி டயர் இல்லாததால் ஆமிக்காரன் ஓலை கிடுகளை வாங்கிக் கொண்டுபோகிறான் என்று சொன்ன போது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை; ராமுவும் அகிலனும் இனிமேல் வீதிப்பக்கமே போகக் கூடாதென்று எச்சரித்து விட்டார்கள்.

நேரம் நள்ளிரவை தாண்டி ஒரு மணிக்கு மேலாகிவிட்டது எத்தனைதரம் புரண்டுபடுத்தும் நித்திரை வராததால் மண்டபத்திற் குள்ளிருந்து வெளியே வந்து மல்லிகை பந்தலின் கீழ் கால் நீட்டியிருந்த தவமணியக்காவின் கண்களுக்கு கிணற்றடியில் நிற் கும் பூமரங்கள் அசைவதுபோல் இருந்தது.

காத்துக்கு பூமரங்கள் ஆடுகின்றது எனநினைத்த தவமணி யக்கா பூமரத்தோடு சேர்ந்து ஓர் உருவமும் அசைவதை நிலவு வெளிச்சத்தில் கவனித்துவிட்டா. இந்த நேரத்தில் யாராக இருக் கும். பயத்தில் கத்துவதா அல்லது கணவர் பிள்ளைகளை எழுப்பு வதா இல்லை பிள்ளைகளையும் கணவரையும் எழுப்புவது தப்பித் தவறி ஆச்சியின் காதுகளில் விழுந்தால் ஆச்சி ஊரைக் கூட்டி விடுவாள். ஒருமுறை பூமரத்தில் பூனை ஏறி விளையாடியதையே கள்ளன் வந்துட்டாண்டி எழுப்புங்கடி என்று சொல்லி ஆச்சி ஊரைக் கூட்டியது அக்காவின் நினைவில் வந்து மறைந்தது.

யாராக இருக்கும் இந்தநேரம். இரவோடு இரவாக ஆமிக்கா ரர்கள்தான் ஊரை சுற்றி வளைக்கின்றார்களோ. இருந்தாலும் இருக்கும். இதற்கு முன்பு இரண்டு மூன்று முறை அப்படி சுற்றி வளைத்திருக்கின்றார்கள் அப்போதெல்லாம் எப்போது எத்தனை மணிக்கு வந்தார்கள் என்று தெரியாது. விடிந்து வாசலுக்கு வந்ததும் தான் வளவு எல்லைகளிலும் ஒழுங்கைகளிலும் ஆமிக்கா

ரர் நின்றது தெரிந்தது. சிலவேளை இது போலதான் அப்போதும் வந்திருப்பார்களோ என்னவோ தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டா தவமணிஅக்கா.

இப்போது ஒவ்வொரு பூமரத்தையும் விலத்திக் கொண்டு முன்னுக்கு வந்த அந்த உருவத்தை வீட்டு நாய் நிம்பி கண்டு கொண்டு குரைத்துக் கொண்டு ஓடி உருவத்துக்குக்கிட்ட போன தும் தனது சத்தத்தை அடக்கி அழுவதுபோல் அனுகிக் கொண்டி ருந்தது.

நிம்மிக்கு என்ன நடந்திருக்கும் ஓடிய நாயை கத்தியால் குத்தி கொன்றிருக்குமா அந்த உருவம். நினைத்துக் கொண்டிருக்கும் போதே நிம்மி ஓடிவந்து தவமணிஅக்காவிடம் ஏதோ சொல்வது போல் வாலை ஆட்டிக் கொண்டு அங்குமிங்குமாக தவமணி அக்காவை சுற்றிவலம் வந்து ஓடிக் கொண்டிருந்தது.

நிச்சயமாக இது வேற்று மனிதன்இல்லை இந்தவீட்டைச் சேர்ந்த ஆரோதான் இது. இல்லையென்றால் நிம்மி இவ்வளவு சந்தோசப்படாது. யாராக இருக்கும் சிலவேளை கோபித்துக் கொண்டுபோன நவரெத்தினமாக இருக்குமோ. மனதில் திடத்தை ஏற்படுத்திக் கொண்டு விளக்கை எடுத்துக் கொண்டு அந்த உருவத்தை நோக்கி போய் உருவத்துக் நேரே விளக்கை பிடித்த தும் வெளிச்சத்தில் தெரிந்த முகத்தை கண்டு அதிர்ந்து நின்ற அக்கா.

'அக்கா... நான்தானக்கா...'

அதிர்ந்து நின்ற அக்கா தன் கண்களையே தன்னால் நம்ப முடியாமல் இருந்தது.

'அக்கா என்னக்கா நான்தானக்கா செந்தில்...'

விளக்கை ஊதி அணைத்து விட்டு கையைபிடித்து மண்டபத் துக்குள் கூட்டிக் கொண்டு வந்த செந்திலை கண்டதும் அக்கா அழத் தொடங்கி விட்டா. கணவரையும் பிள்ளைகளையும் சுரண்டி எழுப்பினா அவா. நித்திரை மயக்கத்தில் செந்திலைக் கண்ட

அவர்கள் கனவு காண்பது போல் கண்களை கசக்கிக் கொண்டார் கள்.

எப்போது விடிந்தது என்று தெரியாதது போல் விடிந்தும் தொடர்ந்து கதைத்துக் கொண்டே இருந்தார்கள்.

'அக்கா நவரெத்தினம் அண்ணா எங்கக்கா'. செந்தில் கேட் டான்.

'அதையேன் கேட்கிறாய்...' என்று தொடங்கி நடந்தவை சொல்லி முடித்த போது அப்படியா என்று தலையாட்டி சிரித்தான் செந்தில்.

'ராமுட பாடு என்னவாம். இப்பவும் சுகந்திய நினைச்சுக் கொண்டுதான் இருக்கானோ.'

'ரெண்டு பேரும் வெளிப்பார்வைக்கு ஒருத்தரை யொருத்தர் பார்க்காமலும் பேசாமலும் தான் இருக்கினம். ஆனால் ஒருத்தரை யொருத்தர் நினைக்காத நேரமில்லை போல தான் தெரியுது. அந்த பெட்டை இவனைப் பற்றி எந்த நாளும் விசாரிச்சுக் கொண்டே இருக்காளாம் என்று கேள்விப்பட்டன்'. கிணற்றுபடியில் நிற்கும் ராமுவுக்கு கேட்காதவாறு.

'முகிலன் எப்பவாம் ஊருக்கு வாறன்'.

இன்னும் இரண்டொரு கிழமையில் வாறதா கடிதம் போட்டி ருந்தான். யுத்தநிறுத்தும் ஒன்டும் வரும்போல கதைக்கிறாங்கள். அந்த நேரத்தில எண்டபுள்ளை சதிஸ்ும் வந்தானெண்டால் எல்லாரையும் கூப்பிட்டு எண்ட கையால ஒருவாய் சோறுகுடுக்க வேணும்போல இருக்குடா. என்னடா தம்பி இப்படி காய்ச்சி கருவாடாக எலும்பும் தோலுமாக வந்திருக்காய் என்று கேட்ட அக்காவிடம் தனக்கேற்பட்ட அனுபவங்களையும் தான் பட்ட கஷ்டங்களையும் பட்டும் படாததுமாய் சொல்லி முடித்தபோது நேரம் எட்டுமணியாகி இருந்தது. விசயம் கேள்விப்பட்டு சின் னம்மா பிள்ளைகள், சின்னக்கா ஊர்சனங்கள் சொந்தக்காரர் எல்லோரும் வந்திருந்தார்கள். இரவு வெளியில் போயிருந்த

அகிலன் அப்போது தான் வந்தான். அவனைக் கண்டதும் செந்தில் சிவப்புசாயம் பட்டிருந்த தன் கைகளைப் பார்ப்பதை அவதானித்து கைகளை பின்னால் மறைத்தான்.

'அக்கா எல்லாம் சொன்னா ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பங்களிப்பு செய்யுறம் போல' செந்தில் புன்னகைத்தான்.

மூத்தம்மாவின் அருகில் வந்தமர்ந்த செந்தில் அவவிடம் பலகேள்விகள் கேட்டான் கண்ணீராலும் தலையசைப்பினாலும் பதில் சொல்லிக் கொண்டிருந்தா. சின்னம்மா மகனையே பார்த்து அழுதுகொண்டிருந்தா செந்திலின் சகோதரிகள் தம்பியை கண்ட பூரிப்பில் இருந்தார்கள். செந்திலும் ராமுவும் அகிலனும் ஒன்றாக இருந்து பழுஞ்சோறும் பழங்கறியும் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது,

'தம்பி கெதியாய் சாப்பிட்டுப் போட்டு எங்கெண்டாலும் போங்கடா' சொன்ன மூத்தக்காவை ஆச்சரியமாக பார்த்தான் செந்தில்.

'என்னடா புதினமாய் பார்க்கிறாய். இப்படித்தாண்டா இப்ப இங்கத்தைய வாழ்க்கை போகுது. ஆளரவம் பார்த்து வந்து என்னத்தையும் வாயுக்குள்ள போட்டிற்று திரும்பவும் ஓடி ஒளியிற துதான் உன்னப் போல போய் வந்த பொடியனுகளின்ர வாழ்க்கை. இப்ப நீயும் வந்திற்றாய் இனி என்ன நடக்குமோ எப்ப எந்தநேரம் வந்திறங்குவானாகளோ தெரியாது.' மனதின் பயம் வார்த்தையாக வந்தது.

'ம் எல்லாம் உன்னப்போல நாடுபிடிக்க ஊர விட்டுஓடின வீரனுகளால வந்தது'. செந்திலை வம்புக்கிழுத்தா ஆச்சி.

செந்திலும் அகிலனும் ராமுவும் சாப்பிட்ட பின்னர் போய் விட்டார்கள். தாயின் கால்களுக்கு எண்ணை தடவிக் கொண்டி ருந்தா தவமணிஅக்கா. மகளின் தலை முடியை வாரி அள்ளி முடித்துக் கொண்டிருந்தாள் ஆச்சி.

வேலி ஓரத்தில் நின்ற பப்பாசி மரத்தை அண்ணார்ந்து பார்த்தாள் வாசுகி. நன்றாக சிவந்து போயிருந்த பப்பாசிப்பழம்

ஒன்றை காகம் கொத்த எத்தனித்துக் கொண்டிருந்தது. அண்ணா இருந்திருந்தால் இந்தப் பப்பாசியை கொஞ்சம் சிவக்கும் போதே தட்டிவிழுத்தி எவருக்கும் கொடுக்காமல் சாப்பிடும் தமையனை யும் தனக்கு தராமல் சாப்பிடும் தமையனோடு தான் சண்டை பிடிப்பதையும் நினைத்துக் கொண்டாள் வாசுகி.

பப்பாசிப் பழம் பறிப்பதற்காக நீளமான தடியொன்றை எடுக்க பக்கத்துவீட்டு புவிதா வீட்டுக்கு வந்திருந்த வாசுகி கொஞ்சநேரம் புவிதாவோடு கதைத்துக் கொண்டிருந்தபோது. ஊரின் பிரதானவீதியில் வாகனங்கள் வந்திறங்கும் சத்தம் கேட் டது. புவிதா எட்டிப் பார்த்தாள் வாகனங்களிலிருந்து இறங்கிய ராணுவத்தினர் ஓடிவந்து ஒவ்வொரு வீட்டுவாசலிலும் நின்றார் கள். தன் வீட்டு வாசலில் யார் நிற்கின்றான் என்று கேட்டாள் வாசுகி. சுனில்தான் நிற்கின்றான் என்றும் இன்னும் சில ராணுவத்தி னர் வாசுகியின் வீட்டுக்கு போவதாயும் சொன்னபோது பயந்தவ ளாக வெளியே வந்து தன்வாசலுக்கு வந்தவளை,

'ஏய் நில்லு' என்று தடுத்தான் சுனில். வாசுகி நின்றாள்.

'ராத்திரி உண்டவீட்ட ஆருவந்தது.'

'ஒருத்தருமில்ல'

'ஏய் பொய் சொல்லாத உண்டமாமன் ஒருத்தன் வந்தான் தானே எங்களுக்கு எல்லா நியூஸ்சும் உடனேவரும் தெரியும்தா னே' வாசுகி எதுவும் பேசாமல் நின்றாள்.

'என்ன கையில தடி'

வேலி ஓரத்தில் நின்ற பப்பாசி மரத்தை அண்ணார்ந்து பார்த்தாள் பயத்துடன்.

'என்ன பப்பாசி... எனக்கு தருவியா...'

அவள் எதுவும் பேசவில்லை. நேற்றிரவு வந்த செந்தில் மாமாவை தேடித்தான் வந்திருக்கின்றார்கள் என்ற அச்சம் அவளை முன்னர்போல் அவனோடு வாயாட விடவில்லை.

'என்ன பப்பாசி இல்லையா... சரி சரி. பயப்பிடாத போ' தான் வாசுகியோடு பேசிக்கொண்டிருப்பதை தனது அதிகாரிகள் கண்டுவிடுவார்கள் என்ற பயம் சுனிலுக்கு. தப்பினேன் பிழைத் தேன் என்றெண்ணிக் கொண்டு ஓடமுற்பட்டவளை,

'கொஞ்சம் நில்லு' என்று தடுத்தான் சுனில்.

'உம் பேரு என்ன சொல்லு' சிரித்துக் கொண்டே கேட்டான் சுனில்.

அவள்எதுவும் பேசாமல் வேகமாக நடந்தபோது வீட்டிற்குள் ளிருந்து வெளியே வந்த ராணுவ அதிகாரிகள் அவளை முறைத் துப் பார்த்துக் கொண்டு போனார்கள்.

'நேத்துராவு வந்த எண்டபுள்ளைய ஆரோ கண்கெட்டு போயிடுவானுகள் சொல்லிக்குடுத்திட்டானுகளே.' தவமணி அக் காவின் சின்னம்மா ஒப்பாரி வைத்தா.

'சக்தி சங்கார வடிவேலா அறுத்த நாக்க ஒட்டின கோளாவில் புள்ளயாரே இந்த காட்டிக்குடுக்கிற கண் கெடுவானுக நீதானப்பா ஆரெண்டு காட்டவேணும்' என்று சொல்லி வாசல் மண்ணை இரு கைகளாலும் அள்ளி தூவி எறிந்தாள் ஆச்சி.

நேற்று செந்தில் மாமா வந்தத ஆரோ சொல்லியிற்றானுகள் நாளைக்கு இடையில கூட்டிக் கொண்டு வந்து ஒப்படைகாட்டி திரும்பவும் வந்து ஆரெண்டும் பார்க்காமல் அள்ளிக் கொண்டு போவானுகளாம். 'அதுசரி உன்னோட அவன் என்னடி கதைச் சான் அண்டையப் போல இண்டைக்கும் அவனோட வாயடிச்சி யோ' பயந்துகொண்டே கேட்டா தவமணி அக்கா. என்ன நடந்தது என்பதை அறிய புவிதாவும் வந்திருந்தாள்.

'என்னட்டையும் செந்தில் மாமாவைப் பற்றித்தான் கேட்டா னுகள் நான் ஒண்டும் அவனோட வாயடிக்கையில்ல' தாய்க்கு சொல்வதுபோல் புவிதாவுக்கு பதில் சொன்னாள் வாசுகி. கேட்க வந்ததை கேட்காமலேயே போய் விட்டாள் புவிதா.

செந்திலை கூட்டிக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லி விட்டு போன ராணுவம் மீண்டும் இந்த ஒருவாரத்தில் ஒருதரமும்

வரவில்லை. ஆனால் எப்போது வருவான்களோ என்ற பயத்தி லேயே தவமணி அக்காவின் குடும்பம் பயந்து நடுங்கிக் கொண்டி ருந்த நேரம் இரண்டு நாளுக்கு முன்பு இரவு நேரம் செந்திலை போல வந்து சேர்ந்த சதீஸின் வருகையால் தவமணி அக்காவின் ஒட்டு மொத்த உறவுக்காரர்களே பயத்தில் நடுங்கிக் கொண்டிருந் தது. சதீஸ் வந்ததை அக்கம் பக்கத்து வீடுகளுக்கு கூட சொல்லா மல் ரகசியமாகவே வைத்திருந்தா தவமணி அக்கா. இரவு ஊரெல்லாம் அடங்கிவிட்டபின்பு தீடீரென வந்து ஒரு பிடி சோறு வாங்கி தின்று விட்டு செந்திலும் சதீஸும் ஓடி விடுவார்கள்.

சதீஸோடு இரண்டொரு வார்த்தை கூட சந்தோசமாகக் கதைக்கவும் இல்லை, இன்னும் தன்கையால் அவன் சாப்பிடக் கூட வில்லை என்று சதிஸின் தாயும் சகோதரங்களும் இரண்டு நாட்களாக அழுதுகொண்டே இருக்கின்றார்கள்.

கோயிலுக்கு சென்றிருந்த வாசுகி சதீஸ் வந்துவிட்ட செய் தியை சொன்னபோது சதீஸ் ஊருக்கு வந்த உடனேயே தனக்கு சொல்லி அனுப்பியதாகவும் நேற்றிரவு நடுச்சாமம் தானும் சதீ ஸும் அவள் வீட்டிற்கு பின்னால் இருட்டில் சந்தித்து பேசியதாகக வும் வசந்தி சொன்னபோது வாசுகி ஆச்சரியப்பட்டு அவளிடம் பொய்க்கோபம் காட்டினாள்.

## 13

**யு**த்த நிறுத்தம் என்ற பேச்சும் இழுத்தடித்துக் கொண்டே போனது. இந்தியாவிலிருந்து பயிற்சி பெற்ற போராளிகளின் வருகையின் பின்பு ஊரை அண்டிய வயல்பகுதிகளில் அடிக்கடி ராணுவத்துடன் பெரிய மோதல்களும் நடக்கின்றன. ஊருக்குள் வர பயமோ என்னவோ ராணுவம் இப்பொழுது அடிக்கடி சுற்றி வளைப்பதில்லை. இதனால் இயக்கத்துப் பெடியன்கள் அடிக்கடி ஊருக்குள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஊரில் அறுவடைக் காலம் தொடங்கியிருந்தது. ஒவ்வொருவ ருடமும் அறுவடைக் காலம் தொடங்கும் போதும் ஆரம்பிக்கும்

முஸ்லீம் தமிழ் கலவரம் இந்த வருடமும் தொடங்கியிருந்தது. வழமைக்கு மாறாக ராணுவத்தினரும் முஸ்லீம்களுடன் சேர்ந்து தமிழருக்கு எதிராக முஸ்லீம்களை தூண்டி விட்டுக் கொண்டிருந் தார்கள். இதற்கிடையில் தமிழ் இயக்கங்களும் ஒருவரோடு ஒருவர் கருத்து வேறுபாடு கொண்டு ஒருவரையொருவர் காணும் இடங்களிலெல்லாம் முறைத்துக் கொண்டிருந்தார்கள். தன் தம்பி மார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயக்கத்தில் இருக்கின்றார்கள் என்ற செய்தி இந்த நேரத்தில் தான் தவமணி அக்காவுக்கு தெரிந்தது.

இன்றிரவு தன் சினேகிதன் ஒருவன் வீட்டிற்கு தான் வருவதா கவும் அங்கு அவளையும் வரும்படி வசந்திக்கு செய்தியனுப்பியி ருந்தான் சதீஸ்.

நண்பனின் வீட்டில் அவன் காத்திருந்த கொஞ்ச நேரம் தாமதித்துத்தான் வசந்தி வந்தாள்.

'என்ன இவ்வளவு நேரம் ஏதும் பிரச்சினையா'

'இல்ல வீட்டில எல்லாரும் நித்திரையாகட்டுமெண்டு இருந் தன். நீங்க கன நேரமாயோ காத்திருக்கியள்'

'கனநேரமாயில்ல கன வருசமாய்'

'கனவருசமாய் காத்திருந்தது நீங்களில்ல நான்தான்.'

'நான் இந்தியாவில் இருந்து வந்திருக்காவிட்டால் நீ என்ன செய்திருப்பாய்'

'நீங்க வரும்போது நான் உங்களுக்காக காத்திருக்கா விட் டால் நீங்க என்ன செய்திருப்பியள்'

ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாத கேள்விக ளையே இருவரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

'உண்ட வீட்டில என்ன கதைக்கினம்?'

'நீங்க வரும் வரைக்கும் அம்மா அடங்கித்தான் இருந்தா நீங்க வந்ததை கேள்விப்பட்டதும் எனக்கு மாப்பிள்ளை பார்க்க

ஓடித்திரியுறா. ரெண்டொரு இடத்தில சொல்லி வைச்சிருக்காவாம்'

'நீ என்ன சொன்னாய்'

'எனக்கிட்ட கேட்டுக் கொண்டோ எல்லாம் செய்யுறா, தம்பி தங்கச்சி சொல்லித்தான் எனக்கும் தெரியும்'

'அப்படி ஏதுமெண்டால் நீ என்ன சொல்லுவாய்'

'நான் என்ன சொல்லுறதெண்டு எனக்கே தெரியாது'

'உன்ர கதையப் பார்த்தா அண்டைக்கு என்ர கடிதத்தை பற்றி எதுவும் தெரியாமல் நடந்ததுபோல நடப்பாய் போல தெரியுது.'

'..... ..... .....' ....

'ஏன் எதுவும் பேசாமல் இருக்கிறாய்?'

'நான் போக வேணும். என்னைக் கொண்டுபோய் விடுங்கோ'

'இல்ல... இண்டைக்கு முழுவதும் நீ என்னோட தான் இருக்கப் போறாய். நான் கொண்டுபோய் விடமாட்டன்.'

'..... ..... .....' .....

'ஏன் வசந்தி ஒண்டும் பேசாமல் இருக்கிறாய். என்னோட கோபம் போல'

'..... .....' .....

'ஏய் அழறாய்... என்ன பிரச்சினை.'

'இல்ல எனக்கு பயமாய் இருக்கு. அம்மா ஏதும் செய்து ஆருக்கும் கட்டி வைச்சிடுவாவோ எண்டு பயமாய் இருக்கு. நான் உங்களப் பிரிஞ்சி இருக்க மாட்டன்.'

ஏன் அப்பிடியெல்லாம் நினைக்கிறாய். மாமி ஒருநாளும் அப்பிடிச்செய்ய மாட்டா.

'ஆருமாமி.'

'உங்கட அம்மாதான்'

அவன் சொன்னதை கேட்டு வசந்தி சிரித்தாள்.

'ஏன் வசந்தி சிரிக்கிறாய்.'

'இல்ல வாசுகியும் உங்களைப் பற்றி சொன்னாள். அண்ணா எந்த நேரம் என்றும் பார்க்காமல் ஏதும் சொல்லி சிரிக்க வைப்பா ரெண்டு, அதுதான் சிரிக்கிறன்.'

அதன்பிறகு அன்றிரவு இருவரும் அதிகநேரம் கதைத்திருந்து விட்டு விடிவதற்கு முன் வசந்தியை கூட்டிவந்து அவளின் வாசலில் விட்டு விட்டு ரகசியமாக வந்து மல்லிகை பந்தலின் கீழ் படுத்தவன் விடிந்து அதிக நேரமாகியும் எழும்பாமல் படுத்தி ருந்ததை கண்ட தவமணி அக்கா பதறித்துடித்து பயந்து போய் அவனை எழுப்பி சாப்பாடு கொடுத்து 'ஓடு மகனே எங்கொண்டா யிலும். அவனுகள் வந்தாலும் வந்திடுவானுகள்' என்று சதீஸை அனுப்பிவிட்டா.

இரவு சதீஸ் வந்தானா என்று கேட்டு தவமணி அக்காவின் தங்கை வந்து கேட்டுவிட்டு போனா. இந்தியாவில் இருந்து வந்தவன் ஒருநாள் கூட தன் வீட்டில் சாப்பிடவில்லை யென்று கவலைப்பட்டு அழுதுவிட்டு போனா சதீஸின் தாய்.

மூத்தக்காவுடன் கோவித்துவிட்டு போன நவரெத்தினம் இவ்வளவு நாட்களுக்கும் தன்னைக் கூட ஒரு தடவை வந்து பார்க்கவில்லை என்று பகலெல்லாம் சின்னம்மா அழுதிருந்து விட்டு பின்னேரம் தான் போனா.

பின்னேரம் திடீரென வந்து மூத்தம்மாவை பார்த்துவிட்டு அவசரமாக ஓடிவிட்டான் செந்தில். ராமு பகலெல்லாம் ரோட்டில் நின்றுவிட்டு பொழுது சாய்ந்த நேரம்தான் வீடுவந்து சேர்ந்தான். அவன் நேரடியாக இல்லாமல் மறைமுகமாக இயக்கத்துக்கு வேலை செய்வதால் அவனைப் பற்றி தவமணி அக்கா பெரிதாக பயப்படவில்லை

அகிலன் வந்து இரவு சாப்பாடு சாப்பிட்டு விட்டு சின்னக்கா வீட்டுக்கு படுக்கப் போய்விட்டான்.

தாயின் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு மல்லிகை பந்தலின்கீழ் வந்தபோது இரவு பதினொரு மணியாகியிருந்தது. மல்லிகை பந்தலின் கீழ் படுத்திருந்த சின்னம்மாவின் கடைசி மகன் குமாரையும் தன் கடைசி மகன் பாஸ்கரையும் பனியுக்குள்ள படுக்காமல் உள்ளுக்குள்ள போய் படுங்கடா என்று எழுப்பி கொண்டுபோய் வீட்டுக்குள் விட்டுவிட்டு மீண்டும் மல்லிகை பந்தலுக்கு வந்தபோது யாரோ வாசலில் நிற்பது தெரிந்தது. 'யாரது' என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்து பார்த்தபோது, 'நான்தான் மாமி' என்று சொன்ன வசந்தியைக் கண்டு தவமணி அக்கா அதிர்ந்து போய் நின்றா.

'என்ன புள்ள ஒருநாளும் இல்லாமல் அதுவும் இந்த நேரத்தில' என்று கேட்டபோது 'நான் இனி இங்க தான் இருக்கப் போறன் அந்த மனிசி அம்மா ஆரோ ஒருவனுக்கு என்னைக் கட்டி வைக்கப் போறாவாம். நான் சதீஸோடதான் இருப்பன். எனக்கு இனி அவர்தான் முக்கியம்' அழுதுகொண்டு நின்ற வசந்தியின் குரல்கேட்டு அத்தானும் ஆச்சியும் வாசுகியும் எழும்பி வந்துவிட்டார்கள்.

வாசுகி வசந்தியை தன் அறைக்குள் கூட்டிக் கொண்டு போய்விட வானம் இடிந்து விழுந்ததுபோல் ஆச்சி தலையில் கைவைத்துக் கொண்டிருந்தா.

எப்போ விடியுமென்று எதிர்பார்த்திருந்து விடியுமுன்பே சதீஸுக்கு சொல்லியனுப்ப அவனும் வந்து சேர்ந்தான். சதீஸின் தாயும் பதறியடித்துக் கொண்டு ஓடிவந்தாள். விசயம் அறிந்த சதீஸின் தகப்பன் அவன் இனி என் முகத்திலேயே முழிக்கக் கூடாதென்றும் அவனும் அவளும் வந்தால் வெட்டி சாக்காட்டு வேன் என்று சொன்னதாகவும் சதீஸின் தாய் ஒப்பாரி வைத்தாள். 'எல்லாப் பிரச்சினையும் எண்டதலையில தான் வந்து விழுது. எல்லாருக்கும் முதல் நான் போய்ச் சேர்ந்தால் தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்' - தவமணியக்கா புறுபுறுத்துக் கொண்டே இருந்தாள்.

சதீஸ் மல்லிகை மரத்தில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான். வீட்டுக் குள்ளிருந்து வெளியில் வராமல் இருந்தாள் வசந்தி.

'டேய் என்னடா செய்யச் சொல்லுறாய்' சதீஸைப் பார்த்து கேட்டா தவமணி அக்கா.

'அம்மா வசந்தியோட கதைச்சன் அவள் ஒருமுடிவோட தான் வந்திருக்காள் போல தெரியுது. நீங்க உங்களோட வைச்சிருப் பியளோ இல்ல நான் கூட்டிக் கொண்டு போறதோ எண்டு நீங்கதான் சொல்ல வேணும்.'

'ம்... முளைச்சு மூணு இலை விடையில்ல. அதுக்குள்ள காதல் முளைச்சிடும் உங்களுக்கு' ஆச்சி புறுபுறுத்தா.

'நல்லதோ கெட்டதோ எங்கள நம்பி எண்ட வாசல் தேடி வந்திற்று அந்த புள்ளை. இனிவாறது வரட்டும் ஆனால் ஒண்டு சொல்லுறன் வந்து பார்த்து பேசி சிரிக்குறதோட நிறுத்திக் கொள் ளுங்கோ, அவளும் பொண்ணப் பெத்தவள். அவளுக்கிட்டயும் பேசி கதைச்சு என்ன செய்வம் எண்டு ஒரு முடிவெடுக்கிறதுக் கிடையில நீங்க எல்லை மீறி நடந்துடக் கூடாது' என்று வசந்தியின் தாய்க்கு பரிந்து பேசிக் கொண்டிருக்கும் போது றோட்டிலிருந்து வந்த செல்லம்மாவின் இரைச்சல் தவமணி அக்காவின் காதை அடைத்தது.

'மானம் கெட்டவள் மகனுக்கிட்ட சொல்லி எண்டமகளை கூட்டியெடுத்திட்டாள். எல்லாம் எண்ட சொத்துக்கு ஆசைபட்டுத் தானே. நான் சொல்லுறன் பொழுது சாயிறதுக்கு இடையில எண்ட புள்ளையக் கொண்டு வந்து எண்ட வீட்ட விடையில்ல. குஞ்சு குருமான் கிழவிகட்டை எவரையும் விட்டுவைக்காம எல்லாரை யும் வீட்டோடஅள்ளிக் கொண்டு போகவைப்பன். இந்தச் செல் லம்மா ஆரெண்டு காட்டுறண்டி. என்ன தையிரியமிருந்தா எண்ட புள்ளைய கூட்டியெடுப்பாள். திரும்பவும் சொல்லுறன் முடங்கிக் கிடக்குற உண்டதாயக் கூட அள்ளிக் கொண்டு போக வைப்பண்டி. உண்ட மக்களும் தம்பிமாரும் ஆயுதம் தூக்கினவனுகளெண்டால் எனக்கும் ஆயுதம் தூக்கினவனுகளைத் தெரியும்டி. என்ன

ஆரெண்டு நினைச்சுக் கொண்டாய். நானும் காட்டுறன் நான் ஆரெண்டு.'

ரோட்டில் இருந்து வசைமாரி பொழியும் செல்லம்மாவின் குரலை கேட்டு ஆச்சி நடுங்கிக்கொண்டிருந்தா.

'புள்ளய பெத்தவள் புலம்பத்தானே செய்வாள். எண்டபுள் ளையொண்டு இப்படிச் செய்திருந்தால் நான்தான் பொறுத்திருப் பேனோ இல்ல உண்டபேரப் பிள்ளைகள்தான் சும்மா விட்டிருப்பா னுகளோ' தவமணி அக்கா ஆச்சியிடம் கேட்டா.

மீண்டும் ஒருமுறை அறைக்குள் சென்று வசந்தியோடு ஏதோ பேசிவிட்டு போய்விட்டான் சதீஸ்.

'பெற்ற பிள்ளையாலையும் சந்தோசமில்லை கட்டின புருச னாலேயும் எனக்கு நிம்மதியில்ல' - அழுது கொண்டிருந்தாள் சதீஸின் தாய்.

ராமுவும் அகிலனும் எதுவும் பேசாமல் ஒருவரையொருவர் முகத்தை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எதுவும் தெரியாதது போல் விசயமறிய வந்து போனாள் பக்கத்து வீட்டு புவிதா. அவளின் தமையன் கணேசனும் வந்திருந் தான்.

'தெய்வீக காதல் போல் காதலெண்டால் இப்பிடித்தான் இருக்கவேணும்' என்று அவன் வாசுகியைப் பார்த்துச் சொன்னதை கேட்டும் கேளாததுபோல் ரசிக்காமல் இருந்தாள். வாசுகி இஞ்ச பார் இது எங்கட குடும்பப் பிரச்சினை. உன்ர வேலையைப் பார்த்திட்டு நீ இரு. ராமு அவனைப்பார்த்து இப்படிச் சொல்லுவா னென்று கணேஸ் எதிர்பார்க்கவில்லை.

'ஓமோம் குடும்பப் பிரச்சனை ரோட்டுக்கு வந்திருக்கு. அதாலதான் நாங்களும் கேட்க வேண்டியிருக்கு' நக்கலாக சொல் லிக் கொண்டுபோன கணேஸை ஆத்திரத்துடன் பார்த்துக் கொண் டிருந்தான் ராமு.

# 14

அடுத்த நாள் காலையில் வாசுகி வாசல் கூட்டிக் கொண்டிருக்கும்போது சதீஸ் வந்தான். என்ன என்பதுபோல் தமையனிடம் கண் ஜாடையால் பேசிய வாசுகியிடம் வசந்தி எங்கே என்று ரகசியமாய் அவன் கேட்க வீட்டுக்குள் இருக்கிறாள் என்று சொன்னாள் வாசுகி.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு பார்க்காததுபோல் குசினிக்குள் இருந்த தவமணி அக்காவை சதீஸ் கவனிக்கவில்லை.

நடந்துபோய் மூடிக்கிடந்த கதவை மெல்ல திறந்தபோது வீட்டுக்குள் ஒருமூலைக்குள் ஒடுக்கி இருந்த வசந்தி, சதீஸ் கதவைத் திறந்து உள்ளே வருவதைக் கண்டதும் அவனை எதிர்பாராதவளாய் விலத்தி இருந்த தன் பாவாடையை காலுக்கு கீழே இழுத்து விட்டு சரி செய்து கொண்டாள். கதவு திறந்ததும் உள்ளே வந்த சூரிய வெளிச்சத்தில் அவள் கண்கூசினாள்.

'என்ன வசந்தி புது இடம். இரவு எப்படி நித்திரை வந்ததா' என்று கேலியாகக் கேட்டான் சதீஸ். அவள் எதுவுமே பேசாமல் தலைகுனிந்தபடி இருந்தாள். 'என்ன வசந்தி ஏன் எதுவும் பேசாமல் இருக்கிறாய். வீட்டு ஞாபகமோ. திரும்பவும் வீட்ட போற தெண்டால் நீ தாராளமாய் போகலாம். நான் அதுக்காக கோபிக்க மாட்டேன்.' சதீஸ் சொன்னதும் நிமிர்ந்து அவனின் முகத்தை பார்த்தாள் வசந்தி.

'ஏன் நான் வந்தது உங்களுக்கும் பிடிக்கவில்லையோ' பொய்க்கோபம் காட்டி பேசினாள் வசந்தி.

'உங்களுக்கும் எண்டால் இந்தவீட்டில வேற ஆருக்கோ உன்னை பிடிக்கவில்லையென்று நீ யாரையோ பற்றி மறைமுகமாக சொல்லுகிறாய் போல தெரியுது. வசந்தி சொல்லு ஆரும் உனக்கு என்னவும் சொன்னவங்களோ.'

'ஆரும் எதுவும் சொல்லயில்லை யென்கிறதுதான் இப்பிரச்சினையே. ஏன் வந்தனெண்டு இப்பதான் யோசிக்கிறேன்.'

'கொஞ்சம் புரியும்படியாக சொல்லன்.'

'உங்கட அம்மா என்னோட ஒரு வார்த்தைகூட கதைக்க யில்ல. அதநினைச்சால்தான் பயமாயும் கவலையாகவும் இருக்கு.'

'நீ பணக்கார வீட்டுப் பெட்டை. ஆதன சீதனம் எதுவுமில்லா மல் வெறுங்கையோடு வந்த உன்னிடம் என்ன பேச்சு என்று அம்மா கதைக்காமல் விட்டிருப்பாபோல.' சொல்லிவிட்டு சிரித்த சதீஸை முறைத்துப் பார்த்தாள் வசந்தி.

'உங்களுக்கு எப்ப பகுடி விடுறதென்கிறதே தெரியாதோ. நான் கவலையாக கதைக்கிறன் நீங்கபகுடி விடுறயள். இதைவிட நான் வந்திருக்காமல் இருந்திருக்கலாம்.'

'வராமல் இருந்திருந்தால் உங்கட அம்மா பார்த்திருக்கிற படிச்ச உத்தியோக மாப்பிள்ளையை கல்யாணம் செய்திருக்க லாம்.' அவனின் வார்த்தைகள் சற்று கடினமாக வந்ததில் அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள். அவளின் கண்கள் கலங்கியிருந்தது.

'பின்ன என்ன வசந்தி வாறது வரட்டுமென்று துணிஞ்சி வீட்ட விட்டு வந்ததுக்கு பிறகு ஏன் வந்தனெண்டு யோசிச்சு கவலைப்பட் டால் எனக்கு எப்படி இருக்கும். என்னை நம்பித்தானே வந்தாய். வந்ததுக்கு பிறகு அம்மா கதைக்காததற்காக கவலைப் பட்டு என்ன பிரயோசனம்.' அவன் அவளின் கரங்களை தொடமுற்பட அவள் விலத்திக் கொண்டாள்.

'உங்கள நம்பித்தான் வந்தன். ஆனால் உங்கட அம்மாவுக் கும் என்னை பிடிக்கவேணுமென்கிறது முக்கிய மெண்டு நான் நினைக்கிறதுல என்ன பிழையிருக்கு'

'நினைக்கிறதுல பிழையில்ல. ஆனால் பிழையான விசயத்த நினைக்கிறதுதான் பிழை. அம்மாவுக்கு உன்ன பிடிக்கயில்லை யென்று உனக்கு யார் சொன்னது. அப்பாவுக்கு பயந்து அம்மா உன்னோடு கதைக்காமல் இருக்கிறா. எல்லாம் போக போக சரியாகிப்போகும் அது வரைக்கும் வாசுகி ஹறியோடு கதைச்சு பொழுதை கழிச்சிக்கொள்' சதீஸ் சொல்லிமுடிக்குமுன்பே 'என்

னண்ணா பகல் நேரத்திலேயே காதல் நடக்குதாக்கும் உன்ன அம்மா கூப்பிடுறா போய் என்னெண்டு கேளு' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்த வாசுகி வசந்தியை எழும்பி முகத்தை கழுவிக் கொண்டு சாப்பிட வரச் சொன்னாள்.

என்ன வாசுகி மச்சாளுக்கு உபசரிப்பெல்லாம் பலமாய் இருக்கென்று கேட்டு விட்டு வெளியே வந்த சதீசை ஆச்சி முறைத்துப் பார்த்தா.

'என்ன ராசா கதவப்பூட்டி வைச்சுக் கொண்டு காதல் நாடகம் நடத்துறியன் போல' நக்கலாக கேட்டாள் ஆச்சி.

'ஓமோம் கதவபூட்டிக் கொண்டு நாங்கள் காதல் நாடகம் செய்யுறம் நீ அதை அரங்கேற்றவா. இந்த வயதில காதலிக்காமல் உன்ர வயதிலையோ காதலிப்பார்கள். ஆச்சி வேணுமெண்டால் உன்னையும் காதலிக்கிறனே. என்ன காதல் கடிதத்தை இப்ப எழுதித்தரவோ இல்ல எழுதி தபாலில அனுப்பவோ.' ஆச்சி யோடு பகுடிவிட்டு விளையாடும் சதீசை குசினுக்குள்ளிருந்த தவமணி அக்கா பார்த்து ரசித்துக் கொண்டிருந்தா.

'இஞ்சபாரு தம்பி அவள் செல்லம்மாட குமர்பிள்ளைய நாங்க ஒழுங்கா பத்திரமா அவளுக்கிட்ட ஒப்படைக்கவேணும். அதுக்கிடையில அவளு புள்ளைக்கு புள்ளைய குடுத்து அனுப்ப லாம் என்டு மட்டும் நினைச்சுக் கொள்ளாத. இந்த செல்ல விளையாட்டெல்லாம் வைச்சுக் கொள்ள நினைச்சால் ஒட்ட நறுக்கிப் போடுவன். கவனமாய் இருந்து கொள்ளடா'

ஆச்சி இப்படி பச்சையாக கதைப்பா என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. ஆச்சியின் கதையைக்கேட்டு குசினிக்குள்ளிருந்த தவமணி அக்காவும் கிணற்றடியில் நின்ற வாசுகியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஆச்சியின் பேச்சுக் கேட்ட வசந்தி வெட்கப் பட்டு கிணற்றடியில் நின்ற செவ்வரத்தம் பூ மரத்தின் கீழ் மறைந்து கொண்டாள்.

'ஏன் ஆச்சி எண்ட புள்ளைய போட்டு இப்படி பகுடி பண்ணுறாய் சும்மா விடு அவன' என்று குசினிக்குள் இருந்து

குரல் கொடுத்த தவமணி அக்காவின் குரல் கேட்டதும் இனி இவ்விடத்தில் நின்றால் தன்னை எல்லோருமாக சேர்ந்து நக்கலடிப் பார்கள் என்று நினைத்துக் கொண்டு ஓடினான் சதீஸ்.

சதீஸ் ஓடும்போது எதிரே வந்த புவிதாவில் அவன் மோதப் பார்க்க அவள் அவனை முறைத்துப் பார்த்தாள். இவள் ஏன் தன்னைப் பார்த்து முறைக்கின்றாள் என்பதை புரியாதவனாய் அவளை ஒரு புதிராக பார்த்துவிட்டு போய் விட்டான் அவன்.

வாசுகியிடம் கொஞ்சம் தேயிலைத் தூள் வாங்கிக் கொண்டு போக வந்த புவிதா கிணற்றடியில் வசந்தியும் வாசுகியும் சிரித்து பேசுவதைப் பார்த்ததும் எதுவும் பேசாமல் வந்தவழியே திரும்பி போய் விட்டதை வாசுகி கவனிக்கத் தவறவில்லை.

அக்கரைப் பற்றிலுள்ள தன் சினேகிதி ஒருத்தியை பார்த்து விட்டு சைக்கிளில் வாசுகி வந்து கொண்டிருந்தபோது அவள் வருவதை கண்டதும் வீதியில் நின்ற வசந்தியின் தாய் உரக்கக்கத்தி பேசத் தொடங்கினாள்.

கடந்த மூன்று நாட்களில் தன் நித்திரை நேரத்தை தவிர மிகுதிநேர மனைத்தையும் செல்லம்மா வீதியிலேயே கழித்துக் கொண்டிருந்தாள்.

'இப்ப தெரிஞ்சிருக்கும் இந்தச் செல்லம்மா ரெண்டு.' செல் லம்மாவின் பேச்சினை காதில் வாங்கிக் கொண்டு வாசுகி வீட்டுக்கு வந்தபோது சாவீட்டில், ஒப்பாரி வைப்பதுபோல் அழுது கொண்டி ருந்த தாயைக் கண்டதும் அம்மம்மாவுக்குத்தான் திடீரென்று எதுவும் நடந்து விட்டதோ என்று பயந்து மண்டபத்தை எட்டிப் பார்த்தபோது அம்மம்மா சுவரில் சாய்ந்திருந்தா. அம்மம்மாவுக் கும் ஏதும் நடக்கவில்லையென்றால் அம்மாவும் ஆச்சியும் ஏன் இப்படி அழுது கொண்டிருக்கின்றார்கள். எதுவும் புரியாமல் வசந்தியை பார்த்தாள் வாசுகி. 'என்னாலதான் எல்லாம் நான் செத்துத் தொலைஞ்சிருந்தால் எவருக்கும் எந்த பிரச்சினையும் வந்திருக்காது. என்னை உங்கட அண்ணன் கடத்திக் கொண்டு போய்விட்டார் என்று அம்மா போய் ஆமிக்காரன் களிட்ட

சொல்லியிருக்கா. திடீரென்று வந்து வீடெல்லாம் தேடினாங்கள் ஆமிக்காரன்கள். நான் புவிதா வீட்ட ஒளிச்சிட்டன். நல்ல வேளையாக உண்ட மாமாமாரோ உண்ட அண்ணனோ இல்லை. ஒருத்தரும் இல்லாததால உண்ட தம்பி குமாரையும் பாஸ்கரனை யும் கூட்டிக் கொண்டு போயிற்றானுகள். சின்னப்பிள்ளைகள் அடிப்பானுகளோ என்னவோ தெரியாது. எல்லாம் என்னாலதான்' - வசந்தி சொல்லும்போதே அழுது கொண்டிருந்தாள்.

'எண்ட புள்ளை பாஸ்கரன் எங்கடி மகளே' என்று தலையில டித்து அழுதுகொண்டு ஓடிவந்தா சின்னம்மா.

எதுவுமே பேசாமல் கொஞ்சநேரம் நின்று விட்டு தாயையும் கூட்டிக் கொண்டு நடந்தாள் வாசுகி.

நடந்து கொண்டே வந்து கடற்கரையோரம் இருந்த ராணுவ முகாமுக்குள் நுழைந்தபோது காவலுக்கு நின்ற ஆமிக்காரர் ஓடி வந்து வாசுகியையும் தாயையும் தடுத்தார்கள்.

'எண்ட புள்ளைக்குஞ்சுகள ஒருதரம் பார்க்கவிடுங்கையா' என்று கெஞ்சினா தவமணி அக்கா. தாயைப் பார்க்க பாவமாய் இருந்தது வாசுகிக்கு.

மூன்று நான்கு பேர்களாக சேர்ந்த ஆமிக்காரர் தங்களுக்குள் சிங்களத்தில் ஏதோ பேசி விட்டு வாசுகியை பார்த்து சிரித்தார்கள். அவர்களின் பேச்சினிடையே சுனில் என்ற பெயரும் அடிபடு வதை கேட்டு, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டவளுக்கு கண்களில் நீர் கோர்த்தது. நிமிர்ந்து பார்த்தாள். எங்கோ காவலுக்கு நின்ற சுனில் வாசுகியையும் தாயையும் கண்டு அவர்களை நோக்கி வந்தான்.

நடந்தவைகளை சொல்லி சுனிலிடம் அழுதா தவமணி அக்கா 'கொஞ்சம் இருங்கோ. நான் பெரிய மாத்தையாவிடம் சொல்லிப் 'பார்க்கிறன்' என்று சொல்லிவிட்டு போன சுனில் போகும் போது மற்றய ஆமிக்கார நண்பர்களைப் பார்த்து சிங்களத்தில் ஏதோ ஏசிவிட்டு போக அவர்கள் நகர்ந்து விலகி நின்றார்கள்.

சுனில் சென்று பத்து பதினைந்து நிமிடத்தின் பின், மீண்டும் வெளியில் வந்தான். அவனின் பின்னால் வந்து கொண்டிருந்த குமாரையும் பாஸ்கரனையும் ஓடிப்போய் கட்டித்தழுவிய தவமணி அக்கா ஏதும் அடி காயங்கள் இருக்கிறதா என்று பிள்ளைகளின் சேர்ட்டை உயர்த்தி முதுகுகளை தடவிப்பார்த்தா.

'அவங்கள யாரும் அடிக்கயில்ல பயப்பிடாதிங்க' என்ற சுனிலை முறைத்துப் பார்த்த வாசுகி 'இந்த சின்னப் பிள்ளைகள் என்ன செய்ததெண்டு நீங்கள் கூட்டி வந்தியள் அநியாயமாக அப்பாவிப் பொது மக்களத்தான் சாக்காட்டுறியள் எண்டால் இப்ப சின்னப் பாலகனையும் விட்டு வைக்க மாட்டாங்கள் போல இருக்கு' என்றாள்.

முன்பின் தெரியாது அதுவும் ஒரு சிங்களச் சிப்பாயிடம் ஒரு சொந்தக் காரனைப் போல, பக்கத்து வீட்டுக் காரனைப்போல, அண்ணன் தம்பியிடம் கதைப்பதுபோல, உரிமையுடன் வாசுகி தன்னிடம் பேசுவதை தனக்குள்ளேயே ரசித்த சுனில் 'சத்தம் போட்டு பேசாத. மாத்தையா காதுல விழுந்தா உண்ட தம்பிமார விட்டுப்போட்டு உன்னப்பிடிச்சி உள்ள(வைச் சிருவார்) கெஞ்சிக் கேட்டுத்தான் இப்பநான் உண்ட தம்பிய கூட்டி வந்தன்.'

'ஆரு உங்கட மாத்தையா சின்னப்பிள்ளைகளை ஏன் கூட்டி வந்ததெண்டு நான் அவரிட்ட கேட்க வேணும்.'

'ஏன் உன் அண்ணன் மட்டும் ஒரு சின்னப் பெட்டைய கடத்திக் கொண்டு வரலாமா.'

'அண்ணா கடத்தையில்ல. அவையள் ஒருத்தரையொருத்தர் காதலிச்சாங்கள். அவனைத் தேடி அவள் வந்தாள், இதுல என்ன பிழை.'

'அப்பநானும் தான் உன்னைக் காதலிக்கிறன் நீயும் என்னைத் தேடி வருவியா.' சுனில் இப்படிக் கேட்பானென்று வாசுகியும் தாயும் நினைத்திருக்கவில்லை. சுனில் கேலியாகத்தான் கேட்டான். ஆனாலும் அவனின், கேள்வியால் நடுங்கத் தொடங்கிய தவமணி அக்கா ''எடி மகளே வாடி போயிடுவம்' என்று வாசுகியிடம்

குசுகுசுக்க சுனிலை முறைத்துப் பார்த்துவிட்டு குமாரையும் பாஸ்கர னையும் கூட்டிக் கொண்டு நடந்தாள் வாசுகி.

'பொடியனுகளாலதான் பயமெண்டால் இப்ப இந்த பொட் டைகளாலையும் வயித்துல நெருப்பக்கட்ட வேண்டியிருக்கே. எடியே உண்ட வாய்த்துடுக்குகளை கொஞ்சம் அடக்கச் சொல்லி எத்தினை தரம் சொல்லியிருக்கன், கேட்டையாடி.'

## 15

**ரா**ணுவமுகாமிலிருந்து வீடு வரும் வரை வாசுகியை தாய் பேசிக் கொண்டே வந்தா. பாஸ்கரனைக் கண்டதும் 'சின்னம்மா எண்டமகனே எண்ட ராசா வந்திட்டயோடா' என்று கொண்டு வாசலுக்கு ஓடி வந்தா.

வாசுகியும் தாயும் வந்ததைக் கண்ட புவிதா என்ன நடந்த தென்பதை அறிய ஓடிவந்தாள். அவள் பின்னால் வந்த கணேஸ் என்ன குமாரும் பாஸ்கரனும் வந்திட்டானுகளோ என்று கேட்க, ஓமடா தம்பி நான் கும்பிட்ட தெய்வங்கள் என்னைக் கைவிடயில் லையடா' என்றா தவமணி அக்கா.

கிணற்றடிக்கு சென்ற வாசுகியின் அருகில் வந்த கணேஸ் 'என்ன ஆமிக்கேம்பல நல்ல செல்வாக்கு போல. இனி நாங்க ளெல்லாம் தைரியமாக ரோட்டுல திரியலாம். எந்த ஆமிக்கார னும் எங்கள பிடிக்க மாட்டான் அப்படி பிடிச்சாலும் வெளியில எடுக்கத்தானே ஆள் இருக்கு' என்றான்.

கணேஷ் சொன்னதை கேட்டதும் தீயை மிதித்தது போல் துடித்தாள் வாசுகி. மண்டபத்தினுள்ளிருந்து ஜன்னல் வழியாக கேட்டும் பார்த்தும் கொண்டிருந்த வசந்தி கிணற்றடிக்கு வர வசந்தியை கண்டதும், கணேஷ் போய்விட, வாசுகியின் கண்கள் கலங்குவதை அவதானித்தாள் வசந்தி.

'சும்மா விடு வாசுகி தங்களுக்கு கிடைக்காதது இனிப்பாய் இருந்தாலும் புளிப்பாய் காட்டிக் கொள்ள வேண்டியதுதான்

நியாயமெண்டு அவன் சொல்லுற மாதிரி கதைக்கிறதையெல்லாம் நீ ஏன் காதுல வாங்குறாய்.'

'சதீஸ் அண்ணாக்கிட்ட மட்டும் இதுகளைப் பற்றி சொல்லி டாத வசந்தி' என்று கெஞ்சினாள் வாசுகி.

ஊரில் வயலில் அறுவடை மும்முரமாக நடந்து கொண்டிருந் தது. ஊருக்குள் புதுநெல்லு புழங்கத் தொடங்கிவிட்டது.

அறுவடை தொடங்கி புதுநெல்லை வீட்டுக்குக் கொண்டுவந் தால் அந்த நெல் அரிசியை முதல்முதலில் வீட்டில் ஓர் விசேட நாள் கொண்டாட்டம் போல்தான் சமைத்து விருந்து வைத்து நடத்துவார்கள். அதற்கு நாள் சாத்திரமும் பார்ப்பதுண்டு. இதை புதிர் சமைப்பதென்று சொல்வார்கள். ஒரு வீட்டில் புதிர் சமைப்ப தற்கு முன் வேறு இடத்திலோ அயல்வீடுகளிலோ இருந்து வரும் புதுநெல்சாப்பாட்டை வாயில் வைக்கமாட்டார்கள்.

வீட்டுக்குள் சவூதியிலிருந்து முகிலன் கொண்டுவந்த சாமான் கள் நிறைந்து கிடந்தன. சொல்லாமல் கொள்ளாமல் முகிலன் வந்து இறங்கியபோது நல்ல வேளையாக யுத்தநிறுத்தத்தையும் அமுல்ப டுத்தியிருந்தார்கள். எந்த நேரம் தொடங்குமோ என்றிருந்த முஸ்லீம் இந்துக்கள் கலவரமும் இந்தமுறை நடக்கவில்லை. இந்து முஸ்லீம் தலைவர்கள் ஒன்று கூடி இந்தமுறையாவது எந்தவித கலவரமும் செய்யாமல் சகோதரர்களாக ஒற்றுமையாக இருப்பம் என்று பேசி முடிவெடுத்தார்களாம்.

புவிதா கொண்டுவந்த புதுநெல் பொங்கலை தாங்கள் இன் னும் புதிர் எடுக்கவில்லையென்று திருப்பி அனுப்பிவிட்டா தவம ணிஅக்கா.

குமாரும் பாஸ்கரனும் கடைசிமகள் ஹறியும் முகிலன் கொண்டு வந்த சாமான்களை கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தார் கள். முகிலனைக் கண்டதிலிருந்து தாயின் முகத்தில் சந்தோசம் தெரிவதை தவமணி அக்கா கவனித்தா.

வாசுகிக்கு முகிலன் கொண்டு வந்த புதுச் சட்டைகளில் ஒன்றை வசந்தி போட்டிருந்ததை பார்த்து உனக்கு இந்த சட்டை

நல்ல வடிவாய் இருக்குதெண்டு சொல்லி கண்ணடித்து சிரித்து விட்டு மல்லிகை பந்தலுக்குள் போனான் சதீஸ்.

முகிலன் கொண்டுவந்த பெரிய ரேடியா ஒன்று மல்லிகை பந்தலின் நடுவில் பாடிக் கொண்டிருந்தது.

ராமு, முகிலன், அகிலன், செந்தில், சதீஸ், இன்னும் சில சினேகிதர்கள் எல்லோரும் சேர்ந்து மல்லிகை பந்தலின் கீழிருந்து எதையோ பற்றி பேசி சத்தம் போட்டு சிரிப்பதைக் கண்டதும் அந்த இடத்தில் நவரெத்தினம் மட்டும் இல்லாததை நினைக்க தவமணி அக்காவுக்கு கவலையாக இருந்தது.

முகிலனும் வந்திருக்கிற நேரம் பார்த்து யுத்தநிறுத்தமும் அமுலில் இருக்கிறதால இவன் நவரெத்தினமும் இருந்திருந்தால் தம்பிமார் ஒன்றுசேர்ந்திருக்கிற இந்த நேரத்திலேயே புதுநெல்லெடுத்து புதிர் சாப்பிட்டால் அம்மாவுக்கும் கொஞ்சம் சந்தோசமாய் இருக்கும். கனநாளுக்குப்பின் வீடும் கலகலப்பாயிருக்கும். பிள்ளைகளும் சந்தோசமாயிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்ட தவமணி அக்காவிடம் 'என்ன மாமி யோசிக்கிறயள்' என்று வசந்தி கேட்க 'இல்லை புள்ள இவன் நவரெத்தினத்தைப் பற்றித் தான் யோசிக்கிறன் முகிலன் வந்து நிற்கிறதோட அவனும் வந்தானெண்டால் புதிரெடுக்கலாம் எண்டால் அவன் எங்க நிற்கிறான் எண்டு ஆருக்கு தெரியும்,' தவமணிஅக்கா பெருமூச்சு விட்டா.

பகல் முழுவதும் விசாரித்ததில் நவரெத்தினம் அம்பிளாந் துறையில் நிற்பதாக தெரிந்துகொண்ட தவமணி அக்கா விடிந்ததும் தனது சின்னமகனையும் கூட்டிக் கொண்டு அம்பிளாந்துறைக்கு போனா.

மட்டக்களப்பு பஸ்ஸில் ஏறி அம்பிளாந்துறை சந்தியில் இறங்கி ஆற்றங்கரைக்கு சென்று மறுகரைக்கு செல்ல வள்ளத்தில் ஏறி உட்கார்ந்து கொள்ள வள்ளம் ஆற்றில் மிதந்து நகர்ந்து கொண்ட போது நவரெத்தினத்தினத்துக்கு இப்போதும் என்னில் கோபம் இருக்குமோ என்னவோ நான் கூப்பட்டால் என்ன

சொல்லப்போறானோ தெரியாது என்று சிந்தித்தபடியே இருந்தா தவமணிஅக்கா.

மறுகரையில் வள்ளம் தரைமுட்ட தன்னோடு இறங்கிய ஒரு சிலரிடம் சாந்தன் என்ற நவரெத்தினத்தின் இயக்கப் பெயரை சொல்லி விசாரித்தபோது தவமணிஅக்காவை அவர்கள் சந்தேக மாகப்பார்த்த பார்வையிலிருந்து நவரெத்தினம் அந்த ஊரில் எப்படிப்பட்ட பொறுப்பிலிருக்கின்றான் என்பதை தெரிந்து கொண்ட தவமணிஅக்காவுக்கு இதை நினைத்து பெருமைப்படு வதா பயப்படுவதா என்று தெரியாமல் இருந்தது.

வள்ளத்திலிருந்து கொஞ்சதூரம் நடந்தபோது திடீரென வேக மாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தவமணி அக்காவை யும் மகனையும் வழிமறித்து 'யார்நீங்கள் ஏன் சாந்தனை தேடிவந் தீர்கள்' என்று கேட்டபோது இவ்வளவுகெதியாய் இந்தச் செய்தி எப்படிபோனது இவர்களுக்கு என்று ஆச்சரியப்பட்டா.

'நான் சாந்தனுக்கு அக்கா. சாந்தனப்பார்க்கவேணும்.' தவ மணி அக்கா சொல்லிமுடிக்கவில்லை வந்த நால்வரும் தங்கள் தோரணையை மாற்றிக் கொண்டார்கள்.

'என்ன தம்பி யுத்தநிறுத்தம் எண்டு ஊரெல்லாம் கலகலப்பாக திரிய நீங்கள் மட்டும் இப்படித் திரியிறியள்.'

'யுத்தநிறுத்த மெண்டாலும் நாங்கள் மற்றவையளப் போல ஆமிக்காரன்கள ஒருநாளும் நம்புறதில்லை. எந்தநேரத்திலையும் எதுவும் நடக்கக் கூடுமெண்ட சந்தேகத்திலைதான் நாங்கள் எப்ப வும் இயங்குறம்'.

பேசிக்கொண்டு நடந்தபோதே அவர்களின் இருப்பிடம் வந்துவிட காவலுக்கு நின்றவர்கள் ஓடிவந்து தவமணி அக்காவை சோதனையிட வேண்டுமென்று சொல்ல அக்காவுடன் வந்தவர்கள் அவர்கள் காதுக்குள் ஏதோ சொல்ல அவர்கள் விலகிவிட்டு உள்ளே சென்றார்கள்.

சிறிது நேரத்தின்பின் நவரெத்தினம் வந்தான். கொஞ்சம் கறுத்து மெலிந்திருந்தான். அக்காவை தனிமையில் கூட்டிக் கொண்டுபோய் கதைத்தான்.

'ஏண்டா என்னோட இப்பவும் கோபத்துடனோ இருக்கிறாய். இந்த தமைக்கையையும் முத்தம்மாவையும் உண்டபெத்த தாயையும் ஒருதரம் வந்து பார்க்கவேணும் போல உனக்கொரு நினைப்பு வரயில்லைத் தானே, எப்படி இருந்த குடும்பம் ஆரோட கண்ணு பட்டிச்சோ இப்ப இப்பிடிசிதறிப்போய் கிடக்கு. இப்ப ஏதுமெண்டாலும் தட்டிக்கேட்க ஆளில்லையெண்டவுடனே கண்டவன் நிண்டவனெல்லாம் சண்டித்தனம் பண்ணுறானுகள்.'

தவமணி அக்கா இப்படி அழுததை நவரெத்தினம் ஒருநாளும் பார்த்தில்லை. 'உன்மேல எனக்கு ஒரு கோபமும் இல்லையக்கா இயக்கத்துல உள்ள பொறுப்புகளாலதான் நான் வரயில்ல' என்று தமக்கையை சமாதானம் செய்தான் நவரெத்தினம்.

'முகிலனும் சவூதியில இருந்து வந்து நிற்கிறான். நீயும் வந்து எல்லாரும் ஒண்டாய் இருந்து எண்ட கையால ஒருபிடி சோறு திண்டுபோட்டு போவண்டா' என்று கேட்டபோது நாளைக்கு கட்டாயம் வருவதாகச் சொல்லி தமக்கையை வழியனுப்பி வைத்தான் நவரெத்தினம்.

அடுத்த நாள் பின்னேரம் சொன்னபடியே வந்துசேர்ந்தான். நவரெத்தினம் அவனைக் கண்டதில் குடும்பத்தில் எல்லோருக்கும் சந்தோசம். அவனுக்காக கொண்டுவந்த சேர்ட்டை கொடுத்தான் முகிலன். மூத்தம்மாவை தூக்கிக்கொண்டு போய் முகிலனும் நவரெத்தினமும் கிணற்றடியில் வைத்து குளிக்க வார்த்துவிட்டு மீண்டும் தூக்கிக்கொண்டு வைத்து விட்டுடு அண்ணன் தம்பிமார் எல்லோரும் மல்லிகைபந்தலின் கீழ் கூடியிருந்து சிரித்துபேசிக் கொண்டிருந்தார்கள்.

தனது சவூதி பயணத்தையும் தான் அங்கு செய்யும் வேலையையும் சொன்னான் முகிலன்.

தங்களின் இந்தியா அனுபவங்களை சொல்லிச்சிரித்துக் கொண்டிருந்தார்கள் செந்திலும் சதீஸும்.

சின்னம்மா குடும்பம். சதீஸின் தாய் தகப்பன் எல்லோரையும் புதிர்சாப்பிடக் கூப்பிட்டிருந்தா தவமணிஅக்கா.

பின்னேரம் தொடங்கிய கலகலப்பு இரவுவரை தொடர்ந்து கொண்டேயிருந்தது.

புதுநெல்லு சோறிலிருந்து எல்லாவித கறிவகைகள் வரை தன் கையாலேயே சமைத்துமுடித்தா தவமணி அக்கா. சதீஸின் தாய் தமக்கைக்கு சமையலுக்கு உதவி செய்து கொண்டிருந்தா. எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிடுவதற்காக திண்ணையில் பாய்களை விரித்துக் கொண்டிருந்தா ஆச்சி. கிணற்றடியில் சாப்பி டுவதற்கான பீங்கான்களை வசந்தியும் வாசுகியும் கழுவிக் கொண் டிருந்தார்கள்.

பாவம் புவிதா இந்த யுத்த நிறுத்த நேரத்தில கூட அவன் வரயில்லையென்று கவலைப்படுறாள் புள்ள வயித்தோட எந்தநே ரமும் அவனைப்பற்றியே யோசனையாக இருக்காள். புவிதாவின் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு சொந்தக்காரனைப்பற்றி பேசி னாள் வாசுகி.

'ஊர்பேர் தெரியாத வந்தவன் போனவனெல்லாரையும் நல்வன் எண்டு இவவிரும்பினதுக்கு நாம என்ன செய்யுறது'. வசந்தி சொல்லி முடித்தபோது மல்லிகை பந்தலுக்குள்ளிருந்து ஏதோ பெரிதாக சத்தம் வர குமாரும் பாஸ்கரனும் குசினிக்குள் ஓடிச் சென்று ஏதோ சொல்ல தவமணிஅக்காவும் தங்கையும் சின்னம்மாவும் ஆச்சியும் விழுந்தடித்துக் கொண்டு மல்லிகைபந்த லுக்குள் ஓட வசந்தியும் வாசுகியும் பின்னால் ஓடியபோது விழுந்து கிடந்த செந்திலை மேலேயிருந்து அடித்துக் தாக்கிக் கொண்டிருந்த நவரெத்தினத்தை அகிலனும் முகிலனும் சதீஸும் பிடித்து இழுத்து விலக்கிக் கொண்டிருந்ததைக் கண்டதும்,

'எண்டமக்காள் என்னடா இது புதினம் ஏண்டா. ஏண்டா ஒருத்தனை ஒருத்தன் அடிக்கிறியள்' எனறு கொண்டு தலையில் அடித்து குறுக்கே விழுந்தா சின்னம்மா.

விழுந்து கிடந்த செந்திலை எழுப்பி இழுத்துக் கொண்டு குசினிப்பக்கம் போனா தவமணிஅக்கா.

சத்தம் கேட்டு ஓடிவந்த தவமணிஅக்காவின் கணவர் என்ன நடந்ததென்று ராமுவிடம் கேட்டார்.

'இதுக்குத்தான் இவ்வளவுநாளும் இங்கால பக்கமே வராமல் இருந்தன். நீதான்வந்து என்னைக் கொண்டுவந்து இந்த தராதரம் கெட்டவன்களோடையெல்லாம் கதைக்கவைச்சாய்'.

'இஞ்சபார் கதைக்கிறத மரியாதையாக யோசிச்சு கதை. நீ அவனைப் போட்டு அடிச்சாய். அண்ணனெண்ட வகையிலதான் நாங்க உனக்கு திருப்பி அடிக்கையில்லையே தவிர உண்ட இயக்கத்ததுக்கு பயந்து எண்டுமட்டும் நினைச்சுக் கொள்ளாதே' என்ற ராமுவை முறைத்துப் பார்த்தான் நவரெத்தினம்.

'இஞ்சபார் நீமட்டும்தான் இயக்கத்துல இருக்கிறாய் என்று நினைக்காதை. நாங்களும் இயக்கத்திலதான் இருக்கம் அதையும் தெரிஞ்சுக்கோ' தமைக்கைக்கு பின்னாலிருந்து குரல் கொடுத்தான் செந்தில்.

'இந்தியாவுக்கு போனால் பயிற்சிஎடுத்தால் நீங்கள் எல்லாம் நடத்துகிறது இயக்கம் தானெண்டு நீங்கள் சொன்னால் போதாது. மக்களும் சொல்ல வேணும்'

'எங்களப் பார்த்து மக்கள் சொல்லாததைபற்றி நாங்கள் கவலைப்படமாட்டம். ஆனால் நீங்கள் மக்களை சொல்லிவைப்பி யள்' ராமுவிடமிருந்து இதை எதிர்ப்பார்க்காத நவரெத்தினம் அவனையும் அடிக்கபாய அத்தான் இடையில் விழுந்து தடுத்தார்.

'டேய் போராட்டம் என்று வெளிக்கிட்டுப்போட்டு நீங்களெல் லாம் என்ன செய்கிறையளெண்டு மக்களுக்கு தெரியாதெண்ட நினைப்பில நீங்கள் மக்களை ஏமாத்துறதை நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பம் எண்டுமட்டும் நினைக்காதையுங்கோ தெரியு மோ'. சொல்லிவிட்டுப் போன நவரெத்தினத்தை சாப்பிட்டு விட்டுப் போடா என்று அக்கா கேட்டபோது 'உன்ர தம்பிமா ருக்கே கொடுத்துச் சாப்பிடு' என்றுவிட்டு போனபின் 'என்னடா நடந்தது' என்று முகிலனை பார்த்துக் கேட்டா தவமணி அக்கா.

'நாட்டுக்குள்ள இயக்க மோதல் ஏற்படுவதோ இல்லையோ ஆனால் நம்மட குடும்பத்துக்குள்ள இயக்க மோதல் தொடங்கிற்றுது அதுவும் சொந்த அண்ணன் தம்பிக்குள்ள' என்றான் முகிலன்.

செந்திலும் சதீஸூம் ஒருபக்கம் போக அகிலனும் ராமுவும் சின்னக்கா வீட்டுக்கு வந்துவிட முகிலன் மட்டும் மல்லிகை பந்தலின் கீழ் படுத்துக் கொண்டான்.

வீட்டில் எல்லோரும் படுத்துறங்கிய பின் தவமணி அக்கா குசினிக்குள் வந்தா. அகப்பை பதியாமல் பானையில் நிரம்பியிருந்த புதுநெல் பச்சையரிசிச் சோறு அவவைப்பார்த்து கைகொட்டிச் சிரிப்பதுபோல் இருக்க பொங்கிய கவலையை அடக்க முடியாமல் அழுதுகொண்டிருந்தா.

## 16

இரவுமுழுவதும் நித்திரையே இல்லாமல் குசினிக்குள் குந்திக் கொண்டிருந்த தவமணி அக்காவின் அருகில் படுத்துக் கிடந்தாள் வசந்தி. 'ம் எப்படி வசதியாய் வாழ்ந்தபொட்டை இப்படி வந்து தாய் தகப்பனை வெறுத்து என்னையே ஒருதாயாக நினைத்து என்னையே நம்பி என்காலடியில் படுக்குறாளே இவளையும் சதீஸையும் எப்ப, எப்படிச் சேர்த்து வைக்கப்போகிறன்' என்ற நினைப்புடன் வசந்தியின் வயதில் தனக்கும் ஓர்குமர் இருப்பதையும் அவளுக்கும் ஆசாபாசங்கள் இருக்கும் அவளின்ர மனதிலையும் என்னென்ன இருக்குதோ என்றும் வாசுகியை பற்றியும் நினைத்துக் கொண்டா தவமணிஅக்கா. இரவு நடந்த புதினத்தால் ஏங்கிப் போனாவோ என்று தெரியவில்லை. நித்திரையில்லாமல் அனுகி முனகிக் கொண்டிருக்கும் தாயைபரிதாபமாயப் பார்த்தா தவமணிஅக்கா.

பாவம் அம்மா ஒருகாலத்தில் எப்படி வாழ்ந்தவ இப்ப இப்படி முடங்கிக் கிடக்கின்றாவே அம்மா மட்டும் சுகமாக இருந்திருந்தால் இவ்வளவு பாரமும் என்தலையில் ஏறியிருக்

காதே. சின்னம்மாவும் பாவம் தான் ஒருமகனாலும் நிம்மதி யில்லை. ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு இயக்கத்தில. விடிந்தால் பிள்ளைகளைத்தேடி அலைவதும் எந்தமகனுக்கு எங்கு என்ன நடந்திருக்குமோ என்ற பயத்தில் அவஅலைந்து திரிவதை பார்க்க வும் நினைக்கவும் அவமேல் பரிதாபமாய் இருந்தது தவமணி அக்காவுக்கு.

நல்லவேளையாக முகிலனும் மீண்டும் சவூதிக்கு போய்விட் டான். இல்லாவிட்டால் திடீரென்று மாறிவிட்ட இந்த ஊரின் நிலைமையால் அவன் சவூதிக்கு போவதும் தடைப்பட்டிருக்கும்.

யுத்த நிறுத்தமென்ற பெயரில் இந்த ஊர் இரண்டு வாரங்கள் எவ்வளவு சந்தோசமாக இருந்தது. யுத்தநிறுத்த உடன்படிக்கையை ராணுவம் மீறினார்கள் என்று போராளிகளும், போராளிகள் மீறினார்களென்று ராணுவத்தினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொண்டு இருவரும் மீண்டும் தாக்குதல்களை தொடங்கி இன்னொரு இரண்டு மாதமாகிவிட்டது. இதற்கிடையில் இந்து முஸ்லீம் பிரச்சினை வேறு. வழமையான அறுவடைக் காலங்களில் ஆரம்பிக்கும் இந்து முஸ்லீம் பிரச்சினை இந்த முறை காலதாமத மாகி ஆரம்பித்திருக்கின்றன. சொல்லாமல் கொள்ளாமல் வதந்திக ளால் ஏற்பட்ட இந்த கலவரத்தால் முஸ்லீம் பகுதிக்குள் சென்ற இந்துக்களும் தமிழ் பகுதிக்குள் வந்த முஸ்லீம்களும் தாக்கப்பட் டார்களென்றும் கொல்லப்பட்டார்கள் என்றும் வந்து கொண்டிருக் கும் செய்திகளால் ஊரே கதிகலங்கியிருந்தது.

பனங்காடு, கோளாவில், அக்கரைப்பற்று கிராமங்களை கடந்து தத்தமது வீடுகளுக்கு போய் சேரமுடியாமல் வயல் வரப்புகளுக்குள் பதுங்கி பயந்து கிடக்கும் அப்பாவி முஸ்லீம் களை தாக்குவதற்கென்று ஊரிலிருந்து இயக்கங்களல்லாத வாலி பப் பொடியன்கள் கத்தி பொல்லுகளுடன் போய்க் கொண்டிருந் தார்கள். அவர்களை போகவேண்டாமென்றோ அப்படி செய்வது தவறென்றோ ஊர் பெரிய மனிதர்கள் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. அவர்களால் அதேபோல்தான் மற்றப்பகுதிகளிலி ருந்து வரும் செய்திகளும் இருந்தது.

மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை போன்ற இடங்களிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி வந்த பஸ்களை நிறுத்தி உள்ளிருந்த அப்பாவி தமிழர்களையெல்லாம் தாக்கினார்களாம். ஒருசிலர் இறந்தும் விட்டார்களாம். சம்மாந்துறையைச் சேர்ந்திருந்த வீரமுனையிலுள்ள தமிழர்களும் ஒலுவில் பகுதியிலிருந்த தமிழர்களும் பலமாக தாக்கப்பட்டு வீடுமனையை விட்டு துரத்தியடிக்கப் பட்டார்களாம். ஒருகாலமும் இல்லாமல் இந்தவருடம் இவ்வளவு மோசமான கலவரம் ஏற்பட முஸ்லீம்களோடு ராணுவமும் சேர்ந்ததுதானாம் காரணம்.

அக்கரைப்பற்றுக்குள் புகுந்துவிட்டானுகளாம்; சனமெல்லாம் கோளாவில் பனங்காடு நோக்கி வந்து கொண்டிருக்குதாம். ரோட்டிலிருந்து வந்த பெரும்குரலொன்று ஆச்சியின் காதில் விழ ஆச்சி வளவின் மூலைமுடுக்குகளெல்லாம் ஓடிக்கொண்டிருந்தா. சின்னம்மா குடும்பம் தாய் தகப்பன் சகோதர சகோதரிகள் எல்லோரும் தவமணி அக்காவின் வாசலிலேயே கூடியிருந்தார்கள். பிள்ளைவயிற்றுக்காரி ஒரு இடமும் போகாமல் எங்களோடேயே இருந்து கொள் என்று பக்கத்து வீட்டு புவிதாவையும் அழைத்து வைத்துக் கொண்டிருந்த தவமணி அக்கா. பாவம் அவளுக்கு இது பெறுமாதம், இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்காள். நாங்கள் தானே உதவிசெய்யவேணும். தவமணி அக்கா சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாமல் கிணற்றடியில் நிற்கும் வசந்தியிடம் சென்றாள் வாசுகி.

'உங்கட அண்ணாவை இன்னும் காணல்ல. எங்க போனாரோ தெரியாது எனக்கெண்டால் பயமாய் இருக்கு வாசுகி.'

சொல்லிய போதே வசந்தியின் கண்கள் கலங்குவதை கவனித்தாள் வாசுகி.

'அண்ணா மட்டுமா மாமாவையளும்தான் வெளியில போயிருக்காங்க இந்த நேரத்துல எந்த பொடியனுகளத்தான் வீட்டுக்குள் அடைச்சி வைக்க முடியும்' வாசுகி சொல்லிக்கொண்டிருக்கும் போது ராமு வந்ததை கண்டதும் ராமுவின் அம்மாவும் தவமணி

அக்காவும் அக்கரைப்பற்று நிலைமை என்னென்று அறிய ஓடினார் கள்.

அக்கரைப்பற்று கோளாவிலை அண்டிய ஊர் முஸ்லீம் ஊரின் எல்லையும் இந்துக்களின் எல்லையும் எனப்படுவது அக்கரைப் பற்று ஊரின் பொதுச்சந்தை. இந்த சந்தைக்குள்தான் இப்போது சண்டை நடக்கின்றது.

'அக்கரைப் பற்று நிலைமை மோசமாய்த்தான் இருக்கு ஆமிக்காரன்களும் சேர்ந்து கொண்டு தாக்குகிறான்கள். மேலிடத் தில இருந்து ஒடர் வந்திற்றுபோல எல்லா இயக்கத்தாரும் போறாங்கள் பிரச்சினை பெரிசாய்த்தான போகும்போல தெரியு து.' ராமு சொல்லச்சொல்ல கேட்டுக் கொண்டிருந்தவர்களின் முகங்கள் வெளிறிக்கொண்டிருந்தது.

'உங்கட அண்ணன் எங்கெண்டு உங்கடமாமாக்கிட்ட கேளன் வாசுகி.'

வாசுகியிடம் வசந்திகேட்டது. ராமுவின் காதுகளில் விழுந்து அவளை திரும்பிப்பார்த்தான். அவன் தலையைக் குனிந்து கொண்டு சென்றுவிட்டாள்.

இதுவரை ஓடிஓடித்திரிந்த ஆச்சி கோழிகுஞ்சுகளை பாது காக்க ஓடுவதுபோல் ஓடிச்சென்று மகளின் தலையடியில் குந்தியி ருந்ததை பார்க்க தவமணி அக்காவுக்கு ஆச்சியில் பரிதாபமே வந்தது.

'ரா ராவா விடிய விடிய பேய்க்குகுருவி கத்திச்சி (ஆந்தை) ஊர்முழுக்க விடிய விடிய கடுவன் பூனை கத்தலும் நாய் ஊளையும்தான் எண்ட புள்ளயக் கொண்டுபோக காலன் வந்து கடப்படியில (படலை) நிக்குறான். ம்... பெத்தநான் இருக்க என்ன உட்டுப்போட்டு அவள்போகப் போறாள் போல'.

இன்று காலையில் எழுந்ததும் நேற்றிரவு நடந்தவைகளையும் தன்மகளையும் நினைத்து ஆச்சி கண்கலங்கியது தவமணி அக்கா வின் நினைவில் வந்துபோனது.

ஒன்றிரண்டென சேர்ந்த கூட்டம் மல்லிகை பந்தலை நிரப்பியிருந்தது. ஏதும் என்றால் இந்தக் குமர்குட்டிகளின் நிலைமை என்னாகும் என்றும் தத்தமது ஆண்பிள்ளைகள் இப்போது எங்கே என்றும் தாய்மார் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

'எல்லா இயக்கத்தவங்களும் போறாங்களாம். இயக்கத்துக் குள்ளேயும் கருத்துவேறுபாடாம். ஒருத்தரோட ஒருத்தர் எப்ப வெண்டாலும் திடீரெண்டு மோதக்கூடுமாம் எண்டு நேற்றிரவு உங்கட அண்ணா என்னிட்ட ரகசியமாய்ச் சொன்னார். இப்ப எல்லாரும் ஒண்டாய் போறாங்களாம் எண்டவுடனே எனக்கு பயமாய் இருக்கு வாசுகி.'

சனங்களிலிருந்து கோடிமூலைக்குள் நின்று குசுகுசுத்த வசந்தியை ஆதரவாக பார்த்தவாசுகி வேலிக்குமேலால்றோட்டை எட்டிப்பார்த்தாள். அகிலனும் செந்திலும் சதீஸும் வந்து கொண்டிருந்தார்கள் நடையில் அவசரம் தெரிந்தது. ஊரில் உள்ள ஆண்கள் எல்லோரும் வீதியில் கூடி நின்றார்கள். அக்கரைப்பற்று பகுதியிலிருந்து கேட்கும் துப்பாக்கி வேட்டுக்கள் மல்லிகை பந்தலில் கூடியிருந்தவர்களை மேலும் பயம்கொள்ளச் செய்கின்றன.

'நிலைமை மோசமாய்த்தான் போய்க் கொண்டிருக்கு. சாரதா தியேட்டரெல்லாம் எரிஞ்சுபோச்சுதாம் இப்பவெலிங்கடன் தியேட்டர் வரைக்கும் வந்திட்டான்களாம் அக்கரைப்பற்று சனமெல்லாம் எழும்பி நம்மட ஊருக்கும் பனங்காட்டுக்கும் வந்து கொண்டிருக்கினம். ஆனால், நிலைமை இன்னும் எப்பிடி மோசமாகு மெண்டுறது தெரியாததால நம்மட ஊராக்களையும் உடனே வெளிக்கிட்டு எல்லாரும் திருக்கோவில் தம்பிலுவிலுக்கு போகும்படி சொல்லுறாங்க.'

அகிலன் சொன்னதைக் கேட்டதும் அழத் தொடங்கினார்கள் சிலர்.

'இப்ப என்னடா தம்பி செய்யுறது'. அக்கா செந்திலிடம் ரகசியமாக கேட்டா. சதீஸ் பின்னால் நிற்கும் வசந்தியிடம் ஏதோ

சொல்ல அவள்வேண்டா மென்பதுபோல அவனின் கையை பிடித்துக் கெஞ்சுவதையும் சதீஸின் தாய் பார்த்துக் கொண்டிருந்தா.

'இப்ப என்ன செய்யுறதெண்டால் நாம எல்லாரும் திருக்கோ வில் தம்பிலுவில் பக்கம் போறதுதான் நல்லது. அதிலையும் ஆண்கள் நாங்கள் நிற்க பெண்களும் சிறிசுகளும் கிழவர்களும் கிடைக்கிற வாகனங்களில போய்ச்சேர்றதுதான் நல்லது.' சொல்லி விட்டு அகிலனும் செந்திலும் போய்விட்டார்கள்.

'எடியே மூத்தவள் ஆறேழு மைலுக்கங்கால உள்ள திருக்கோ யிலுக்கு என்னெண்டடி கொம்மைய கொண்டுபோய் சேர்க்கிறது. எடியே காணுற கனவொண்டும் சரியில்லடி. செண்ட நான் செல்லாது இண்டைக்கோ நாளைக்கோ எண்டு தொண்டைக்குழி துடிக்கிறவள என்னெண்டடி அசலூருக்க கொண்டுபோறது.' பயந்து கொண்டு சொல்லும் ஆச்சியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தா தவமணி அக்கா.

எல்லாரும் ஆயத்தமாக இருங்கோ நான்போய் வாகனம் எடுத்துக் கொண்டுவாறன் என்றுவிட்டு ரோட்டுக்குவந்த சதீஸ் அகிலன் செந்தில் ராமு இன்னும் சில இயக்க பொடியன்களுடன் சேர்ந்து வீடுவீடாக சென்று நிலைமையை புரிய வைத்து திருக்கோ யிலுக்கு சென்றுவிடும்படி சொல்லிக் கொண்டிருந்தனர்.

கடமை என்று வரும்போது அது எல்லோருக்கும் பொதுதான் என்ற அடிப்படையில் வசந்தியின் தாய் வீட்டுக்கும் நண்பர்களு டன் சென்றான் சதீஸ். சதீஸை கண்டதும் வாசலில் நின்ற வசந்தியின் தாய் முந்தானையை எடுத்து உடம்பை போர்த்திக் கொண்டு குசினிப்பக்கம் மறைந்ததை கவனித்தான் சதீஸ். ஊரின் நிலவரத்தை சொல்லி எல்லோரும் திருக்கோவிலுக்குப் போங்கள் என்று நண்பர்கள் மூலமாய் சொல்லிவிட்டு திரும்பியபோது வாசலுக்கு ஓடிவந்த வசந்தியின் தங்கை 'அக்கா எங்க அத்தான்' என்று கேட்டபோது அக்காவும் திருக்கோவிலுக்கு வருவா என்று அவன் சொன்னபோது குசினிக்குள்ளிருந்து வசந்தியின் தாய் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதை அவன் கவனித்தான்.

## 17

**ஊ**ரே வெறிச்சோடி கிடந்தது. ஒருமாதிரியாக எல்லோரையும் அனுப்பிமுடிய இரவாகி விட்டிருந்தது. சிறிதாக மழை தூறத் தொடங்கியிருந்தது. 'நீங்க இரவுக்கு கட்டாயம் வருவீங்கதானே' என்று கேட்டது சதீஸின் நினைக்குவந்தது. கூடவே தாய், பெரியம்மா, அம்மம்மா எல்லோர் நினைவும் வர உடனே தனக்கும் திருக்கோயிலுக்கு போகவேண்டும் போல் இருக்க அகிலனிடம் கேட்டான்.

'நாங்கள் ஊரில் நிற்கிறோம் நீ வேண்டுமென்றால் திருக்கோயிலுக்கு போய் அம்மம்மாவுக்கு ஏதும் என்றால் உடனே எனக்கு வந்து சொல்' என்றான் அகிலன். சொல்லும் போதே மாமாவின் கண்கள் கலங்குவதை கவனித்தான் சதீஸ்.

நண்பனொருவனின் மோட்டார் சைக்கிளிள் நண்பனுடன் சதீஸ் சென்றுவிட அகிலனும், ராமும் செந்திலும் இன்னும் இருபது முப்பது ஊர் பெடியன்களும் இரவு முழுவதும் ஊருக்குள் நடந்துதிரிந்தார்கள். இப்போது அக்கரைப்பற்றில் இயக்கத்தவரும் ராணுவத்திடனும் முஸ்லீம்களுடனும் நேரடியாக மோதத் தொடங்கி விடியும்வரை எதிர்தாக்குதல்கள் நடந்ததில் விடிந்த போது ராணுவம் முகாம்களுக்குள் முடங்கி விட முஸ்லீம்களும் பின்வாங்கியதில் அக்கரைப்பற்றில் அமைதி நிலவியது. நல்லவேளையாக வெலிங்டன் தியேட்டரைத் தாண்டி எவரும் வரவில்லை.

காலை பத்துமணி நேரப்பொழுதில் திடீரென்று வெடிச்சத்தங்கள் கேட்டது. ஆத்தங்கரை ஓரத்தில் இருக்கும் சதீஸின் வீட்டுக்கு ஓடினார்கள் எல்லோரும். ஆத்தங்கரைக்கு அப்பால் உள்ள நாற்பதாம் கட்டை என்ற கடற்கரை கிராமம் முழுவதும் எரிந்து கொண்டிருந்தது. ஒன்றிலும் சம்பந்தப்படாத அப்பாவி கிராமத்தையும் அந்த மக்களையும் எரிக்கின்றார்கள் என்றுபேசிக் கொண்டான் ராமு

திருக்கோயிலுக்கு போய்வருவோமா என்று செந்திலை கேட்டான் அகிலன். அவன் சரி என்றான்.

நேர்பாதையில் போவதென்றால் ஆறுமைல். நாற்பதாம் கட்டையிலும் ஆமிக்காரர் நிற்பதால் சாகாமம் வழியாக பன்னிரெண்டு மைல் சுற்றி வளைத்துத்தான் திருக்கோவில் போகவேண்டும் வேறொன்றும் செய்ய முடியாது போகத்தான் வேண்டும்.

சைக்கிளை மிதித்துக் கொண்டு பனங்காட்டுக்கு வந்தபோது அங்கும் எவருமின்றி ஊரே வெறிச்சோடிக் கிடந்தது. சாகாமம் வழியாக சென்று வினாயகபுரத்தை அடைந்து அங்கிருந்து திருக்கோவிலை அடைந்தபோது எல்லா ஊர்களிலிருந்தும் வந்த மக்களால் திருக்கோயில் தெருவெல்லாம் திருவிழா காலம்போல் நிரம்பிவழிந்தது. தனது தாய் சகோதரங்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை எதிர்பட்டவர்களிடம் கேட்டறிந்து கொண்டு அங்கு சென்றபோது முதலில் வந்த சதீஸின் தகப்பன் அகிலனை ஒருமாதிரியாக பார்த்ததை உணர்ந்த செந்தில் 'என்னத்தான் ஏதும் பிரச்சினையோ' என்று கேட்டபோது 'இல்லை. இவன் சதீஸ் வெளியில போனான் இன்னும் வரயில்லை அதுதான். பார்க்கிறன்' என்று அவர் சொன்னதை செந்திலால் நம்மமுடியாமல் இருந்தது.

எத்தனை வருடங்களுக்குபிறகு அத்தான் இன்று தன் மூத்தமகனை நினைத்து அவனின் பெயரை உச்சரிக்கின்றார். நினைத்துக் கொண்டே முகாமாக மாறியிருந்த அந்த பாடசாலைக்குள் நுழைந்தபோது செந்தில், முகிலன் இருவருடைய இருதாய் தமக்கைமாரும் பதறிக்கொண்டு ஓடி வந்தார்கள். அம்மா எப்படியிருக்கிறா என்றான் அகிலன்.

'எடேய் தம்பி இவன் சதீஸ் ஊருக்கு வந்தவனேடா. காலையில வந்தான் ஊருக்குபோயிற்று வாறன் எண்டுபோட்டு போனான் இன்னும் காணயில்லை' சதீஸின் அம்மா அழுது கொண்டே கேட்டா.

கண் ஜாடையில் செந்திலை தனியாக கூப்பிட்டா தவமணி அக்கா. தனியாக வந்தான் செந்தில். அக்கா அழத் தொடங்கினா.

'டேய் நாற்பதாம் கட்டையில ஏதோ பிரச்சினையாம் எண்டபுள்ள சதீஸூம் ஊருக்கெண்டு போனான் என்ன நடந்ததோ தெரியாது ஒருக்கா போய் விசாரியுங்கோவண்டா'.

முகாமுக்குள்ளிருந்து வெளியில் வந்து செந்திலும் அகிலனும் திருக்கோயில் பிரதான வீதியை அடைந்தபோது அவர்களை எதிர்கொண்டு நடந்துவந்த சதீஸின் தகப்பனின்முகம் கலவரப்பட்டிருந்ததை கண்டதும் என்னத்தான் ஏதும் பிரச்சினையோ என்று செந்தில் கேட்டதும் ரோட்டோரம் நின்ற ஒரு மரத்தில் சாய்ந்து அழத்தொடங்கினார் அவர்.

மோட்டார் சைக்கிளில் சினேகிதனுடன் சென்ற சதீஸை நாற்பதாம் கட்டைக்குள் பதுங்கியிருந்த ராணுவம் சுட்டுவிட்டதென்றும் மேலும் ஊருக்கு போகலாம் என்று சென்ற இன்னும் ஐம்பதுக்கும் மேல்பட்ட இளைஞர்களை பதுங்கி இருந்து வெளியில் வந்து சுட்டுவிட்டார்களாம் என்று தப்பி ஓடிவந்த சதீஸின் சினேகிதன் சொன்னதாக சதீஸின் தகப்பன் சொன்னபோது நம்பமுடியாமல் நின்றார்கள் செந்திலும் அகிலனும்.

'எங்கள் மருமகன் சதீஸா.. அவனையா சுட்டிருப்பார்கள்' என்பதுபோலவே அவர்களின் மனம் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டது.

'டேய் எண்டமூத்த மகன பலிகொடுத்துட்டு நிற்கறண்டா. இத அவள் என்னெண்டடா தாங்குவாள்' கதறி அழுத அத்தானை அரவணைத்தான் செந்தில்.

விசயம் கேள்விப்பட்டதும் அந்த அகதிமுகாமே அதிர்ந்து அழுதது. தாயைப் பிரிந்த கன்று எதையோ பறி கொடுத்தவள் போல் அங்கும் இங்கும் ஓடியோடி அழுதுகொண்டிருந்த வசந்தியை கட்டிபிடித்து ஆரத்தழுவி தானும் அழுதாள் வாசுகி.

பேச்சு மூச்சற்று நினைவிழந்தவள் போல் நிலத்தில் சாய்ந்து கிடந்த தங்கையை நிமிர்த்தி தன் நெஞ்சோடு சாய்த்துக் கொண்டா தவமணி அக்கா. சதீஸின் சின்ன தங்கைகளும் தம்பிகளும் என்ன சொல்லி அழுவதென்று தெரியாமல் அழுதுகொண்டிருந்தார்கள்.

'எண்டமகனே ராராவா பேய்க்குருவி கத்துனதும் நாய் ஊளையிட்டதும் கடுவன் பூனை கத்தினதும் கண்கெட்ட காலன் உன்னக் கொண்டு போறதுக்குத்தானடா எண்டமகனே. வாழ வேண்டிய பச்சமரம் இப்பிடி பட்டுப்போயிற்றோடா. எண்டமக னே' ஆச்சியின் ஓலம் அகதி முகாமை அதிரப்பண்ணியது.

வேறோர் அகதிமுகாமில் இருந்த வசந்தியின் தாய் செல் லம்மா விசயம் அறிந்ததும் கதறித் துடித்துக் கொண்டு நெஞ்சில் அடித்துக் கொண்டு ஓடிவந்தாள். 'எண்டமகனே, நான் என்ன மாதிரி உன்னைப் பேசியும் நேற்று எண்ட வாசலுக்கு வந்து எல்லாரும் திருக்கோயிலுக்கு போங்கோ எண்டுசொன்னநேரம் உள்ள நான் குசினிக்குள்ள இருந்து பார்த்தேனே எவ்வளவு அழகாய் இருந்தாய் நீ. இப்பபோய் சேர்ந்திட்டேயப்பா'. தன் மகளை கட்டிப்பிடித்து அழுதா செல்லம்மா.

எல்லோரும் எதை எதையெல்லாமோ சொல்லி அழுதும் தவமணி அக்காமட்டும் அழவேயில்லை. நான் என்னவென்று அழுவன் என் மூத்த மகன் நான் வளர்த்தவன் என்னைவிட்டு போயிட்டானெண்டு எல்லாரும் சொல்லுகினம் இதைநான் என் னெண்டு நம்புவன். தவமணிஅக்கா தனக்குதானே மனதுக்குள் கேட்டுக்கொண்டதை புரிந்துகொண்டவர் போல அவவின் தலையை தடவிவிட்டுக்கொண்டார் கணவன்.

எல்லாம் முடிந்து பத்துநாட்களுக்கு பின்புதான் ஊருக்கு திரும்பக்கூடியளவுக்கு ஊர் சகஜநிலையை அடைந்தது. ஊருக்கு வந்து குடும்பத்திலுள்ள ஆண்களெல்லோரும் நாற்பதாம் கட்டைக் குச் சென்றபோது ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் ஒவ்வொரு மனித உடல்கள் எரிந்து முடங்கி சுறுண்டுகிடந்தது. கட்டியிருந்த கடிகாரம் இதுதான். சதீஸ் என்று அடையாளம் காட்ட மிச்சமிருந்த உடம் பின் பாகங்களை எடுத்துவந்து அருகில் உள்ள சுடலையில் புதைத்துவிட்டு சென்றபோது சதீஸின் தாய் மீண்டும் மயங்கி விழுந்தாள்.

வசந்தியை கிணற்றடிக்கு கூட்டிக்கொண்டுபோய் இருக்க வைத்து தலையில் நீர்வார்த்தாள் வாசுகி.

'இருக்க வேண்டிய ஆட்கள் ஊரில இருந்திருந்தாலோ அல்லது வந்த சதீஸ் நான் இன்னாரின் தமையன் எண்டு சொல்லியிருந்தாலோ ஏன் இதெல்லாம் நடந்திருக்கப்போகுது' என்ற கணேஷின் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள் வாசுகி. அவனைக் கண்டுகொள்ளாதவன் போல் போனான் கணேஷ்.

இரவு நிசப்தமாக இருந்தது வெளியில் திண்ணையில் ஆச்சி குந்திக் கொண்டிருந்தாள். சாமி அறையில் சதீஸின் படத்தின்கீழ் செம்புநிறைய நீர் வைக்கப்பட்டிருந்தது. வீட்டுக்குள் வாசுகியும் வசந்தியும் படுத்துக் கொண்டிருந்த போது திடீரென விசும்பி அழத்தொடங்கினாள் வசந்தி. வசந்தியின் அழுகுரல் கேட்டு விளக்குடன் உள்ளே வந்து அவள் அருகில் இருந்தா தவமணி அக்கா.

'ஏனம்மா கொம்மா வந்து ஒவ்வொரு நாளும் கூப்பிட்டுக் கொண்டிருக்கா. இங்க இருந்து இனி உனக்கென்னம்மா ஆகப்போ குது. தாயோட பிள்ளையாக நீ கொம்மாவோட போறதுதானே நல்லது' சொன்ன தவமணிஅக்காவை நிமிர்ந்து பார்த்த வசந்தி 'ஏன் மாமி உங்களோட நான் இருக்கிறது உங்களுக்கு பாரமாய் இருக்கா' என்றாள்.

'இல்லம்மா உன்ட தாய் சம்மதிச்சால் உங்கரெண்டு பேருக் கும் கல்யாணம் செய்துவைக்கலாம் எண்டிருந்தன். உண்டதாய் சம்மதிச்சநேரம் எண்டபுள்ளை உயிரோட இல்லை இனிஇங்க இருந்துஎன்ன செய்யப்போறாய் அதுதான் தாயோட பிள்ளை யாய் போயிடன் எண்டு சொல்லுறன்'.

'ஏன் மாமி உங்கபுள்ளைய கல்யாணம் செய்ததுக்குபிறகு அவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருந்தால் நீங்க என்னை அம்மாவோட போகச் சொல்லியிருப்பியளா?'

வசந்தியின் இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாதவளாகி விளக்கை எடுத்துக் கொண்டு வெளிவிறாந்தைக்கு வந்துவிட்டா தவமணிஅக்கா.

உள்ளே வசந்தியின் விசும்பல் கேட்டுக் கொண்டேயிருந்தது. 'ஏன் வசந்தி நீ கடைசி வரைக்கும் உங்க அம்மா வீட்டுக்கு

போகத்தான் மாட்டாயா?' அருகில் படுத்திருந்த வாசுகி வசந்தியிடம் கேட்டாள்.

'ஏன் வாசுகி அப்பிடிகேட்கிற உங்களோட ஒருத்தியாக 'நானும் இந்தவீட்டுல வாழமுடியாதா? உங்கட அண்ணா இருந்த இந்தவீட்டுல எனக்கு இருக்க இடமில்லையா'.

'அதுக்கில்ல நான் இல்லையெண்டால்கூட எண்ட இடத்தில் இந்த வீட்டில நீ அம்மாவோட இருப்பியா எண்டு கேட்டன். வேற ஒண்டுமில்ல'.

வாசுகியின் கேள்வியில் என்ன புதைந்திருக்கின்றதென்பதை புரிந்து கொள்ளாதவளாய் தலையணைகளை கண்ணீரால் நனைத்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

விடிந்ததும் விடியாததுமாய் வாசலில் வந்துநின்றா வசந்தியின் தாய். கையில் பலபேருக்குரிய இடியப்பமும் கறியும் ஓலைப் பெட்டிக்குள் இருந்தது. எல்லாரும் எழும்புங்கோ இண்டைக்குபன்ரெண்டு செத்தநாளோ கணக்கிலெடுக்கிறதோ இல்ல புதைச்சநாள கண்க்கிலெடுக்கிறதோ தெரியாது. எப்பிடியெண்டாலும் அந்தசீவன் நல்லபடியாய் போய்ச்சேர நாமளும் சடங்குகள் செய்யத் தானே வேணும். செல்லம்மா சொல்லுவது எட்டாம் சடங்கை பற்றியா அல்லது முப்பதாம் நாள் சடங்கை பற்றியா என்று தெரியதாவளாக எழும்பி மல்லிகை பந்தலுக்கு வந்தா தவமணி அக்கா.

மல்லிகை பந்தலின் மூன்று கால்களிலும் ராமுவும், செந்திலும் முகிலனும் தலைசாய்த்து தூங்கிக் கொண்டிருக்க பந்தலின் ஒரு கால் மட்டும் வெறிச் சோடிக்கிடந்ததைக் கண்டதும் இவ்வளவு நாளும் அடக்கி வைத்திருந்த துக்கம் வெடித்ததுபோல் 'எண்ட மகனே சதீஸ் நீ எங்கடா போயிற்றாய்' என்று அவ சத்தம் போட்டு அழ இவ்வளவுநாளும் மௌனமாக இருந்த அவவே அழத்தொடங்கியதும் அந்தவீடு மீண்டும் ஒருசாவீடாக மாறி ஒப்பாரி வைத்தது.

வசந்தியின் தாய் ஓடிவந்து தவமணிஅக்காவை கட்டிப் பிடித்து தானும் அழுதா. பன்னிரெண்டு நாட்களின்பின் முதன்முத

லாக செந்திலும் ராமுவும் அகிலனும் தமக்கை அழுவதை பார்த்து தாங்களும் குலுங்கிக் குலுங்கி அழுதார்கள். ம்... ஒருகாலத்தில் எண்டதம்பிமாரும் எண்ட மகனும் சிரிச்சி பேசி விளையாடுற அதிர்விலேயே பூச்சொரியுற இந்த மல்லிகை இப்ப இப்படி உறங்கிப் போய் கிடக்குதே. தனக்குத் தானே சொல்லிக் கொண் டவ தன் அருகில் யாரோ வந்து நிற்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தா. நவரெத்தினம்தான் நின்று கொண்டிருந்தான்.

'டேய் நவரெத்தினம் இப்பதானேடா வாராய். உண்ட மரும கன் போயிற்றாண்டா.'

தன்னைக் கட்டிப்பிடித்து அழுத தமக்கையை கட்டியணைத்து தானும் கண்ணீர் விட்டான். அவனைக் கண்டதும் ராமுவும் அகிலனும் செந்திலும் எழும்பி போய் விட்டார்கள். தமக்கையிடமி ருந்து விலகி மூத்தம்மாவிடம் சென்று குந்தியிருந்து எப்படி இருக்கிறாய் மூத்தம்மா என்றான்.

அவனுக்கு மூத்தம்மாவுடன் எப்போதும் தனிவிருப்பமும் பாசமும், மூத்தம்மாவின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை துடைத்துவிட்டான். மருமகள் ஸ்ரீ கொண்டுவந்த தேனீரை குடித்து விட்டு வீட்டுக்குள்ளிருந்த வசந்தியை தூரத்தில் இருந்து பார்த்து விட்டு போய்விட்டான்.

நவரெத்தினம் வந்தானாம் என்பதை கேள்விப்பட்டதும் அவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையுடன் ஓடிவந்ததாய் அவன்போய் விட்டானாம் என்பதை அறிந்ததும் முகம் வாடினா.

என் மகனைப் பார்க்க ஓடிவந்தாயாக்கும். அவருக்கெங்க தாய்ப்பாசம் இருக்கப் போகுது. மற்ற இயக்கத்தில் இருக்கிறது சொந்த சகோதரமெண்டாலும் சாக்காட்டுறதுதான் நோக்கமெண்டு திரியுறான். அவனுக்கெல்லாம் எங்க தாய்ப்பாசம் இருக்கப்போ குது.

தமையனைப் பற்றி செந்தில் பேசுவதிலிருந்தே இயக்க மோதல்களின் நிலைமை என்ன என்பதை அறிந்து மௌனமாக இருந்தா தாய்.

'அடடே சண்டையும் சச்சரவும் இயக்கங்களுக்குள்ள இருந் தால் அதுக்கு அவனென்னடா செய்ய முடியும். பாசம் இல்லை யெண்டால் மருமகன் போயிற்றான் என்று அறிஞ்சவுடன் ஓடி வந்து கண்கலங்குவானோ.'

சொல்லிக் கொண்டே கிணற்றிடியிலுள்ள வாழை மரத்தை நிமிர்ந்து பார்த்தா தவமணி அக்கா சின்னதாக மொத்தி தள்ளிக் கொன்று நின்றது வாழைமரம். இந்த வாழை மரம் இந்த முறை போடுற குலையை விற்காமல் நாம எல்லாரும் சாப்பிடுவமம்மா என்று சதீஸ் சொன்னது நினைவில் வந்து நெஞ்சில் முட்டி மோதியது.

## 18

இரவெல்லாம் அழுதழுது கண்வீங்கியபடி வெளியில் வந்த மகளிடம் செல்லம்மா ஏதோ சொன்னபோது 'ஏன் அவர் என்னைக்கடத்திக் கொண்டு வந்திட்டார் என்று அண்டைக்கு ஆமிக்காரன்களிட்டபோய் சொன்னீயே அப்பவே. அவர் பிடிபட் டிருந்தால் இதுதானே நடந்திருக்கும். இப்பமட்டும் என்ன என்னில பாசம் காட்டுறமாதிரி நடிக்குறது. என்னைக் கூட்டிக் கொண்டு போறதுக்குத் தானென்டுறது எனக்கு தெரியாதெண்ட நினைப்போ. நான் வரமாட்டேன்... என்னை கூப்பிடாதை யுங்கோ.. நான் இங்கேயே இருந்திர்றன்... என்னை கூப்பிடுறதாய் இருந்தால் இனிமேல் இங்கவராதையுங்கோ' தாய்மேல் சீறிப்பா யும் வசந்தியையும் மகளைக்கண்டு பயந்து நடுங்கும் செல்லம்மா வையும் பார்க்க பாவமாய் இருந்தது. தாயும் மகளும் பேசி ஒருமுடிவுக்கு வரட்டுமென்று நினைத்துக்கொண்டு தங்கைவீட் டுக்கு போனா தவமணிஅக்கா.

மகள் கொண்டு வந்து வைத்துவிட்டு போன தேனீர் கோப் பையை தொடாமலேயே இருந்தது. படுத்த படுக்கையாகவே கிடந்த சதீஸின் தாயின் அருகில் இருந்த சதீஸின் தகப்பன் தவமணி அக்கா வருவதை கண்டதும் எழுந்து சென்று வாசலில்

நின்ற தென்னையில் சாய்ந்து கொண்டவரை பார்க்க பாவமாய் இருந்தது. மகனை பறிகொடுத்த சோகம் அவரை இவ்வளவு பாதிக்குமெண்டு யாரும் எதிர்ப்பார்க்கவில்லை.

தங்கச்சியை எழுப்பி தலைவாரி இழுத்து கொண்டைபோட்டு விட்டு பல்தீட்டி முகம் கழுவ வைத்துவிட்டு அம்மா அப்பா தம்பிமாருக்கெல்லாம் காலைச் சாப்பாட்டைகொடம்மா என்று சதீஸின் தங்கையிடம் சொல்லி எல்லோரையும் சாப்பிட வைத்து விட்டு மீண்டும் தன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தபோது புவிதாவின் வீட்டுக்குள் ஆச்சி ஓடுவதை கண்டு என்ன ஏது என்று பயந்து கொண்டு தவமணி அக்காவும், புவிதா வீட்டுக்குள் நுழைந்தபோது வயிற்றுவலியால் துடித்துக் கொண்டிருந்த புவிதா வின் தலையை தன் மடியில் வைத்து விசிறியால் வீசிக் கொண்டி ருந்தாள் ஆச்சி.

'பிள்ளை நல்லா இறங்கிற்றுது. தண்ணீர் குடமும் உடைஞ்சு போயிற்றுது. ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக நேரம் காணாது அதுதான் மருத்துவிச்சிய கூட்டிக் கொண்டுவந்திட்டன்' சொன்ன புவிதாவின் தாயின் பதட்டத்தை பார்த்துக் கொண்டு தவமணி அக்கா உள்ளே நுழைந்த கொஞ்ச நேரத்தில் குழந்தையின் அழுகுரல் கேட்க வேர்த்துக் கொட்டியபடி ஆச்சி வெளியில் வந்தா.

'கனக்க தண்ணி குடிக்காமல் பார்த்துக்கொள். நான் போயிற்று பிறகுவாறன்' என்று புவிதாவின் தாயிடம் சொல்லி விட்டு ஆச்சியுடன் வீட்டுக்கு வந்தபோது வாசுகியும் வசந்தியும் மல்லிகை பந்தலின் கீழ் ஒருவருடன் ஒருவர் பேசாமல் மௌனமா கவும் சோகமாகவும் இருந்தார்கள். 'அழகு வடிவான ஆண்குஞ்சு அப்பன அப்பிடியே உரிச்சுபிறந்திருக்கு. ம்... அப்பன் முகம் பார்த்து வளரப்போகுதோ. இல்ல அப்பன் பேர் தெரியாமல்தான் வளரப் போகுதோ ஆர் கண்டா.'

புவிதாவையும் குழந்தையையும் பற்றி புகழ்கின்றாவா இகழ் கின்றாவா என்று தெரியாதளவுக்கு ஆச்சி பேசுவதை காதில்

வாங்கிக் கொண்டிருந்த வசந்தியை பார்த்து சிரித்த வாசுகி ஆச்சியும் தாயும் குசினிக்குள் சென்றுவிட 'என்ன வசந்தி எதுவுமே பேசாமல் இருக்கிறாய்' என்ன ஒருமாதிரியாய் இருக்கிறாய் என்றாள்.

'இல்ல நேற்றிரவு இவன் கணேஷ் கதைச்சதைபத்தித்தான் யோசிக்கிறன். மற்றவையளின்ர சோகத்திலையும் துன்பத்திலையும் பங்கெடுக்கத் தேவையில்லாவிட்டாலும் மற்றவையளின்ர மனம் புண்படாதபடி பேசாமல் கூட இருக்கலாமே. இவனுக்கெல்லாம் இப்படிக் கதைக்க எப்படித்தான் மனம் வருகுதோ தெரியவில்ல'

'அவன் கதைச்சதபத்தி ஏன் கவலைப்படுறாய். ஊருல ஆயிரம் பேர் ஆயிரம் கதைச்சால் அதுக்கெல்லாம் நாமகவலைப் பட்டுக் கொண்டிருக்க முடியாது வசந்தி'.

'வாசுகி உன்னிட்ட நான் ஒன்று கேட்டால் நீ என்னில கோபிக்கமாட்டாய்தானே'

'கேளு நான் கோபிக்கமாட்டன்.'

'உண்மையிலேயே உனக்கு அவன்மேல விருப்பம் இல்லத்தானோ. அப்பிடி விருப்பம் எண்டால் அத உள்ளுக்குள்ள வைச்சிருக்காமல் வெளியில சொன்னால் அவண்ட வாய அடக்கலாம். இது வரைக்கும் நீ அவன விரும்பாவிட்டிருந்தால் கூட இனியாவது அவனை நீ விரும்புறதுல என்ன பிழையிருக்கு. அவனும் உன்ன விரும்புறான் தானே?'

'அவன் விரும்புறான் என்கிறத்துக்காகவோ அவன் என்னைப்பற்றி அவதூறாக பேசுவான் என்கிறதுக்காகவோ நான் விரும்பாத ஒருத்தனை என் மனசால நான் ஒருநாளும் நினைக்கமாட்டன்.'

'அப்பநீ வேறயாரையும் விரும்புறயா வசந்தி' கேட்ட கேள்விக்கு சிரிப்பதா அழுவதா. கோபப்படுவதா என்று தெரியாமல் மௌனமாக இருந்தாள் வாசுகி.

'என்னை மன்னிச்சுக்கோ வாசுகி. உங்க அண்ணா போய் இந்த கொஞ்ச நாளுக்குள்ள நான் இப்படிப் பேசி இருக்கக்கூடாது

தான். ஏனோ தெரியவில்லை. உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நீ சந்தோசமாய் இருக்கவேணும். நல்லாய் வாழவேணும் என்றெல் லாம் என்மனசு சொல்லுது அதுதான் அப்படிக் கேட்டன்'.

'ஏன் வசந்தி உனக்கு மட்டும் இப்ப என்ன ஆகிப்போச்சு. அண்ணா உனக்கென்ன தாலிகட்டினாரா கல்யாணம் நடந்ததா. இல்ல நீங்க ரெண்டுபேரும் ஒண்டாத்தான் இருந்தியளா. உங்கட அம்மாவோட போய்நீயும் சந்தோசமாய் வாழவேண்டுமென்று நாங்களும் அம்மாவும் நினைக்கக் கூடாதா.'

'இல்ல வாசுகி. அதுமட்டும் இனி நடக்காது. இனிமேல் நான் இந்த வாசலில தான் சுத்தித்திரிவன். அதுதான் என்னோட ஆசை'.

'இந்த வீட்டில நான் இருக்கிறன் என்கிற ஆதரவில நீ இப்படிக் கதைக்கிறாய். நானும் இல்லையெண்டால் நீ என்ன செய்வாய்'.

'நீ யாரையாவது கல்யாணம் செய்துகொண்டுபோக வேணும். அதுக்குப்பிறகு உன்னுடைய இடத்துல இந்த வீட்டில நான் இருக்க வேணும் என்கிறதுதானே என் ஆசை.'

'அப்ப நான் இல்லையெண்டால் கூட நீ இந்த வீட்டுல இருப்பியா, என்று கேட்ட வாசுகியிடம் 'ஏன் கல்யாணத்துக்கு சம்பதிக்கப் போகிறாயா' என்று வசந்தி கேட்க ஒருவர் அறியாமல் ஒருவருக்கு சிரிப்பு வர இருவரும் சிரித்தபோது கோடைமழை போல கனநாளுக்கு பின்பு மல்லிகை பந்தலின் கீழிருந்து சிரிப் பொலி வருவதை குசினிக்குள்ளிருந்த தவமணி அக்கா ஆச்சரிய மாக பார்த்துக் கொண்டிருந்தா.

சதீஸின் ஒருமாத சடங்கு முடிந்துபலமாதம் ஆகிவிட்டது. ஊரில் எத்தனையோ தடவை சுற்றி வளைப்புகள் நடந்துவிட்டது. இயக்கமோதல்கள் நடக்கத் தொடங்கி படுவான் கரைப்பக்கம் இயக்கங்கள் ஒன்றோடு ஒன்றுமோதி ஒருசிலர் சாகடிக்கவும் பட்டார்களாம் என்று கேள்விப்பட்டபோது நவரெத்தினத்தை நினைத்து குடும்பமே கவலை கொண்டிருந்தது.

ஊரில் வைகாசி மாத அம்மன் கோயில் திருவிழாவுக்காக அம்மன் கோயில் கதவு திறந்திருந்தது. ஒலிபெருக்கியில் அம்மன் பக்திப்பாடல்கள் ஊர்முழுவதும் கேட்கக் கூடியளவுக்கு சத்தமாக பாடிக் கொண்டிருந்தது. ஊர்பெரியவர்களெல்லோரும் சென்று ராணுவ பெரியவனிடம் அனுமதிகேட்டு அம்மன் கோயில் கதவை திறந்திருந்தார்கள்.

அம்மன் கோயில் கதவு திறந்துமூடும் அந்த ஏழுநாட்களுக் குள்ளும் எந்தவித சுற்றி வளைப்புகளோ ஊருக்குள் தங்கள் ராணுவ வாகனமெதுவுமோ வரமாட்டாது என்று ராணுவமுகாம் பெரியதிகாரி சொன்னதை நம்பி ஊரிலுள்ள பெடியன்களெல்லாம் வீதிகளில் வெளிவந்து திரிந்ததை பார்க்கும் போது அந்த ஊருக்கு மட்டும் யுத்த நிறுத்தம் செய்ததுபோல் இருந்தது.

சதீஸ் இந்தியாவுக்கு சென்றபோது எண்டபுள்ளை நல்லபடி திரும்பிவந்தால் 'புள்ளைக்கு புள்ளைதருவன் தாயே' என்று அம்மனுக்கு செய்த நேர்த்திக்கடனை நிவர்த்தி செய்ய சின்னமகள் ஸ்ரீயிடம் தென்னம்பிள்ளையொன்றை கொடுத்து கோயிலுக்கு கொடுத்துவரும்படி அனுப்பிவிட்டு வேலிக்குமேலால் தவமணி அக்கா எட்டிப் பார்த்தபோது ராமுவும் சில பெடியன்களும் வீதியின் சந்தியில் நின்று கொண்டிருந்தார்கள்.

ஊரின் நடுப்பகுதியில் உள்ள சந்தியில் நின்றுபார்த்தால் ஊர்முடிவின் முடக்கில் தெரியும் வாகைமரம் அழகான விருட்ச மாக தெரியும். அக்கரைப்பற்றிலிருந்து ஏதும் வாகனங்கள் வரு கின்ற தென்பதை வாகை மரமுடக்குக்கு அப்பால் இருந்து வரும் வாகன இரைச்சலிலிருந்துதான் கண்டுபிடிக்கமுடியும். மற்றபடி இரைச்சல்கள் ஏதுமில்லாமல் வரும் வாகனங்கள் திடீரென வாகை மர முடக்கில் வந்து முகம் காட்டி ஊருக்குள் புகுந்து வரும்.

சுற்றி வளைப்பு நேரங்களில் சந்தியில் யாரேனும் பெடியன் கள் நின்றால் வாகை மரமுடக்கில் வாகனங்கள் வருமுன்பே காதுக்குக்கேட்கும் இரச்சலால் பெடியன்களெல்லோரும் ஊருக் குள் ஓடிவிட வாகனம் ஊருக்குள் நுழையும்போது வீதியில் எந்த பெடியன்களும் இருக்கமாட்டார்கள்.

# 19

**வா**கை மர முடக்குக்கு அப்பால் வரும் வாகன சத்தத்தை காதில் விழாதபடி அம்மன் கோயில் ஒலிபெருக்கி பாடிக் கொண்டிருந்தது. இருந்தும் இந்த ஏழுநாட்களுக்கு எந்த ராணுவமும் ஊருக்குள் வராது என்ற நம்பிக்கையில் நண்பர்களுடன் சந்தியில் சிரித்துக்கொண்டிருந்த ராமு தற்செயலாக நிமிர்ந்து பார்த்தபோது வாகை மரமுடக்கில் முகம் நிமிர்த்தி ஊருக்குள் நுழைந்து கொண்டிருந்த ராணுவவாகனமொன்றை கண்டதும் நிலைகுலைந்தவனாய் 'டேய் வாறாங்களடா' என்று கத்த சேர்ந்துநின்ற நண்பர்கள் எதிர்பட்ட திசைகளில் கலைந்தோட ராமுவும் வீட்டைநோக்கி ஓடும்போது இதற்கிடையில் வாகனத்திலிருந்தபடியே ராமுவை நோக்கி துப்பாக்கி குண்டுகள் சீற தெய்வாதீனமாக தப்பி ஓடிக் கொண்டிருக்கும்போது துப்பாக்கி வேட்டு சத்தம் கேட்டு தவமணி அக்கா வெளியில் வந்து பார்க்கும்போது ஓடிக்கொண்டிருப்பது ராமுஎன்பதை அறிந்ததும் தலையில் கைகளை குவித்துக் கொண்டு பேசவார்த்தைகளின்றி நிலத்தில் குந்துவதை ராமுபார்த்துக் கொண்டுதான் ஓடினான்.

வீட்டை நோக்கி ஓடிவந்தவன் திரும்பி பார்த்தான். தன்னை ராணுவம் துரத்திக் கொண்டுவருவதை கண்டதும் வீட்டுக்குள் ஓடாமல் புவிதாவின் வளவோடு சேர்ந்த தெருக்கொழுங்கைக்குள் புகுந்து இரண்டு மூன்று வளவுகள் தாண்டி இன்னுமொரு ஒழுங்கைக்குள் இறங்கி ஆத்தங்கரையை நோக்கி ஓடிநிமிர்ந்து பார்த்தபோது வாகை மரத்தடி ஒழுங்கைக்குள்ளால் வந்த பல ராணுவம் ஆத்தங்கரையில் நின்று கொண்டிருப்பது தெரிந்து, வேடன் வலையில் சிக்கியமானாய் எங்கு எப்படி ஓடுவதென்று தெரியாமல் தவித்தான். பின்னால் திரும்பிப் பார்த்தான். ராணுவத்தினர் தன்னை நெருங்குவது தெரிகின்றது. நிமிர்ந்து பார்த்தான். அப்போதுதான் தெரிந்தது தான் நின்று கொண்டிருப்பது சுகந்தியின் வாசல் கதவருகில் என்பது.

வேலிக்குமேலால் சுகந்தியின் வளவுக்குள் பாய எத்தனித் தான். உயரமான கம்பிவேலி என்பதால் அவனால் முடியவில்லை. இனிஒன்றும் செய்யமுடியாதென்று தெரிந்தது. வளவின் இரும்புக் கதவை பிடித்து அசைத்து உலுக்கிக் கொண்டு 'சுகந்தி கதவை திற. ஓடிவா வந்து கதவைத் திற' என்று கத்தினான்.

கதவை உலுக்கி அசைத்து கொண்டு ராமு கத்துவதை கண்டதும் ஓடிவந்த சுகந்தியை அவளுக்கு பின்னால் ஓடிவந்த தாயும் தகப்பனும் பிடித்திழுத்து தடுத்துக் கொண்டிருந்தார்கள்.

'அப்பா...அப்பா... விடுங்கப்பா. கதவைத் திறங்கப்பா. ஒரு உயிரப்பா. அதுயாராக இருந்தாலும் உயிரப்பா காப்பாத்துங் கப்பா... அதுவும் ஒரு உயிர் தானப்பா...' கத்திக் கொண்டிருந்த சுகந்தியின் குரல் வெடித்த துப்பாக்கி சத்தத்தில் அடங்கியது.

பிரமை பிடித்தவள்போல் திரும்பிப் பார்த்தாள் சுகந்தி. கால் ஒன்று முறிந்து தொங்கி ரத்தம் சிந்திக் கொண்டிருக்க ராமுவை இழுத்துக் கொண்டு போனார்கள் ராணுவத்தினர்.

'அம்மா. அம்மா...' என்ற ராமுவின் ஈனஸ் வரக்குரல் அவள் நெஞ்சினில் ஈட்டியாய் பாய தன்முன்னால் நின்று கொண்டிருக்கும் தாயையும் தகப்பனையும் வெறிபிடித்தவள்போல் முறைத்துப் பார்த்தாள் சுகந்தி.

விசயம் அறிந்த சின்னம்மா குடும்பமும் ஊர்ச்சனங்களும் தவமணி அக்காவின் வாசலில் கூடிவிட்டார்கள். தலைவிரி கூந்த லோடு வாசலில் புரண்டுஅழுது கொண்டிருந்தா சின்னம்மா. சகோதரங்களும் மருமக்களும் மூலைக் கொன்றாக தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள்.

'எண்ட புள்ளை பதறி துடிச்சுக்கொண்டு ஓடினத என் கண்ணால கண்டேனேயடி... உயிரக் கையில புடிச்சிக் கொண்டு திறவுங்கோ திறவுங்கோ எண்டு கெஞ்சியும் அந்த பஞ்சமா பாதகத்தி திறந்தாளில்லையாமே. நீலி கொடுசூரி அவள் நல்லாய் இருக்க மாட்டாள்.' சுகந்தியின் வீட்டின் திசையை நோக்கி மண்ணை வாரி அள்ளி வீசி திட்டிக்கொண்டிருந்தா ஆச்சி

கனநேரமாய் சோகமாக மௌனமாகவே இருந்த தவமணி அக்கா எழுந்து புடவையொன்றை உடுத்திக் கொண்டு எவரிடமும் எதுவும் சொல்லாமல் புறப்பட்ட தாயிடம் 'எங்கம்மா போறியள்' என்று வாசுகி கேட்டாள்.

'அக்கரைப்பற்று முகாமுல போய் கேட்டுப் பார்ப்பம் எண்டு நினைக்கிறன். அம்மம்மாவையும் தம்பி தங்கச்சியையும் கவனமா கப் பார்த்துக் கொள் நான்வாறன்.' தவமணிஅக்கா சொல்லிவிட்டு வெளியில் செல்ல அவவை எதிர் கொண்டு உள்ளே வந்தான் கணேஸ். வரும்போது அப்பாவியாக சிரித்துக் கொண்டதை மல்லிகை பந்தலின் கீழ் இருந்த வசந்தி கவனித்துக் கொண்டாள். வாசுகியும் மல்லிகை பந்தலின் கீழ் வந்ததை அறிந்து கணேசும் வந்து வாசுகியின் கடைசித் தம்பியுடன் கதைப்பதுபோல் ஏதேதோ கதைத்தான்.

'டேய் குமார் உங்கடஅம்மா போய் என்னட ஆகப்போகுது. போறவங்க போயிருந்தால் உங்கட ராமுமாமாவ உடனே கூட்டிக் கொண்டு வரலாம்.'

நக்கலாக சொன்ன கணேசை முறைத்துப் பார்த்தாள் வாசுகி. அவளின் பார்வையை அலட்சியம் செய்து கொண்டு வெளியே போய்க் கொண்டிருந்தவனை பின் தொடர்ந்த வாசுகி 'கொஞ்சம் நில்' என்றாள். கணேஸ் எதிர்பார்க்கவில்லை அவள் பின்னால் வருவாளென்று. என்ன என்பதுபோல் பார்த்தான் அவன்.

'இன்னும் எத்தனை நாளைக்கு நீ கதைத்துக் கொண்டிருக்கப் போகிறாய்.'

'நீ என்னை விரும்புறன் என்று சொல்லுற வரைக்கும்'

'இன்னும் எத்தனைதரம் சொல்ல வேணும் உன்னை நான் விரும்பையில்லையெண்டு. இஞ்சபார் நீயும் நானும் பிறக்கிறதுக்கு எத்தனையோ தலைமுறைக்குமுன்னால் எங்கடவீடும் உங்கட வீடும் பக்கத்து பக்கத்து வீடுகளாகத்தான் இருக்கு அத்தனைதலை முறையும் இதுவரைக்கும் தாய் புள்ளைகளாத்தான் பழகியிருக் காங்க. இனியும் பழகுவாங்க. அந்த உறவு உன்னாலையும்

என்னாலும் கெட்டுப்போக வேண்டாமென்று நினைக்கிறாயா, எங்களுடைய வீட்டில நடக்கிற சுகதுக்கங்களில பங்கு பற்றவேண்டிய நீயே இப்படி பகுடி பண்ணிக் கதைக்கிறது சரியா.'

'குடும்பத்துல நிரந்தரமாய் என்னையும் ஒருத்தனாய் சேர்த்துக் கொண்டால் நானும் சுகதுக்கங்களில பங்கு பற்றிக் கொள்ளலாம் தானே.'

'இல்லையெண்டால் இப்படியே கதைத்துக் கொண்டிருப்பாய் என்று சொல்ல வருகிறாயா'

'... ... ...'

'இஞ்சபார் கணேஸ் எங்கட குடும்பத்துக்கு இது சாபக்கேடு போல. ஊரில எவருக்கும் நடவாத பிரச்சினை அடுத்தடுத்து தொடர்ந்து எங்கடவீட்டுலதான் நடக்குது. அதுகளை நினைச்சே நாங்கள் தினம் தினம் அழுது கொண்டிருக்கிறம் இதுக்கிடையில 'நீவேற கண்டதையும் கதைச்சு மனசநோகப் பண்ணாத. நீ கதைக்கிறதால எனக் கொண்டும் குறைஞ்சு போயிடப் போறதில்ல ஆனால் நீ கதைக்கும் போதெல்லாம் எங்கட குடும்ப நிலைமை தெரியாமல் நீ கதைக்கிறாயே என்று உன்னில கோபம் வருகுதே.'

'என்னில கோபப்பட உனக்கு உரிமை இருக்குதெண்டால் உன்னையும் அறியாமல் நீ என்னை விரும்புறாய் என்று அர்த்தம்'

'உனக்கு எந்த நேரத்தில் எதைப்பற்றி கதைப்பதென்று தெரியாதா. நான் எங்கட குடும்பத்து சோகத்தைப் பற்றி கதைக்கிறன். ஆனால் நீ...'

'நானும் என்னுடைய சோகத்தை பற்றித்தான் கதைக்கிறன்.'

'அப்ப நீ கதைக்கிறத நிற்பாட்ட போறதில்லையெண்டுதான் சொல்லுறாயா?'

'உன்னுடைய சம்மதம் கிடைக்கும் வரை நான் கதைக்கிறத நிற்பாட்ட போறதில்லை...'

'அப்ப நீ வாழ்க்கை பூராக கதைச்சுக் கொண்டேதான் இருக்கப் போகிறாய். நீ கதைச்சுக் கொண்டே இரு நான் இனிமேல் நீ கதைக்கிறதுகளைப் பற்றி கவலைப்படப்போறதில்லை'

'என்னைப்பற்றி நீ ஏன் கவலைப்படபோகின்றாய். உனக்குத் தானே கவலைப்பட ஆள் இருக்கு.'

அவன் அப்படி சொல்வானென்று அவள் எதிர்பார்க்க வில்லை அவளை முறைத்துப் பார்த்துவிட்டு 'சீபோடா' என்று சொல்லி விட்டுவந்தபோது அதை எதிர்பாராத கணேஸ் அவமா னத்துடன் சென்றான்.

'என்ன சொன்னான். நீ என்ன அவனோடு கன நேரமாய் கதைச்சுக் கொண்டுநின்றாய்.'

'நாய் குரைக்குதெண்டு பாவம் கல்லெடுத்து எறியாமல் நாமழும் சேர்ந்து குரைத்தால் திரும்பிப்போயிடும் எண்டுபார்த் தால் அதுகல்லெறி பட்டால்தான் போவேன் என்று அடம்பிடிச்சுது அதுதான் எறிஞ்சு போட்டு வந்திருக்கன்.'

'நாட்டுக்காக போறம் என்று சொல்லி போனதுகளெல்லாம் எத்தனையோ நல்லதுகள். நடக்கையுக்குள்ள காணாமல் போயிற் றுதுகள். இவன்களெல்லாம் நாட்டுக்கும் உதவாமல் வீட்டுக்கும் உதவாமல் ஏன் இருக்குதுகளோ.' வசந்தி தனக்கு தானே சொல்லி கொண்டாள்.

அம்மம்மா இருமும் சத்தம் கேட்டு எழும்பிச் சொன்றாள் வாசுகி. ஆச்சி குசினிக்குள் சுடுதண்ணீர் வைத்துக் கொண்டிருந் தாள். சின்னம்மா அழுத சோர்வில் சுவரில் தலை சாய்த்துக் கொண்டிருந்தா.

பின்னேரம் ஆறுமணி பொழுதில் தவமணி அக்கா வந்த போது அவவின் முகம் சோகமாகவே இருந்தது. கோயில் தலைவரையும் அக்கரைப்பற்று சமாதானக்குழுத்தலை வரையும் கூட்டிக் கொண்டு நாற்பதாம் கட்டை ராணுவமுகாமுக்கு போய் விசாரித்ததாகவும். அந்தநாளைய தன்தகப்பனின் முஸ்லீம் நண்பர் களுடன் அக்கரைப்பற்று முஸ்லீம் பகுதிக்குள்ளிருக்கும் எழுவட்டு

வான் ராணுவ முகாமுக்கு போய் விசாரித்ததாகவும் எந்த இடத்தி லும் ராமுவை இல்லையென்றும். இன்று சுற்றி வளைப்புக்கு வந்தது நாங்களல்ல களுவாஞ்சிகுடிராணுவம் என்றும் சொல்லி தன்னை திருப்பி விட்டதை சொன்னபோது வாசலில் மீண்டும் ஒரு தடவை ஒப்பாரி ஓலம் கேட்டு அடங்கியது.

நாளைக்கு களுவாஞ்சி ராணுவ முகாமுக்கு போக வேணும் என்றா தவமணிஅக்கா.

நானும்கூட வரவா என்று கேட்ட கணவனிடம் வேண்டா மென்று கூறி தடுத்துவிட்டா.

ஒவ்வொரு ராணுவமுகாமுக்குள் ஏறி இறங்கி அலைந்து திரிந்த சோர்வுடன் பந்தலின் கீழ் உட்கார்ந்த தவமணி அக்காவுக்கு மகள் கொண்டு வந்த தேனீரை குடித்தபோது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

'எண்டமகளே நாளைக்கு களுவாஞ்சிகுடிக்குபோய் என்டம கனைக் கூட்டி வருவாய் தானேயம்மா.'

கெஞ்சிக்கேட்ட சின்னம்மாவை பார்க்க பாவமாய் இருந்தது.

'நான் என்ன சொல்லமுடியும். கேட்ட உடனே தூக்கி தந்து கூட்டிப்போ என்று சொல்லுவான்களோ. இல்ல நாங்களும் வர யில்ல எங்களுக்கு எதுவும் தெரியாது என்று அவங்களும் திருப்பிஅனுப்பி விடுவான்களோ ஆருக்கு தெரியும்' தவமணி அக்கா தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டா.

கையில் குழந்தையுடன் புவிதா வந்தாள். கள்ளம் கபடமில் லாத குழந்தை அந்தவாசலின் நிலைமையின் இறுக்கத்தை புரிந்து கொள்ளாமல் எல்லோரையும் பார்த்து சிரித்ததை தவமணி அக்கா பார்த்து மனதுக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

## 20

**ரா**மு பிடிபட்டு ஆறு மாதங்களாகியும் அவன் எங்கிருக் கின்றான், அவனை பிடித்தது எந்த ராணுவம் என்ற தகவல்களை

இன்னும் அறியமுடியாமல் தான் இருந்தது. அதன் பின்பு எத்தனையோ தடவைகள் சுற்றி வளைப்புகள் நடத்து விட்டன.

ஊரை சுற்றிவளைத்து விசாரணைக்கென கூட்டிச் செல்பவர்கள் இரண்டொரு நாட்களில் திரும்பி வரும்போதெல்லாம் அவர்களிடம் ஓடிச்சென்று அந்த முகாம்களில் நீங்கள் இருக்கும்போது ராமுவை கண்டீர்களா என்று கேட்கும் போதெல்லாம் எவருமே இதுவரை கண்டதாக சொல்லவில்லை.

தெரிந்தவர்கள் மூலமாக கொழும்பு வரை சென்று அரசியல் செல்வாக்குள்ளவர்களை பிடித்தும் ராமு எங்கிருக்கின்றான் என்பதை இன்னும் அறியவில்லை. ஊரில் சுற்றி வளைப்பில் பிடிபட்ட பல இளைஞர்கள் பலர் பூசாமுகாமில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தாய்மாருக்கு அனுப்பும் கடிதங்களில்கூட ராமுவைப் பற்றி எந்ததகவலும் இல்லை.

ஊரில் திருவெண்பாவை பூசை காலம் தொடங்கியிருந்தது. ஒவ்வொரு வருடமும் ஊருக்குள் திருப்பள்ளியெழுச்சி பாடிவரும் இளைஞர்களுக்கு அதிகாலையில் தன்வீட்டில் கஞ்சி ஊற்றும் போது அந்த இரவும் அந்த அதிகாலையும் தன் வீடு தன் தம்பிமார்களால் எப்படி கலகலத்திருக்கும் என்பதை நினைக்க நினைக்க தவமணி அக்காவுக்கு அழுகை வந்தது.

'கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகள் இயம்பின வியம்பின சங்கம்...' என்று தொடங்கி 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே' என்று ஆலய ஒலி பெருக்கியில் பாலிமச்சாளின் மகன் துரையப்பா எம்பெருமானை எழும்பச் சொல்லி பாடுவது தவமணி அக்காவின் தூக்கத்தை கலைத்து எழுப்பியது.

ராமு எங்கிருக்கின்றானோ எப்படி இருக்கின்றானோ அல்லது இருக்கின்றான்தானா அல்லது இல்லையா என்றகேள்விக்கு நடுவே செந்திலும் அகிலனும் அவவின் நினைவில் முன்வந்து நின்றார்கள்.

தமையனை ஆமிக்காரன்கள் பிடித்துச் சென்ற கோபத்தில் செந்திலும் இப்போது ஆயுதம் தூக்கிவிட்டானாம் என்று கேள்வி. இப்போதெல்லாம் அவன் அடிக்கடி வீட்டுப்பக்கம் வருவதில்லை.

குடும்பத்தில் நடந்த இழுப்புகள் அகிலனை மிகவும் பயப்பிட வைத்துள்ளது. இப்போதெல்லாம் எதற்கெடுத்தாலும் பயப்பிடும் தம்பி அகிலனை நினைத்துக் கொண்டா தவமணிஅக்கா. நேற்றுக் கூட சும்மா வாசலில் நின்றவன் ஏதோ வாகனம் வருகிறதென்ற பிரமையில் ஓடமுற்பட்டவனை பார்த்தபோது பரிதாபமாய் இருந் தது.

அகிலனின் இரவுபடுக்கை இப்போதெல்லாம் சின்னக்கா வீட்டில்தான். சதீஸ் இறந்ததற்கு பின்பு அக்காவுக்கு ஆறுதலாக இருக்குமென்று அவன் அங்கேயே இரவில் தூங்க பழகிக் கொண்டான்.

வாசுகி எழும்பி வாசல் கூட்டும் சத்தத்தில் நன்றாக விடிந்து விட்டதை அறிந்த தவமணி அக்கா எழும்பி கிணற்றடிக்கு சென்று முகத்தை கழுவிவிட்டு மல்லிகை பந்தலுக்கு வந்து பந்தலை அண்ணார்ந்து பார்த்தா. படர்ந்திருந்த மல்லிகை செடிகளுக்கிடை யில் பட்டுபோய் மிலாறாய் போய் விட்ட சில மல்லிகை கொடிகளின் இலைகள் சருகுகளாய் கிடந்தன. வளவுக்குள் நின்ற மா மரமும் மாதுளை மரமும் வாடிநின்று அழுவது போல் தெரிந்தது.

சதீஸின் கையால் வைத்த முட்டைகளை பொரித்த புள்ளி பேட்டுக் கோழியின் சேவல் குஞ்சுகள் தலையில் கொண்டைக ளைக் காட்டிக் கொண்டு கொக்கரித்து ஓடித்திரிந்தது. புள்ளிப் பேட்டுக்கு அடை வைக்க முட்டைகளை எடுத்தபோது தனக்கு இத்தனை குஞ்சுகள் வேண்டுமெண்டு அவனும் வசந்தியும் முட் டைகளுக்கு சாயம் பூசி அடையாளம் வைத்து விளையாடியது நினைவுக்கு வந்தது.

'எண்டமகன் சதீஸ் எங்க...' என்று அந்த கோழிகளிடமும் மா மரம் மாதுகளைமரம் போன்றவைகளிடம் கேட்க வேண்டும் போல் இருந்தது.

சின்னக்கா வீட்டில் படுத்திருந்த அகிலனை சிநேகிதன் உதயன் வந்து கூட்டிக் கொண்டு செல்வதை கண்ட அக்கா 'எங்கடா போறியள்' என்று கேட்டா.

அக்கரைப்பற்று தபால் கந்தோருக்கு முன்னால ஆரோ ஒருத்தனோட உடம்பு மின்கம்பத்துல தொங்குதாம், ஆரெண்டு பார்த்துட்டு வாறம் என்றான் அகிலன்.

'டேய் போகாதையுங்கடா... கட்டாயம் அவனுகளும் வரு வானுகள். டேய் போகாதையுங்கடா.'

தவமணி அக்கா சொன்னதை காதில் வாங்காமல் சென்றுவிட் டான் அகிலன். ஒழுங்கைக்குள்ளால் திருவெண்பாவை பூசை முடிந்து கையில் பிரசாதங்களுடன் வந்து கொண்டிருந்த சிறுமிகளு டன் வந்த சுகந்தியை கண்டதும் வேலி ஓரத்துக்கு போன தவமணி அக்காவை சுகந்தி தூரத்திலிருந்தே கவனித்துவிட்டாள்.

'கொஞ்சம் நில்லு புள்ள சுகந்தி உன்னோட கொஞ்சம் கதைக்கவேணும்.'

தவமணி அக்கா தன்னை நிற்கச் சொன்னவுடன் அவவை ஆச்சரியமாக பார்த்து நின்றாள் சுகந்தி.

முழுகி முடித்த ஒற்றைபின்னல் இடுக்கில் ஐயர் கொடுத்த பிரசாத பூவை செருகி இருந்தாள். நெற்றியில் ஒற்றைவிரல் திருநீற்று பூச்சின்மேல் சின்னதாய் ஒரு பொட்டு பார்க்க சாந்தமாக இருந்த சுகந்தியை பார்த்துக் கொண்டே நின்றா தவமணி அக்கா. 'என்னக்கா...' சுகந்திதான் மௌனத்தை கலைத்தாள்.

'உனக்கிட்ட ஒரு விசயம் கேட்கவேணும்...'

தன்னைக் கடந்து போகும் சிறுமிகளை சுகந்தி கவனிப்பதை பார்த்து பேச்சை நிறுத்தி மீண்டும் தொடர்ந்தா தவமணி அக்கா.

'என்ன எத்தனையோ இடத்துல உண்ட தாய் தகப்பன் உனக்கு மாப்பிள்ளை பார்த்தும் நீ ஒண்டையும் வேணாம் வேணாம் எண்டு சொல்லி தட்டி கழிக்கிறாயாம் மெய்தானோ?'

சுகந்தி மௌனமாக நின்றாள்.

'இஞ்சபாரு புள்ள ஏற்கனவே ஒருபுள்ளய பறிகொடுத்திட்டு அவனைத் தேடிவந்த குற்றத்துக்காக வாழ்நாள் பூராவும் என்னோ டயே இருக்கப்போறன் எண்டு சொல்லிக் கொண்டு வசந்தி

எண்டகுமரி என்னோடயே இருக்காள். ஆரோ பெத்த பிள்ளை எப்படியோ வாழ வேண்டியவள் வாழ்க்கையே வேண்டா மெண்டு என்னோடயே இருக்காளெண்டு நான் வயித்துல நெருப் பக் கட்டிக் கொண்டிருக்கன். இதுக்கிடையில ராமுவ காதலிச்ச குற்றத்துக்காக நீயும் வாழ்க்கையே வேணாம் எண்டு கொண்டிருக் கிறாயாம் எண்டுகேள்விப்பட இன்னும் கவலையாய் இருக்கு. நடந்ததுகள மறந்துபோட்டு உங்கங்களுக்கெண்டு ஒரு வாழ்க்கை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாதோ புள்ள.'

சுகந்தி எதுவுமே பேசாமல் நின்றுவிட்டு 'நான் போயிற்று வரட்டா அக்கா' என்றாள்.

'நீ இப்பிடியே இருந்தா பெத்ததாய் தகப்பன் என்னபாடுபடு வாங்கள் என்கிறது உனக்கு தெரியாதோ புள்ள.'

'அண்டைக்கு ராமுவ கதற கதற இழுத்துட்டு போனபோது நான் என்ன பாடுபட்டிருப்பன்.'

'அதுக்கு அவையள் என்னசெய்யுறது. அவையள் கதவ திறந்திருந்தால் மட்டும் ராமு தப்பியிருப்பானெண்டு எப்படி நிச்சயமாக சொல்லமுடியும்.'

'தப்பியிருப்பாரோ இல்லையோ எனக்கொரு மன ஆறுதல் கிடைச்சிருக்குமே.'

'இந்த கதையயெல்லாம் விட்டுப்போட்டு அம்மை அப்பன் பார்க்கிற மாப்பிள்ளைய கல்யாணம் செய்து கொள் புள்ள.'

'ஏன் அக்கா ராமு இனிமேல் வரவேமாட்டா ரெண்டுதான் நீங்களும் நம்புறயளோ.'

சுகந்தியின் வார்த்தைகள் தன் நெஞ்சில் சாட்டையாக விழுந்த தாய் உணர்ந்தா தவமணி அக்கா.

'நான் வாறனக்கா. இந்தாங்கோ பிரசாதம்.'

தன் கையில் அவள் வைத்து விட்டு போன திருநீறு குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தபோது வசந்தியின் கடைசித் தங்கை தமக்கையிடம் எதையோ

சொல்லி அழுதுகொண்டிருந்தாள். 'அம்மா' வசந்திட அம்மாவுக்கு நெஞ்சு வலி வந்து மயங்கி விழந்திட்டாவாம். வசந்திய கூட்டி போக அவளின்ர தங்கச்சி வந்திருக்காள் வசந்தி போக ஏலா தெண்டு சொல்லுறாள்.' வாசுகி சொல்லிக் கொண்டிருக்கும்போது வெளியில் வந்த வசந்தியையும் அவளின் தங்கையையும் கையில் பிடித்துக் கொண்டு வசந்தியின் வீட்டுக்கு போனபோது முகமெல் லாம் வியர்த்துக் கொண்டபடி கட்டிலில் படுத்திருந்த செல்லம்மா மகள் வருவதைக் கண்டதும் எழும்ப முயற்சி செய்ய தவமணி அக்கா அவவின் தலையை தாங்கி மீண்டும் படுக்க வைத்தா.

'லேசா நெஞ்சு வலிக்கிற மாதிரி இருந்திச்சி. கண்ணெல்லாம் இருண்டு வாற மாதிரி இருந்திச்சி திண்ணைக்கு வந்திடலாம் எண்டு நினைக்குறதுக்குள்ள விழந்திட்டனவாம் எண்டுபுள்ளைகள் சொல்லுதுகள்'

குற்றவாளியின் ஒப்புதல் வாக்குமூலம் போல பேசிக் கொண் டிருந்த செல்லம்மாவை பார்க்க பாவமாய் இருந்தது. சொந்த வீட்டுக்கு வந்தும் அன்னியத்தனமாய் ஒதுங்கிக் கொண்டு நின்றி ருந்த வசந்திய குசினிக்குள் போய் வேலையை பார்க்கச் சொன்னா தவமணி அக்கா.

பின்னேரம் வரை செல்லம்மாவின் அருகிலேயே இருந்தா தவமணி அக்கா.

'இப்பிடிப்பட்ட உன்ன மச்சியாக அடைகிற கொடுப்பினை எனக்கில்லாமல் போயிற்றே எல்லாம் விதிப்பயன். 'சொல்லும் போதே செல்லம்மாவின் கண்களில் நீர் கோர்த்துகின்றது?'

இருண்டுவிட்டதென்று வீடு போக புறப்பட்டு வந்தபோது தன்னுடன் வாசல் வரை வந்த வசந்தியை நிறுத்தி தலையை தடவிவிட்டு 'போம்மா. போ நீதானம்மா இனி இந்த குடும்பத்த கொண்டு நடத்தவேணும் என்னதான் இருந்தாலும் பெற்ற தாயெல்லோ. போம்மா போ.' என்று சொல்லி விட்டு வந்தபோது வசந்தியின் கண்களிலிருந்து நீர் வடிந்தது.

வீட்டுக்கு வந்தபோது இத்தனை நாளும் தன் நெஞ்சில் ஏறி இருந்த சுமையொன்றை இன்று இறக்கிவைத்துவிட்டு வந்த நிம்மதி தவமணி அக்காவுக்கு ஏற்பட்டது.

'செல்லம்மா பெத்திருந்தாலும் வசந்தி எண்ட புள்ளை அவள் நல்லாய் இருக்க வேணும்.' தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டா தவமணி அக்கா.

இரவு நெடுநேரமாகியும் அகிலனுக்கு நித்திரை வரவில்லை. சின்னக்கா நித்திரையா இல்லை மகனை பற்றிய சிந்தனையில் மூழ்கிக் கிடக்கின்றாவா என்று தெரியவில்லை. அவமௌனமாகவே படுத்திருந்தா. அத்தான் ஏதோ பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். ஒன்றின்மேல் ஒன்று காலைப்போட்ட கால் ஒருவரையொருவர் உதைத்துக் கொண்டு தூக்கிக் கொண்டிருந்த சின்னக்காவின் குழந்தைகளை பார்த்துக் கொண்டே படுத்திருந்தவனின் நினைவில் செந்திலின் முகம் தெரிந்தது.

அவன் சொன்னபடி இன்றிரவு ஏதும் நடந்தால் அதில் அவனுக்கும் ஏதும் ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்தான் செந்தில்.

அக்கரைப்பற்று தபால் கந்தோருக்கு முன்னால் மின் கம்பத்தில் தொங்கியது யார் என்று பார்த்து விட்டு வந்தபோது ஓர் நெருக்கொழுங்கைக்குள் மறைவாக நின்ற செந்தில் அகிலனை கண்டதும் ஓடிவந்து கதைத்தான். அம்மா மூத்தம்மா. அக்காமார் எல்லாரையும் கேட்டவுடன் தான் அவசரமாக போகப் போகிறேன் என்றவனிடம் 'என்னடா அவசரம் ஏண்டா வீட்டுப் பக்கமே வாறதில்லை' என்றுகேட்ட போது முன்பு போல் இல்லாமல் விரக்தியாக சிரித்தான். செந்தில் அகிலனிடம் எதையும் எப்போதும் மறைத்ததில்லை. அகிலனோடு நின்ற உதயனை தூர போகச் சொல்லி விட்டு செந்தில் அகிலனிடம் சொன்னாள்.

'இந்தியாவில் இருந்து சாமான்கள் வந்திருக்கு எப்படி வேலை செய்யுதெண்டு இரவுக்குத்தான் பார்க்கப் போறம். கல்முனைப் பக்கம்தான் ஏதாவது ஒரு பெரிய கட்டிடத்துக்கு வைச்சுப்

பார்க்கபோறம் வெடிச்சால் சத்தம் பெரிதாகத்தான் கேட்கும். நம்மட பகுதிக்கும் சத்தம் கேட்கக் கூடும்' என்றான்.

'அதுக்கு நீ ஏண்டா போகப் போகிறாய்'

'என்னைத்தான் பொறுப்பாய் போட்டிருக்கினம். நான் போகத்தான் வேணும் இத ஒருத்தருக்கும் சொல்லாதை. நான் போயிட்டுவாறன்.'

காலையில் செந்தில் சொன்ன அந்த விசயம் இன்னும் சில நிமிடங்களிலோ மணித்தியாலங்களின் பின்போ நடக்கக்கூடும்.

அகிலனுக்கு நினைக்கவே பயமாய் இருந்தது. அப்படி அவனுக்கு ஏதும் நடந்தால் அதை எப்படி சின்னம்மாவும் இந்தக் குடும்பமும் தாங்கும். கல்முனையில் இன்றிரவு நடக்கப்போகும் புதினத்தின் பின் எந்தெந்த ஊரில் என்னென்ன நடக்கப் போகுதோ தெரியாது.

எதற்கும் உடும்பன் குளம் காட்டுப்பக்கம் போய் கொஞ்சநாள் நின்று நாளைக்கு போகலாம் என்று தான் சொல்லிவிட்டு வந்ததை நினைத்துக் கொண்டான் அகிலன்.

'என்னதம்பி அகிலா நித்திரை வரயில்லையோ.'

தானும் தூங்காமல்தான் இருக்கின்றா என்பதை கேள்வியால் காட்டிக் கொண்டா சின்னக்கா.

'நீயும் தூங்காமல் தான் இருக்கிறாயா அக்கா.'

'எங்கடா நித்திரை வருகுது எண்டமகன் போனதோட நித்திரையும் போச்சு. எண்டநிம்மதியும் போச்சு ம்... எப்ப நான் மண்ணுக்குள்ள போறனோ அப்ப தான் நிம்மதியும் நித்திரையும்.'

'சும்மா எந்த நேரமும் அழுது இருக்குற பிள்ளைகளையும் பேதலிக்க செய்யாம கண்ணமூடி படப்பா'. அத்தானின் பேச்சில் அக்கா மௌனமானா.

தூரத்தில் வாகனங்களின் இரைச்சல் இரவின் நிஷப்தத்தை கிழித்துக் கொண்டு அகிலனின் காதில் விழுந்தது. வாகனத்தின்

சத்தத்திலிருந்து அது பனங்காட்டு பாலத்தடியால்தான் வருகின்றது என்று ஊகிக்க முடிந்தது அவனால். இப்போது வாகனங்கள் ஊருக்குள் நுழைந்து விட்டதென்பதை வாகனங்களின் பெரிதான இரைச்சலிருந்து புரிந்து கொள்ளமுடிந்தது. ஊருக்குள் நுழைந்த வாகனங்கள் சந்தியில் நிறுத்தப்படும் சத்தத்தை தொடர்ந்து நாய்களின் குரைச்சல்களும் கேட்கின்றன.

'என்னடா தம்பி ஆமிக்காரன்கள் போல இருக்கு அவனுகள் தானோ' ஈனஸ்வரத்தில் கேட்டா அக்கா.

'சும்மா இரப்பா' ஏற்கனவே அவன் சும்மா பயந்துசாகிறவன். அக்காவை அடக்க முனைந்த அத்தானை அக்கா முந்திக்கொண்டு அடக்கினா.

'நீங்கமுதலில விளக்க அணையுங்கோ நாயெல்லாம் குரைக் குது'.

சந்தியில் கேட்ட நாய்களின் சத்தம் இப்போது ஒவ்வொரு வீடுகளிலும் கேட்கின்றது.

பலத்து குரைத்த நாய்கள் மெல்லமெல்ல தங்கள் குரல்களை அடக்கிக் கொண்டு மெதுவாக அடங்கி அழுவதுபோல் சத்தம் செய்கின்றன. ஆமிக்காரர்களை மிகவும் அருகில் நாய்கள் பார்க் கும்போது தூரத்தில் கண்டபோது காட்டிய எதிர்ப்பை குறைத்துக் கொள்ளும் என்பது உண்மை.

நாய்களின் குரல்கள் அடங்கியபோது சப்பாத்துக் கால்களின் சத்தம் துல்லியமாக காதில் விழுகின்றது.

'எடேய் தம்பி அவனுகள்தாண்டா. எண்டகதிரவேலா...'

அக்காவின் குரல் நடுங்கியது அகிலன் தனது கைகளை தலையணைக்குக் கீழ் ஒளித்துக் கொண்டான். அந்த இருட்டிலும் தனது கையில் அப்பியிருக்கும் சிவப்புசாயம் தெரிகின்றதென்ற பிரமையும் பயமும் அவனுக்கு.

இந்த நேரத்தில் மூத்தக்காவும் அம்மாவும் ஆச்சியும் எப்படி பதறித்துடிப்பார்கள் என்பதை நினைக்கும்போது அவனின் இத யம் கனத்தது.

சின்னக்கா வீட்டின் வளவு கதவும் கிறீச் சென்று திறந்து கொள்ளும் சத்தம் கேட்கின்றது.

'எண்டதம்பியே ஊரெல்லாம் சுத்திவளைச்சி ஒவ்வொரு வீட்டுவாசலுக்கும் வந்துட்டானுகளுடா. ஊரில உள்ள பெரிசு சிறிசு குஞ்சுகுருமானுகளையெல்லாம் ராவோடராவாக அள்ளிக் கொண்டு போகப் போறானுகளுடா. நான் என்ன செய்வண்டா இப்ப'

சின்னக்கா ஈனஸ்வரத்தில் அழுவது அகிலனை நடுங்கச் செய்தது. உடும்பன் குளம் காட்டுக்கு போகலாம் என்று உதயன் கூப்பிட்டபோது இன்று இல்லை நாளைக்கு போகலாமென்று சொல்லி தட்டிகழித்தது எவ்வளவு மடத்தனம் என்பதை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டான் அகிலன்.

வாசலுக்கு வந்துவிட்ட ஆமிக்காரர் சிங்களத்தில் ஏதேதோ குசுகுசுத்து கதைப்பது கேட்கின்றது. சின்னக்கா வீட்டு நாய் நிம்மி அழுவதா குரைப்பதா என்று தெரியாமல் இரண்டும் கெட்டான் குரலில் அனுகிக் கொண்டிருந்தது. தம்பி இந்தா நம்மட வாசலில் காலடியில தான் நிக்கிறான்கள் எழும்பி குந்தி இருந்து கொண்டு வாயால் பேசாமல் கைகளின் சைகையால் தன்னுடன் பேசும் அக்காவை பார்க்க பாவமாய் இருந்தது அகிலனுக்கு.

வாசலுக்கு வந்தும் ஏன் இன்னும் எதுவும் செய்யாமல் நிற்கின்றானுகள்.

ஊர்முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டு விட்டதென்று அறிந்த தும் மேலிடத்திலிருந்து பிறப்பிக்கப்படும் கட்டளைக்கு பின்புதான் ஆமிக்காரர் ஒரே நேரத்தில் சோதனையிடத் தொடங்குவார்களாம். பகல் நேர சுற்றிவளைப்பின் போது நடந்தவைகளை வாசுகி சொன்னபோது இப்படியும் சொன்னதாக அகிலனுக்கு ஞாபகம்.

ஆமிக்காரர் வீட்டை சுற்றி சுற்றி அடிக்கடி வருகின்றார்க ளென்பதை அவர்களின் சப்பாத்து கால்களில் மிதிபடும் ஓசைக ளின் சத்தத்திலிருந்து அறிய முடிகின்றது.

## 21

இந்த நிமிடமோ அடுத்த நிமிடமோ அவர்கள் கதவைதட் டப் போகின்றார்கள் என்று அகிலனின் இதயம் 'டக் டக்' என அடித்துக் கொண்டிருந்த நேரம் திடீரென கேட்ட பெரிய தொரு வெடிச்சத்தத்தில் வீடே அதிர்வதுபோல் இருந்தது. வெடிச்சத்தம் கேட்ட அடுத்தநிமிடம் எல்லா ஆமிக்காரரும் தட தடவென ஓடும் சத்தம்கேட்டது. சிறிது நேரத்தில் ஊருக்குள் இருந்து வாகனங்கள் விரைவாக புறப்பட்டு வெளியேறும் சத்தமும் கேட்டது. அது கல்முனைப்பக்கமிருந்து கேட்ட சத்தம்தான் என்பதையும் செந்தில் தன்னிடம் சொன்ன சம்பவம் தான் நடந்து விட்டதென்பதையும் அகிலன் ஒரு நொடியில் உணர்ந்து கொண்டான்.

'என்னடா தம்பி இவ்வளவு பெரிய சத்தம். எங்கயிருந்தோ தெரியாது. சத்தம் கேட்ட உடன இவனுகளும் ஓடிட்டானுகள் ஆருசெய்த புண்ணியமோ இண்டைக்கு இந்த ஊர் தப்பிச்சுது.' சின்னக்கா நிம்மதிப் பெருமூச்சு விட்டா. ஆனால் அகிலனுக்கு செந்திலின் நினைவாகவே இருந்தது. நடந்த சம்பவத்தில் அவ னுக்கு எதுவும் நடந்திருக்கக் கூடாதென்று மனதுக்குள் வேண்டிக் கொண்டான்.

நித்திரையில்லாமலேயே அந்த இரவு பொழுது நகர்ந்து கொண்டிருந்தது. எப்போது விடியும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தவனை ஆலையத்தின் அதிகாலை ஒலிபெருக்கி தட்டி எழுப்பியது.

'எம்பெருமான் பள்ளி எழுந்தருள்வாயே' என்று துரையப்பா ஒலிபெருக்கியில் திருப்பள்ளி எழுச்சி பாடிக்கொண்டிருந்தார். இரவு ஆமிக்காரர் ஊரைச் சுற்றிவளைத்ததில் ஏற்பட்ட பயத்தி னாலோ என்னவோ பெருமானை எழுப்ப துரையப்பா பாடும்

பாடல் பெருமானே நீ எழும்பப் போகிறாயா இல்லையா என்று கேட்பது போல் இருந்தது. பக்தர்கள் கூப்பிடும் போதெல்லாம் கடவுள்கள் ஓடிவருவார்களாய் இருந்திருந்தால் மனிதமும் மனிதரும் இவ்வளவு விரைவாக அழிய தொடங்கிஇருக்காதே. அகிலன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

இரவெல்லாம் கண் விழித்த அசதியில் தன்னையும் அறியாமல் தூங்கிப் போய் விடிந்து வெகுநேரமாகியும் எழும்பாமல் படுத்திருந்த அகிலனை சின்னக்கா ஓடிவந்து அவசரஅவசரமாக. எழுப்பி 'டேய் தம்பி எழும்பி வந்து புதினத்தைப் பாருடா' என்றா.

அகிலன் எழும்பி வந்த போது ஊர்சனங்களில் அரைவாசிக்கு மேல் கூடிநின்று புதினம் பார்த்துக் கொண்டு நின்றது.

சின்னக்காவின் வீட்டுக்கு முன்னால் அடுத்தகரையில் உள்ள வீதியால் ஐம்பதுக்கும் மேற்பட்ட ராணுவ வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தம்பிலுவில் திருக்கோயில் பக்கம் அணிவகுத்து செல்வதையே ஊர்சனம் புதினம் பார்த்துக் கொண்டிருந்தது.

'எந்த ஊர சுத்தி வளைச்சி எத்தனை பேரை அள்ளிக் கொண்டு போறானுகளோ.' சின்னக்கா சொல்லிக் கொண்டிருக்கும் போது அந்த இடத்துக்கு உதயனும் வந்து சேர்ந்தான்.

'நேற்று நான் சொன்னபடியே உடும்பன் குளம் போயிருக்க வேணும். இனியும் இங்கநிண்டால் ஆபத்து கெதியாய் வெளிக்கிடு போவம்' என்று அவசரப்படுத்தினான் உதயன்.

இனி ஒன்றும் செய்ய முடியாது எங்காவது சென்று மறைந்திருக்கத்தான் வேண்டும் சின்னக்காவிடம் சொல்லிவிட்டு தவமணி அக்கா வீட்டுக்கு வந்து தாயின் அருகில் அமர்ந்த போது 'எண்ட மகனே ஓடுமா மகனே. எங்கெண்டொலும் ஓடி ஒளிஞ்சி உசிரகாப் பாத்திக் கொள்ளுடா 'எண்டு கதறினா ஆச்சி.' தம்பி போதம்பி. எங்கெண்டாலும் ஓடுடா ராத்திரி வந்தவனுகளுற கண்ணுல பட்டிருந்தா என்ன கெதியடா கண்ணுக்கு முன்னால நடமாடி திரியுறது நீ ஒருத்தன் தான் உனக்கும் ஒண்டெண்டால் இனியாருடா இருக்கா இந்த குடும்பத்துல'. அக்கா அழுதா.

தவமணி அக்காவின் சின்னமகள் ஸ்ரீ அகிலனின் உடுப்புக ளில் சிலதை எடுத்து ஒரு பையினுள் வைத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். அரிசி பருப்பு போன்றவைகளை ஒரு பையினுள் போட்டுக் கொண்டு வந்து வாசுகி கொடுத்தாள். எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு தாயின் அருகில் அமர்ந்து 'அம்மா நான் போயிற்று வரவா' என்று கேட்டபோது அந்த தாயின் கண்களிலி ருந்து வடிந்த நீரை துடைத்து விட்டு எழுந்து வந்த அகிலனின் பின்னால் வந்து கொண்டிருந்த தவமணி அக்காவை நின்று திரும்பிப் பார்த்தான் அகிலன். தமக்கையின் கண்கள் கலங்கியிருப் பதை கவனித்தான்.

எண்டதம்பிமார் அத்தனைபேரும் ஒண்டாய் இருந்து ஓடி ஆடி சிரிச்சு விளையாடின மல்லிகை பந்தல் இப்ப வெறிச் சோடிப்போய் கிடக்குது. அடக்க முடியாத கவலை வார்த்தைக ளாக தமக்கையின் வாயிலிருந்து வந்தபோது அகிலனும் ஒருமுறை மல்லிகை பந்தலை நோக்கினான். அது வாடி வதங்கி உறங்கிக் கிடந்தது. தம்பி நீ போற பக்கம் இவன் செந்தில் வந்தானெண்டால் அவனையும் உன்னோடேயே சேர்த்து வைச்சுக் கொள்ளடா. பாவம் சின்னம்மா அவனை நினைச்சி நினைச்சி பைத்தியம் பிடிச்சவ மாதிரி பிதட்டுறா. அக்கா சொன்னதை காதில் வாங்கிக் கொண்டு நடந்தான் அகிலன்.

ராத்திரி கேட்ட வெடிச் சத்தமும் இன்று இவ்வளவு ராணுவம் அணிவகுத்துச் செல்வதும் செந்திலும் அவனைச் சேர்ந்தவர்களும் செய்த வேலையால்தான் என்பதையும் இதில் செந்திலுக்கு கூட ஏதாவது நடந்திருக்கலாம் என்ற செய்தியும் அகிலனைத் தவிர வேறு யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

செந்தில் போனதின் பின் தவமணி அக்கா செல்லம்மாவை பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்து அங்கு போய்விட்டா. அக்கரைப்பற்று சினேகிதிகளை சந்தித்து விட்டு வருவதாக

சொல்லி விட்டு வாசுகி சைக்கிளை தள்ளிக் கொண்டு வெளியே வந்தபோது கணேஷ் எதிரில் வந்தான். வாசுகி அவனை முறைத்து பார்த்துவிட்டு போனபோது. 'இப்படி திடிர் திடீரெண்டு போனால் தற்செயலாக ஆரும் ஆமிக்காரன்கள் வந்து ஊரைச் சுற்றி வளைத் தால் எங்கட நிலைமை என்னாகுறது.' காற்றோடு கதைப்பது போல் கணேஷ் தனக்குக் கதைப்பது அவள் காதில் விழுந்தும் அதை கேட்காதவள் போல அலட்சியம் செய்துவிட்டுபோன வாசுகியையே பார்த்துக் கொண்டு நின்றான் கணேஷ்.

செல்லம்மா இப்போது குணமாகியிருந்தா. தவமணி அக் காவை கண்டதும் 'வா மச்சாள் இரு' என்று இருக்க பாயெடுத்து போட்டா செல்லம்மா. குசினிக்குள் இருந்த வசந்தி ஓடிவந்து 'வாங்கோ மாமி' என்று சொல்லிக் கொண்டு அருகில் இருந்தாள். வசந்தியை உற்றுப் பார்த்தா தவமணி அக்கா பழைய கவலைகள் மறந்து வசந்தி சந்தோசமாய் இருப்பது போல் தெரிந்தது அவ வுக்கு. 'இருங்கோ மாமி தேத்தண்ணி கொண்டு வாறன்' என்று விட்டு குசினிக்குள் வசந்திபோய் விட தவமணி அக்கா மெதுவாக செல்லம்மாவிடம் கதை கொடுத்தா.

'எப்படி வசந்தி சந்தோசமாய் இருக்காவோ.'

'தம்பி தங்கச்சியவையளோட சேர்ந்து விளையாடி சந்தோச மாய் இருக்காள். மனசுக்குள்ள என்னத்த நினைச்சு புழுங்கிக் கொண்டிருக்குதோ ஆருகண்டா. ஆரம்பத்துல எடுத்தன் புடிச்சன் எண்டு நானும் நடுரோட்டுல நிண்டு கத்திக்குழறினாலும் அதுக்கு பிறகு எண்ட மகளுக்கு அந்த பெடியனவிட்டால் ஓர் அழகு வடிவான மாப்பிள்ளை கிடைக்கமாட்டானெண்டு நானே பெரு மைபட்டுக் கொண்டிருந்தன். எல்லாம் நடுவில நடந்து முடிஞ்சு போச்சி. எல்லாரும் திருக்கோயில் தம்பிலுவிலுக்கு போங்கோ எண்டு அண்டைக்கு வந்து வாசலிலநிண்டு சொன்னது இண் டைக்கு கண்ணுக்குள்ள நிற்குது. கோயில் வாசல் காவல்கார சிலைமாதிரி அரும்புமீசையும் அகண்ட மார்புமாய் எவ்வளவு அழகாய் இருந்த அந்த பெடியனை காலன் கூட்டிக் கொண்டு போவானெண்டு ஆர்கண்டது.'

செல்லம்மா சொல்லி முடித்தபோது வசந்தி தேனீர் கோப்பை யுடன் வந்தாள். இவ்வளவு நேரமும் தாய் பேசியவைகளை அவளும் கேட்டுக் கொண்டிருந்தாளென்பதை அவளின் கலங்கி கசக்கிய கண்கள் வெளிப்படுத்தின.

தவமணி அக்கா செல்லம்மா வீட்டுக்கு வந்து கனநேரமாத லால் அக்கரைப் பற்றுக்கு போயிருந்த வாசுகியும் திரும்பிவந்து செல்லம்மா வீட்டுக்கு வந்திருந்தாள்.

வாசுகியை கண்டதும் அவளைக் கூட்டிக் கொண்டு கிணற்றுப் பக்கம் சென்றாள் வசந்தி.

இருவரும் கனநேரம் எதையெதையெல்லாமோ பற்றி பேசி னார்கள்.

இன்று அகிலன் காட்டுக்கு போனதையும் தான் வரும்போது கணேஷ் கதைத்ததையும் சொன்னாள் வாசுகி. கடைசியாக வீட் டுக்கு போகலாம் என்று வாசுகியை தாய் கூப்பிட்டபோது வசந்தியிடம் வாசுகி கேட்டாள்.

'வசந்தி நான் இல்லையெண்டால்கூட எண்டஇடத்துல நீ எங்கட வீட்டுல மகளாய் இருப்பாயெண்டு நீ ஒரு நாள் சொன் னீயே. ஞாபகம் இருக்கா உனக்கு'

'ஓமோம் நினைவிருக்கு அதுக்கென்ன இப்ப'

'இல்லை நினைவிருக்குதா எண்டுகேட்டன். நினைவிருந் தால் சரி' சொல்லிவிட்டு தாயுடன் போய்க் கொண்டிருந்த வாசுகியை புதிராக பார்த்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

வாசுகியும் தாயும் வந்து கொண்டிருந்த போது காலையில் கூடிநின்று வேடிக்கை பார்த்தது போல் ஊர்சனமெல்லாம் ஆற்றங் கரை ஓரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்னென்று கேட்டபோது காலையில் திருக்கோயில் பக்கம் போன ராணுவ வாகனங்கள் மீண்டும் அக்கரைப்பற்றை நோக்கி அணிவகுத்து செல்லுகின்றதாம் என்று யாரோ சொன்னபோது ரோட்டுப் பக்கமிருந்து வந்த பார்வதியின் மகன் பரமேஸ்வரன்

சொன்ன செய்தி எல்லோரின் இதயங்களையும் உறைய வைத்தது. கல்முனை பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட ஐம்பதுக்கு மேல் பட்ட தமிழ் இளைஞர்களை தம்பட்டை கடற்கரையில் குழி தோண்டி குற்றுயுரும் குறையுருமாக புதைத்து விட்டு போகின்றார் களாம் என்று பரமேஸ்வரன் சொன்னபோது அந்தமுகம் தெரியாத தமிழ் இளைஞர்களை நினைத்து கூடிகின்ற எல்லோருமே அழு தார்கள். செந்திலும் கல்முனைப்பக்கம்தானாம் திரிகிறானாம் என்று தவமணிஅக்கா முன்பு கேள்விப் பட்டிருந்தா. இப்போது இந்த சம்பவத்தை நினைக்கும் போது செந்திலைப்பற்றிய சிந்தனை அவவுக்கு இன்னும் கூடியிருந்தது.

காலையில் சென்ற வாகனம் அனைத்தும் திரும்பிவிட்டதென ஊர்ந்து சென்ற வாகனங்களை ஒவ்வொன்றாக கணக்கெடுத்துமு டித்த இளைஞர்கள் தங்களின் சைக்கிளை எடுத்துக் கொண்டு தம்பட்டைக்கு ஓடினார்கள்.

தவமணி அக்காவுக்கு என்ன செய்வது என்னபேசுவதென்று தெரியவில்லை. யாரிடமும் எதுவும் பேசாமல் நடந்துவந்து மல்லிகை பந்தலின் கீழ் உட்கார்ந்தா. காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. சின்னமகள் ஸ்ரீ கொண்டுவந்து வைத்த தேத்தண ணியை 'வேணாம் மகள் கொண்டுபோ' என்று சொன்னதை மண்டபத்துக்குள் இருந்த கணவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

மல்லிகை பந்தலின் கீழ் தாய் வந்திருந்ததைக் கண்டதும் வந்து தாயின் தோளோடு சாய்ந்திருந்த சின்னமகன் குமாரின் முகத்தை உற்றுப்பார்த்தா தவமணி அக்கா.

ராணுவத்தையும் ராணுவ வாகனத்தையும் இதுவரை கண்ட தில்லை என்ற அங்கலாய்ப்பின் ஊருக்குள் முதன்முதல் ராணுவம் வந்த நேரம் புதினம் பார்க்க ரோட்டுக்கு ஓடிய இந்த சின்னஞ்சிறு பாலகனின் முகத்தில் கூட இப்போது மரணபயம் நிரந்தரமாக குடிகொண்டதற்கான காலத்தின் கோலத்தை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் இருந்தது அவவுக்கு

'எப்படி இருந்த ஊர் இப்படி ஆகி விட்டதே இது யாரால் எப்படி ஆனது. இதற்கு எப்போது ஒரு விடிவுகிடைக்கும்.

கிடைத்தும் என்ன என் தம்பிமார்கள் திரும்ப சேருவார்களா திரும்பவும் இந்த மல்லிகை பந்தல் பழையபடி பூத்துகுலுங்கி கலகலப்படையுமா' நினைத்துகொண்டே மல்லிகை பந்தலை அண்ணார்ந்து பார்த்தா. இப்போது காய்ந்துபோன சருகுகள் அதிகமாக தெரிந்தன.

## 22

அகிலன் உடும்பன் குளம் காட்டுக்குபோய் பத்துநாளாகியிருந்தது. அவன் போனதும் ஒரு வகையில் நல்லதுதான் என்று நினைத்து கொண்டா தவமணி அக்கா.

அகிலன் போய் இந்த பத்து நாட்களுக்குள்ளும் நான்கைந்து தடவை ஊரை சுற்றிவளைத்துவிட்டார்கள். குறிப்பிட்ட வயதுக் குட்பட்ட இளைஞர்கள் பலர் சுற்றிவளைப்பில் கைது செய்யப் பட்டு உடனுக்குடன் பூசாமுகாமுக்கு ஏற்றிவிடப்பட்டதால் ஊரில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் குறைந்திருந்தார்கள். வம்பிமரத் தடியிலும் கடையடிகளிலும் வயதுபோனவர்களே காணப்படுகின்றார்கள்.

இந்த முறையும் ஊரை சுற்றி வளைத்தபோது வழமைபோல் சுனில்தான் வீதி வாசலில் காவலுக்கு நின்றான். ஆனால் ஒருதரமேனும் அவன் தவமணி அக்கா வீட்டுப்பக்கம் திரும்பிக் கூட பார்க்கவில்லை நாட்டின் உக்கிரமான போரினால் ஏற்பட்ட கோபமோ என்னவோ அவனுக்கு.

தவமணி அக்கா வீட்டில் அடுத்தடுத்து நடந்த துக்க சம்பவங்கள் தெரிந்த என்னவோ, அல்லது இந்த வீட்டில் இனியார் ஆண்கள் இருப்பார்கள் என்ற நினைப்பிலோ என்னவோ இந்த முறை சுற்றிவளைப்புகளில் ஆமிக்காரர் ஒருதரமேனும் வந்து வீட்டை சோதனையிடவில்லை.

உடும்பன் குளம் காட்டுக்கு போய் பன்னிரெண்டாம் நாள் காலையில் திடீரென்று அகிலன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

தவமணி குசினி அடுப்பங்கரையில் குந்திக் கொண்டிருந்தா. அகிலனைக் கண்டதும் மருமகள் மார் அழுத்தொடங்கினார்கள். தாயின் காலடியில் சோகமாக இருந்த சின்னம்மா அகிலனைக் கண்டதும் 'மகனே தம்பி செந்திலைக் கண்டாயோடா இப்ப வாறன் எண்டுபோட்டு போனவன் இன்னும் வரையில்லை. இவன் எங்கபோயிற்றானோ தெரியயில்லை. அவனைக் கண்டால் ஒருக்கா வரச்சொல்லுடா சாப்பாடு ஆறிப்போகுதா.'

முன்னுக்கு பின்முரண்பாடா எதிலும் சம்பந்தமில்லாமல் பேசும் சின்னம்மாவை எதுவும் புரியாமல் பார்த்தான் அகிலன்.

இவ என்ன சொல்லுகின்றா. செந்தில் எப்போது வந்தான் இங்கு அதுவும் இந்த காலை நேரத்தில் வந்ததாக சொல்லுகின் றாவே அகிலனுக்கு எதுவுமே புரியவில்லை.

'டேய் உன்னிட்டதாண்டா கேட்கிறன். எண்டபுள்ளை செந்தி லைக் கண்டையடா?'

குசினிக்குள் நுழைய எத்தனித்தபோது சின்னம்மாவின் குரல் அவனை தடுத்து நிறுத்தியது.

ஏதாவது பொய் சொல்லிவிட்டு தப்பிவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டு 'ஓம் சின்னம்மா செந்திலைக் கண்டன் மத்தியானத்துக்கு வருவான்.' சொல்லிக்கொண்டு குசினிக்குள் சென்ற அகிலனை நிமிர்ந்து பார்த்தா தவமணி அக்கா.

'என்னக்கா சின்னம்மா ஒரு மாதிரியாக கதைக்கிறா' தமைக் கையிடம் கேட்டான் அகிலன்.

சின்னம்மா மட்டுமில்ல இந்த குடும்பத்துல இனி எல்லாரும் அப்படித் தான் கதைப்பாங்கள் போல தெரியுது. விரக்தியாக கதைத்தா அக்கா. அகிலனுக்கு எதுவும் விளங்கவில்லை.

'நீ எங்க பார்த்தாய் செந்திலை. அக்காகேட்டபோது சின்னம் மாவிடம் சொன்னபொய்யை அக்காவிடம் சொல்லமுடியாமல் நின்றபோது அக்காவே தொடர்ந்தா.'

‘எனக்கு தெரியும் நீ பொய்தான் சொல்லுறாய் எண்டு. ஏனெண்டால் செந்தில் உயிரோட இருந்தால்தானே நீ அவன பார்த்திருக்க முடியும். உன்னால மட்டுமில்ல இனி நம்ம எவராலை யும் அவனை பார்க்கமுடியாது. அவனும் போய் சேர்ந்திட்டான்.’

அக்கா சொன்னதை நம்பமுடியாதவனாய் நின்றான் அகிலன்.

‘எனக்கு தெரியும் அவனுக்கு கட்டாயம் எதுவும் நடந்திருக்கு மெண்டு அண்டைக்கே சொன்னன் நீ போகாதையடா எண்டு. அவன் கேட்கையில்ல புதுசாமான்கள் வந்திருக்கு வெடிக்கவைச்சு பார்க்கப் போறமெண்டு சொல்லி போனான் இப்ப அவனும் போயிட்டான் அண்டைக்கு இரவு ஊருக்குள் வந்த ராணுவம் சத்தம் கேட்டதும் ஓடினதுமே நான் நினைச்சன் அவனுக்கும் ஏதும் நடக்குமெண்டு. நான் நினைச்சது சரியாய் போய்ச்சுது.’

அகிலன் சொல்வதை அலட்சியமாக கேட்டுக் கொண்டிருந்தா தவமணி அக்கா.

‘நீ நினைக்கிறது போல செந்தில் ஆமிக்காரன்களால சுடுபட் டுசாகயில்லை...’

‘அப்ப ஆரக்கா சுட்டது.’

‘படுவான் கரையில நடந்த இயக்க மோதலில செந்திலை சுட்டுச் சாக்காட்டி போட்டான்கள். சுட்டது ஆரெண்டு தெரியுமோ உனக்கு. வேற ஆருமில்ல நவரெத்தினத்தோட ஆட்கள் தானாம். என்ன கொடுமையடா இது. ஏண்டா நம்மட குடும்பத்துக்கு மட்டும் இப்படி சோதனை ஏற்படுகுது’ அக்கா மூக்கை கீறி விரல்களால் வடித்து எறிந்து கொண்டா.

வெளியில் எட்டிப் பார்த்தான் அகிலன். நேசம்மா மாமி வந்து அகிலனின் தாயின் அருகில் உட்கார்ந்தா. மாமியை கண்டதும் சின்னம்மா தனக்குள்ளேயே ஏதோ சொல்லிக் கொண்டா அகிலன் தமக்கையை பார்த்தான்.

செந்திலை சுட்டுப் போட்டான்களாம் என்று கேள்விபட்டதில இருந்து இப்படித்தான் பிதட்டிக் கொண்டிருக்கா சின்னம்மா.

பாவம் அவவும் எத்தனையெண்டுதான் தாங்குவா. பைத்திய மாதிரி அலம்புறா என்ன செய்யுறதெண்டு தெரியயில்ல. நானும் படுவான்கரை பக்கமெல்லாம் போய் நாய் மாதிரி அலைஞ்சு திரிஞ்சு தேடிப்பார்த்தன். உடம்பையாவது காணலாமெண்டு அலையாய் அலைஞ்சன் என்னால ஆருக்கிட்டயும் நெருங்கமுடி யயில்ல. நானும் வந்திட்டன் இந்த புதினமெல்லாத்தையும் பார்க் காமல் செத்துப் போகலாம் போல இருக்கு.' அழுதுகொண்டிருந்த தமைக்கையையே பார்த்துக் கொண்டிருந்த அகிலனின் கண்கள் கலங்கியது.

'நவரெத்தினத்தை சந்திக்கையில்லையோ அக்கா' என்று அகிலன் கேட்டபோது அவவின்முகம் கோபத்தில் சிவந்தது.

'நான் அவனப் பார்க்க விரும்பயில்ல. நடந்தது உண்மைதா னெண்டும் அக்காவ அலைஞ்சு திரியாமல் ஊருக்கு போகட்டா மென்றும் படுவான் கரையில நான் நின்றபோது சொல்லியனுப்பி னான். நான் வந்திட்டன். ரெண்டு நாளாக இந்த புள்ளக்குஞ்சுக ளும் சோறு தண்ணியில்லாமல் கிடக்குதுகள். அதுக்கிடையில அம்மாவுக்கும் இப்பபாடாவதியா போயிட்டுது. பாவம் ஆச்சி சாகுறவயதுல பாடாய்படுறா.' அக்கா சொல்லிமுடிப்பதற்குள் அகிலன் வெளியில் வந்து தாயைப் பார்த்தான். மகனைக் கண்ட தும் படுத்திருந்த தாய் தலையைச் சரித்து அகிலனைப் பார்த்தா. அகிலன் எதுவும் பேசாமல் தாயையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'இந்தா இருக்கான் இவன் தானே எண்ட புள்ளய புடிச்சுக் கொடுத்து சாக்காட்ட வைச்சவன் டேய் நீ நல்லாய் இருக்கமாட் டாய் டா?' அருகில் இருந்த சின்னம்மா அகிலனை தள்ளிவிட்டு அவ சொன்னபோது குசினிக்குள் அக்கா சொன்னது நினைவு வந்தவனாய் எழுந்து மல்லிகை பந்தலின் கீழ் போய் இருந்தான்.

'ஏன் மச்சான் இன்னும் என்ன புதினங்கள காணவேண்டு மெண்டு உண்ட கடைசி மூச்ச கையில புடிச்சுக் கொண்டு கிடக்கிறாய் நிம்மதியாய் போய் சேரன் மச்சான். என்ன ஈறலோ

ஆரோட கவலையோ இந்த ஆத்துமா போய்க் கொள்ள முடியா மல் கிடந்து அல்லாடுது.'

படுக்கையில் கிடக்கும் தாயிடம் நேசம்மா மாமி கதைப்பது அகிலனின் காதில் விழுகின்றது.

நேசம்மா மாமி நல்லவ. இந்த குடும்பத்தில் என்ன நல்லது கெட்டது நடந்தாலும் முதல் ஆளாக வாசலில் வந்து நிற்பது அவதான்.

அகிலன் வந்திருக்கின்றானாம் என்று கேள்விபட்டு சின் னக்கா வந்திருந்தா.

'ஏண்டா தம்பி அவசரப்பட்டு வந்தாய் இப்ப ஒவ்வொரு நாளும் இங்க சுற்றிவளைப்புதான். தினம் தினம் ஆராவது பெடியன்களை அள்ளிக் கொண்டுபோறான்கள். கொண்டு போய் அங்க செய்யுற சித்திரவதை கொஞ்சமில்லையாம்.'

சின்னக்கா சொல்வதை கேட்டுக் கொண்டுமௌனமாகவே இருந்தான் அகிலன். கொஞ்சநேரம் நின்று விட்டு வீட்டின் மண்டபத்துக்குள் போக முற்பட்டவ அகிலனைத் திரும்பிப் பார்த்துசொன்னா.

'தம்பி அம்மாவுக்கும் இனி கனநாள் செல்லாதாம் எண்டு சொல்லுறாங்கள். ஒவ்வொருநாளும் சொந்தக்காரர் வந்து வந்து பார்த்துவிட்டு போறாங்க. இரவுல கந்தையா மாமா வந்துவிடிய விடிய திருப்புராணமும், திருப்புகழும், தேவார திருவாசகம் பாடிக்கொண்டிருக்கார். பாவம் அம்மாவும் இனி நம்மள விட் டுட்டு போயிடுவா போல தெரியுது.' சொல்லிவிட்டு சிறிது நேரத்தில் மண்டபத்துக்குள் சின்னக்கா போய் கொஞ்ச நேரத்தில் தவமணி அக்கா வந்தா. அகிலனின் கண்கள் கலங்கியிருப்பதை கவனித்துக் கொண்டா.

'நீ ஏண்டா அவசரப்பட்டு வந்துட்ட ஊருல என்னென்ன நடக்குதெண்டு உனக்கு தெரியாதோ கடைசியாக மிஞ்சிக் கிடக்கு றத நீ ஒருத்தன் உனக்கும் ஒண்டெென்றால் நாங்கள் என்ன

செய்வம்' பேசிக் கொண்டிருக்கும் தமக்கையை உற்றுப் பார்த்தான் அகிலன்.

'இல்லையக்கா எனக்கெது நடந்தாலும் பரவாயில்ல. நான் இனி அம்மாவுக்கு பக்கத்திலேயே இருந்திர்றன். ஏனக்கா அம்மா இன்னும் கனநாளுக்கு நம்மளோட இருக்க மாட்டாவாம். மெய் தானோ அக்கா' என்று அகிலன்கேட்ட போது அக்காவால் தன்னைக்கட்டுப்படுத்த முடியாமல் அவஅழுததைப் பார்த்து அகிலனும் அழுது கொண்டிருந்தான்.

பகல் முழுவதும் மல்லிகை பந்தலின் கீழேயே படுத்திருந் தான் அகிலன். வசந்தி வீட்டிலிருந்து வசந்தி கொண்டு வந்த சாப்பாட்டை வாசுகி திண்ணையில் மூடி வைத்து விட்டு போனாள். அதுமூடியபடியே அகிலனால் திறந்து பார்க்கக் கூட இல்லாமல் இருந்தது.

பகல்முழுவதும் யார் யாரோவெல்லாம் வந்து தன் தாயை பார்த்துவிட்டு போகின்றார்கள் என்பதை வந்து போனவர்களின் பேச்சுகுரல்களிலிருந்து அகிலனால் அறிய முடிந்தது.

தன் தாயைப் பார்க்க வருகின்றார்களா அல்லது செந்தில் இறந்து போன துக்க வீட்டுக்கு வருகின்றார்களா என்றுபுரிய வில்லை அவனுக்கு. நடந்து முடிந்த இழவுக்கு துக்கவிசாரிப்பா அல்லது நடக்கப் போகும் சாவுக்கு அனுதாப வரவா? சிரிப்பதா அழுவதா என்று தெரியாத வாழ்க்கை.

'இன்று அக்கரைப்பற்று சுற்றி வளைக்கப்பட்டதாம். நல்லகால மாக நம்மட ஊர் தப்பிற்றுது.' தாயைப் பார்க்கவந்த யாரோ ஓர் பெண் வாசலில் கதைப்பது காதில் விழுகின்றது. அந்த பெண் ணுக்கு நமது ஊர் சுற்றி வளைக்கப்படாததில் சந்தோசமா அல்லது தனக்கு அக்கரைப்பற்றில் யாரோ கோபக்காரர் இருக்கிறார்கள் என்பதுபோல் அதனால் அந்த ஊர் சுற்றிவளைக்கப்பட்டதில் ஓர் சந்தோசமா என்று இனம்புரியாமல் இருந்தது அந்த பேச்சு.

பொழுது சாய்ந்து இரவாகி விட்டிருந்தது. தாயைப் பார்க்க வந்து போனவர்களின் வருகை இடைநிறுத்தம் செய்ததுபோல்

தடைபட்டுவிட்டிருந்தது. பகல்வந்த செல்லம்மா இரண்டொரு நாள் வசந்தி இங்கேயே நிற்கட்டும் என்று விட்டுவிட்டு சென்றிருந்தா. வசந்தியும் வாசுகியும் மற்ற மருமகள்மாரும் ஒரு அறையில் தூங்கிவிட்டார்கள். அத்தான் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். அவரின் அருகில் குமாரும் சின்னம்மாவின் சின்ன மகன் பாஸ்கரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளின் விளையாட்டுச் சத்தமில்லாமல் அந்த வீடும் வாசலும் அமைதியாக இருந்தது.

கந்தையா மாமா வந்து திருப்புகழ் பாடத் தொடங்கினார். அந்த சூழ்நிலை அகிலனின் மனதை ஏதோ செய்தது போல் இருக்க எழும்பிவந்து தாயின் அருகில் இருந்தான்.

'ஏனம்மா நீயும் என்னை விட்டு போகத்தான் போகின்றாயா' என்று கேட்பதுபோல் தாயைப் பார்த்தான். நான் பெத்த மூத்தமகன் எனக்கு முன்னாலேயே கண்ணைமூடி என்னை முந்திக் கொண்டு நீ போகப் போறாயாடி மகளே என்று கேட்டுக் கொண்டு மகளின் தலையை வருடிவிட்டுக் கொண்டிருந்தா ஆச்சி. நுளம்புக்காக வாசலில் வைத்திருந்த புகைச்சட்டியில் பச்சை தேங்காய் மட்டைகளை அடிக்கிக் கொண்டிருந்த நேசம்மா மாமி 'என்ன பொடியா (மருமகன்) தேத்தண்ணி கீத்தண்ணி ஏதும் குடிக்கப் போறியளோ போட்டுத்தரவோ' என்று அகிலனிடம் கேட்டபோது வேணாம் மாமி என்று சொல்லிவிட்டு மீண்டும் மல்லிகை பந்தலின் கீழ் வந்துபடுத்துக் கொண்டான் அகிலன்.

## 23

இறப்பும் பிறப்பும் வாழ்வில் நிகழும் ஓர் சம்பவம் தான். இருந்தும் இந்த இறப்பை மட்டும் ஏன் மனிதரால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றதோ தெரியவில்லை.

தானும், செந்திலும், நவரெத்தினமும், ராமுவும், முகிலனும் இதே மல்லிகை பந்தலின் கீழ் ஒருகாலத்தில் கட்டிப் புரண்டு விளையாடியதை நினைத்துக் கொண்டான் அகிலன்.

'டேய் நீங்களெல்லாம் என்னடா அண்ணன் தம்பிமாரோ இல்ல மச்சான் மச்சினனோ' என்று அகப்பையோடு வந்து தங்களின் சண்டையை விலக்கி விட்டுபோன தாய் நினைவில் வந்துபோனாள்.

காரணி மாமியின் தோட்டத்துக்குள் நடுச்சாமத்தில் நண்பர்களுடன் நுழைந்து மரவள்ளிக்கிழங்கு பிடுங்கி அவித்துதின்றுவிட்டு இரவில் தானும் நவரெத்தினமும் பதுங்கி பதுங்கி வந்து மல்லிகை பந்தலின் கீழ் வந்தபோது இருட்டினில் கண்தெரியாமல் மல்லிகை பந்தலின் கீழ் படுத்திருந்த ஆச்சியின் காலில் ஏறி மிதித்த போது ஆச்சி தட்டுக் கெட்டுஎழும்பி 'எடியே கள்ளன்கள் வந்துட்டானுகளடி எழும்புங்கடி' என்று நடுச்சாமத்தில் ஊரைக்கூட்டி கத்தி எல்லோரையும் எழுப்பிவிட நடந்ததை அறிந்து எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்ததும் நினைவில் வந்து நிழலாடியது.

ஒருமுறை சிவராத்திரி இரவன்று விரதமிருந்த ஆச்சியை விழித்திருக்க வைப்பதற்காக மல்லிகை பந்தலின் கீழ் தாங்கள் எல்லோரும் தாயம் விளையாடிவிட்டு விடியும்போது திரும்பி பார்த்தபோது விரதம் இருந்த ஆச்சிகுறட்டை விட்டு நித்திரை கொண்டிருந்ததைக் கண்டதும் ராமுவும் முகிலனும் ஆச்சியின் மேல் தண்ணீர் ஊற்றியதையும் இதையெல்லாம் பார்த்து சிரித்த அக்காவும் அம்மாவும் இப்போது எதிரில் நிற்பதுபோல் இருந்தது அகிலனுக்கு.

பழைய நினைவுகளில் மூழ்கி இருந்தவனை எங்கோ கேட்ட வெடிச்சத்தம் தட்டி எழும்பியது. தான் மட்டும் தனிமையில் மல்லிகை பந்தலின் கீழ் படுத்திருப்பதை அப்போதுதான் உணர்ந்தான். பந்தலின் மேலிருந்து சருகுகள் வந்து முகத்தில் விழுந்தது ஒரு காலத்தில் இரவு நேரங்களில் பன்னீர் தெளித்ததுபோல் வளவு முழுவதும் மணம்பரப்பி பூச்சொரிந்த அந்த மல்லிகைப் பந்தலை அவனின் மனம் தேடியது. இனியாவது வருமா அல்லது இருப்பதும் சருகுகளாகி விடுமா. இனி என்னவென்றுவரும் சதீஸும் செந்திலும் இனி உயிருடன் வருவார்களா இல்லையே... முடியாதே...

விடிந்து விட்டது. விடிவதற்குமுன்பே கந்தையா மாமா போய்விட்டார்.

வாசுகி எழும்பி அடிப்பெரித்து தேனீருக்கு தண்ணீர் வைத்தாள். வசந்தி வாசல் பெருக்கிக் கொண்டிருந்தாள். அத்தான் சாமிபடங்களுக்கு வைக்க கிணற்றடியிலுள்ள செவ்வரத்தையிலிருந்து பூக்களை பறித்துக் கொண்டிருந்தார். அகிலனின் தாய் நேற்று உடுத்திருந்த சேலை சட்டையை கிணற்றடிக்கு கொண்டு வந்து கழுவி கொண்டிருந்தா நேசம்மா மாமி.

வசந்தியின் தாய் இடியப்பமும் சம்பலும் கொண்டு வந்திருந்தா. குசினிக்குள் பிள்ளைகளுக்கு காலைச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

'நேற்றில் இருந்து நீங்க எதுவும் சாப்பிடயில்ல கொஞ்சம் இடியப்பமாவது சாப்பிடுங்கோவன்' மாமா முகம் கழுவிவிட்டு கிணற்றுகட்டின் மேல் ஏறியிருந்த அகிலனிடம் கேட்ட வாசுகியிடம் 'இப்ப வேணாம் பிறகு சாப்பிடுகிறேன்' என்று சொல்ல அவன் எதுவும் பேசாமல் போய்விட தவமணி அக்கா வந்தா.

'தம்பி அக்கரைப்பற்றுக்கு போய் ராசம்மா மாமிய ஒருக்கா வரச்சொல்லி விட்டுவாவன்' என்று சொன்ன தமக்கையை ஏன் என்பது போல் பார்த்த அகிலனின் முகத்தை நேருக்கு நேர் பார்ப்பதை தவிர்த்துக் கொண்டா தவமணி அக்கா.

ராசம்மா மாமி அகிலனின் தகப்பனின் சொந்த தங்கை.

'உனக்கு தெரியும் தானே மாமிட குணம். அம்மாவுக்கு ஏதும் எண்டால் தான் பக்கத்துல இருந்து தன்னோட கடமை எல்லாம் செய்யவேணும் எண்டும் அம்மாவுக்கு என்னவும் எண்டால் தனக்கு உடனே சொல்லி அனுப்ப வேண்டும் அவ சொல்லிக் கொண்டிருந்தா அதுதான் நீ ஒருக்கா போய் அவவ வரச் சொல்லிற்றுவா.' சொன்ன தமக்கையை கவலையுடன் பார்த்தான் அகிலன்.

'அதுக்கு இப்ப என்னக்கா அவசரம்.'

கேட்ட அகிலனிடம் ஏதோ சொல்ல வாயெடுத்த தமக்கை சொல்லவந்ததை சொல்லாமல் 'நீ எதுக்கும் போய் மாமிய வரச்சொல்லிட்டுவாவன்' என்றுவிட்டு போய்விட்டா.

கிணற்றுகட்டிலிருந்து இறங்கி போய் தாயைப் பார்த்தான். எதையோ வெறித்து பார்த்தபடி படுத்த தாயைப்பார்க்க அழுகை வந்தது அவனுக்கு.

'போய் அவசரமாய் மாமியவரச் சொல்லிற்றுவா.' ஆச்சி சொன்னா.

சுவரில் சாத்திக்கிடந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தபோது பின்னால் நடந்து வந்த தமக்கை சொன்னா. 'தம்பி மாமிக்கிட்ட சொல்லிப் போட்டு நீயும் சுணங்காமல் வந்துடு.'

தமக்கை சொன்னது காதில் கேட்க சைக்கிளை வேகமாக மிதித்துக் கொண்டு சென்றான் அகிலன்.

அகிலன் சென்று ஓரிரு மணிநேரத்தில் ராசம்மா மாமி வந்துசேர்ந்தா. அகிலன் எங்க மாமி என்று கேட்டபோது அவன் உடனே திரும்பி விட்டதாக மாமி சொல்ல கனநேரமாகியும் அகிலன் வராததால் ரோட்டுக்கு வந்தா தவமணி அக்கா. எதிர் கொண்டுவந்த செல்லம்மா 'என்ன மச்சாள்' என்று கேட்டபோது 'அகிலன் அக்கரைபற்றுக்கு போய் கன நேரமாகுது இன்னும் அவனக் காணயில்ல அதுதான் பார்த்துக் கொண்டு நிக்கிறன்' என்றா.

'அக்கரைப்பற்று சந்தைக்கு சாமான்கள் வாங்கச் சென்றவர் கள் அவசரமாக திரும்பிக் கொண்டிருந்தார்கள் என்ன வென்று கேட்டபோது அக்கரைப்பற்று சுற்றி வளைக்கப்பட்டிருக்கின்ற தென்றார்கள்.' தவமணி அக்காவுக்கு திக் என்றது.

அக்கரைப் பற்றிலிருந்து வருவோரிடமெல்லாம் 'தம்பிய கண்டீர்களா' என்று கேட்டபோது தாங்கள் அக்கரைப்பற்றுக்கு போகவில்லை இடையில் திரும்பி வந்துவிட்டோமென்றே பதில் சொன்னார்கள்.

என்ன செய்வதென்று தவித்துக் கொண்டிருந்த நேரம் அக்கரைப்பற்றிலிருந்து கையில் சாமான்களுடன் தங்கம்மா சின்னம்மா வந்து கொண்டிருந்தா. தங்கம்மா தவமணி அக்காவுக்கு தூரத்துச் சொந்தம். தவமணி அக்காவைக் கண்டதும் 'என்னபுள்ள ரோட்டுல நிற்கிறாய்' என்று கேட்டபோது 'இல்ல சின்னம்மா தம்பி அக்கரைப்பற்றுக்கு போனான் இன்னும் வரயில்ல அதுதான் பார்த்துக் கொண்டு நிற்கிறன்' என்றா.

'புள்ள நானும் அக்கரைப்பற்றில இருந்துதான் வாறன். ஊரையேசுற்றி வளைச்சு ஊரில உள்ள பெடியன்களையெல்லாம் றோட்டுல கொண்டு வந்து இருத்தியிருக்காங்கள் றோட்டுல இருந்த பெடியன்களுக்குள்ள உண்டதம்பி அகிலனையும் கண்டன் புள்ள. விசாரிச்சி போட்டு விட்டுடுவாங்கள் கவலைப்படாமல் போபுள்ள' என்று சொல்லிவிட்டு தங்கம்மா சின்னம்மா போய் விட்டா.

தவமணியக்காவுக்கு கை கால்களெல்லாம் நடுங்கத் தொடங்கியது. வேகமாக நடந்து அக்கரைப்பற்றை அடைந்தபோது வீதியெல்லாம் தாய் மார்களின் ஒப்பாரி ஓலம் கேட்டது. தப்பி ஓட முயன்ற பல இளைஞர்களை கொக்கு குருவியை சுடுவது போல சுட்டார்களாம். பிடிபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை லொறிகளில் ஏற்றிக் கொண்டு அம்பாறைக்கு கொண்டு போகின்றார்களாம். இதுவரையில் நடந்த சுற்றி வளைப்புகளிலேயே இதுதான் பெரிய சுற்றிவளைப்பாம். காதில் கேட்ட செய்திகள் தவமணி அக்காவை என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாற வைத்தது.

வீட்டுக்கு திரும்பி ஓடி வந்தவ விசயத்தை சொல்லிவிட்டு கணவனையும் கூட்டிக் கொண்டு மீண்டும் அக்கரைப்பற்றுக்கு சென்றா. தன் கணவனுக்கும் தன் தகப்பனுக்கும் தெரிந்த முஸ்லீம் சினேகிதர்களிடம் கெஞ்சினா. நேரடியாக சென்று விசாரிக்க முடியாதென்று சொல்லி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கைதானவர்கள் எங்கு சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டா.

அம்பாறை கொண்ட வெட்டுவான் ராணுவ முகாமில் கைதா னவர்கள் விசாரணைக்காக கொண்டு செல்லப் பட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டு வீடுவந்து சேர்ந்தபோது இரவு பத்துமணி யாகியிருந்தது.

கந்தையா மாமா வழமைபோல் திருப்புகழ் பாடிக் கொண்டி ருந்தார். ராசம்மா மாமியும், நேசம்மா மாமியும் தாய்க்கு பக்கத்தில் காவல் இருந்தார்கள். சின்னம்மா சுவரையே பார்த்தபடி இருந்தா.

மூன்று நாளாகியும் அகிலனை பற்றியோ பிடிபட்டவர்களைப் பற்றியோ எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. இதற்கிடையில் பிடிபட்டவர்களுள் தப்பியோட முற்பட்டார்கள் என்பதற்காக அக்கரைப்பற்று வீரகேசரி நிருபர் தேவராஜாவும் இன்னும் இருவ ரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று வானொலி செய்தி சொன்னபோது ஊரே பயத்தில் நடுங்கிது.

அம்பாறை கொண்ட வெட்டுவான் ராணுவ முகாம் பொல் லாத முகாம் என்று ஊரில் எல்லோருக்கும் தெரியும்.

தம்பியை பற்றி அழுது புலம்பிக் கொண்டிருந்த நேரம் பிடிபட்டவர்களில் சிலர் விடுதலையாகி வந்திருக்கிறார்களாம் என அறிந்து அவர்களிடம் ஓடிப்போய் எண்ட தம்பி எங்கப்பா என்று விசாரித்தபோது எங்களையெல்லாம் விட்டுவிட்டு ஐம்பத்தொன் பது பேர்களை மட்டும் பூசாமுகாமுக்கு ஏற்றிவிட்டார்கள் என்றும் அதில் அகிலனும் அடக்கம் என்று அவர்கள் சொன்னபோது தவமணி அக்கா தலையில் அடித்து கதறி அழுதா.

வீட்டுக்கு வந்து விசயத்தை சொன்ன போது வீடே சாவீடாக மாறியது. மருமக்கள் பிள்ளைகள் அகிலனை நினைத்து ஒப்பாரி வைத்தார்கள். 'உனக்கு கடைசி சொட்டு தண்ணி ஊத்த மிஞ்சி இருந்த பிள்ளையும் போயிற்றாண்டி. நீ கொடுத்து வைச்சது இவ்வளவு தாண்டி' என்று ஆச்சி மகளை பார்த்து சொல்லி அழுதா.

குசினிக்குள் இருந்த தவமணி அக்காவுக்கு அகிலனின் நினைவு மனதை நெருடியது. இரண்டு நாளாக சாப்பிடாமல் இருந்தவனை நான்தானே அனுப்பினேன் என்று தன்னையே நொந்து கொண்டவ பரவாயில்ல இவனாவது பிடிபட்டு எங்கிருக் கிறான் என்பதைக் கூட அறிந்து கொண்டேனே. ஊருக்குள் இருந்து தினம் தினம் செத்துப் பிழைப்பதை விட எத்தனை வருடமாவது சிறைக்குள்ளிருந்துவிட்டு வெளியில் வரட்டுமென்று நினைத்தவவை எண்பத்தி மூன்றாம் ஆண்டு வெலிக்கடை சிறையு டைப்பு சம்பவம் நினைவுக்கு வந்து பயம் காட்டியது.

தம்பி பிடிபட்டதை அறிந்தால் சவூதியில் இருக்கும் தமையன் முகிலன் எப்படி துடித்துப் போவான் என்பதையும் 'அக்கா தம்பி கவனம். அக்கா அவனை பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வை' என்று அவன் அடிக்கடி எழுதுவதையும் நினைத்துக் கொண்டா.

ஒரு சின்ன சத்தம் கேட்டாலும் பயந்து நடுங்கி ஆமிக்காரரை நினைத்தாலே ஒடுங்கி போய் ஒளிந்து வாழ்ந்தவன் இப்போது தானே போய் வலையில் விழுந்தது போல் மாட்டிக் கொண்டுவிட் டானே. முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கே முகமும் உடம்பும் வீங்கிப் போயிருக்கின்றதென்றால் குற்றவாளி என கணித்து பூசாவுக்கு ஏற்றப்பட்ட தம்பியை எவ்வளவு சித்திரவதை செய்திருப்பார்கள்.

தலைகீழாக கட்டி தொங்கவிட்டு முகத்தை சாக்கினால் மூடிவிட்டு கீழே அடுப்பை எரியவிட்டு காய்ந்த மிளகாயை அடுப்பில் போட்டு முகத்துக்கு புகை அடித்தார்களாம். அப்போது அகிலன் துடித்ததை தங்களால் சகிக்க முடியாமல் இருந்ததாம் என்று விடுவிக்கப் பட்டவர்கள் வந்து சொன்னதை தவமணி அக்கா வீட்டில் யாருக்கும் சொல்லவில்லை. சோகத்தில் இருக்கும் மருமகள் மாரிடம் இதையும் சொன்னால் துடித்துபோய் விடுவார் கள்கள் என்று தன் மனதுக்குள்ளேயே போட்டு புதைத்துக் கொண்டா.

# 24

அகிலனை விட எத்தனையோ வகைகளிலெல்லாம் இயக்கங்களுடன் தொடர்புடையவர்களை யெல்லாம் விட்டு விட்டு அகிலனை பூசாமுகாமுக்கு ஏற்ற அவன் செய்த குற்றம்தான் என்ன. நவரெத்தினத்துக்கு அகிலன் தம்பிமுறையாம் அதுதா னாம். அவன் செய்த குற்றம். நினைக்கும் போதே நெஞ்சு வெடித்துவிடும் போல் இருந்தது தவமணி அக்காவுக்கு.

திடீரென மண்டபத்துக்குள்ளிருந்து வந்த பேச்சுக் குரலினால் அகிலனின் நினைவிலிருந்து விடுபட்டு தவமணி அக்கா எழுந்து மண்டபத்துக்குள் ஓடிய போது நேசம்மா மாமி தாயின் தலையை தன் மடியில் சாய்த்து வைத்துக் கொண்டிருந்தா.

'என்ன மச்சாள் இன்னும் நீ கொண்டுவந்த அரிசிய முடிக்கை யில்லையோ ஆர நினைச்சு இப்படி உசிர கையில பிடிச்சுக் கொண்டு கிடந்து அல்லாடுகிறாய்' என்று ராசம்மா மாமி கேட்டுக் கொண்டிருந்தா.

ஆச்சிக்கு என்ன தீர்க்க தரிசனமோ தெரியாது எதையோ செய்ய ஆயத்த படுவதுபோல் மகளுக்கு அருகில் குந்திக் கொண்டிருந்தா தாயைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்த தவமணியக்காவை தாயின் தலைமாட்டில் இருக்கும்படி சைகை யால் சொன்னா ராசாம்மா மாமி.

தாயின் அருகில் இருந்ததும் தன்னையோ நிலைகுத்தி பார்த் துக் கொண்டிருந்த தாயின் கண்களை நோக்கி என்னம்மா என்று கேட்டு நன்றியை தடவிவிட்டுக் கொண்டபோது வீட்டுக்குள்ளி ருந்து எல்லா பிள்ளைகளும் எழும்பிவந்து சுற்றி நின்று கொண்ட னர்.

சுற்றி நின்ற பிள்ளைகளை ஒரு தடவை வட்டமிட்டு பார்த்தன தவமணி அக்காவின் தாயின் கண்கள்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தபோது தாயின் தொண்டைக் குழி வேகமாக ஏறி இறங்கிக் கொண்டிருப்

பதை கவனித்த தவமணி அக்கா ராசம்மா மாமி பார்க்க, ராசம்மா மாமி நேசம்மா மாமியிடம் ஏதோ கண்ணால் கதை பேசிவிட்டு அருகிலிருந்த செம்பிலிருந்து நீரை எடுத்து ஒவ்வொரு துளியாக தவமணி அக்காவின் தாயின் வாயினில் ஊற்றத் தொடங்கினா.

ஒவ்வொரு துளி தண்ணீருடனும் ஒவ்வொரு பிள்ளையினதும் பெயரையும் பேரப் பிள்ளைகளது பேரையும் சொல்லிக் கொண்டே நீரை பருக்கிக் கொண்டிருந்த ராசம்மாமாமி அகிலனின் பெயரைச் சொல்லி ஒரு சொட்டு தண்ணீர் விட்டபோது அந்த கடைசி சொட்டு நீருடன் அகிலனின் தாயின் தொண்டை குழி துடிப்பு அடங்கியது.

தவமணி அக்காவையே பார்த்து விழித்திருந்த தாயின் கண் இமைகளை தன் கைகளால் மூடிவிட்டா ராசம்மா மாமி.

இதற்கென்றே காத்திருந்தது போல் அடுப்பில் செருகி இருந்த வெள்ளைச் சீலை நாடாவை எடுத்து மகளின் கால் பெருவிரல்கள் இரண்டையும் ஒன்றாக சேர்த்து கட்டி முடிச்சு போட்டுவிட்டாள் ஆச்சி.

பாடியதை நிறுத்திவிட்டு புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்து கொண்டார் கந்தையா மாமா.

வீட்டுக்குள்ளிருந்து வெளிவந்த குத்துவிளக்கு இரண்டுக்கு எண்ணையூற்றி திரியோடு எரியவிடப்பட்டு தவமணி அக்காவின் தாயின் தலைக்கும் காலுக்கும் காவல் இருக்க அந்த வீட்டில் மீண்டும் ஒருதடவை ஒப்பாரி ஓலம் கேட்டுக் கொண்டிருந்தது.

குழந்தைகள் எல்லோரும் அழுதார்கள் ராசம்மா மாமியும் நேசம்மா மாமியும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்து ஒப்பினை சொல்லி அழுதார்கள். தன் அனுபவ முதிர்ச்சியாலோ என்னவோ ஆச்சி அழாமலேயே குந்திக் கொண்டிருந்தா. தவணை முறையில் அழுதழுது கண்ணீர் வற்றிவிட்டதுபோல் சுவரில் சாய்ந்து முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தா தவமணி அக்கா.

அழுகுரல் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் எல்லோரும் வந்து விட்டனர். புவிதாவையும் தாயையும் கூட்டிக் கொண்டு கணேஷ்

வந்திருந்தான். நாளை விடிந்ததும் ஊர் சனங்கள் வருவார்கள் என்பதற்காக வீட்டிலுள்ள சாமான்களை ஒதுக்கி ஓரிடத்தில் அடுக்கி வைத்தான்.

விசயம் கேள்விப்பட்டு அழுதுகொண்டே கணவன் பிள்ளைக ளுடன் ஓடிவந்து தாயில் மேல் விழுந்து அழுது புரண்ட சதீஸின் தாயை அரவணைத்தா ராசம்மா மாமி.

இத்தனைக்கும் நடுவில் நடந்தவைகளும் நடப்பவைகளும் என்ன என்று தெரியாதது போல் தனக்குதானே எதையோ பேசிக் கொண்டிருக்கும் சின்னம்மாவை யாரும் கவனிக்கவில்லை.

நடுச்சாமம் தாண்டிய விடியலுக்கு முன்பான நேரம் யாரோ இரண்டு மூன்று பேர்கள் வருவதுபோன்ற சத்தம் கேட்டது. எல்லோரும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்த நேரம் திடீ ரென்று ஆயுதங்களுடன் இருவர் மண்டபத்துக்கு வர பின்னால் வந்த நவரெத்தினம் மண்டபத்துக்குள் வந்ததும் பெரியம்மாவின் உடலைக் கண்டதும் ஓரிரு நிமிடம் மௌனமாக நின்றான். அவனைக் கண்டதும் தவமணி அக்கா எழுந்து உள்ளே போய் விட்டா. தாயிடம் சென்றான் தன்னை யாரென்றே அடையாளம் காணாமல் எதுவும் பேசாமல் இருந்த தாயிடம் என்ன பேசுவ தென்று தெரியாமல் நின்றுவிட்டு வாசுகியிடம் வந்து அம்மா என்னோடு கோபமாய் இருக்கிறா போல என்றான். ‘செந்தில் மாமா எங்க மாமா’ என்றாள் மருமகள் ஸ்ரீ.

மருமகளின் கேள்விக்கு நவரெத்தினம் எந்தவிதமான பதி லும் சொல்லாமல் மௌனமாகவே நின்றான்.

எத்தின மாமாமார் இருந்தவீடு இப்ப அம்மம்மாவின் உட லைக் கூட தூக்கி போறதுக்கு ஊருக்குள்ள நாலு பேருக்கிட்ட கெஞ்சிக் கேட்க வேண்டி இருக்கப் போகுது.

இந்த சின்ன வயதிலும் ஸ்ரீ இப்படி பேசுவாள் என்று எதிர் பார்க்காத நவரெத்தினம் எதுவும் பேசாமல் நின்றுவிட்டு வந்தவர் களை கூட்டிக் கொண்டு போய் விட்டான்.

எல்லாம் முடிந்துவிட்டது. செந்தில் இறந்ததாக கேள்விப் பட்ட நாளைக் கணக்கில் வைத்து நாற்பதாம் நாள் தாய்க்கும் சேர்த்து திவசம் செய்து விட்டா தவமணி அக்கா.

நாற்பதாம் நாள் வரை கூடவே இருந்து எல்லாவற்றையும் நடத்தி முடித்துவிட்டு போய்விட்டா ராசம்மா மாமி.

தலைமுறைகள் மறைய மறைய உறவு முறைகளும் மருவிப் போகுமென்பது உண்மையோ என்னவோ. இனி மாமியும் வரு வாவோ என்னவோ என்று நினைத்துக் கொண்டா தவமணி அக்கா.

நாற்பதாம் திவசத்தின் பின் வீடே வெறிச்சோடி கிடந்தது போல் இருந்தது. இவ்வளவு நாளும் வாசுகியோடு சிரித்து பேசி இருந்த வசந்தியையும் 'போம்மா போய் அம்மாவுக்கு உதவியாக இரு' என்று அனுப்பி விட்டா தவமணி அக்கா.

குசினிக்குள்ளிருந்து வெளியில் வந்தபோது மண்டபத்துக் குள் தாய் படுத்துக் கிடக்கின்றா என்ற பிரமையில் தற்செயலாக திரும்பிப் பார்க்க வெறுமையாகி கிடந்த மண்டபத்தைக் கண்டதும் இவ்வளவு நாளும் தன் நெஞ்சுக்குள்ளேயே பூட்டி வைத்திருந்த அவவையும் மீறி வெளிவர அழத் தொடங்கிவிட்டா.

தாய் இறந்து இவ்வளவு நாட்களுக்கும் ஒரு சொட்டு கண்ணீர் கூட விடாத தவமணி அக்கா தனிமையில் இருந்து தேம்மி தேம்மி அழுதா.

மகள் இறந்த பின்பு ஆச்சி இப்போது சுதந்திர பறவையாகி விட்டதுபோல விடிந்தால் எல்லா பேத்தி வீட்டுக்கும் போய் வந்து பொழுதை கழித்துக் கொண்டிருந்தா.

புவிதா வீட்டுக்கு போயிருந்த மகள் ஸ்ரீ வருவதைக் கண்ட தும் கண்களைத் துடைத்துக் கொண்டு எழும்பி வீட்டுக்குள் வந்து சுவரில் தொங்கிய படங்களை பார்த்தா.

செந்திலும், சதீஸும், தாயும் தனித்தனி படங்களில் மாலை போடப்பட்ட கட்டங்களுக்குள் சிரித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து நீண்ட பெருமூச் சொன்றை விட்டா. தாய் வருத்தமாய்

கிடந்தபோது பாவித்த துப்பல்படி மற்றும் பாத்திரங்களும் மருந்து இடித்த சின்ன உரலும் அனாதையாக மூலையில் கிடந்தது.

பார்ப்பவைகள் எல்லாம் மனதைக் குடைந்து பழையவை களை நினைவுபடுத்த வீட்டுக்குள்ளிருந்து விலகி மல்லிகை பந்த லின் கீழ் போயிருந்தபோது அகிலனின் நினைவு வந்து நெஞ்சில மோதியது.

பிடிபட்டு இவ்வளவு நாட்களுக்கும் தான் இங்குதான் இருக்கி றேன் என்று அகிலனிடமிருந்து அவனின் கைபட எழுதி ஒருகடி தம் கூட வரவில்லை. அவனுக்கு முன்பு பிடிபட்டு பூசாமுகாமில் இருப்பவர்கள் தங்கள் வீட்டுக்கு எழுதும் கடிதங்களில் அகிலனும் பூசாமுகாம் வந்து சேர்ந்திருக்கின்றான் என்று குறிப்பிட்டு எழுதிய திலிருந்து தான் அகிலன் பூசாவில் இருக்கின்றான் என்பதை அறிய முடிந்தது.

பிடிபட்ட இவ்வளவு நாட்களுக்கும் மாற்றுடுப்புக்கு என்ன செய்திருப்பானோ பூசாவில் அடித்து சித்திரைவதை செய்திருப் பார்களா? அல்லது வருத்தம் வேதனையா? சாப்பாடு எப்படியோ என்ன கஸ்டமோ. கடைசி தம்பி இப்படிக் கஸ்டப்பட வேண்டு மென்கிறது அவன் தலையெழுத்தோ என்னவே.

## 25

**அ**கிலனைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தபோது, வாச லில் யாரோ மணி அடிக்கும் சத்தம் கேட்டு ஓடிய ஸ்ரீ தபால்காரன் கொடுத்த கடிதத்தை எடுத்துக் கொண்டு ஓடிவந்து அகிலன் மாமா கடிதம் போட்டிருக்கார் அம்மா என்று சொன்னபோது நீண்ட நாட்களுக்கு பின்பு தவமணி அக்காவின் முகம் சந்தோசத்தில் மலர்ந்தது.

கடிதத்தை பிரித்து படிக்கச் சொன்னா தவமணி அக்கா.

அன்புள்ள அக்கா அத்தான் மருமகன் மருமகன்மார் மற்றும் உறவினர்கள் எல்லோருக்கும்.

அக்கா அன்று நீ சொன்னபடி ராசம்மா மாமியை வரச் சொல்லி விட்டு திரும்பிய போது அக்கரைப்பற்று சந்திகளிலெல் லாம் லொறிகள் காணப்பட்டது. அறுவடை காலம் நெல்லுவாங்க ஊருக்குள் லொறிகள் வந்திருக்கின்ற தென்ற நினைப்பில் நண்பன் புஸ்பநாதனோடு கதைத்து நின்ற நேரம் லொறிக்குள்ளிருந்து வெளிப்பட்ட ராணுவம் அக்கரைப்பற்றையே சுற்றி வளைத்து எங்களையெல்லாம் ஏற்றிக் கொண்டு சென்று விட்டது எங்களுக்கு ரிய விசாரணைகள் முடிந்து கைதி இலக்கம் தர பிந்திவிட்டதினா லேயே இவ்வளவு நாளும் கடிதம் எழுத தாமதமாகியது.

அம்மா இறந்தவிட்டதாக ஊரிலிருந்து இங்குள்ள மற்றவர்க ளுக்கு வந்த கடிதங்களிலிருந்து அறிந்து கொண்டேன். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என்னை நினைத்து கவலைப் பட வேண்டாம் இன்னுமொரு முக்கியம் விடையம்.

ராமு உயிரோடு இருக்கின்றான் என்று நினைத்து இனிமேல் அவனை எந்த முகாமுக்கும் சென்று தேட வேண்டாம். நாமெல் லாம் நினைத்ததுபோல் அவன் இப்போது உயிரோடு இல்லை. அவன் பிடிபட்ட அடுத்த வாரமே களுவாஞ்சிக்குடி முகாமில் அவன் இறந்துவிட்டதை நேரில் கண்டதை அவனோடு ஒன்றாக இருந்துவிட்டு இங்கு வந்து சேர்ந்தவர்கள் என்னிடம் சொன்ன பின்பு தான் உங்களுக்கு எழுதுகின்றேன். நமது குடும்பத்துக்கு இது ஒரு சாபக்கேடு போல தெரிகின்றது. சதீஸுக்கு செந்திலுக்கு அம்மாவுக்கு செய்ததுபோல ராமுவுக்கும் உரிய கிரிகைகளை செய்து விடுங்கள். சின்னம்மாவை நினைக்கத்தான் கவலையாக இருக்கின்றது. இதையெல்லாம் எப்படித் தான் அவ தாங்கவாவோ தெரியாது. என்ன செய்வது எல்லாம் விதிப்படி தானே நடக்கும்.

என் கடிதம் கிடைத்ததும் பதில் போடவும்.

இப்படிக்கு தம்பி அகிலன்.

மகள் ஸ்ரீ கடிதத்தை படித்து முடித்தபோது கண்ணீர் வடித் தாள்.

அக்கரைப்பற்றுக்கு போயிருந்த வாசுகி திரும்பி வந்தபோது தங்கை ஸ்ரீ கொடுத்த கடிதத்தை படித்து சோகமாக வீட்டுக்குள் போய் விட்டாள்.

காலையில் போய் மல்லிகை பந்தலுக்குள் இருந்த தவமணி அக்கா மத்தியானம் ஆகியும் எழும்பாமல் இருந்தா. முன்பெல் லாம் பகல் நேரத்தில் நிழலாக இருந்து குளிர்ச்சியாக இருக்கும் மல்லிகை பந்தலின் கீழ் இப்போது வெயில் எறித்தது. அன்று கோயிலுக்கு போய்விட்டு திரும்பிய நேரம் சுகந்தி தன்னிடம் 'ஏனக்கா நீங்ககூட ராமு இனிமேல் திரும்பிவரமாட்டாரென்று தான் நினைக்கிறியளோ' என்று கேட்டது நினைவுக்கு வந்தது.

இந்த விசயத்தை அறிந்தால் அந்த பெண்மனம் என்னபாடுப டும் என்று நினைத்துக் கொண்டு எழும்பி வந்து மண்டபத்துக்குள் நுழைந்தபோது மகள் ஸ்ரீ, ராமுவின் படத்தை சுவரில் மாட்டி பூமாலையொன்றை போட்டுக் கொண்டிருப்பதை சின்னம்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தா.

வழமைக்கு மாறாக அன்று பகல் நேரத்தோடு சமைத்து முடித்து விட்டு தம்பி தங்கைகள் தகப்பனுக்கு தானே சாப்பாடுபரி மாறிவிட்டு தாயையும் சாப்பிடச் சொன்னாள் வாசுகி.

தவமணி அக்கா இப்போதெல்லாம் மூன்றுவேளைகளில் ஒரு நேரந்தான் சாப்பிடுவா. அதுவும் தான் நினைத்தநேரம் விரும்பி னால் மட்டும் தான், இல்லையேல் அடுத்த நாள் தான் சாப்பிடுவா.

தனக்கு பசியில்லை வேண்டாம் வேண்டாம் என்று எத்தனை சொல்லியும் கட்டாயப்படுத்தி தாயைச் சாப்பிட வைத்துவிட்டு தம்பி தங்கைகளோடு விளையாடினாள்.

கிணற்றடியில் குளித்துக் கொண்டிருக்கும் ஆச்சியிடம் வந் தாள் பழந்துணியொன்றை குறுக்கை கட்டிக் கொண்டு குளிக்கும் ஆச்சியைப் பார்த்து 'என்ன ஆச்சி சினிமாப் படத்துல வாற கவர்ச்சிகன்னிகள் மாதிரி குளிக்கிறாய்' என்று சொல்லி ஆச்சிய வம்புக்கிழுத்தாள். வாய்க்கு வந்தபடி ஆச்சிபேச ஓடிவந்தவள் அக்கரைப் பற்று சினேகிதியிடம் போகிறேன் என்று சொல்லி

சுவரில் சாத்திக் கிடந்த சைக்கிளை நிமிர்த்தியவள் எதையோ நினைத்தவளாய் சைக்கிளை போட்டுவிட்டு நடந்துபோக முற்பட்டாள்.

போகும்போது தாயிடம் சென்று 'நான் போயிற்று வாறன் அம்மா' என்றபோது 'போயிற்று கெதியாய் வாடி' என்றா தவமணி அக்கா.

வாசலை தாண்டி வெளியில் வந்தபோது கணேஷ் எதிர் கொண்டு வந்தான் அவனைக் கடந்து வந்தவள் திடீரென திரும்பிப் பார்த்தபோது அதே நேரம் கணேசும் அவளை திரும்பிப் பார்க்க அவளையும் அறியாமல் சினேகமாய் சிரித்ததைக்கண்ட கணேஸ் ஆச்சரியமடைந்து பூரித்து பரவசமடைந்தான் அவன்.

நான் வார்த்தை திராவகம் இட்டாலும் இதுவரையில் அவள் வாடாமல் இன்று என்னைப் பார்த்து புன்னகைத்து போகின்றாளே. வாசுகி உன்னிடத்தில் இப்படியொரு புன்னகையை பார்க்க வேண்டுமென்றுதானே இத்தனை நாளும் உன்னை சுற்றி சுற்றி வந்தேன்.

வாசுகியின் தங்கை கிணற்றடியில் உடுப்புத் தோய்த்துக் கொண்டிருந்தாள். சூரிய கதிர்கள் பட்ட சவர்க்கார நுரை பல வித வர்ணங்கள் காட்டி மாயா ஜாலம் செய்வதை தனக்குள்ளேயே ரசித்துக் கொண்டு கிணற்றுக் கட்டில் ஏறி இருந்து கொண்டு ஏதோ ஒரு சினிமாப் பாடலை தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். அவளின் மனம் வாசுகியையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

வாசுகியை கண்டதும் குசினிக்குள்ளிருந்து வந்த வசந்தியின் முகம் வாடிப்போயிருப்பதை அவதானித்த வாசுகி 'என்ன வசந்தி ஒரு மாதிரியாக இருக்கிறாய் உங்கட அம்மாவோட ஏதும் பிரச்சினையோ' என்றாள்.

'சீச்சி... அம்மா.... பாவம் இப்ப அவதானும் தன்ரபாடுமாய் இருக்குறா.'

'அப்ப ஏனடி வசந்தி நீ ஒரு மாதிரியாய் இருக்கிறாய்.'

'ஒண்டுமில்லயடி நான் எப்பவும் போலத்தானே இருக்கிறன்.' வார்த்தைகளால் சமாளிக்க முற்பட்டாலும் அவளின் முகம் எதையோ மறைப்பதை, காட்டிக் கொடுப்பதை கண்டுகொண்டாள் வாசுகி.

'இல்லை வசந்தி நீ எதையோ என்னிட்ட மறைக்கப் பார்க்கி றாய். சொல்ல விரும்பமில்லையெண்டால் சொல்லத் தேவை யில்லை விடு நான் வாறன்.'

போகமுற்பட்டவளின் கரங்களை பிடித்து நிறுத்திய வசந்தி யின் கண்கள் கலங்கியது.

'என்னடி வசந்தி என்ன பிரச்சினை'

'ஒண்டுமில்ல... உங்கட அண்ணாவோட நினைவு வந்திச்சி. போன வருசம் இதே நாள் இரவுலதான் நானும் அவரும் முதன் முதலாக சந்தித்து விடிய விடிய கதைச்சிருந்தம். நான் உங்கட வீட்டுக்கு வந்து நாளைக்கு ஒருவருசம் எல்லாம் ஞாபகத்துக்குவந் திச்சி... சாகலாம் போல இருக்குடி.' சொல்லும்போதே அழுது விட்ட வசந்தியை ஆதரவாக அணைத்துக் கொண்டாள் வாசுகி.

இருவரும் கன நேரம் மௌனமாக இருந்தார்கள். மீண்டும் கன நேரம் கதைத்தார்கள்.

'நான் போயிற்று வாறனடி' என்று எழுந்தாள் வாசுகி.

'என்னடி அவசரம் எங்க போகப் போகிறாய் இன்னும் கொஞ்சநேரம் இருந்துவிட்டு போவனடி' என்ற வசந்தியிடம் தான் கட்டாயம் போகணுமடி என்று விட்டு நடந்த வாசுகி கொஞ்சம் தூரம் நடந்து விட்டு நின்று மீண்டும் திரும்பி வசந்தியை பார்த்தாள்.

'என்ன வாசுகி இண்டைக்கு புதுமையாக பார்க்கிறாய்' என்றாள் வசந்தி.

'இல்லயடி நான் இல்லாத நேரத்தில் என் வீட்டில் நான் இருந்த இடத்தில் நீ இருப்பாய் என்று அன்றொரு நாள் நீ

சொன்னது ஞாபகத்துக்கு வந்திச்சி. அதுதான் சிரிக்கிறன்.' என்று விட்டு போன வாசுகியையே கனநேரமாய் பார்த்துக் கொண்டு நின்றாள் வசந்தி.

## 26

'**எ**டேய் கணேஸா இஞ்சவாடா ஒருக்கா.'

கிணற்று கட்டில் இருந்த கணேஸனை தவமணி அக்காவின் ஆச்சி கூப்பிட்டதும் இறங்கி போய் என்ன ஆச்சி என்று கேட்டான். ஆச்சியின் கையில் பெரியதொரு கத்தி.

'என்ன ஆச்சி கையில கத்தியோட'

'டேய் கணேஸா இஞ்சவாடா இந்த கத்தியெடுத்து இந்த மல்லிகை மரத்த அடியோட தறிச்சி போடுடா வெயிலுக்கு பட்டுப் போய்ச்சுதெண்டால் கொள்ளிக்கும் உதவும்'

மல்லிகை மரத்தை வெட்டச்சொல்லி சாதாரணமாய் சொன்ன ஆச்சியை அதிசயமாக பார்த்தான். அவனின் மனதுக்கு மல்லிகை மரத்தை வெட்டுவதென்பது ஒவ்வாத காரியமாகபட்டது. அந்த மல்லிகை மரம் இல்லாமல் போனால் அந்த வாசல் எப்படி இருக்குமென்பதை நினைத்துப் பார்க்கவே சங்கடமாக இருந்தது அவனுக்கு.

'டேய் என்னடா பார்த்துக் கொண்டு நிக்கிறாய். அத வெட்டி இங்கால இழுத்துப் போடுடா.'

'ஏன் ஆச்சி மல்லிகை மரத்தை வெட்டச் சொல்லுறாய் அது உன்ன என்ன செய்யுது.'

'டேய் என்னை ஒண்டும் செய்யயில்லையடா. காஞ்சுமிலா றாய் போனமரம் என்னத்துக்குடா. அதென்ன இனியும் பூத்துக் குலுங்கவோ போகுது.'

'அது பூக்கும் ஆச்சி பூத்துக் குலுங்கும் நான் வெட்ட மாட்டன்' என்று விட்டு மீண்டும் வந்து கிணற்று கட்டின் மேல்

உட்கார்ந்த கணேஸின் கண்களுக்குள் வாசுகியின் அந்த புன்னகை படமாய் நின்றது.

'டேய் கணேஸா... எங்கடா போயிற்றியோ. உனக்கிட்டை யும் நான் கேட்டனே. ம்... எண்டபேரன் மார் இல்லாத அருமை இப்பதான் எனக்குத் தெரியுது.'

சொல்லிவிட்டு ஆச்சி மல்லிகை மரத்தின் அடியை வெட்டும் சத்தம் கணேஸின் காதில் விழுந்த நேரம், அக்கரைப்பற்றில் இருக்கும் தவமணி அக்காவின் ராசம்மா மாமி வந்து கொண்டிருந் ததை கண்டதும் 'வாங்கோ மாமி இருங்கோ' என்று வாசலில் பாயை எடுத்து போட்டா தவமணி அக்கா. தனது பேத்தி சாமத்திய பட்டுவிட்டாளென்பதை சொல்லி விட்டு போக வந்ததாக ராசம்மா மாமி சொன்ன போது தவமணி அக்கா தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டா.

'கல்யாணமும் கருமாரியும் ஒரே நேரத்தில நடக்குற புதுமை நம்மட குடும்பத்துல தான் நடக்குது மாமி.' தவமணி அக்கா விரக்தியுடன் சொன்னா.

'என்ன செய்யுறது புள்ள இறப்பும் பிறப்பும் சொல்லிக் கொண்டு வாறதில்லை தானே. அதுபோலதான் பெண்பிள்ளைகள் சாமர்த்தியபடுறதும்' தவமணி அக்காவின் மனக் காயத்துக்கு வார்த்தைகளால் மருந்து தடவினா ராசம்மா மாமி.

'அதெல்லாம் ஒண்டுக்குப் பின்னால ஒண்டாய் நம்மட குடும்பத்திலேயே ஏன் நடக்குதெண்டுறதுதான் தெரியயில்லை மாமி' தவமணி அக்காவின் கண்கள் கலங்கியதை கண்ட மாமி நிலைமையை சமாளிக்க நினைத்து எழுந்து ஆச்சியின் பக்கம் சென்று சிறிது நேரம் பேசியிருந்துவிட்டு போய்விட்டா.

கணேஸ் இப்போது கிணற்றுகட்டின் மேலேயே இருந்தான், கையில் குழந்தையுடன் வந்த புவிதா வாசலில் இருந்த தவமணி அக்காவிடம் வாசுகி எங்கக்கா என்றாள். கையிலிருந்த குழந்தை தவமணி அக்காவை பார்த்து சிரித்தது.

தன் முதுமையோடு முரண்டுபிடித்த மல்லிகை மரத்திடம் தோற்றுப் போன ஆச்சி வெறுப்படைந்து வந்து கத்தியை திண் ணையில் வைத்துவிட்டு 'என்னால ஏவாதுடி அதவெட்ட. முறுக்கி போய் வளர்ந்திருக்கு' என்றுவிட்டு வாசலில் கிடந்த சருகுகளை பொறுக்கிக்கிக் கொண்டிருந்தா.

'என்னடி புவிதா ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்' என்று தவமணி அக்கா கேட்டபோது மீண்டும் 'வாசுகி எங்கக்கா' என்றே கேட்டாள் புவிதா.

'வாசுகி அக்கரைப்பற்றுக்கு போயிருக்கிறாள் இனிவந்துடு வாள். ஏண்டி என்னடி ஏதும் பிரச்சினையோ.'

'இல்ல ஒண்டுமில்ல சும்மா கேட்டன்.' புவிதா எதையோ மறைக்க முற்படுவதை புரிந்து கொண்ட தவமணிஅக்கா. 'எடியே புவிதா வாசுகிக்கிட்ட நீ ஏதோ சொல்லத்தான் வந்திருக்காய் அத என்னெண்டு என்னிட்ட முதலில சொல்லு' கண்டிப்பான குரலில் தவமணி அக்கா சொன்னது புவிதாவை சங்கடப்படுத்தியது.

'வாசுகி என்னிட்ட எத்தனையோதரம் சொன்னாள். இது வேணாம்டி வேணாம்டி' என்று கூடப்பழகின சினேகிதியையும், தாய் சகோதரங்களையும் பகைச்சு வெறுத்து அவன நம்பினதுக்கு எனக்கு நல்ல பரிசு கிடைச்சிருக்குகு'

'ஆர நம்புனதுக்கு என்ன பரிசு கிடைச்சிருக்கு.'

'ஆர இவண்ட அப்பனத்தான்' என்று இடுப்பில இருந்த குழந்தையை இடித்துக் காட்டிய போதுதான் உணர்ந்து கொண்டா தவமணியக்கா. புவிதா யாரை பற்றி பேசுகின்றா ளெண்டு.

'ஏண்டி அவண்ட அப்பனுக்கு என்னவாம் இப்ப. என்ன ஏதும் கேள்விபட்டனீயோடி' ஊரில் நடக்கும் மனிதப்படுகொலை கள் தவமணி அக்காவின் நினைவில் வந்துபோயின.

'அவனுக்கு ஒண்டுமில்ல. ஏற்கனவே கல்யாணம் கட்டி புள்ளைகளும் இருக்கிற அவனநம்பி நான்தான் ஏமாந்துபோய் நிற்கிறன்.'

'இஞ்சபார் புவிதா முன்பின் அறியாமல் ஊர்பேர் தெரியாமல் அறிஞ்சு ஆராயாமல் அவசரப்பட்டது உன்னுடைய பிழை. இப்ப கவலைப்பட்டு என்னடி செய்யுறது.'

'என்னசெய்யுறதோ இவன்களை போல ஆட்கள நவரெத்தினம் அண்ணன் போல ஆட்கள் கண்டஇடத்துல சுட்டுப் போடுறதும் நியாயம்தான்'

புவிதா சொன்னதை கேட்டதும் தவமணி அக்காவுக்கு அவள்மேல் கோபம் வந்தது. நல்லவனோ கெட்டவனோ ஒரு நாளென்றாலும் அவனோடு ஒன்றாக இருந்து அவனுக்கு ஒரு குழந்தையையும் பெற்றுவிட்ட இவள் எப்படி இப்படி கதைக்கின்றாள் என்று ஆச்சிரியப்பட்டா தவமணி அக்கா, மனிதப்படுகொலைகளின் காரணமாய் மலிந்து மரணங்கள் ஏற்படுத்திய மனவலிமையால் வெளிவந்த வார்த்தைகளா இது.

'இஞ்சபார் புவிதா குற்றங்களுக்கெல்லாம் தண்டனை மரணம்தான் என்றால் இப்ப உலகத்துலை எந்த மனிதரும் இருக்க முடியாது. உற்பத்தியாகும் துப்பாக்கிகளும் போதாது. சும்மா அழுதுபுரண்டு கொண்டு இருக்காமல் நடந்தது நடந்து போயிற்றெண்டு நினைச்சுக் கொண்டு இனிநடக்கப் போறது பாருடி. பெற்றெடுத்த புள்ளய நல்லபடி வளர்க்கப்பார்.'

புவிதா குழந்தையுடன் போய் விட்டாள். பின்னேரம் ஆறு மணி ஆகியும் வாசுகி வரவில்லை. வாசுகி இன்னும் வரவில்லையா என்று தவமணி அக்காவின் கணவர் இரண்டு மூன்று தடவை கேட்டுவிட்டார். இனி வந்து விடுவாள் என்று சொல்லி சமாளித்தாலும் ஒரு நாளும் இவ்வளவு தாமதமாகி வாசுகி வந்ததில்லை என்பதை நினைக்கும்போது தவமணி அக்காவுக்கும் உள்ளூர பயம் ஏற்பட்டது. போதாக்குறைக்கு ஆச்சி வேறு குட்டி போட்ட பூனைபோல் குறுக்கும் நெடுக்கும் நடந்து புறு புறுத்துக் கொண்டு பயம் காட்டிக் கொண்டிருந்தா.

'ஏண்டி பொழுது சாய்ஞ்சி கருக்கலாகியும் உண்டகுமர இன்னும் காண இல்லையேடி. இப்ப என்னடி செய்யுறது.'

வசந்தி வீட்டுக்கு வாசுகி வந்தாளா என்று கேட்டு வரும்படி சின்னமகன் குமாரை வசந்தி வீட்டுக்கு ஓடவிட்டா தவமணி அக்கா. போன வேகத்தில் திரும்பி வந்தான் குமார். பின்னாடி வசந்தியும் வந்து பகல்தான் வாசுகி வந்து போனாள் என்றும் பின்னேரம் அக்கரைபற்று சுற்றி வளைக்கப்பட்டது என்றும் வசந்தி சொன்னபோது நான் போய் பார்த்துவிட்டு வாறன் என்று புறப்பட்ட கணவனை தடுத்து நிறுத்தினா தவமணி அக்கா.

ஊரெல்லாம் சுற்றி வளைக்கப்படப் போகின்றதாம் என்ற செய்தியை எப்படியோ அறிந்து ஆண்களெல்லாம் ஓடிஒளிந்து விட போன் வாரம் ஊரைச் சுற்றிய ராணுவம் தேடிப்பார்த்த போது ஊருக்குள் எந்த ஒரு ஆணும் இல்லையென்பதால் கோபப்பட்ட ராணுவம் வீட்டிலுள்ள பெண்களையெல்லாம் முகாமுக்கு ஏற்றிக் கொண்டு போனார்களாம் என்ற போன வார செய்தி நினைவுக்கு வந்து தவமணி அக்காவை நடுங்கச் செய்தது.

பர பரப்பாக எல்லோரும் ஏதோ பேசிக் கொண்டிருப்பதை அவதானித்த கணேஸ் கிணற்று கட்டின் மேலிருந்து துள்ளி குதித்து இறங்கி வாசலுக்கு வந்தபோது இவன் ஏன் இங்கு வந்தானென்று கேட்பதுபோல் அவனை முறைத்து பார்த்தாள் வசந்தி.

இருள் மெல்ல படரத் தொடங்க வீட்டின் ஒவ்வொரு அறைக்கும் விளக்குகளை வைத்துவிட்டு பூசை அறைக்குள் விளக்கு வைக்கச் சென்ற தவமணி அக்காவின் சின்னமகள் ஸ்ரீ போன வேகத்தில் திரும்பி வந்து கையிலிருந்த கடிதம் ஒன்றை தாயிடம் கொடுத்து இதுசாமி படத்துக்கு முன்னால இருந்ததம்மா அக்காதான் எழுதி வைச்சிருக்கா என்று சொன்னதும் கடிதத்தை பிரித்து படித்தா தவமணி அக்கா.

அன்புள்ள அம்மா அப்பா தம்பி தங்கை மற்றும் என் குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும்.

அம்மா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் போய் வருகிறேன். எங்கே என்று கேட்கின்றீர்களா. இந்த நாட்டுக்காக அண்ணாவோடும் மாமாமாரோடும் சேர்ந்து வாழ்ந்ததின் பிரதிப

லனோ அல்லது நம் குடும்பத்தில் ஏற்பட்ட இழப்புகளின் பிரதிப லிப்போ என்னவோ என்னையும் போகத் தூண்டிவிட்டது. ஒரு வகையில் நாட்டிற்கான உன் சொந்தப் பங்களிப்பு என்றுகூட சொல்லலாமே.

நான் போய் வரட்டுமா என்று உன்னிடத்தில் கேட்கவோ போ மகளே என்று நீ என்னை வழி அனுப்பி வைக்கவோ நம் இருவருக்கும் மனத்தைரியம் இல்லை என்பதாலேயே நான் சொல்லாமல் வந்துவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளம்மா. மீண்டும் வருவேன் எப்போது நம் மண்ணுக்கும் மக்களுக்கும் விடிவு ஏற்படுகின்றதோ அப்போது அந்த அதிகாலையில் நான் வருவேன். உயிரோடு இருந்தால் அதுவரையில் என்னை வாழ்த்தி அனுப்பினாய் என்ற சந்தோசத்தில் கவலைப்படாமல் இரும்மா. இப்படிக்கு உன் மகள் வாசுகி - என்று முடித்திருந்த அந்த கடிதத்தை படித்து முடித்த தவமணி அக்காவின் கைகளில் இருந்து கடிதம் நழுவி மடியில் விழ எதுவும் பேசாமல் மௌனமாக இருந்த தவமணியக்காவை பார்த்து என்னடி காகிதம், என்னடி எழுதி வைச்சிருக்காள் உண்ட குமரி என்று கேட்டா ஆச்சி.

கடிதம் ஒவ்வொருவரின் கைக்கும் மாறியது. கடிதத்தை படித்து முடித்த வாசுகியின் தகப்பன் எதுவும் பேசாமல் மண்டபத் துக்குள் போய் விட்டார்.

ஸ்ரீயும் குமாரும் திண்ணையில் போய் இருந்து அழுதார்கள். விசயத்தை அறிந்த ஆச்சி அடி எண்ட மகளே இதுக்குத்தானோடி இண்டைக்கு முழுக்க என்னோட தனகி விளையாடினாய் என்று சாவீடுபோல் ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தா.

கடிதம் வசந்தியின் கைக்கு வந்தபோது கண்கலங்கினாள் அவள். வாசுகி இன்று பகல் என் வீட்டுக்கு நீ வந்து போனது போய் வருகிறேன் என்று இதை சொல்லாமல் சொல்லிவிட்டு போகத்தானா? நீ போகும்போது கூட போனநீ நின்று கடைசியாக என்னை ஒரு தடவை பார்த்துவிட்டு போனாயே அதன் அர்த்தம் இதுதானா? வசந்தி மனதுக்குள் அழுதாள்.

அந்தக் கடிதத்தை தர முடியுமா என்று கேட்பதுபோல் வசந்தியிடம் கை நீட்டிய கணேஸை எரித்து விடுவதுபோல் பார்த்துவிட்டு அவன் முகத்தில் வீசி எறிந்தாள் கடிதத்தை. வாசுகி எங்களையெல்லாம் விட்டு விட்டு போனதற்கு நீயும் உன் வார்த்தைகளும் ஒரு காரணம் என்பது எனக்கு தெரியாமல் இல்லை என்று சொல்வது போல் இருந்தது அவளின் செய்கை.

கணேஸ் கடிதத்தை படித்துவிட்டு மீண்டும் கிணற்று கட்டின் மேல் ஏறிஇருந்தான். வாசுகி சிரித்து விட்டுபோனது மனதில் மின்னலாக தோன்றி மறைந்தது.

'வாசுகி என்னை மன்னித்துவிடு. உன்னை எப்படியெல்லாம் வார்த்தைகளால் நான் வதைத்திருப்பேன் அத்தனையையும் மௌ னமாக இருந்து சகித்துக் கொண்டாயே இன்றுபோகும் போது கூட என்னை பார்த்து சிரித்து விட்டு சென்றாயே அதற்கு என்ன அர்த்தம். அடேய் நான் போகின்றேன் நான் போவதற்கு காரண மாகி என்னை வழி அனுப்பி வைத்தற்கு நன்றியென்று சொல்லா மல் சொல்லி வார்த்தைகளை உன் புன்னகையால் சொல்லி விட்டுசென்றாயா? வாசுகி என்னை மன்னித்துவிடு' கணேஸ் தனக்குள்ளேயே அழுது கொண்டிருந்தான்.

'அடி மகளே என்ன காரியமடி செய்துவிட்டாய். சிநேகிதி வீட்டுக்கு போய் வருகிறேன் என்று சொல்லி ஒவ்வொரு நாளும் அக்கரைப் பற்றுக்கு நீ போய் வந்தது இதுக்குத்தானாடி ஏன் இவ்வளவு நாளும் பொறுத்திருந்து இண்டைக்கு போனாய். அம்மம்மாவும் கண்ணை மூடினால் அவவுக்குரிய கடமையையும் செய்து விட்டு போகலாம் எண்டுதானா நீ இவ்வளவு காலமும் காத்திருந்தாய். காலையில் எழும்பி நேரத்தோடு சமைத்து முடித்து தகப்பன் தம்பி தங்கச்சிக்கு சாப்பாட்டை கொடுத்து என்னையும் கட்டாயப்படுத்தி சாப்பிட வைத்து விட்டு ஒரு நாளும் இல்லாமல் இண்டைக்கு தம்பி தங்கையோடு ஓடி விளையாடினாயே அது இதுக்குத் தானாடி. வாழ வேண்டிய வயதில் உன்னை ஒருவனுக்கு கட்டி வைக்காமல் உன்னை வீட்டுக்குள்ளேயே வைச்சிருந்தது தான் நான் செய்த தவறா. என்னெண்டு மகளே அது நான்

செய்திருக்க முடியும். ஒன்றுக்கு பின்னால ஒன்று மண்ணுக்குள்ள போய்க் கொண்டிருந்த வேளையில என் பொண்ணுக்கு என் னெண்டடி நான் கல்யாண வேலைகள் பார்த்திருக்க முடியும். சொல்லு மகளே சொல்லு. ஏனம்மா இந்த தாயை தவிக்கவிட்டுற்று போயிற்றாய். நான் ஏதும் குற்றம் செய்தேனா. இல்ல இந்த வீட்டுல உனக்கு ஏதும் பிழைசெய்தாங்களா அல்லது வெளியில சொல்லமு டியாதளவுக்கு உன்ட மனசுக்குள்ள தான் எதையும் பூட்டி வைச்சி ருந்தையா ஏன் தாயே என்னைவிட்டிற்று போயிற்றாய். நீ இல்லாத இந்த வீடும் வாசலும் இப்ப எப்படி உறங்கிப் போய் கிடக்குதென் கிறதை நீ அறிய மாட்டாயா?

'விடிந்ததும் வாசுகி என்று கூப்பிட்டு உன்னை வரவழைச்சி உன்ரமுகத்துல கண் முழிச்சி எழும்புற உன்ர தகப்பனப் பற்றி யோசித்தாயா? தாய் நான் இருந்தும் உன்ர அணைப்பிலேயே படுத்துறங்கும் உன் தம்பியைப் பற்றி நினைத்து பார்த்தாயா? அக்கா, அக்கா, என்று உன்னையே சுற்றி வந்து கொண்டிருப் பாளே உன் தங்கச்சி. அவளை நினைச்சுபார்த்தாயா. நீ நினைக்கா விட்டாலும் உன்னை நினைச்சு இத்தனை பேரும் என்ன பாடுபடு வார்கள் என்பதை நீ அறியவில்லையா?'

இல்லாத மகள் தன் எதிரில் இருப்பதுபோல் நினைத்து தனக்குள்ளேயே பலகேள்விகளை கேட்டுக் கொண்டிருந்த தவ மணி அக்காவின் கண்களிலிருந்து வடிந்த நீரில் பல வார்த்தைகள் புதைந்திருந்தது.

விசயம் கேள்விப்பட்டு வசந்தியின் தாயும் சதீஸின் தாயும் ஓடிவந்தார்க்ள. எங்குபோயிருப்பாள் யாரிடம் போய் விசாரிக்க லாம் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆலோசனை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஒருத்தரும் போய் எங்கேயும் விசாரிக்கவேணாம் இண் டைக்கு இல்லாவிட்டாலும் எண்டைக்கோ ஒருநாள் திரும்பிவரு வாள் அண்டைக்கு அவளை கண்டு கொள்ளுறன் என்று சொன்ன தவமணி அக்காவை ஆச்சரியமாக பார்த்தார்கள் எல்லோரும்.

கனவுகளை கலைத்து கவலைகளை சுமந்து கண்கள் கலங்கிய படி கணேஸ் போய்விட சோகங்கள் அப்பிய முகங்களுடன் அந்த இரவில் தூங்கிக் கொண்டிருந்தது தவமணி அக்காவின் வீடு.

## 27

**வா**சுகி வீட்டை விட்டுபோய் ஆறுமாதமாகி விட்டது. இந்த ஆறுமாதத்துக்குள்தான் எத்தனை மனிதப்படுகொலைகள். எத்தனை சுற்றிவளைப்புகள். எத்தனை கைதுகள்.

எப்படி சந்தோசமான ஊர் இப்படி சோகத்தில் உறங்கிக் கிடந்தது ஒரு சாபம் போல தோன்றியது. இப்போதெல்லாம் சுற்றிவளைப்பென்பது சர்வசாதாரணமான விடயமாகி விட்டிருந் தது. விரும்பிய நேரம் வருவார்கள் சுற்றி வளைப்பார்கள் யாரும் வெளியூர் இளைஞர்கள் கண்ணில்பட்டால் இழுத்துக் கொண்டு போவார்கள்.

சுற்றி வளைக்கின்றார்கள் என்று யாரும் இப்போது பயப்பிடு வதோ பதறித்துடிப்பதோ இல்லை. ஏனென்றால் அவர்களுக்கே தெரியும் இப்போது ஊருக்குள் யார் யார் தீவிரவாத இயக்கங்க ளில் இருக்கின்றார்கள் என்று.

மூன்று நாட்களுக்கு முன்பு கஞ்சிகுடி ஆற்றுக் காட்டுப் பகுதிக்குள் போராளி குழு ஒன்றுக்கும் ஆமிக்காரர்களுக்கும் நடந்த நேரடி மோதலில் ஐந்து ராணுவமும் மூன்று போராளிகளும் இறந்துவிட்டார்களாம்! அதன் பிரதிபலிப்பு இன்று அந்த ஊரே சுற்றி வளைக்கப் பட்டிருக்கின்றது.

ஊரெல்லாம் ராணுவ வாகனங்கள். அங்கும் இங்கும் ஓடித்தி ரியும் ராணுவத்தினரின் காலடிச்சத்தங்கள் காதில் கேட்கின்றது. கஞ்சிகுடி ஆற்றுக்குள் நடந்த உயிரிழப்பின் கோபத்தின் உக்கிரதன் மையை ஊருக்குள் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆச்சி வழமைபோல் வாசலில் குந்தியிருந்து தலையில் கை வைத்துக் கொண்டு சித்திர புத்திரனாரை வேண்டிக் கொண்டி ருந்தா.

அடியோடு பிடுங்கப்பட்ட மல்லிகை மரம் குப்பை மேட்டில் குவிந்து கிடக்கின்றது.

மெல்ல மெல்ல நடந்துவந்து வளவின் வெளிவாசலை எட்டிப்பார்க்கின்றாள் ஸ்ரீ. வளமையாக சுற்றி வளைப்பின் போதி லெல்லாம் வளவின் வாசலில் நிற்பான் சுனில்; இன்று வேறு யாரோ ஒரு ஆமிக்காரன் நின்று தான் பார்ப்பதை கவனித்து தன்னை முறைத்து பார்க்க பயந்து கொண்டு குசினிக்குள் ஓடிவந்த மகளை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் சுவரில் தலைசாய்த்து வெறித்து பார்த்துக் கொண்டிருந்தா தவமணி அக்கா.

தவமணி அக்காவின் மனம் எதை நினைப்பது எதை மறைப்பது எதை கடைசியில் நினைப்பது எது முதல் நடந்தது என்று தெரியாமல் தடுமாறியது.

தான் சுமந்து பெற்றெடுக்காவிட்டாலும் ஆசையாக வளர்த்த அன்பு மகன் சதீஸை நினைப்பதா. அவன் போய்விட்டானென்று தெரிந்தும் இன்றுவரை அவனையே நினைத்துக்கொண்டு காலம் கடத்தும் வசந்தியை நினைப்பதா.

குடும்பத்துக்கு ஒன்றென்றால் ஓடிவந்து முன்னுக்கு நின்று மல்லுக்கு நிற்கும் காளையான சின்னம்மாவின் மகன் தம்பி ராமுவை நினைப்பதா.

எவர் எப்படி என்ன சொன்னாலும் எதுக்கும் எப்போதும் கோபப்படாத தம்பி செந்திலை நினைப்பதா.

இன்று வரை ராமுவுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சுகந்தி இனிமேல் ராமு வரவே மாட்டான் என்று தெரிந்ததும் எப்படிதுடித்துப் போவாள் என்பதை நினைத்துப் பார்ப்பதா.

கடைசிவரை தன் காலடில் வளர்ந்த கடைசித்தம்பி அகிலன் கண்காணாத இடத்தில் சிறையில் அடைபட்டு தவிக்கின்றான் என்பதை நினைப்பதா.

'ஊருக்கு வந்து விடாதே அங்கேயே கொஞ்சகாலம் இருந்து கொள்' என்று எத்தனையோ தரம் எழுதியும், இல்லை நான் ஊருக்கு வரவேண்டும் என் குடும்பத்தை காணவேண்டும் என்று ஏங்கி தவித்துக் கொண்டு சவூதியிலேயே இருக்கும் தம்பி முகிலனை நினைத்துப் பார்ப்பதா.

எங்கு இருக்கின்றான். எப்படி இருக்கின்றான் அல்லது இருக்கின்றான்தானா என்பதைக்கூட அறியமுடியாதளவுக்கு மறந்தும் மறைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் நவரெத்தினத்தை நினைத்துப் பார்ப்பதா.

தன் பிள்ளைகளை பறிகொடுத்த சோகத்தில் புத்தி பேதலித்து சித்தப்பிரமையாகி இருக்கும் சின்னம்மாவை நினைத்து பார்ப்பதா. மகனை பறிகொடுத்த சோகத்தில் நடைபிணமாக இருக்கும் சதீஸின் தாயை நினைப்பதா.

இத்தனைக்கும் பிறகு மூன்று நாள்களுக்கு முந்திய அந்த பின்னேரம் வந்து அம்மா மனதை தேற்றிக் கொள்ளுங்கள் இரவு கஞ்சி குடி ஆற்றுக்காட்டுக்குள் நடந்தமோதலில் ராணுவத்தோடு எதிர்த்து போராடிய உங்கள் மகள் வாசுகி வீரமரணம் அடைந்து விட்டார் என்று மூன்றுபேர் வந்து சொன்ன அந்த செய்தியை நினைப்பதா.

எதை நினைப்பது எதை மறப்பது என்று தெரியாமல் தவித்தது தவமணி அக்காவின் மனது.

மகளே வருவாய் வருவாய் என்று எதிர்ப்பார்த்திருந்தேனே நீயும் என்னை ஏமாற்றிவிட்டுப் போயிற்றேயடி எண்ட தங்க மகளே பூவும் பொட்டோட புள்ளை குட்டியோட குடும்பமாய் வாழ்வாய் எண்டு நினைச்சன். இப்ப மண்ணுக்குள்ள போயிற்றேயடி. இனி எப்படி உன்னைக் காணுவன்.

சோகம் நெஞ்சில் முட்ட அதை வார்த்தைகளாக வெளியிட்டு தவமணி அக்கா கதறி அழுதபோது அது வாசலில் நிற்கும் ஆமிக்காரன் காதுகளுக்கு கேட்டுவிடும் என்ற பயத்தில் ஓடிவந்த

ஆச்சி பேத்தியின் வாயை பொத்தி தன்னோடு அணைத்துக் கொண்டா.

கல்யாண காட்சி நடத்துவதற்கு மட்டுமல்ல கருமாரி ஒப்பா ரிக்குக் கூட சுதந்திரமற்ற நிலையை நினைத்து தனக்குள்ளேயே அழுதுகொண்டா ஆச்சி.

அழுடி அழு அப்பதான் உண்ட நெஞ்சுக்குள்ள இருக்கிற கவலை இறங்கி மனப்பாரம் குறையும் என்று முன்பெல்லாம் சாவீடுகளில் சொல்லும் தன் அனுபவத்தை மூடிவைத்துக் கொண் டாள் ஆச்சி.

ஆச்சியின் கைத்தாங்கலில் தவமணி அக்கா சுவரில் சாய்ந்து கொண்டிருந்தா. மகள் ஸ்ரீ மீண்டும் வெளிவாசல் பக்கம் எட்டிப் பார்த்தாள். வாசலில் நின்ற ஆமிக்காரன் புவிதாவை அழைத்து ஏதோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

'எழும்பு மகளே சுடுதண்ணி வைக்கிறன் அதுல தலைமுழு கினா தலைப்பாரம் குறையுமம்மா' என்று சொல்லிக் கொண்டு எழுந்து குப்பைமேட்டுப் பக்கம் விறகுமுறிக்க சென்ற ஆச்சி. சுற்றி வளைப்பு முடிந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக வீதி வாசல்களில் நின்றிருந்த ஒவ்வொரு ஆமிக்காரரும் ஓடிச்சென்று வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களில் ஏற சிறிது நேரத்தில் வாகனங்கள் எல்லாம் ஊரை விட்டு வெளியேறியது.

யார் யார் கைது செய்யப்பட்டார்கள் எந்தெந்த வீட்டில் என்னென்ன நடந்ததென்பது இனிமேல்தான் தெரியும்.

ஆமிக்காரர் வெளியேறி சிறிது நேரத்தில் வசந்தி வந்தாள். அவள் பின்னால் புவிதாவும் வந்திருந்தாள்.

வசந்தியின் கண்கள் கலங்கியிருந்தது. வாசுகி இறந்துவிட்டா ளாம் என்ற அந்த செய்தி கேட்ட இந்த மூன்று நாட்களுக்கும் அவளும் அந்த குடும்பத்தில் ஒருத்தி போல அழுது புலம்பிக் கொண்டுதான் இருக்கின்றாள். சதீஸ் போன பிறகு அவளுக்கு ஆறுதலாக இருந்தது வாசுகி ஒருத்திதான். இன்று வாசுகியும்

இல்லாமல் போய்விட்டதில் வசந்தியின் மனம் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தது.

கண்கள் கலங்கியிருந்த வசந்தியின் அருகில் வந்த ஸ்ரீயின் கரங்களை பற்றிக் கொண்டு வசந்தி சொன்னாள்.

'ரோட்டு மதில் சுவருல வாசுகியின் படம்போட்டு கஞ்சி குடி ஆற்றில் நடந்தமோதலில் வீர மரணம் அடைந்த வீராங்கனை வாசுகிக்கு எங்கள் வீர அஞ்சலி' என்று சுவரொட்டி ஒட்டியிருக்கி றார்கள்; வரும்போது பார்த்தன்.

சொல்லி முடித்துவிட்டு ஸ்ரீயின் முதுகில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள் வசந்தி. அவள் சொன்னது காதில் கேட்டும் கேட்காதது போல் முகட்டையே வெறித்து பார்த்துக் கொண்டி ருந்தா தவமணி அக்கா. ஏதோ சொல்ல வந்தவள் சொல்வதா வேண்டாமா என்று எல்லோர் முகத்தையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தாள் புவிதா.

என்ன புவிதா அக்கா ஆமிக்காரன் உங்களோட ஏதோ கதைச்சுக் கொண்டிருந்தான் என்று ஸ்ரீ கேட்டு சொல்ல வந்த விடையத்துக்கு வழியமைத்துக் கொடுத்தாள்.

அந்த ஆமிக்காரன் சொன்னான். 'கஞ்சி குடி ஆற்றில நடந்த மோதலில செத்துப்போன ஆமிக்காரன்களில சுனிலும் ஒருத்த னாம். அதுதான் சுனில் இண்டைக்கு உங்கட வெளிவாசலில காவலுக்கு நிற்கயில்லையாம் என்று உங்கட வீட்டுக்குப் போய் சொல்லச் சொன்னான்.'

கண்களை மூடி வெறித்திறந்த தவமணி அக்காவின் கண்கள் புவிதா சொன்ன செய்தி கேட்டு மெல்ல திறந்து கொண்டது.

வாசுகி உன் துப்பாக்கிகுண்டு அவனில்பட்டு அவன் உயிரை விட்டானா அல்லது அவன் துப்பாக்கி குண்டு உன்னில்பட்டு நீ உயிரை விட்டாயா? மகளே என்னம்மா நடந்திருக்கும் என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டிருந்த தவமணி அக்கா எதிரில் தேனீர் கோப்பையை நீட்டி இதக்குடியுங்கோ மாமி என்று

உரிமையுடன் சொன்ன வசந்தியை நிமிர்ந்து பார்த்தா தவமணி அக்கா. அவவின் கண்களிலிருந்து வடிந்த நீரை துடைத்து விட்டுக் கொண்டிருந்த வசந்தியின் நினைவில் வசந்தி நான் இல்லாமல் போனாலும் என்ரவீட்டில நான் இருந்த இடத்தில நீ இருப்பியாடி என்று வசந்தி அடிக்கடி கேட்டது எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

'எடியே ஸ்ரீ தண்ணி சுட்டுற்றடி அம்மாவக் கூட்டிக் கொண்டு வாடி குளிக்க வைக்க.'

ஆச்சியின் குரல் கேட்டதும் வசந்தியும் ஸ்ரீயும் தவமணியும் அக்காவை இருபக்கமும் பிடித்து எழுப்பி நடத்திக் கொண்டு போனபோது மண்டப வாசலில் நின்று மண்டபத்தை எட்டிப் பார்த்தா தவமணி அக்கா. சதீஸ், ராமு, செந்தில், தன் தாய், இந்த நான்கு பேர்களின் படங்களும் தொங்கிக் கொண்டிருக்க அவைகளுக்கு அருகில் தன் மகள் வாசுகியின் படத்தையும் மாட்டிவிட்டு மாலைபோட்டு விட்டுக் கொண்டிருந்தார் வாசுகி யின் தந்தை.

மண்டபத்தை கடந்து நடந்தபோது மல்லிகை பந்தல் வெறிச் சோடிக் கிடந்தது. இவ்வளவு காலமும் அந்த மல்லிகை கொடியை ஏந்தி தாங்கிக் கொண்டிருந்த நான்கு மரக்கால்களும் புராதன காலத்து பொலன்நறுவை கல்தூண்கள்போல தனித்துநின்று வெறு மையாக காட்சியளித்தது.

இவ்வளவு நாளும் பூத்துக்குலுங்கி வாசம் பரப்பிய அந்த மல்லிகை மரம் அடியோடு பிடுங்கப்பட்டு குப்பைமேட்டில் குவித்து கிடக்கின்றது. மிச்ச மீதியிருந்த பூக்களும் இலைகளும் மொட்டுக்களும் காய்ந்து சருகாகி கிடக்கின்றது.

காய்ந்து மிலாறாய் போன மல்லிகை மிலாறுகளை முறித்து எரியும் அடுப்புக்குள் செருகிக் கொண்டிருந்தா ஆச்சி.

ஆச்சி, அந்த ஆலமரம் குப்பை ரோட்டில் கிடமாக நிற்கின் றது. தான் விட்ட விழுது முறிந்துவிட்ட நிலையிலும், விழுதுகளில் முளைத்த தளிர்கள் சருகுகளாகி மண்ணுக்குள் மறைந்து போன

நிலையிலும் அந்த ஆலமரம் மட்டும் அசையாமல் திடமாக நிற்கின்றது.

மல்லிகை செடி மிலாறுகள் எரித்து சூடாக்கிய இளம் சூட்டுநீரை எடுத்து ஆச்சி பேத்தியின் தலையில் வார்க்கின்றா. தலையில் வார்த்த நீர், தவமணி அக்காவின் உடல் வழி இறங்கி மண்ணை நனைத்தது. மண்ணை நனைத்த நீரில் தவமணி அக்கா வின் கண்ணீரும் கலந்திருந்தது.

## 28

**தா**ன் அந்த ஊரில் வாழ்ந்த காலம் வரை தவமணி அக்காவின் குடும்பத்தில் நடந்த சம்பவங்களை நினைத்துக் கொண்டு கண்மூடியிருந்தவனை 'அக்கரை பற்று வந்துவிட்டது இறங்குங்கள்' என்ற சத்தம் தட்டியெழுப்ப திடீரென்று கண்களை திறந்தவனுக்கு எல்லாமே புதினமாக காட்சி தந்து கொண்டிருந்தது.

பைகளை தூக்கிக் கொண்டு இறங்கியவன் நாலாபுறமும் திரும்பிப் பார்த்தான். கல்முனை, பொத்துவில், அம்பாறை, சாகாமம் என்று பாதைகளுக்கு பெயரைச் சொல்லி வழியை பிரித்துக் கொண்டிருந்த அந்த பழைய பஸ் தரிப்பு நிலையத்தில் இறங்கி நடந்தவன் தனது ஊருக்கு செல்ல வேண்டிய சாகாம வீதியை நிமிர்ந்து நோக்கினான்.

ராணுவத்தினரின் பாதுகாப்புக்காக வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் செடிகளின் இடிக்கப்பட்ட மதில்களாலும் வெட்ட வெளியாக வெறிச்சோடி நீண்டுபோய் தெரிந்த அந்த பாதையில் நடக்கத் தொடங்கினான் அவன்.

மனிதனால் நடப்பட்ட மரம் செடிகளையும், மனிதனால் கட்டப்பட்ட கட்டிடங்களையும் வீடு வேலிகளையும் மனிதனே அழிக்கலாம். ஆனால் இந்த மண்ணை மட்டும் அவனால் இல்லாமல் பண்ண முடியாது.

ஆச்சியும் தவமணி அக்காவும் இப்போது இருப்பார்களோ இல்லையோ என்பது தெரியாது. ஆச்சி நடந்த அந்த மண்,

தவமணி அக்கா எப்போதும் குந்தியிருக்கும் அடுப்படி இருந்த இடம். பூத்துக்குலுங்கிய அந்த மல்லிகை பந்தல் இருந்த வாசல். இவை அத்தனையும் இப்போது இருக்கும். அவைகளை இன்னும் சிறிது நேரத்தில் நான் காணப் போகின்றேன் என்று பரபரத்தது அவனின் நெஞ்சம். கூடவே அவனின் மனம் இன்னொன்றையும் நினைத்துக் கொண்டு மீண்டும் ஒரு மல்லிகை செடியை நட்டிருக்க வேண்டும். மீண்டும் அந்த வாசலில் ஒரு மல்லிகை பந்தல் பூத்துக் குலுங்கி மணம் பரப்பிக் கொண்டிருக்க வேண்டுமென்று நினைத் துக் கொண்டே அந்த ஊரை நோக்கி நடந்து கொண்டிருந்தான் அவன்.

அம்மை நோய் தாக்கிய தேகத்தில் ஏற்பட்ட வடுக்கள் போல் வீதி ஓரங்களில் இருந்த வீட்டுச் சுவர்களில் ஏற்பட்டிருந்த துப்பாக்கி குண்டுகளின் வடுக்கள் அவனின் மனதை ரணமாக்கி யது. இத்தனை குண்டுகளும் மனிதனை நோக்கி பாய்ந்தவைகள் தானா. துப்பாக்கி குண்டுகள் மனிதனையும் மனிதனால் ஆக்கப் பட்டவைகளையும் அழிக்கலாம். ஆனால் மண்ணை அழிக்க முடியாது. தவமணி அக்காவின் வீட்டு மல்லிகை பந்தல் வாசல் மண்ணை நினைத்தபடியே நடந்து கொண்டிருந்தான் அவன்.

# மண்ணும் மல்லிகையும்

**பி**றந்து வளர்ந்த மண்ணுக்குத் திரும்புவதில்லை என வெளிநாடு சென்றவன் மீண்டும் திரும்புகிறான். தேம்ஸ் நதியைப் பார்த்தவனுக்கு மீன்பாடும் மட்டுநகர் வாவியும் பாலமும் பூரிப்பான பழைய நினைவுகளை மீட்டுகின்றன.

ஒரு காலத்தில் கிராமத்து மல்லிகைப் பந்தலின் கீழ் குடும்பத்தவருடன் கலகலப்பாக வாழ்ந்த காலம் எங்கே? இன்று சிங்கள இராணுவத்தால் வெட்டி வீழ்த்தப்பட்ட மரம் செடிகள், இடிக்கப்பட்ட வீடுகள், மதில்கள் வெட்ட வெளியாக வெறிச்சோடி நீண்டு தெரிந்த பாதை.... மனிதனையும் மனிதனால் ஆக்கப்பட்டவையையும் அழிக்கலாம், ஆனால் மண்ணை அழிக்கமுடியுமா? மீண்டவன் தெம்பு பெறுகிறான்.

* * *

**விமல் குழந்தைவேல்** இலங்கை கிழக்கு மாகாணக் கிராமத்தைச் சேர்ந்தவர். தற்போது இலண்டன் மாநகரில் வாழ்பவர். **மண்ணும் மல்லிகையும்** அவரது முதல் நாவல். அவரது கிராமத்தில் அண்மைக் காலத்தில் நடந்த துன்பியல் நாடகத்தை நாவல் பிரதிபலிக்கிறது. ஆசிரியர் ஏற்கெனவே **தெருவில் அலையும் தெய்வங்கள், அவளுக்குள் ஒருத்தி** என்ற சிறுகதைத் தொகுதிகள் மூலம் தமிழ் நாட்டில் அறிமுகமானவர். ஈழ வரலாற்றில் ஒரு பொறியான இந்நாவல் மூலம் நாவலாசிரியர் என்ற தராதரத்துககு உயர்கிறார்.